மொழிமுகங்கள்

பேராசிரியர் கி. அரங்கன்
மணிவிழா மலர்

மொழிமுகங்கள்

(Facets of Language)

(பேராசிரியர் கி. அரங்கன் மணிவிழா மலர்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் இராம. சுந்தரம்

முனைவர் பெ. மாதையன்

முனைவர் எம். சுசீலா

முனைவர் ஆ. கார்த்திகேயன்

தஞ்சை ஆய்வியல் கழகம்

தஞ்சாவூர்

2003.

பெயர்	:	மொழிமுகங்கள்
முதல் பதிப்பு	:	2003
உரிமை	:	பதிப்பாசிரியர்கள்
வெளியீடு	:	தஞ்சை ஆய்வியல் கழகம், தஞ்சாவூர் - 613 005.
ஒளியச்சு	:	வசந்தம் கம்ப்யூட்டர்ஸ், 71, செல்லையா நகர், பிள்ளையார்பட்டி (அஞ்.) தஞ்சாவூர் - 613 403.
அச்சிட்டோர்	:	அருள் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்.
விலை	:	**300 /-**

நூல்கள் கிடைக்குமிடம் : முனைவர் எம். சுசீலா
இணைப்பேராசிரியர்
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

என். சி. பி. எச். (பி) லிட்
தஞ்சாவூர்.

பேராசிரியர் முனைவர் கி. அரங்கன்

மணிவிழாக் குழு

முனைவர் பொற்கோ (தலைவர்), சென்னை.

முனைவர் எஸ். பூபதி, தஞ்சாவூர்.

முனைவர் எ. சுப்பராயலு, கோவை.

முனைவர் வ. ஞானசுந்தரம், சென்னை.

முனைவர் சாம் மோகன் லால், மைசூர்.

முனைவர் என். நடராசப்பிள்ளை, மைசூர்.

பதிப்புக்குழு

முனைவர் இராம. சுந்தரம், மதுரை

முனைவர் பெ. மாதையன், தஞ்சாவூர்.

முனைவர் எம். சுசீலா, தஞ்சாவூர்.

முனைவர் ஆ. கார்த்திகேயன், தஞ்சாவூர்.



பேராசிரியர் கி. அரங்கன்

பேராசிரியர் முனைவர் கி. அரங்கன் வாழ்க்கைக் குறிப்பு

தென்னாற்காடு மாவட்டம், சின்ன சேலத்தில் ஒரு எளிய குடும்பத்தில் 3 - 09 - 1942 இல் பிறந்த பேராசிரியர் முனைவர் கி. அரங்கன் தமது கல்வி ஆர்வத்தாலும் விடாமுயற்சியாலும் முன்னேறி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் பேராசிரியராக 1982இல் பணியிலமர்ந்தார். பணியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றிருந்தாலும் ஓயாது உழைத்து வருகிறார்.

சின்ன சேலம் அரசு உயர்நிலைப்பள்ளியில் உயர்நிலைக் கல்வி, திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் புகுமுக வகுப்பு (1960) முடித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி. ஓ. எல் (1963), எம். ஏ. (மொழியியல் - 1965) பயின்று, முதல் வகுப்பில் முதல் தரத்தில் தேறி, பட்டங்களைப் பெற்றதோடு இரா. பி. சேதுப்பிள்ளை பரிசையும் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பொற்பதக்கத்தையும் வென்றெடுத்தார். தில்லி பல்கலைக்கழகத்தில் A Contrastive Study of the Gramatical Structures of Tamil and English என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1973) பெற்றார். முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்ட காலத்தில் பல்கலைக்கழக நல்கைக்குழுவின் உதவித் தொகையும், அனைத்திந்திய ஆய்வாளர் உதவித்தொகையும் பெற்றார். மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் மையத்தில் (Central Institute of Indian Languages) ஆய்வு உதவியாளர், விரிவுரையாளர் - இளநிலை ஆய்வு அலுவலர், இணைப்பேராசிரியர் - ஆய்வு அலுவலர்

என்ற பதவிகளில் அமர்ந்து (1970 - 1982) பணியாற்றினார். இவரது புலமைத்திறனும் ஆட்சித்திறமையும் இவர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் முதல் பேராசிரியராக அமரும் வாய்ப்பை நல்கின. பல்கலைக் கழகத்தில் பணியேற்ற காலத்திலிருந்து ஓய்வு பெறும் வரை (ஜூன், 2003) துறையின் வளர்ச்சிக்கும் மொழிசார்ந்த ஆய்வின் விரிவுக்கும் அரும்பாடுபட்டார்.

பத்துக்கு மேற்பட்ட எம். ஃபில், பி. எச். டி மாணவர்களை உருவாக்கியுள்ளார். அண்ணாமலை, சென்னை, மதுரை காமராசர், லக்னோ, உஸ்மானியா, தெலுங்கு, வேங்கடேஸ்வரா, பெர்காம்பூர், கர்நாடகம், கான்பூர் பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டக்குழு, எம். ஏ. எம். ஃபில், பிஎச். டி, தேர்வாளர் குழு போன்றவற்றிலும் பணியாற்றி உள்ளார்.

இந்திய மொழியியல் கழகம் (புனே), திராவிட மொழியியல் கழகம் (திருவனந்தபுரம்), அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம் (அண்ணாமலை நகர்), இந்திய சமூக அறிவியல் கழகம் (அலகாபாத்) ஆகியவற்றில் வாணாள் உறுப்பினராக இருப்பதோடு, இவற்றின் பல்வேறு பொறுப்புகளில் அமர்ந்து இவற்றின் வளர்ச்சிக்கு உரமிட்டார். புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக உள்ள இவர், தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் Tamil Civilization, அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகத்தின் மொழியியல், திராவிட மொழியியல் கழகத்தின் அனைத்துலக திராவிட மொழியியல் இதழ் (International Journal of Dravidian Linguistics) ஆகியவற்றின் ஆசிரியர் குழுவிலும், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மொழி அறக்கட்டளையின் தற்காலத் தமிழ் மரபுத்தொடர் அகராதி, தமிழ் நடைக்கையேடு முதலியவற்றுக்கான கல்விக்குழுக்களிலும் பணியாற்றி, அவை சிறப்புற வெளிவரத் துணை செய்தவர்.

ஆங்கிலத்தில் 9 நூல்கள், 30 கட்டுரைகள் ; தமிழில் 3 நூல்கள், 37 கட்டுரைகள் எழுதியுள்ளார். மாநில, தேசிய, சர்வதேசிய அளவில் ஐம்பத்துக்கு மேற்பட்ட கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ள இவர் ஏறத்தாழ 60 கருத்தரங்கு / புத்தொளி பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளார். இவற்றின் மூலம் பல மொழியியல் ஆய்வாளர்களை ஊக்கப்படுத்தியுள்ளார். அமெரிக்கா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் முதலான நாடுகளுக்குச் சென்று வந்தவர். பழங்குடி மக்களின் மொழி குறித்த ஆய்வை மேற்கொண்டு ஒரிசா, காஷ்மீர், அந்தமான் - நிக்கோபார் பகுதிகளுக்கும் சென்றவர்.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, பேரவை உறுப்பினராக இருந்த இவர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் பொறுப்பிலும் (1993 - 94, 96 - 97) , பதிப்புத்துறை இயக்குநர் பொறுப்பிலும் (96 - 97) பணியாற்றியுள்ளார். இவர் பதிவாளராக இருந்த காலத்தில்தான் தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியாளர் வாழ்வு சிறக்க, தம்மால் இயன்ற அனைத்தும் செய்தவர்; அவர்களுக்காகச் சிறை சென்றவரும் கூட.

இவரது கல்வி வாழ்க்கையில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது 1976 -இல் அமெரிக்காவிலுள்ள மாசாசுசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தில் வருகைதரு அறிவியலராக (Visiting Scientist) சேர்ந்து உலகப்புகழ் பெற்ற மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கியின் (Noam Chomsky) மாணவராக இருந்து மாற்றிலக்கணத் தொடரியல் (Transformational Grammar) அறிவை வளப்படுத்திக்கொண்டதுதான். பேராசிரியர் சோம்ஸ்கியின் மாணவராகும் வாய்ப்பு கிடைக்கப்பெற்ற மிகச்சிலருள் பேராசிரியர் கி. அரங்கனும் ஒருவர் என்பது நாம் பெருமைப்படத்தக்க செய்தியாகும்.

பலதுறை அறிவுச்செல்வர்களான பேரா. தெ. பொ. மீ., அகத்தியலிங்கம், வ. அய். சுப்பிரமணியம், பிரபோத் பண்டிட், பிலிகிரி, பட்நாயக் முதலிய அறிஞர்களோடு பல நிலைகளில் தொடர்பு கொண்ட பேராசிரியர் அரங்கன் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பியல் ஆகிய துறைகளில் தனி ஆர்வம் உடையவர். 'தமிழ் தொடரியல்' ஆய்வில் தலைசிறந்து நிற்பவர். சிறப்பு அழைப்பின் பேரில் பல்வேறு நிறுவனங்களுக்கும் சென்று தமிழ் மொழியியல் தொடர்பாகப் பல ஆய்வுரைகள் நிகழ்த்திப் பாராட்டுக்களைப் பெற்றவர்.

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற வள்ளுவன் வாக்கின் எடுத்துக்காட்டாகத் திகழும் பேராசிரியரின் பெற்றோர் நினைவில் வாழும் கிருட்டிணசாமி - ராசம்மாள் ஆவர். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்ற பாவேந்தரின் சொல்லுக்கேற்ற ஒரு நல்ல குடும்பத்தலைவர்.

பேராசிரியர் முனைவர் கி. அரங்கன் படைப்புகள்

ஆங்கிலம்

1974 **Advanced Tamil Reader part 1.** Mysore, Central Institute of Indian Languages (in collaboration with Dr. D. Patanayak and Dr. M.S. Thirumalai).

1975 **Baltic phonetic Reader**. Mysore, CIIL.

1979 **Purki Grammar**. Mysore, CIIL.

1984 **Tamil University Machine Translation System : Russian - Tamil,** Thanjavur, Tamil University (in collaboration with K. C. Chellamuthu and K. Murugesan).

1986 (ed.) **Proceedings of the 13th All India Conference of Dravidian Linguists,** Thanjavur, Tamil University.

1995 (eds.) **A Glossary of Standardized Technical Terms in Linguistics,** Thanjavur, Tamil University (with G. Chandra Sekaran).

தமிழ்

1975 **மாற்றிலக்கண மொழியியல்,** *சென்னை, தமிழ் நூலகம்.*

1985 **தொடரியல் : மாற்றிலக்கண அணுகுமுறை,** *தஞ்சாவூர். தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

2001 **தமிழ்நடைக் கையேடு – சந்தி,** *சென்னை, மொழி அறக்கட்டளை.*

கட்டுரைகள் (ஆங்கிலம்)

1971 *Negation in Tamil* in Papers and Talks (ed.) H. S. Biligiri, Mysore, Central Institute of Indian Languages.

1971 *Modals as Main Verbs in Tamil* in Proceedings of the First All India Conference of Linguistics, (eds.) Ghatage, A. M. et. al : Poona.

1972 *Some Aspects of Negation in South Dravidian Literary Languages,* in Third Seminar on Dravidian Linguistics, (eds.) S. Agesthialingom and S.V. Shanmugam, Annamalainagar, Annamalai University.

1972 *Imperatives in Tamil* in Proceedings of the First All India Conference of Dravidian Linguistics, (ed.) V. I. Subramoniam, Trivandrum.

1973 *Adjectives as Verbs in Tamil* in Proceedings of the Fifth All India University Tamil Teachers Conference, (ed.) S. Agesthialingom, et. al : Chennai.

1974 *Feature analysis of Tamil Nouns* in Proceedings of the Second All India Conference of Linguistics, Delhi.

1974 *Comments on Satyanarayana's A Proposal Concerning the Revision of the Phrase Structure Component,* International Journal of Dravidian Linguistics, Vol. 3 : pp. 368 - 372 (with Dr. E. Annamalai).

1976 *Language use with Special reference to Tamil Children's Encyclopedias* in Trends in Juvenile Literature, (ed.) D. P. Pattanayak, Mysore, CIIL, pp. 59 - 68.

1977 *Negation in Mysore Tamil,* International Journal of Dravidian Linguistics, Vol. 6. pp. 76 - 84. (with Dr. V. Gnanasundaram) appeared also in Papers in Indian Sociolinguistics, (ed.) D. P. Pattanayak, Mysore, CIIL.

1979 *Passive Construction and Case Grammar,* Pulamai. Vol. 9. pp. 49 - 69.

1979 *Some Problems in Tamil Passive Constructions,* Indian Linguistics, Vol. 40 : 4. pp. 218 - 229.

1981 *Some Remarks on the Methodology of Taxonomic linguistics Transformational Grammar and Sociolinguistics,* IJDL, Vol. 10 : 2. pp. 414 - 436.

1981 *Causative Construction in Kannada* in Towards Greater Hights , (eds.) D. P. Pattanayak and E. Annamalai, Mysore, CIIL, pp. 156 - 166 ; also appeared in Papers in Linguistics : Dr. R.C. Hiremath Felicitation Volume (eds.) M. S. Sungapur & J. S. Kulli (1981). Mysore, Shart Prakashana, pp. 151 - 158.

1981 *Grammatical Relations and passivization :* Tamil case in Dravidian Syntax, (eds.) S. Agesthialingom & N. Rajasekharan Nair, Annamalainagar, Annamalai University.

1983 *The Place of Grammatical Relations in Language Description,* Tamil Civilization, Vol. 1 - 1. pp. 75 - 94.

1983 *Reply to the comments of Drs. Annamalai, Bhat and Paramasivam* in Tamil Civilization, Vol. 1- 2, pp. 48 - 49, 54 - 56 & 63 - 67.

1986 *An Overview of Tamil Sociolinguistics*, Pulamai, Vol. 12 - 2. pp. 97 - 111.

1988 *The Place of Verb Agreement Rule in a Grammar*, Tamil Civilization, Vol. 6 - 1, pp. 99 - 107

1991 *Diglossia and Problems of Teaching Tamil*, in Working papers in Linguistics, (ed.) K. Rangan pp. 101 - 116, Thanjavur, Department of Linguistics, Tamil University.

2000 *Syntactic Studies in Tamil since Caldwell*, IJDL, Vol. 29 - 2, pp. 45 - 62.

2001 *The Concept of vazuvamaiti of Tolkappiyam as appropriateness conditions*, in the Proceedings of the UNESCO Conference on Linguistic Heritage of India and South Asia, Mysore, CIIL.

2001 *Paradigm shift in Linguistics*, in Kaveri. Prof. Subbararayalu Felicitation Volume, (ed.) S. Rajagopal, Chennai, Panpattu Veliyiittakam.

கட்டுரைகள் (தமிழ்)

1966 *திராவிட மொழியியலின் வரலாறு, தமிழணங்கு.*

1968 *மொழியியலில் ஒரு புதிய சிந்தனை, தமிழணங்கு.*

1968 *மொழியியலின் தோற்றம், செந்தமிழ்ச் செல்வி, 43.*

1969 *விலங்குகள் பேசுமா ? தமிழ்ப்பொழில், 43.*

1970 *பயிற்று மொழியும் மொழிபெயர்ப்பும், தமிழ்நாடு, செப். 19.*

1970 *மொழியியல் : ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், தமிழ்ப்பொழில், 43.*

1970 *மாற்றிலக்கணம் : ஓர் அறிமுகம்,* செந்தமிழ், 65.

1971 *மொழியியலும் அதன் நோக்கும்,* செந்தமிழ், 67.

1973 *வாக்கிய அமைப்பு,* தமிழ்ப்பொழில், 47.

1973 *மாற்றிலக்கணத்தில் பால், எண், இயைபு விதிகள்,* லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டுமலர்.

1975 *மாற்றிலக்கணத்தின் அமைப்பு,* புலமை 1 : 1.

1975 *மாற்றிலக்கணம் எதிர்நோக்கும் சில பிரச்சினைகள் : ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்,* புலமை 3 : 1.

1977 *மொழியியலும் அதன் பிரச்சினைகளும் : ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்,* புலமை.

1978 *மாற்றிலக்கணத்தில் பொருளியல் பகுதியின் பாதிப்பு,* புலமை, 41.

1983 *மொழி விளக்கத்தில் இலக்கண உருபுகளின் பங்கு,* தமிழ்க்கலை, 1:1.

1984 *தமிழில் சில துணைவினைகள்,* தஞ்சாவூர் தமிழவேள் உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவுக் கட்டுரைப்பூங்கா.

1985 *தமிழ் மொழியியலின் ஆய்வு நோக்கு,* மொழியியல், 8 : 3 & 4.

1986 *மொழியியலும் மொழிப்பொதுமைகளும்,* மொழியியல், 9 : 3 & 4.

1986 *அமைப்பு மொழியியல்,* வாழ்வியல் களஞ்சியம், 4, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

1987 *இருபதாம் நூற்றாண்டு மொழியியல்,* வாழ்வியல் களஞ்சியம், 4, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

1988 *ஒலி விதி,* வாழ்வியல் களஞ்சியம், 6, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

1987 *வட்டார வழக்குச்சொல் அகராதி (கி. இராஜநாராயணன்),* தமிழ்க்கலை, 6 : 1 & 2.

1987 *இக்காலத் தமிழ் இலக்கணம்,* களஞ்சியம், 3 : 1.

1989 *இலக்கண அறிவும் கருத்துப் புலப்படுத்தமும்,* மொழியியல், 12 : 1 & 2.

1992 *வையாபுரிப்பிள்ளை அவர்களின் மொழியியல் சிந்தனைகள்,* புலமை, 18 : 1.

1992 *அமைப்பு மொழியியலும் மாற்றிலக்கணமும்,* மொழியியல், 13 & 14 : 1- 4.

1993 *தமிழில் இரட்டை வழக்கும் கற்பித்தல் பிரச்சினைகளும்,* தொடர்பாடல், மொழி, நவீனத்துவம் (பதி.), நுஃமான், கொழும்பு.

1994 *அகராதியியலும் தகவல் யுகமும்,* கோலாலம்பூர், ஆய்வடங்கல், இரண்டாவது உலகத் தமிழாசிரியர் மாநாடு, .

1995 *மொழி வளர்ச்சியில் நோக்கு நூல்கள்,* தாமரை (எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர்).

1999 *பெயர்த்தொடர் அமைப்பு,* தமிழ் மொழி வரலாறு (பதி.), ம. இராசேந்திரன், சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

1999 *பழந்தமிழிலும் தற்காலத் தமிழிலும் பால், எண், இயைபு ,* தமிழியல் ஆய்வு (பதி.), சா. கிருட்டிண மூர்த்தி, கி. அரங்கன், ஒய். சுப்பராயலு, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

மொழியியலின் வருகையும் தமிழ் மொழி, சமூகம் குறித்த பார்வைகளும், நிறப்பிரிகை.

பதிப்புரை

உலகப் புகழ்பெற்ற மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) அறிமுகப்படுத்தி, வளப்படுத்திய மாற்றிலக்கண மொழியியல் தளத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தணியாத ஆர்வத்துடன் உழைத்துத் தமக்கென ஓரிடத்தைப் பெற்றிருப்பவர் பேராசிரியர் முனைவர் கி. அரங்கன். தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, தமிழ் மொழியியல் வளர்ச்சிக்குத் துணை நின்றவர். இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, அறிவியல், மொழிபெயர்ப்பு, சமூகவியல், அகராதியியல் முதலிய துறைகளில் தமிழின் பயன்பாடு குறித்து நடுநிலை தவறாது ஆராய்ச்சி செய்தவர். மொழியியலை மையப்படுத்தி அவர் மேற்கொண்ட பல்துறை சார்ந்த தமிழ்ப் பணியைப் பாராட்டும் விதத்தில் அவருக்கு மணிவிழா நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அந்த விழாவைப் பதிவு செய்யும் வண்ணம் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிடவும் முடிவெடுக்கப்பட்டது. அதன் விளைவே இந்த நூல்.

இந்த நூலில் பேராசிரியர் அரங்கன் அவர்களின் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகளோடு மொழியியல், இலக்கியம், இலக்கணம், யாப்பியல், அகராதியியல், நாடகவியல், சமூகவியல், மொழிபெயர்ப்பியல் என பல தளங்களில் ஈடுபட்டு உழைத்து வரும் 34 அறிஞர்களின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் அரங்கனின் சிறப்புக் கவனத்துக் குள்ளான பழங்குடி மக்களின் மொழி - இலக்கியம், இணையத் தமிழ் பற்றிய சில கட்டுரைகளும் இந்நூலில் உள்ளன. மொழியின் பல

முகங்களைக் காட்டும் இக்கட்டுரைகள் தமிழியல் ஆர்வலருக்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

மணிவிழா நடத்துவதில் ஆர்வம் காட்டியதோடு, கட்டுரைகளையும் அளித்துதவிய கட்டுரையாளர்களுக்கு மனமார்ந்த நன்றி.

கட்டுரைகளைச் சிறப்புற ஒளியச்சு செய்து தந்த வசந்தம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கும், நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அருள் அச்சகத்தினருக்கும் பாராட்டுக்கள்.

தஞ்சாவூர். பதிப்பாசிரியர்கள்.

17 - 10 - 2003

பொருளடக்கம்

வாழ்த்துரை

பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம்
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
முன்னாள் இணைவேந்தர், திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்
மதிப்புறு இயக்குநர், அனைத்துலகத் திராவிட மொழியியல் பள்ளி,
திருவனந்தபுரம்

பேராசிரியர் கி. அரங்கன் அடக்கமானவர். மாற்றிலக்கணத்தில் ஈடுபாடுடையவர். எல்லா நற்செயல்களுக்கும் ஒத்துழைப்பவர். திராவிட மொழியியல் கழகத்தின் சார்பில் என் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

வ. அய். சுப்பிரமணியம்.

வாழ்த்துரை

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
155, மாரியப்ப நகர்
அண்ணாமலை நகர்

பேராசிரியர் கி. அரங்கன் அவர்கள் அறுபது வயது அடைந்து மணி விழா கொண்டாடுவது கண்டு மிகுந்த மகிழ்ச்சி. 1965 முதல் பல ஆண்டு காலமாக அவருடன் பழகும் சிறப்பும் வசதியும் கிடைக்கப் பெற்றேன். அவரை மாணவராக, ஆய்வாளராக, ஆசிரியராக, பேராசிரியராக எனப் பல கோணங்களிலும் கண்டவன். அவருடைய பண்பையும் பழகும் வகையினையும் பேசும் பாங்கினையும் ஆய்வின் நுண்மையையும் பல்வேறு நிலைகளில் நானறிவேன். சிறந்த மாணாக்கர், செம்மையான ஆய்வாளர், சிறப்பான ஆசிரியர், பெருமைமிகு பேராசிரியர்; எல்லாவற்றிற்கும் மேலாக நல்லபண்பும் நயத்தக்க நாகரிகமும் கொண்டவர். மணிவிழா காணும் அவரும் அவர் தம் இல்லத் தரசியும், மக்களும் பல்லாண்டு வாழ்ந்து வளம் பல பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றேன். நல்லாரைக் காண்பது நல்லது; அவர்களை நினைப்பது நல்லது. நலம் பல பெற்று வாழ மீண்டும் என் வாழ்த்துக்கள்!

அன்புடன்

ச. அகத்தியலிங்கம்

அரங்கன் என் அகமுளானே

ஔவை நடராசன்
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

எத்தனை அரிய மனிதர்களையும் மறப்பதற்கு ஐந்தாண்டுகள் போதும் என்று எவரோ எழுதியிருந்தார்கள். அவ்வாறானால் பத்தாண்டுகளுக்கு முன்னர் என்ன நடந்தது எப்படி நடந்துகொண்டேன், எதில் வென்றேன், எதில் தோற்றேன் என்று பல நிகழ்ச்சிகளை என் நினைவில் நான் வைத்துக்கொள்வதில்லை. ஆனாலும் செயன்மையால் சிந்தையால் என்னைக் கவர்ந்த சிலரை நான் மறப்பதில்லை. அத்தகைய நண்பர்தான் பேராசிரியர் டாக்டர் கி. அரங்கனாவார்.

அரசு செயலாளராகப் பத்தாண்டுகள் பணி முடியும் நிலையில் சென்னையிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக ஒரு மார்கழித் திங்களில் நான் வந்து சேர்ந்தேன். கடமையை நிறைவேற்றும் போது நமது கல்வித்திறமை ஒளி வீசவேண்டும். பரிசு, பாராட்டுக்களை எதிர்நோக்காமல் துணிவாக நெஞ்சில் பட்டதை எடுத்துரைக்கலாம். அரசும் அமைச்சரும் புதிய திட்டங்களை வகுப்பதென்று முற்பட்டால் திட்டத்துக்குரிய சூழல், நிலைகள், நிலைகளால் நேரும் விளைவுகள் முதலியவற்றை எழுத்தால், எண்ணத்தால், எடுத்து மொழிவதால் சுட்டிக் காட்டுவது அரசு செயலரின் பணியாகும். ஆனால், அரசு மாறாக முடிவு செய்தால் அதற்குரிய காரணங்களை உணர்ந்து செயலாளர் நிறைவேற்ற வேண்டும். இந்த நெறி முறையில் அரசு செயலாளர் பணியில் வெற்றி காணலாம் என்று படித்துப் பழகியிருந்தேன். மேலும், அரசு செயலாளர்

நிலையான அரசுக்குச் செயலரேயன்றி, அமைச்சரின் செயலாளரன்று என்றும் வலியுறுத்துவார்கள். இந்த நிலையில் துணைவேந்தர் பதவி சற்று மாறானது. கொள்கைக்கே முதலிடம் தர வேண்டும். ஒரு பல்கலைக் கழகத் தலைவர் என்றாலும் கூடத் தாமே முடிவு செய்ய இந்நாளில் முடி வதில்லை. அரசு, ஆசிரியர், அலுவலர், மாணவர், சுற்றுக்சூழல், பொது மக்கள் என்ற அனைவரையும் அரவணைத்துப் பல்கலைக்கழகத்தைக் கொண்டுசெல்ல வேண்டும். எப்படியும் பல்கலைக் கழகம் என்னும் பரிய எந்திரம் நில்லாமல் தொடர்ந்து சுழல்வதற்கு " நிதி நெய்யை" ஊற்றிக் கொண்டேயிருக்கவேண்டும். ஆனால், நீரில் விளக்கெரிக்க வேண்டும் என்பது அரசின் ஆவல். தொடர்ந்து புதிய பல்கலைக்கழகங்களைத் தோற்றுவித்தாலும் அவை வேண்டா என்ற உறுதியே நிதித்துறையின் நினைவில் ஊறியது. இந்நிலையில் துணைவேந்தர் பொறுப்பு வெறும் தலைமைத் தவிசாகவே அமைந்துவிடுகிறது. நான் பொறுப்பேற்ற சில திங்களில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புதிய பதிவாளரை அமர்த்த வேண்டிய சூழல் வந்தது. அப்போது மொழியியல் துறையில் பேராசிரி யராக இருந்த முனைவர் கி. அரங்கன் ஆசிரியர் பணியில் முதுநிலையி லிருந்தவர், தகுதியால் பண்பால் உங்கள் மனங்கவர்வார் ; வேண்டுதல் வேண்டாமையோடு வினையாற்றுவார் என்று நண்பர்கள் மொழிந்ததை ஏற்று, என் பணிக்காலத்தில் பேராசிரியர் கி. அரங்கனைப் பதிவாளர் பொறுப்பேற்க வேண்டினேன். " உங்களை எனக்கு நன்றாகத் தெரியும். இலக்கியங்களில் திளைப்பதைப்போல, மொழியியலில் உங்களுக்கு விருப்பமில்லை என்றும் அறிவேன். நான் உங்களோடு பழகியதில்லை என் மொழியியல் ஆராய்ச்சிப் பணிக்குத் தடை நேருமே என்பதுதான் எனக்குக் கவலை. ஆசிரியர், அலுவலர் சங்க நலங்களை நான் வலியுறுத்து பவன் என்று கேட்டறிந்தும் கூட என்னைப் பரிவோடு பணியாற்றச் சொல்லும் தங்கள் ஆணையை ஏற்கிறேன்" என்று நான்கைந்து தொடர் களைத்தான் முதலுரையாக என்னிடம் பேசினார். அன்று முதல் பேராசிரியர் கி. அரங்கன் பல்கலைக்கழகப் பதிவாளரானார். பேராசிரி யராகத் துணைவர்களோடு இணைந்து பணியாற்றுதல், ஆய்வாளராக நுண்ணறிவோடு நூலறிவை வளர்த்துக் கொள்ளுதல், சிலரோடு

மட்டுமே தம் சிந்தனைகளை, கருத்துக்களைப் பகிர்தல், அளவோடு பழகுதல் என்ற நிலையைத் தாண்டிப் புதிய நிலையில் பதிவாளராகத் தம் ஆட்சிப் பணிகளைத் தொடங்கினார். ஆசிரியர் அலுவலர் நலனுக்காக வரையறுக்கப் பெற்றிருந்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதோடு, பொது நிலையில் பல்கலைக்கழகக் கொள்கையையும் கடமைகளையும் பிறருக்கும் நினைவூட்டித் துணைவேந்தரின் மாட்சிக்குப் பெருமிதமும் சேர்த்து ஒரு பதிவாளர் திகழவேண்டும் என்று தனக்குத்தானே இலக்கணம் வகுத்துக் கொண்டவராகப் பேராசிரியர் கி. அரங்கன் தம்மை மாற்றிக் கொண்டார் என்று குறிப்பிடலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சியை வேராகக் கொண்டமைந்த புது வகையான நெறிப்பாடு பூண்டது. பல்கலைக்கழகம் அமைந்த வகை, அமைப்பு முறை முதலியவற்றால் பிற பல்கலைக்கழகங்களின் பளபளப்பு நடைமுறைகளைப் போற்றிக் காக்கும் பொறுப்பு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மீது சுமையாக அமைந்தது. இவ்விளைவு தக்கதா என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. பல்கலைக்கழகத் தேவைக்கு நிறைவு தராத நிதிவறுமையில் பதிவாளர் எந்நாளும் எதிர்ப்பையே காணும் நிலையில் தான் இருந்தார். இடுக்கண் வருங்கால் இளநகையோடு பதிவாளர் என்ற பொறுப்பில் பொறுமையான தலைமையியல்போடு புது முறைகளை வகுத்ததில் முன்னோடியாக அமைந்து, சிந்தனைத் தெளிவும், செயல்திறமும், திருந்தச் செய்யும் தகைமையும் வாய்க்கப் பெற்றவராகப் பேராசிரியர் கி. அரங்கன் வாகை சூடினார். " நீங்களே முடிவு செய்கிறீர்களே என்னையும் கேட்டிருக் கலாமே" என ஒருமுறை நான் கேட்ட போது பதிவாளர் கூறிய விடை என்னை வியக்க வைத்தது." பரிவு காட்டு வது உங்கள் இயல்பு. பரிவையே எப்போதும் காட்டிக் கொண்டிருக்கவும் முடியாது. பரிவு என்பது தனியுணர்ச்சி. பொறுப்பிலிருக்கும்போது, ' பொங்கும் பரிவோ ' மறத் திற்கும் அதனைத் துணையாக்கிவிடலாம் " என்று சுட்டிக்காட்டினார்.

இன்னொரு நிகழ்ச்சி. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் குடியிருந் தோருள், மகளிர் அமைப்பினர் தம் வழிபாட்டுக்காக ஒரு கோயில் கட்ட

விரும்பினார்கள். என் துணைவியார் டாக்டர் தாரா நடராசன் தலைமை தாங்கி வளாகத்தில் ஓர் இடம் வழங்க வேண்டுமென்று மகளிர் அமைப்பினர் தீர்மானம் நிறைவேற்றினர். அங்கே நடந்த கூட்டத்தில், " நாம் பதிவாளரிடம் சென்று கேட்போம். அவர் மட்டும் இடவசதியை ஆராய்ந்து இசைந்தால் கவலையேயில்லை. ஆராய்ந்து பார்த்து அவர் முடிவு செய்வார். துணைவேந்தரைச் சென்று கேட்கத் தேவையில்லை. துணைவேந்தர் விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றினால் போதும்" என்றார்களாம். பல்கலைக்கழக நிருவாகத்தைப் பதிவாளர் கையாண்ட திறத்திற்கு இது ஒரு பதச் சான்று. இந்தக் குறிப்பை மறவாமல் எழுதுங்கள் என்று என் துணைவியார் கூறினார்கள். பண்பாளர் - பதிவாளர் பேராசிரியர் கி. அரங்கன் மணி விழா காண்பது மகிழ்ச்சியைத் தருகிறது. தன் ஆய்வுப் பணிக்குத் தடையாகத் தனக்காக என்னைப் பணி கொண்டுவிட்டாரே என்று பேராசிரியர் பதிவாளர் காலத்தை நினைத்து வருந்தியிருக்கமாட்டார் என்று நம்புகிறேன். இப்போது நல்ல ஓய்வு கிடைத்துள்ளது. தம் ஆராய்ச்சிப் பணியைப் பெருமிதமாக அவர் தொடர வேண்டுகிறேன். பண்பாளர் பேராசிரியர் கி. அரங்கனும் அவர் அருமைத் துணைவியாரும் மக்கட் செல்வங்களும் பல்லாண்டுகள் வாழ்க என வாழ்த்தி மகிழ்கிறேன்.

இக்காலத் தமிழ் இலக்கணம்

டாக்டர் கி. அரங்கன்

உயிருள்ள பொருள்கள் மாற்றத்திற்கு உட்படும்பொழுதுதான் வளர்ச்சியையோ தளர்ச்சியையோ அடைகின்றன. வளர்ச்சி என்பதும் தளர்ச்சி என்பதும் மாற்றங்களை நாம் மதிப்பீடு செய்வதைப் பொறுத்தது. மனிதனின் உடல் மட்டுமன்றி அவனும் அவனைச் சார்ந்தவர்களும் ஒட்டுமொத்தமாகத் தாங்கள் உருவாக்குகின்ற சமுதாயமும், அரசியல், மதம் ஆகிய அமைப்புகளும் மாற்றத்திற்கு உட்பட்டு வளர்ச்சி நிலையையோ தளர்ச்சி நிலையையோ அடைகின்றன. மனிதனின் மொழி மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு சமுதாயத்தின் மொழி உயிர்த் துடிப்போடும் நிலைத்தும் வாழ வேண்டுமென்றால் அச்சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் முறையிலும் அதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற முறையிலும் அது செயற்பட வேண்டும். வளைந்து கொடுத்து மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு மாற்றங்களை ஏற்கும் பொழுது மரபோடு கூடிய தொடர்பைத் துண்டித்துக் கொள்ளாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். மரபுவழித் தொடர்போடு வேண்டிய மாற்றங்களைக் கிரகித்துக்கொள்ள வேண்டும். மொழித்தரப்படுத்தலில் (Language Standardization) இத்தகைய தன்மையை வளைந்து கொடுக்கும் ஸ்திரத்தன்மை (Flexible Stability) என்று அறிஞர்கள் கூறுவார்கள். மொழி ஸ்திரத்தன்மையையும் வளைந்து கொடுக்கும் தன்மையையும் பெற்றிருக்கவேண்டும். இவ்விரு தன்மைகளையும் மொழி மரபுவழித் தொடர்பை ஏற்படுத்தி மாற்றத்திற்கு உட்படுகின்ற சமுதாயத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல.

இரண்டாயிரம் ஆண்டுகளாக இலக்கியப் பாரம்பரியத்தையும் இலக்கண மரபையும் உடைய தமிழில் இவ்விரு தன்மைகளும் பொதிந் துள்ளதால்தான் அது இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டி ருக்கிறது மொழி மாறும் தன்மையை உடையது. ஆகையால் மாறுகின்ற மொழிக்கு உருவாக்கப்படுகின்ற இலக்கணங்களும் மாறிக்கொண்டிருக் கும். கால ஒட்டத்தில் மொழியின் அமைப்பைப் பல்வேறு நிலைகளில் வைத்து ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தெளிவாகும். தொல்காப்பியர் காலத் தமிழையும் நாம் இப்பொழுது பயன்படுத்தும் தமிழையும் ஒப்பிட்டால் மொழி, மாற்றம் அடைந்துள்ளது தெளிவாகும்.

சான்றாக மூவிடப் பெயர்களின் பகுப்பு முறையை எடுத்துக் கொள்வோம். தொல்காப்பியத்தின் அடிப்படையில் மூவிடப்பெயர் களின் பகுப்பைப் பின்வருமாறு காட்டலாம்.

இப்பாகுபாடு வாக்கியத்தின் எழுவாயாகச் செயலாற்றும் பெயர்த் தொடருக்கும் வினையோடு காணப்படும் விகுதிகளுக்கும் உள்ள இயை பின் அடிப்படையில் அமைவது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங் கள் இதைத் தெளிவாக்கும்.

(1)	யான்	வந்தேன்
(2)	யாம்	வந்தோம்
(3)	நீ	வந்தாய்
(4)	நீயிர்	வந்தீர்
(5)	அவன்	வந்தான்
(6)	அவள்	வந்தாள்
(7)	அவர்	வந்தார்
(8)	அது	வந்தது
(9)	அவை	வந்தன

இதைத்தான் தொல்காப்பியர் பெயரோடு தோன்றும் பாலறி கிளவியும் வினையோடு தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா தம்

மரபினவே என்றார்.[1] இதை மீறிக் காணப்படுகின்ற வாக்கியங்களைச் சேனாவரையர் வழுவானவை என்று குறிப்பிடுகிறார்.[2]

(10) அவன் வந்தது

(11) அவன் வந்தாள்

(12) யான் வந்தான்

இன்றைய வழக்கில் உள்ள தமிழை ஒப்பிடும்போது சில மாற்றங்கள் தெளிவாகும் வாக்கியம் 7இல் உள்ள அவர் என்பது ஆணை யும் பெண்ணையும் இணைத்து உயர்திணையில் பலரைக் குறித்து நிற் கிறது. ஆனால் தற்காலத் தமிழில் அது ஒருமையை மட்டும் குறிக்கிறது. ஆணையும் பெண்ணையும் சுட்டுகின்ற படர்க்கைப் பெயராக இருப் பினும் அது பன்மையைச் சுட்டுவதில்லை.

(13) ஆசிரியர் வகுப்பிற்குச் சென்றார். பின் அவர் பாடம் நடத்தினார்.

(14) மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கிறார். அவர் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்கிறார்.

வாக்கியம் 13 இல் ஆசிரியர் என்ற பெயர்ச்சொல்லும் அவர் என்ற பெயர்ச்சொல்லும் ஒருமையையே சுட்டுவதாக உணர்கிறோம். தொல் காப்பியர் ரஃகான் ஒற்று பலரறி சொல் என்று குறிப்பிட்டாலும் நாம் வழங்கும் இன்றைய தமிழில் ரஃகான் ஒற்றைப் பலரறி சொல் என்று கூற K o a h J .[3] அவர் என்ற படர்க்கைப் பெயரும் வினையோடு வரும் ஆர் என்ற விகுதியும் உயர்திணையில் மரியாதை ஒருமையைக் (Honorific Singular) குறிக்கிறது. வாக்கியம் 14 இல் மக்கள் என்னும் பெயர் எழு வாயாகச் செயல்படுகிறது. இது பன்மையைக் குறிப்பதால் மரியாதை ஒரு மையைக் குறிக்கும் விகுதியான - **ஆரை** இது ஏற்றுக்கொள்வதில்லை. ஆகையால் இது வழு வாக்கியமாகக் கருதப்படுகிறது. அதேபோல் வாக்கியம் 14 இல் மக்கள் என்ற பெயரை அவர் என்ற சொல் கொண்டு பதிலீடு செய்ய முடியவில்லை. அதனால் வாக்கியம் 14 உம் வழு

வாக்கியமென்று நிராகரிக்கப்படுகிறது. வாக்கியம் 13இல் ஆசிரியர் என்ற பெயர் ஒருமையைச் சுட்டுவதால் அவர் என்ற சொல்லைக்கொண்டு பதிலீடு செய்ய முடிகிறது. தொல்காப்பியர் கால வழக்குப்படி வாக்கியம் 14 இலக்கண வாக்கியம். தொல்காப்பியரால் இலக்கண வாக்கியமாகக் கருதப்படுகின்ற ஒன்று இன்று வழு வாக்கியமாகக் கருதப்பட வேண்டியிருக்கிறது கால ஓட்டத்தினால் மொழியில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் இது. உயர்திணையில் பலரைக் குறித்த சொல்லும் விகுதியும் இன்று மரியாதை ஒருமையை மட்டும் குறிக்கின்றன.[4] உயர்திணையில் பலர் பாலைச் சுட்டுகின்ற செயற்பாட்டை அவை இழந்துவிட்டன.

- கள் என்ற விகுதி தொல்காப்பியர் காலத் தமிழில் பலவறி சொற்களுடன்தான் வரும்.[5] ஆனால் இக்காலத் தமிழில் இது முழுமையாகப் பொருந்தி வராது. இவ்விகுதி உயர்திணைப் பெயர்களுடன் வருவதை நாம் இப்பொழுது பார்க்கிறோம்

(15) பையன்கள் இன்று வகுப்பிற்குப் போவார்கள்

(16) பெண்களும் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்கிறார்கள்

- கள் உயர்திணைப் பெயர்களுடனும் பன்மையைச் சுட்ட வரும் என்று நாம் இன்று இலக்கண விதி வகுக்க வேண்டும். இன்னொரு முக்கிய மாற்றத்தையும் நாம் இங்குக் குறிப்பிட வேண்டும்.

(17) ஆசிரியர் ஆறுமுகம் நேற்று பள்ளிக்கு வந்தார்

(18) அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகத்தை இன்று பார்வையிட்டார்கள்

வாக்கியம் 18 இல் உள்ள அவர்கள் என்ற சொல்லும் வினையோடு காணப்படும் - கள் என்ற விகுதியும் பன்மையைக் குறிக்கவில்லை. இவை மரியாதை ஒருமையையே குறிக்கின்றன. அவர் என்ற பெயரும் ஆர் என்ற வினையோடு வரும் விகுதியும் மரியாதை ஒருமையில் முதல் படியைச் சுட்ட அவர்கள் என்ற பெயரும் - ஆர்கள் என்ற விகுதியும் மரியாதை ஒரு

மையில் இரண்டாம் படி நிலையைச் சுட்டுகின்றன. முன்னிலையிலும் நீயிர் என்ற வடிவம் பன்மையை உணர்த்துவதில்லை மரியாதை ஒருமையைச் சுட்டுகிறது. முன்னிலையிலும் மரியாதை ஒருமையை இரு படிநிலைகளில் சுட்ட வடிவங்கள் இருப்பதை நாம் காணலாம் முதல் படி நிலையில் நீர் என்ற வடிவத்தையும் இரண்டாம்படி நிலையில் நீங்கள் என்ற வடிவத்தையும் இன்று நாம் கையாளுவதைப் பார்க்கிறோம் தன்மையிலும் இக்காலத் தமிழில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தொல்காப்பியர் காலத் தமிழில் தன்மையில் ஒருமை - பன்மைப் பாகுபாட்டை மட்டும்தான் நாம் பார்க்கிறோம்.[7] ஆனால் இக்காலத் தமிழில் தன்மைப் பன்மையின் கீழ் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (Inclusive plural) உளப்படுத்தாத தன்மைப் பன்மை (Exclusive plural) என்ற பகுப்பை நாம் காண்கிறோம்.[8] உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் முன்னிலையானும் உள்ளடக்கப்படுகிறான். உளப்படுத்தாத தன்மைப் பன்மையில் முன்னிலையானை உள்ளடக்கி அல்லது இணைத்துக் கூறுவதில்லை

நாம்	=	நான்	+	{ நீ / நீங்கள் }
நாங்கள்	=	நான்	+	பன்மை

வாக்கியங்கள் 19 உம், 20 உம் இப்பாகுபாட்டைத் தெளிவுபடுத்தும்.

(19) நாம் நாளை ஊருக்குப் போவோம்

(20) நாங்கள் நாளை ஊருக்குப் போவோம்

வினையோடு வரும் விகுதியில் எவ்வித வேற்றுமையும் இல்லை - ஓம் என்ற விகுதி நாம், நாங்கள் ஆகிய இரு பெயர்களுடனும் வருகிறது. இப்பாகுபாடு சொற்களின் அமைப்பு அடிப்படையில் அமைந்துள்ளது. மொழியியலார்கள் இப்பாகுபாட்டை உருபியல் (Morphology) அடிப்படையில் அமைந்துள்ளது என்று கூறுவார்கள். தொல்காப்பியர் காலத் தமிழின் மூவிடப்பெயர்களின் அமைப்பைக் காட்டும் படத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள இக்காலத் தமிழின் மூவிடப் பெயர்களின் அமைப்பை விளக்கும் படத்தை ஒப்பிட்டால் மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தெளிவாகும். (கட்டுரையின் முடிவில் படம் கொடுக்கப்பட்டுள்ளது)

முன்னிலையில் மரியாதை $_1$ மரியாதை $_2$ ஆகிய பாகுபாட்டோடு மரியாதை $_3$ என்ற பாகுபாடும் இக்காலத் தமிழில் உள்ளமை பின் வரும் வாக்கியங்கள் மூலம் தெரியவரும்.

(21) நீ நேற்று வந்தாய்

(22) நீர் நேற்று வந்தீர்

(23) நீங்கள் நேற்று வந்தீர்கள்

(24) தாங்கள் நேற்று வந்தீர்கள்

மரியாதையில் தாங்கள் என்ற வடிவம் மூன்றாவது படிநிலையைக் காட்டுகிறது. தொல்காப்பியர் காலத் தமிழில் இவ்வடிவம் படர்க்கையின் பன்மை வடிவம் (குறிப்பு 7இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவங்களைக் காண்க).

தான் என்ற வடிவமும் தாங்கள் என்ற வடிவமும் தன்வயப் பெயராகவும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன.

(25) சீதா தன்னையே நொந்துகொண்டாள்

(26) அப்பா தன்னுடைய பிடிவாதத்தை விடமாட்டார்

(27) மாணவர்கள் தங்களுக்கு விடுமுறை வேண்டும் என்று கோஷமிட்டார்கள்

(28) ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கை நிறைவேறு -மென்று நம்புகிறார்கள்

வாக்கியம் 25 இல் தன்னை என்பது சீதாவைக் குறிக்கிறது. இவ் வாக்கியத்தின் பொருளும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தின் பொருளும் ஒன்றே.

(29) சீதா சீதாவையே நொந்துகொண்டாள்

இங்கு எழுவாயாகச் செயல்படும் பெயரும் செயப்படுபொருளாகச் செயல்படும் பெயரும் ஒரே நபரைச் சுட்டுகின்றன. சுட்டலில் எழுவாய்க்கும் தான் / தாங்கள் என்ற வடிவத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

(30) இராமன் கண்ணனைத் தன் வீட்டில் சந்தித்தான்

(31) இராமன் கண்ணனை அவன் வீட்டில் சந்தித்தான்

வாக்கியம் 30 இல் தன் வீட்டில் என்பது இராமனுடைய வீட்டைக் குறிக்கிறது. ஆனால் வாக்கியம் 31 இல் அவன் வீட்டில் என்பது இராமனுடைய வீட்டையும் குறிக்கும். கண்ணனுடைய வீட்டையும் குறிக்கும். மேலே கூறிய எடுத்துக்காட்டுகள் மூலம் தான் என்ற பெயரும் தாங்கள் என்ற பெயரும் ஒருமை - பன்மை வேறுபாட்டோடு எழுவாயாகச் செயற்படும் பெயரைச் சுட்டுகின்ற செயல்பாட்டை உடையவை என்பது இதனால் தெளிவாகும்.[9]

இன்னொரு முக்கிய மாறுபாட்டையும் நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். அஃறிணையில் - கள் உருபின்றி வரும் இயற்பெயர் வினையுடன் வரும் விகுதியைக் கொண்டு அது ஒருமையா அல்லது பன்மையா என்பது தெரியவரும். [10]

(32) மாடு வந்தது

(33) மாடு வந்தன

(34) பத்து மாடு வந்தன

மாடு என்பது ஒருமையைக் குறிக்கிறதா அல்லது பன்மையைக் குறிக்கிறதா என்பதை வினையோடு வரும் - து / - அ போன்ற விகுதிகள் நிர்ணயிக்கின்றன. இது தொல்காப்பியர் காலத் தமிழின் நிலை. நம் காலத் தமிழில் மாடு என்ற சொல் ஒருமையையும் மாடுகள் என்ற சொல் பன்மையையும் குறிக்கின்றன. மாடு என்ற சொல் தற்காலத் தமிழில் பன்மையைக் குறிப்பதில்லை ஆனால் வினையோடு வரும் விகுதியில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது.

(35) ஒரு மாடு வந்தது

(36) பத்து மாடுகள் வந்தது

36 போன்ற வாக்கியங்களை நாம் சாதாரணமாகப் பயன்படுத்து கிறோம் ஒருமை / பன்மை மயக்கம் முன்பு வினையோடு வரும் விகுதி களால் தீர்த்துவைக்கப்பட்டது. தற்பொழுது -கள் விகுதி பெயரோடு வருவதால் ஒருமை / பன்மை மயக்கம் ஏற்படவில்லை. அதனால் வினை யோடு வரும் விகுதி பற்றிய அக்கறையும் இல்லாமல் போய்விட்டது. இத்தகைய நிலையைப் பின்வரும் வாக்கியங்களிலும் நாம் காணலாம்.[11]

(37) வார்த்தைகளுக்குப் பொருளாழமும் வேகமும் ஏற்படு கிறது (புதுமைப்பித்தன் 'பாட்டும் அதன் பாதையும்')

(38) சமையல் குறிப்பும் பட்டியலும் நீளமாக இருந்தது (வாஸந்தி 'நிஜங்கள்' ஆனந்தவிகடன், 19 - 12 - 1978)

(39) படிப்பும் உத்தியோகமும் (அவளை) நிமிர்ந்து நிற்க வைத்தது (மேற்படி)

வாக்கியங்கள் (37 - 39) இல் எழுவாயாக இணைப்புப் பெயர்கள் (Conjoined Nouns) செயல்படுகின்றன. ஆனால் வினையோடு ஒருமை யைச் சுட்டும் - து விகுதி வருகிறது. வினைக்கும் எழுவாய்க்கும் முரண் இருப்பினும் இது பன்மையாகவே உணரப்படுகிறது. இத்தகைய வாக்கி யங்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டே வருகின்றன. இன்றைய தமிழ் வழக்கில் அஃறிணையைக் குறிக்கும் பெயர்களும் இணைப்புப் பெயர்களும் இவ்வாறு எழுவாயாக வரும்பொழுது - து விகுதி வினை யோடு வருவது சாதரணமாகிவிட்டது. இதுவும் இன்றைய தமிழில் கவனிக்கவேண்டியது.

தா என்ற வினையும் வா என்ற வினையும் வாக்கியத்தில் வரும் பொழுது - கு வேற்றுமை ஏற்று வரும் பெயர்கள் தன்மையையோ முன்னிலையையோ சார்ந்து வரும். கொடு என்ற வினையையும் செல் என்ற வினையையும் கொண்டுள்ள வாக்கியத்தில் - கு வேற்றுமை படர்க்கையைச் சார்ந்து வரும்[12]

(40) எனக்குத் தந்தான்

(41) நினக்குத் தந்தான்

(42) என்னுழை வந்தான்

(43) நின்னுழை வந்தான்

(44) அவற்குக் கொடுத்தான்

(45) அவன்கட் சென்றான்

நாம் பயன்படுத்துகின்ற இக்காலத் தமிழுக்கு இவ்விதிகள் பொருந்துவதில்லை.

(46) எனக்குக் /த் { கொடுத்தான் / தந்தான் }

(47) அவனிடம் { வந்தான் / சென்றான் }

தற்காலத் தமிழுக்கு இவ்விதிகளை நாம் தளர்த்த வேண்டும்.

தொல்காப்பியர் காலத்திலிருந்த தமிழிலிருந்து தற்காலத் தமிழ் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதை மேலோட்டமாகத்தான் நாம் இங்குச் சுட்டுகிறோம்.[13]

மொழி பல்வேறு காரணங்களால் மாறிக்கொண்டிருக்கிறது பல்வேறு மொழி பேசும் மக்களிடையே ஏற்படுகின்ற தொடர்பும் மொழி மாற்றத்திற்குரிய காரணங்களுள் ஒன்றாக அமைகின்றது. மற்ற மொழி பேசும் மக்களுடைய தொடர்பு என்பது அம்மொழியோடு, அம்மக்களின் கலாச்சாரத்தோடு அம்மொழியின் இலக்கியத்தோடு அம்மொழி வழங்கும் அறிவுலகத்தோடு கொண்ட தொடர்பாகும். மொழி மாற்றம் பெறுவதற்குரிய அடிப்படையாக அமைவது அது பயன்படுத்தப்படும் எல்லைகளின் விரிவும் ஆகும். இந்தப் பின்னணியில் நாம் நம்முடைய தமிழைப் பயன்படுத்தும் எல்லைகளின் விரிவைக் காண்போம்.

இலக்கியத்தின் பரிமாணம் வளர்ந்து பெருகியதை நாம் முதலில் குறிப்பிட வேண்டும். செய்யுள் வடிவத்தையும் இறுகிய ஆனால் நீண்ட

வாக்கிய அமைப்பை உடைய உரையையும் கடந்து நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய எல்லைகளைத் தொட்டுத் தன்னுடைய பயன்பாட்டைத் தற்காலத் தமிழ் விரிவாக்கியுள்ளது. நவீன மருத்துவத்தை விளக்கிக் கூற இக்காலத் தமிழ் முற்படுகிறது. கல்வியின் எல்லா நிலைகளிலும் தாய் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்ற மொழிக் கொள்கையின் காரணமாகத் தமிழ் இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் உயர்நிலைப் பள்ளி நிலையில் பாட மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இது தமிழில் அறிவியல் நூல்கள் வெளிவர வழிவகுத்தது.

தமிழை மருத்துவம், பொறியியல், அறிவியல், வரலாறு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் பயன்படுத்த முற்படுவதில் கலைச் சொற்களை உருவாக்கலும் தரப்படுத்தலும் மட்டுமே பிரச்சினை இல்லை யென்பதல்ல. இத்துறைகளில் பயன்படுத்தும் தமிழின் நடையும் கருத் தாடலின் (Discourse) அமைப்பும் மாறுபடுகின்றன. இலக்கியத் தொடர் புடைய கருத்தாடலின் அமைப்பும் அறிவியல் துறையின் கருத்தாடலின் அமைப்பும் தங்களுக்குள் பல்வேறு நிலைகளில் வேறுபடுகின்றன. அறிவியல் கருத்தாடல் மொழியின் எல்லை மீறிய பொதுமைகளை உள் ளடக்கியிருக்கிறது. அனைத்துலகக் குறியீடுகள், சூத்திரங்கள், அட்ட வணைகள் ஆகியவை அதில் இடம் பெறுகின்றன. அறிவுலகத் துறைகள் செய்திப் பரிமாற்ற அடிப்படையில் சில பொதுமைகளைக் கருத்தா டலின் அமைப்பில் வலியுறுத்துகின்றன. ஆகையால் மொழி மாற்றத் திற்கு உட்படுவது இயற்கையே. மொழியில் மாற்றம் என்பது இரு நிலைகளில் ஏற்படுகிறது. கால ஓட்டத்தில் மொழியில் மாற்றம் விளை வது ஒரு நிலை. சமகாலத்திலேயே கூட மொழியைப் பயன்படுத்தும் எல்லைகளின் விரிவாக்கத்தால் ஏற்படுவது இரண்டாவது நிலை. தமிழ் இவ்விரு நிலைகளாலும் மாற்றம் பெற்றது. மாற்றம் பெறுகிறது. மாற்றம் பெறும்.

இலக்கணம் என்பது மொழியின் அமைப்பை விளக்குவது. ஆகையால் மொழி மாற மாற இலக்கணமும் மாறுபடும். மொழிக்கு இரு வகையான இலக்கணங்கள் தேவை என்பர் மொழியியலார். ஒன்று நீண்ட

வரலாற்றுப் பின்னணியுடைய மொழிக்கு பல்வேறு கால கட்டங்களில் மொழியின் அமைப்பை விவரிக்கும் வண்ணனை இலக்கணம் (Descriptive Grammar). மற்றொன்று இவ்வாறு பல்வேறு காலகட்டங் களில் மொழியின் அமைப்பை விவரிக்கும் வண்ணனை இலக்கணங்களை ஒப்பிட்டு மொழியில் நடந்த மாற்றங்களை விவரிக்கும் வரலாற்று இலக்கணம் (Historical Grammar). மொழியை முழுமையாகப் புரிந்து கொள்ள இவ்விரு பரிமாணங்களையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய மரபிலக்கணங்கள் அக்கால கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ் மொழியின் அமைப்பை விவரிக் கின்றன என்று எடுத்துக்கொண்டால் இன்றைய தமிழுக்கு - இவ்விலக் கணங்கள் தோன்றிய கால கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழிலிருந்து பல மாற்றங்களை ஏற்றுக்கொண்ட இக்காலத் தமிழுக்கு - புதிய இலக் கணம் தேவையில்லையா ? தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக் கணங்கள் பயன்படுத்திய மொழித் தரவிற்கும் புதிதாக நாம் படைக்க விரும்பும் இலக்கணம் பயன்படுத்தும் மொழித் தரவிற்கும் வேறுபாடு இல்லையா ? இன்று வேகமாக வளர்ந்து வரும் மொழியியல் தற்காலத் தமிழுக்கு இலக்கணம் படைப்பதில் வகிக்கும் பங்கு என்ன ?

நாம் முன்பு குறிப்பிட்டதுபோலத் தமிழுக்கு எழுதப்படும் புதிய இலக்கணம் தமிழ் பயன்படுத்தப்படும் எல்லைகளின் விரிவை மனதில் கொள்ள வேண்டும். இலக்கிய வகைகளில் பயன்படுத்தப்படும் தமிழ் தரவின் ஒரு பகுதிதான். பல்வேறு அறிவியல் துறைகளில் பயன்படுத்தப் படும் தமிழோடு நிர்வாகம், கல்வி, நீதிமன்றம், பத்திரிகைகள் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழையும் புதிய இலக்கணம் தரவாகக் கொள்ள வேண்டும். ஆகையால் இன்றைக்குத் தமிழுக்குப் புதிய இலக்கணம் எழுத முற்படுவோரின் தரவு விரிந்து பரந்தது.

இன்றைய தமிழுக்கு ஏன் புதிய இலக்கணம் எழுத வேண்டும் ? என்ற வினாவையும் எழுப்புவோம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நமக்கு இலக்கணம் எந்த நிலையில் உதவ முடியும் ? மாற்றிலக்கணக்காரர்

களின் (Transformational Generative Grammarians) கூற்றுப்படி ஒரு குழந்தை ஐந்து வயதைக் கடக்கும் பொழுது அதனுடைய மொழியை நன்றாகக் கற்றுக்கொண்டு விடுகிறது. அது சொல்ல வேண்டிய செய்தி களைப் பிறருக்கு அதன் மொழி மூலம் கூறுகிறது. அவ்வாறே தன்னைச் சுற்றியுள்ளவர்கள் கூறுவதையும் அது புரிந்துகொள்கிறது. இச்செயல் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் அக்குழந்தை அம்மொழியின் இலக்கண விதிகளைத் தன்வயமாக்கியிருத்தல் வேண்டும். இலக்கண விதி களை அக்குழந்தை கூற முடியாமல் இருக்கலாம். ஆனால் அம்மொழி யின் இலக்கண விதிகளை அது பின்பற்றி வாக்கியங்களை உருவாக்கு கிறது. ஐந்து வயதை எட்டிய குழந்தை

(48) *அவன் போனாள்

(49) *அவள் போனான்

(60) *அது போனார்

போன்ற வாக்கியங்களை உருவாக்குவதில்லை. அது உருவாக்குகின்ற வாக்கியங்களில் எழுவாய்க்கும் வினையோடு வரும் விகுதிகளுக்கும் (எண், இடம், பால் ஆகியவற்றைக் காட்டும் விகுதிகளுக்கும்) இயைபு இயல்பாகவே அமைந்துள்ளது. ஆகையால் அக்குழந்தைக்கும் ஒரு இலக்கணம் தெரியும். அப்படி என்றால் புதிய இலக்கணத்தின் தேவை என்ன ?

இலக்கணம் உருவாவதற்குப் பல்வேறு நோக்கங்கள் உண்டு. முதலாவது ஒன்றை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஓர் ஆர்வம். மனிதன் தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ளவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமுடையவன். இந்த ஆர்வம் தான் நம்முடைய அறிவுலக வளர்ச்சிக்கு அடித்தளம். இதற்கு மொழி மட்டும் விதிவிலக்கல்ல, ஆகையால் தானும் தன் சமுதாயமும் பயன்படுத்தும் மொழியின் விதிகளையும் அவன் அறிய விரும்புகிறான். மொழியின் அமைப்பை விவரிக்கும் விதிகளின் தொகுதியை இலக்கணம் என்று கூறுவோம். இலக்கணத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவோர் மொழியின் தன்மையை முதலில் உணரவேண்டும்.

மொழிக்கு இரண்டு வடிவங்கள் உண்டு. ஒன்று பேச்சு வடிவம். மற்றொன்று எழுத்து வடிவம். ஒரு மொழியைப் பேசுகின்ற மக்கள் அனைவரும் தங்களுக்குள் வேறுபாடின்றி ஒரேமாதிரியாகப் பேசுவதில்லை. அதே சமயத்தில் ஒரு மொழியைப் பேசுகின்றவர்கள் பல விதிகளைப் பொதுவாகவும் பயன்படுத்துகிறார்கள். அதனால்தான் மொழியைப் பேசுகின்றவர்களுக்கிடையே செய்திப்பரிமாற்றம் நடைபெறுகிறது. ஒரு மொழியைப் பேசுகின்றவர்களிடையே பொதுவான விதிகளையும் நாம் காணலாம். வேறுபாடுடைய விதிகளையும் நாம் காணலாம்.

ஒரு மொழியைப் பேசுகின்றவர்கள் நிலப்பரப்பின் அடிப்படையில் பல்வேறு இடங்களில் வாழலாம். இதனால் ஒரு முனையில் வாழ்கின்ற மக்கள் இன்னொரு முனையில் வாழ்கின்றவர்களோடு அதிகமான தொடர்பு கொள்ளாமல் இருக்கலாம். தொடர்பற்ற தன்மை மொழியைப் பேசும் மக்களிடையே பேச்சு வேறுபாட்டை விளைவிக்கக் காரணமாக அமைகிறது. இத்தன்மையால் மொழியில் நில அடிப்படையிலான வட்டாரக் கிளைமொழிகள் (Geographical / Regional Dialects) தோன்றுகின்றன. அதே சமயம் இன்னொரு வகையான கிளைமொழிகளையும் நாம் நம் மொழியில் காணலாம். ஒரே ஊரைச் சார்ந்த பிராமணரும் பிராமணர் அல்லாதோரும் தங்களுடைய பேச்சில் வேறுபாடுகளைக் காட்டுகிறார்கள். இங்கு மக்களிடையே தொடர்பற்ற தன்மை என்பதைக் கிளை மொழிகளின் வேறுபாட்டுக்குக் காரணமாகக் காட்ட முடியாது. ஒவ்வொரு சமுதாயப் பிரிவினரும் தங்கள் பிரிவின் தனித்துவத்தை மொழி வழியாக வெளிப்படுத்துகிறார்கள். இங்குக் குழுத்தனித்துவம் (Group Identity) செயற்படுகிறது. ஆகையால் பேச்சு மொழியில் காணப்படும் கிளைமொழிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று வட்டாரக் கிளைமொழிகள். மற்றொன்று சமுதாயக் கிளைமொழிகள் (Social dialects). அதேபோல் எழுத்தும் பல்வேறு நடைகளையும் (Styles) கருத்தாடல் அமைப்புகளையும் கொண்டது. மொழி என்பது வேறுபாடற்ற ஒரே அமைப்பை உடையது அல்ல.

இச்சூழலில்தான் சமுதாயம் சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட ஒரு கிளைமொழியை / வழக்கை நிலைபேறு வழக்காக (Standard Dialect) தேர்ந்தெடுக்கிறது. இவ்வழக்கைச் சமுதாயம் முழுதும் ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்துகிறது. பல்வேறு குழுக்களாக உள்ள சமுதாயத்தை இணைக்கின்ற பாலமாக இந் நிலைபேறு வழக்கு செயல்படுகிறது. பல்வேறு கிளைமொழிகளைப் பயன்படுத்துகின்ற மக்கள் இவ்வழக்கின் மூலம் தங்களுக்குள் செய்திப் பரிமாற்றத்தை நடத்துகிறார்கள். பல்வேறு கிளைமொழியினர் இவ்வழக்கைப் பயன்படுத்துவதாலும் கிளைமொழிகளும் மாற்றத்திற்கு உட்படுவதாலும் இவ்விரு வகை வழக்குகளுக்கும் இடையே உள்ள இடைவெளி நாளா வட்டத்தில் பெருகிக் கொண்டு போகிறது. வரலாறு நீள நீள இம் மொழியில் இரட்டை வழக்கு நிலை (Diglossia) உருவாகி நிலைபெற்று விடுகிறது.

நான் முன்பு கூறிய சில செய்திகளை இப்பொழுது விளக்கியவற்றோடு இணைத்துப் புதிய இலக்கணத்தின் தேவையை வலியுறுத்துவோம். ஐந்து வயது நிரம்பிய குழந்தை மொழியைக் கற்றுவிட்டதென்று நாம் குறிப்பிட்டோம். அக்குழந்தை தான் பிறந்து வளர்ந்த வட்டாரத்தில் பயன்படுத்தப்பட்ட கிளைமொழியையும் தன்னுடைய பெற்றோர் சார்ந்த சாதி போன்ற சமுதாயக் குழுவின் கிளைமொழியையும் கற்றிருக்கிறதென்று பொருள். அக்குழந்தை பள்ளிக்கு வரும்பொழுது அங்கு கற்கின்ற மொழி தன்னுடைய வீட்டிலும் சுற்றுப்புறச்சூழலிலும் தான் கற்றுக்கொண்ட கிளைமொழி அல்ல. ஆகையால் பள்ளியில் குழந்தை கற்கின்ற மொழி வகை வேறானது. எழுத்துத் தமிழைப் பள்ளியில் கற்பிக்கின்ற ஆசிரியர்களும், பள்ளிக்குப் பாடநூல் எழுதுகிறவர்களும் இவ் வேறுபாட்டை உணர வேண்டும். அத்துடன் இலக்கணமும் பேச்சுத் தமிழிலிருந்து எழுத்துத் தமிழைக் கற்கவும் கற்பிக்கவும் உதவுகிற சாதனமாக அமைய வேண்டும். இது முறைசாரா முறையில் எழுத்தறிவு பெற முனைகின்ற வயது வந்தோர்க்கும் பொருந்தும். ஆகையால் பள்ளிகளிலும் வயது வந்தோர் கற்கின்ற இடங்களிலும் கற்பிக்கப்படுகின்ற எழுத்துத் தமிழுக்குப் புதிய இலக்கணம் தேவை என்பதை நான் வலியுறுத்த

வேண்டிய அவசியமில்லை. ஆரம்பப் பள்ளிகளில் தற்கரலத் தமிழிலக் கணம் கற்பிக்கப்பட வேண்டிய சூழல் இல்லாமல் இருக்கலாம். மொழி யைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இக்காலத் தமிழ் மொழியின் அமைப்பு பற்றிய அறிவு கட்டாயம் தேவை. மூன்றாம் வகுப்புக்கு மேல் உள்ள பள்ளி மாணவர்களுக்குத் தற்காலத் தமிழின் அமைப்பு தெரிவது நல்லது. ஆகை யால் நாம் இப்பொழுது பயன்படுத்தும் மொழியின் அமைப்பைப் புதிய இலக்கணம் விளக்கவேண்டும். மேலும் இலக்கணம் மொழியின் அமைப்பை விளக்குவதோடு மாணவர்களுக்கு ஐயம் ஏற்படுகின்ற பொழுது பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கீட்டு நூலாகவும் (Reference Book) செயல்பட வேண்டும். ஆங்கிலத்தில் நமக்கு எழுத்துக் குழப்பம் ஏற்படும் பொழுது எவ்வாறு சிறந்த அகராதியைப் பார்த்துப் பிரச்சினை யைப் போக்கிக் கொள்கிறோமோ அவ்வாறே மொழி அமைப்பைப் பற்றிய குழப்பத்தை இப்புதிய இலக்கணத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். அகராதி, இலக்கணம் போன்றவை நோக்கீட்டிற்காகப் பயன் பட்டாலும் அவை மொழியைக் குறியாக்கம் (Codification) செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இன்றைய தமிழின் அமைப்பை விளங்கிக் கொள்ள மட்டுமன்றிக் குறியாக்கம் செய்வதற்கும் இக்காலத் தமிழுக்குப் புதிய இலக்கணம் தேவை.

நாம் இதுவரை தமிழை முதல் மொழியாகக் கொண்டவர்களை மட்டும் மனதில் கொண்டு புதிய இலக்கணத்தின் தேவையை வலியுறுத் தினோம். தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கின்றவர்களை மனதில் கொண்டும் நம் தமிழுக்குப் புதிய இலக்கணம் தேவை என்பதை நாம் இப் பொழுது வலியுறுத்துவோம். இன்றைய சூழலில் மற்ற மாநிலங்களில் உள்ள தமிழரல்லாத பலர் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கின்றார் கள். இந்தியாவில் மட்டுமன்றிப் பல்வேறு அயல்நாடுகளிலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கின்றார்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் தமிழைக் கற்பிக் கிறார்கள். தமிழைக் கற்கின்றவர்களுக்கும் பல்வேறு நோக்கங்கள் உண்டு. மொழி ஆய்வில் ஈடுபடுவதற்கும் மொழியைக் கற்று அதன்மூலம் தமிழர் களின் பண்பாடு, சமுதாய அமைப்பு, தத்துவம், இலக்கியம் ஆகிய துறை

களில் ஆய்வை மேற்கொள்வதற்கும் அயல்நாட்டவர் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கிறார்கள். ஆகையால் இவ்வாறு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கின்றவர்களுக்கு இக்காலத் தமிழ் இலக்கணம் தேவைப்படுகிறது. இங்கும் இலக்கணம் தற்காலத் தமிழின் அமைப்பை விளக்கக்கூடிய கருவியாகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கீட்டு நூலாகவும் பயன்படுகிறது.

மூன்றாவது கட்டமாக இப்புதிய இலக்கணத்தின் தன்மையையும் கூறுகளையும் விளக்குவோம். இவ்விலக்கணம் மொழியின் அமைப்பை விளக்குகின்ற தன்மையையும் நோக்கீட்டு நூலாகப் பயன்படுகின்ற தன்மையையும் மொழியைக் குறியாக்கம் செய்கின்ற தொழில்பாட்டையும் உடையதாக அமைய வேண்டுமென்று நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். நம்முடைய இலக்கணம் மொழியின் வடிவமாகிய ஒலியன்களின் அமைப்பு, சொற்களில் உருபன்கள் அமைந்துள்ள முறைமை, சொற்கள் தொடர்களிலும், வாக்கியங்களிலும் வரும் அமைப்பு முறை ஆகியவற்றை விவரிக்க வேண்டும் என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அறிவியல் துறைகளில் நாம் பயன்படுத்தும் தமிழையும் தரவாகக் கொண்டு இக்காலத் தமிழை விளக்கும்பொழுது மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்ளடக்கி மொழி அமைப்பை விவரிக்க வேண்டும். சான்றாக ஜ, ஸ, ஹ போன்ற ஒலிகள் ஒலியன்களாக இன்றைய தமிழில் செயல்படுவதால் ஒலியனமைப்பில் இவற்றுக்கு உரிய இடம் கொடுக்கப்படவேண்டும். ர, ல போன்ற ஒலியன்கள் சொற்களின் முதலில் வருவது இல்லை என்பது இத்தமிழுக்குப் பொருந்தி வராது. லேசர். ராடார் போன்ற சொற்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய சொற்களை இலேசர், இராடார் என்று யாரும் எழுதுவதும், பேசுவதும் இல்லை. ஆகையால் இன்றைய தமிழுக்கு எழுதப்படுகின்ற இலக்கணத்தில் சொல்லுக்கு முதலில் ல, ர போன்ற ஒலியன்கள் வருமென்று நாம் கூற வேண்டியிருக்கிறது. இங்கு நம்முடைய மனப்பாங்கை அல்லது மொழிக் கொள்கையை இலக்கணத்தின் மீது திணிக்கவில்லை. மாறாக நமக்குக் கிடைக்கின்ற தரவுகளின் அடிப்படையில் இவ்விதிகளை

உருவாக்குகிறோம். இத்தகைய இலக்கணம்தான் தமிழ் அடைந்துள்ள மாற்றங்களைப் பிரதிபலிக்க முடியும்.

கடந்த இருபதாண்டுகளாக மொழியியலில் மாற்றிலக்கணம் மிக வேகமாகவும் மொழி அமைப்பை விவரிப்பதில் ஆழமாகவும் வளர்ந்த கோட்பாடு. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழியின் தொடரியல் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.[16] இவ்வாறு வெளிவந்த ஆய்வேடுகளின் முடிவுகள் இக்காலத் தமிழ் இலக்கணம் வரப் பேருதவியாக அமையும். இக்கோட்பாடு பயன்படுத்தும் குறியீடுகள், சூத்திரங்கள் ஆகியவற்றை நீக்கி இக்கோட்பாடு வெளிப்படுத்தும் தமிழ் மொழி பற்றிய பொதுமைகள்தான் புது இலக்கணத்திற்கு முக்கிய மானவை. வெளிவந்த ஆய்வேடுகள் இவ்விலக்கண உருவாக்கத்தில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. தொடரியலோடு பொருண்மையியலும் (Semantics) முக்கிய இடத்தை இப்புதிய இலக்கணத்தில் பெற வேண்டும்.

வாக்கிய நிலையைத் தாண்டிக் கருத்தாடல் பற்றிய ஆய்வின் கண்டு பிடிப்புகளும் புதிய இலக்கணத்தில் இடம் பெற வேண்டும். நாம் முன்பு குறிப்பிட்டுள்ளபடி இலக்கிய வகையைச் சார்ந்த கருத்தாடலும் அறிவியல் வகையைச் சார்ந்த கருத்தாடலும் கருத்தாடல் என்ற நிலையில் சில பொதுமைகளைக் கொண்டிருந்தாலும் தாங்கள் வெளிப்படுத்தும் செய்திகளினால் அவை வேறுபடுகின்றன.[17] ஆகையால் நம்முடைய புதிய இலக்கணம் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படும் கருத்தாடல் அமைப்பையும் விளக்க முயல வேண்டும்.

இதற்கு அடுத்த நிலையில் இலக்கணம் மொழி வடிவத்தை விளக்கு வதோடு மொழிக்கும் மொழிப் பயன்படுத்தப்படும் சூழலுக்கும் உள்ள உறவையும் விளக்க வேண்டும். மொழியில் இலக்கண வாக்கியங்களை உருவாக்குவதால் மட்டும் ஒருவன் மொழியை அறிந்தவனாக மாட்டான். சான்றாக, நம்முடைய வீட்டிற்கு நண்பர் ஒருவர் வருவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது நம்முடைய குழந்தை

(51) மாமா, நீயும் அத்தையும் சௌக்கியமா ?

என்று விசாரிக்கிறது உடனே நாம் நம் குழந்தையிடம் " என்னம்மா, பெரியவர்களிடம் எப்படிப் பேசுவது என்று தெரியவில்லையே" என்று கடிந்து கொள்கிறோம். " நம்மை விடப் பெரியவர்களை நீங்கள் என்று குறிப்பிட வேண்டும்" என்று குழந்தைக்குக் கூறுகிறோம். இலக்கண விதிகளைக் கொண்டு பார்த்தால் குழந்தை உருவாக்கிய வாக்கியத்தில் எவ்வித இலக்கண வழுவும் இல்லை. தமிழில் முன்னிலையில் உள்ளோரைக் குறிப்பிட இரண்டு சொற்கள் உள்ளன. அவை நீ என்ற சொல்லும் நீங்கள் என்ற சொல்லும். ஆனால் ஒவ்வொன்றின் தேர்வும் வாக்கியத்தைப் பயன்படுத்தும் சூழலைப் பொறுத்தது. சூழல் என்பது இடம், காலம், கூறப்படும் பொருள், பேசுவோன், கேட்போன், உரையாடலில் குறிக்கப்படுவோன் ஆகிய அனைவரையும் ஒட்டு மொத்தமாகக் குறிக்கும். குழந்தை இரண்டு வாக்கியங்களையும் (51 / 52) அறிந்திருந்தாலும் வாக்கியம் 52 ஐ மட்டும்தான் அது மேலே குறிப்பிட்ட சூழலில் பயன்படுத்தலாம்.

(52) மாமா, நீங்களும் அத்தையும் சௌக்கியமா ?

நாம் இங்கு வலியுறுத்த விரும்புவது இலக்கணம் மொழியின் வடிவத்தோடு தொடர்புடைய விதிகளை விவரிப்பதோடு வாக்கியங்களுக்கும் அவை பயன்படுத்தப்படும் சூழல்களுக்கும் இடையே உள்ள தொடர்பையும் விவரிக்க வேண்டும். ஒருவருக்குத் தமிழ் மொழி தெரியும் என்று கூறும்பொழுது அவருக்கு இலக்கண வழுவற்ற வாக்கியங்களை உருவாக்கத் தெரியும் என்பது மட்டும் பொருள் அல்ல. சூழலுக்குத் தகுந்த வாக்கியத்தைத் தேர்வு செய்யவும் அச்சூழலில் அவ்வாக்கியத்தைப் பயன்படுத்தவும் தெரியும் என்று பொருள். மொழியைப் பயன்படுத்துவதோடு தொடர்புடைய விதிகளும் இலக்கணத்தின் உள்ளடக்கமாக அமைய வேண்டும். இலக்கணத்தின் பரிணாமமும் வீச்சும் வாக்கியங்களையும் அவற்றின் அமைப்பையும் விளக்குவதோடு சுருங்கிவிடக்கூடாது. தமிழுக்கு எழுதப்படுகின்ற புதிய இலக்கணம் புலப்படுத்து திறனையும் (Communicative Competence) விளக்குவதாக அமையவேண்டும்.

நான்காவது கட்டமாக இவ்விலக்கணத்தை உருவாக்க எத்தகைய செயல்முறைகளைத் திட்டமிடலாம் என்பதை விவரிப்போம். முதல் நிலையில் இதுவரை தமிழை விவரிக்க மேற்கொள்ளப்பட்ட நூல்கள் கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பைத் தமிழ் மொழியியல் நூலடைவு (Bibliography of Tamil Linguistics) என்னும் தலைப்பில் தயாரித்து வெளியிட வேண்டும். இரண்டாம் நிலையில் குறிப்பிடத்தக்க ஆனால் அச்சில் வராத ஆய்வேடுகளைப் பதிப்பிக்கலாம். இவ்வாய்வேடுகள் தமிழின் அமைப்பை விளக்கியிருப்பதால் இவற்றிலிருந்து தேவையான பொதுமைகளை (Generalizations) உருவாக்கலாம். மூன்றாவது நிலையில் ஒரு சிறிய குழு இக்காலத் தமிழுக்கு ஒரு விரிந்த இலக்கணத்தை உருவாக்குவதில் ஈடுபடலாம். இக்குழுவிற்கு ஆலோசனை வழங்கவும் சிறப்பாகத் திட்டமிடவும் அறிவுரைக்குழு ஒன்றை ஏற்படுத்தலாம். ஆகையால் தமிழுக்கு ஒரு புதிய இலக்கணத்தைப் படைக்க வேண்டிய காலச் சூழலில் இருக்கிறோம் என்பது மட்டும் மறுக்க இயலாத உண்மை.

குறிப்பு

1. வினையின் தோன்றும் பால்அறி கிளவியும்
பெயரின் தோன்றும் பால்அறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே (தொல். சொல் 11)

2. தொல் சொல் 11 ஆவது சூத்திரத்திற்குச் சேனாவரையரின் எடுத்துக்காட்டுகள்.

3. ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே (தொல். சொல். 7)

4. அவர் போன்ற சொற்களும் - அர் போன்ற விகுதிகளும் தொல்காப்பியர் காலத்தில் பலர்பாலை மட்டும் குறித்ததாகக் கொள்ள இயலாது.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல

(தொல். சொல். 27)

உயர்சொற் கிளவி என்பது மரியாதை ஒருமையைச் சுட்டுவதாகக் கூறலாம். Tolkappiyam itself speaks of uyarcolkilavi or the honorific singular (Meenakshi sundaran, 1965 : 213).

5. சுள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே

(தொல். சொல். 15)

6. In the second person the plural forms were used as honorific singular. Later a distinction was made between nīr and nīṅkal, nīṅkal being reserved for very important personalities. nīr for more or less equal and nī for inferiors. In the Tinnevelly dialect where the form nīm is preserved, the distinction between nī, nīr, nīm and nīṅkal provides four grades (Meenakshisundaran, 1965 : 213).

. யாங்கள், நீங்கள், அவர்கள் என்னும் இரட்டைப் பன்மைப் பெயர்கள் ஆசிரியர் காலத்தில் வழங்க வில்லை என்ற 27 ஆம் சூத்திரத்திற்குரிய ஆசிரியரின் அடிக்குறிப்பையும் ஈண்டு ஒப்புநோக்குதல் நல்லது.

7. தொல்காப்பியர்காலத் தமிழின் மூவிடப் பெயர்ப் பாகு பாட்டைப் பின்வருமாறு தெ. பொ. மீனாட்சி சுந்தரன் அவர்கள் காட்டுகிறார்கள் (Meenakshisundaran, 1965 : 94).

	Singular	plural
I Person		
nominative	yān	yām
II Person		
nominative	nī	nīyir / nīvīr
III Person		
nominative	tān	tām

8. இதைப்பற்றிய விரிவான விளக்கத்திற்குப் பரமசிவம் அவர்களின் (1983 : 125 - 126) நூலைக் காண்க.

9. தான், தாங்கள் ஆகிய தன்வயப் பெயர்களின் பயன் பாட்டை விரிவாக அறிதற்குப் பரமசிவம் அவர்களின் (1983 : 182 - 184) நூலையும் ஆரோக்கியநாதனின் (1984) கட்டுரையையும் காண்க.

10. தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே
(தொல். சொல். 171)

11. பரமசிவம் அவர்களின் (1983 : 122) நூலிலிருந்து இவ் வாக்கியங்கள் எடுக்கப்பட்டன.

12. அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த (தொல். சொல். 29)
ஏனை யிரண்டும் ஏனை யிடத்த (தொல். சொல். 30)

13. வேற்றுமை அமைப்பிலும் தற்காலத் தமிழ் பெரிய மாற்றம் பெற்றுள்ளது. எவ்வாறு இக்காலத் தமிழ் வேற்றுமை அமைப்பு மாற்றம் பெற்றுள்ளது என்பதை அறியக் கோதண்டராமன் அவர்களின் கட்டுரையைக் காணவும். பெயர்ப்பாகுபாட்டில் பன்மையிலும் ஆண் பெண் வேறுபாட்டை இக்காலத் தமிழ் கொண்டுள் ளது என்பதை முத்துச்சண்முகன் அவர்களும் (1980) இராமானுஜன் அவர்களும் (1968) குறிப்பிடுகிறார்கள். இதுபோன்று துணை வினைகளில் ஏற்பட்ட மாற் றத்தை அறிய மீனாட்சிசுந்தரன் அவர்களின் (1965 : 215, 216) நூலைக் காண்க.

14. முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று கலைச்சொல்லோடு தொடர்புடையது. இராம. சுந்தரம் அவர்களுடைய கட்டுரை கலைச்சொற்களைத் தரப்படுத்தல் பற்றியும் அதில் எழும் பிரச்சினைகளைப் பற்றியும் விவாதிப் பதால் நாம் இங்கு இது சம்பந்தப்பட்ட பிரச்சினை களை விவாதிக்கவில்லை.

15. இரட்டை வழக்கு அரேபியா, கிரேக்கம் போன்ற மொழிகளில் காணப்படுவதாக ஃபெர்கூசன் (Ferguson, 1959) கூறுவார். இந்திய மொழிகளில் தமிழில் இந்நிலை இருப்பதாகத் தம்முடைய கட்டுரை யில் குறிப்பிடுகிறார். இக்கருத்தை மொழியியலில் அறிமுகப்படுத்தி விளக்கியவர் ஃபெர்கூசன் என்ற அறிஞரே. தமிழில் இக்கருத்தைப் பற்றிய விளக்கத்திற்கு ஆரோக்கியநாதன் அவர்களின் (1986) நூலையும் தமிழின் இரட்டை வழக்கு நிலையின் தன்மையை அறியத் தெய்வசுந்தரம் அவர்களின் நூலையும் (1981) காண்க

16. இக்கோட்பாட்டின் பின்னணியில் புறநானூற்றுப் பாடலின் தொடரியலை வ. அய். சுப்பிரமணியம் (V. I. Subramoniam) அவர்கள் (1961) முதன் முதலாக விவரித்தார். பின்னர் ச. அகத்தியலிங்கம் (S. Agesthiali -ngom) அவர்கள் (1963) தமிழின் தொடரியலை விளக்க இக்கோட்பாட்டைப் பயன்படுத்தித் தம் முடைய டாக்டர் பட்டத்திற்குரிய ஆய்வேட்டை இந்தியானா பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்தார்.

17. கருத்தாடல்களின் வகைகளையும் அவற்றின் அமைப்பு முறை பற்றிய விளக்கத்தையும் அறியத் தெய்வச்சுந்தரம் அவர்களின் (1987) கட்டுரையைக் காண்க.

துணை நூல்கள்

ஆரோக்கிய நாதன், எஸ்., 1986, **மொழியியல் : இரட்டை வழக்கு,** மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

தெய்வசுந்தரம். ந., 1987, 'கருத்துப் புலப்படுத்தமும் கருத்தாடலும்', புலமை, 13. 2 பக். 49 - 67.

பரமசிவம், கு., 1983, இக்காலத் தமிழ் மரபு, அன்னம், சிவகங்கை.

முத்து சண்முகன், 1980, 'இக்காலத் தமிழ்' (மறு அச்சு), முத்துப் பதிப்பகம், மதுரை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம், 1959, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

Agesthialingom, S., 1963, **A generative grammar of Tamil,** Ph.D., Dissertation, Submitted to the Indiana University, Bloomingston, U.S..A

Arokianathan. S., 1984, '*Tanization in Tamil*', IJDL. XIII.I pp. 123 - 135.

Deivasundaram, N., 1981, **Tamil Diglossia**, Nainar Pathippagam, Tirunelveli.


Ferguson, C.A., 1959, '*Diglossia*' Word - 15, pp. 325 - 340.

Meenakshisundaran., T.P., 1965, **A History of Tamil Language**, Linguistic Society of India, Poona.


Ramanujan. A.K., 1968, '*The Structure of Variation : A Study in Caste Dialects*' in Singer, M. and B. S. Cohen (eds) Structure and change in Indian Society.

Subramoniam, V. I., 1961, '*Transformation analysis of a lyric of Puranaanuuru*' in Dr. R. P. SethuPillai Silver Jubilee Commemoration volume, pp. 155 - 162.

நன்றி : களஞ்சியம், 1988.



மூவிடப்பெயர்
தன்மை
முன்னிலை
படர்க்கை
ஒருமை
பன்மை
ஒருமை
பன்மை
உயர்திணை
அஃறிணை
யான்
யாம்
நீ
நீவிர்
ஆண்
பெண்
பலர்
ஒருமை
பன்மை
அவன்
அவள்
அவர்
அது
அவை


மூவிடப்பெயர்
தன்மை
முன்னிலை
படர்க்கை
ஒருமை
பன்மை
உளப்படுத்து
உளப்படுத்தா
ஒருமை
பன்மை
மரியாதை
மரியாதையல்
மரியாதை₁
மரியாதை₂
உயர்திணை
அஃறிணை
ஒருமை
பன்மை
மரியாதை
மரியாதையல்
அவர்கள்
மரியாதை₁
மரியாதை₂
ஆண்
பெண்
ஒருமை
பன்மை
நான்
நாம்
நாங்கள்
நீர்
நீங்கள்
நீ
நீங்கள்
அவர்
அவர்கள்
அவன்
அவள்
அது
அவை

இயைபு விகுதிகள்

இரா. கோதண்டராமன்

1.0. இயைபெனப்படுவது உள்வினை மேற்றே

1. 1. **த**மிழில் இயைபு விகுதிகள் (Agreement Markers) குறில் விகுதிகள், நெடில் விகுதிகள் என இருவகைப்படும். இவற்றுள் நெடில் விகுதிகள் *செய்தவன், செய்தவள், செய்தவர்* முதலான வாய்ப்பாட்டுக் கழிநெடில் வினைகளில் நிகழும் *அவன் - அவள் - அவர்* ஆகிய கழிநெடில் இயைபு விகுதிகளின் திரிபாகும் (இரா. கோதண்டராமன் : வெளியாக வேண்டியது). குறில், நெடில் இயைபு விகுதிகளின் நிகழிடங்கள் பொது வாக வரையறைக்கு உட்பட்டவையாகும். ஆயினும் *பாடினன், பாடினான்* ஆகிய வாய்ப்பாட்டு வினைகளில் குறில், நெடில் இயைபு விகுதிகள் உறழ்ந்தும் நிகழ்கின்றன.[1] இயைபு விகுதிகள் எழுவாயாகச் செயல்படும் பெயரின் திணை - பால் - எண் - இடப் பண்புகளைப் பிரதிபலிப்பன வாகும். ஆயினும், ஆண்பால், பெண்பால், பலர்பால் மற்றும் உயர்பால் விகுதிகள் அமைந்த வினைகளைப் படர்கையிடத்துக்கு உரியனவாகக் கருதமுடியாது. அவ்வாறு கருதினால் *நான் / நீ, நேற்று வந்தவள் ; நாங்கள் / நீங்கள் நேற்று வந்தவர்கள்* ஆகிய வாக்கியங்கள் இலக்கணப் பிழை யுள்ளவையாகக் கருதப்பட்டுவிடும்.[2] தெலுங்கில் இத்தகைய வாக்கியங் களில் நிகழும் கழிநெடில் வினைகள் தன்மை, முன்னிலை இயைபு விகுதி களை ஏற்கும் நிலை காணப்படுகிறது. எ-டு. *நேனு நின்ன வச்சின வாடி- னி (நான் நேற்று வந்தவனேன்) நேனு நின்ன வச்சினதானி - னி (= நான் நேற்று வந்தவளேன்), நுவ்வு நின்ன வச்சினவாடி - வி (= நீ நேற்று வந்தவனை), நுவ்வு நின்ன வச்சினதானி - வி (= நீ நேற்று வந்தவளை).*

1. 2. குறிப்பு வினைமுற்றுக்களில் பெயர்ப்பயனிலைகள் இயைபு *விகுதிகளை ஏற்கும் நிலை பழந்தமிழில் போற்றப்பட்டுள்ளது. எ-டு.* கிழவனை (முன்னிலை ஒருமை / புறம். 58. 1), *பொருநரேம்* (தன்மைப், பன்மை / புறம். 382. 5), *குறவர் மகளிரேம்* (தன்மைப்பன்மை / நற். 276. 4) *யாரை* (அகம். 32. 8, ஐங். 87.4, கலி. 86. 26, நற். 155. 4, பதி. 52. 24) *யாரீர்* (அகம். 390. 14, புறம் 150. 23), யாரேம் (கலி. 82. 18), *யாரள்* (குறு. 19. 5), *வளவன் - நிழவேம்* (புறம். 397. 22, 27). இக்காலத் தமிழில் இந்த நிலை மாறிவிட்டது. *யாம் பொருநரேம்* என்பது எடுத்துக்காட்டாக இக்காலத் தமிழில் *யாம் பொருநர்* என்றே வழங்கும். காரணம் பொருநர் என்பதில் நிகழும் - *அர்* என்பது பலர்பால் விகுதியே தவிர படர்க்கை விகுதியல்ல. யாம் பொருநரேம் என்பதில் - *ஏம்* என்னும் இயைபு விகுதி வீழ்ந்துபடும் நிலையானது சிந்தனைக்குரியதாகும். யாம் பொருநர் - *ஆவேம்* என்ப திலும் ஆவேம் என்பதன் நிகழ்ச்சி தவிர்க்கற்பாலதாகும். *ஆவேம்* என்பது இருப்புப் பொருண்மையைக் குறிக்கும் உள்வினையாகும். உள்வினைகள் (Copula Verbs) தமிழில் குறிப்பு வினைகளாகும். இவற்றில் காலம் குறிப் பாக அறியப்படும்.[3] *ஆவேம்* என்பதைப் போலவே பொருநரேம் என்பதில் நிகழும் - *ஏம்* என்ற இயைபு விகுதியும் விருப்பு நிகழ்ச்சியாகவே (Optional Occurrence) அமைகிறது. இதனின்றும் பொருநரேம் என்பதில் நிகழும் - *ஏம்* என்பதும் *ஆவேம்* என்பதைப் போலவே உள்வினைக் குறிப்பு வினைமுற்றாகக் கொள்ளத்தக்கதாகின்றது. ஆனால் *ஆவேம்* என்பதில் நிகழும் ஏம் என்பதை உள்வினையாகக் கருதமுடியாது. ஏனெனில் அதன்முன் நிகழும் *ஆகு* என்பதன் மாற்றுருபாகிய *ஆவ்* என்பது ஓர் உள்வினையாகும்.[4] பொருநரேம் என்பதில் உள்வினை வெளிப்படையாகக் குறிக்கப்படாமையால் அதில் நிகழும் - ஏம் என்ற இயைபு விகுதியானது இயைபுப் பொருண்மையுடன் உள்வினைப் பொருண்மையையும் உணர்த்துவதாகின்றது இதனின்றும் உள்வினையடிகளாக நிகழாத இயைபு விகுதிகள் உள்வினைப்பொருண்மையை உணர்த்தும் உள்வினைகளாகவும் உள்வினையடியாகத் தோன்றி நிகழும் வினைகளில் நிகழும் இயைபு விகுதிகள் உள் வினைத்தன்மையற்றவையாகவும் கருதப்படும்.

1. 3. இயைபு விகுதிகள் உள்வினைத்தன்மையன என்பதை இன்னொரு சான்றின் மூலமும் தெளியலாம். *கரிய நிறம், கரிதாகிய நிறம்* இரண்டும் ஒரு பொருண்மையனவாகும். *கரிய* என்பதில் நிகழும் அகர விகுதியும் *கரிதாகிய* என்பதில் நிகழும் உள்வினைக் குறிப்புப் பெயரெச்சமாகிய *ஆகிய* என்பதும் துணைநிலை வழக்கில் (Complementary Distri - bution) நிகழ்கின்றன. இதனின்றும் மேற்படி அகர விகுதியானது உள்வினைத்தன்மை பொருந்திய குறிப்புப்பெயரெச்சம் என்ற உண்மை பெறப்படுகின்றது. *கரிய நிறம்., கரிதாகிய நிறம்* ஆகியவற்றின் வாக்கிய மூலங்கள் முறையே *நிறம் கரிது, நிறம் கரிதாகும்* என்பனவாகும். இங்கே *ஆகும்* என்ற உள்வினைப் பயனிலையானது *ஆகிய* என்ற பெயரெச்ச வினையோடு துணைநிலை வழக்கில் நிகழ்கிறது. இதேபோல் கரிது என்பதில் நிகழும் ஒன்றன்பால் துகரக்கிளவியும் கரிய என்பதில் உள்ள அகர விகுதியுடன் துணைநிலை வழக்கில் நிகழ்கின்றது. அகர விகுதியானது உள்வினைக் குறிப்புப் பெயரெச்சமாகலின் அதனுடன் துணைநிலை வழக்கில் நிகழும் ஒன்றன் பால் துகரக்கிளவியும் இயைபுப் பொருண்மை தழுவிய உள்வினைக் குறிப்புமுற்று என்பது தெளிவாகின்றது. இதனின்றும் இயைபு விகுதிகள் உள்வினைத்தன்மையன என்ற உண்மை பெறப்படுகின்றது.

2.0. இயைபு விகுதிகள் உள்வினைக்குடும்பத்தின

2. 1. இயைபு விகுதிகளின் உள்வினைத் தன்மையைப் புரிந்து கொள்வதற்குக் குறிப்பு வினைமுற்றுக்கள் பெரிதும் துணைபுரிவனவாகும்.[5] தெரிநிலை வினைமுற்றுக்களில் இயைபு விகுதிகளின் நிகழ்ச்சிக்கு முன்னோடியாக இருந்தவை குறிப்பு வினைமுற்றுக்களேயாகும் என்பது நமது துணிபு. குறிப்பு வினைக்களத்திலிருந்தே இயைபு விகுதிகளின் நிகழ்ச்சி தெரிநிலை வினைமுற்றுக்களுக்குப் பிரதியாக்கம் (Copying) மூலம் விரிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன் வரை தெரிநிலை வினைமுற்றுக்கள் பொது வினைமுற்றுக்களாகவே (Impersonal Finite Verbs) நிகழ்ந்திருக்க வேண்டும். *செய்தவன், செய்தனள்* ஆகிய வாய்பாட்டு வினைகளில் நிகழும் *அவ், அன்* ஆகியவை வெற்றுறுப்புக்

கள் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள நாம் குறிப்பு வினைமுற்றுக் களையே முதலில் நாடியாகவேண்டும்.

2. 2. இயைபு விகுதிகள் அடிப்படையில் இருப்புப் பொருண்மை குறித்த உள்வினைகள் என்ற கருதுகோள் *அன், இன், அவ்* ஆகியவற்றை உள்வினைக் குடும்பத்தைச் சேர்ந்தவையாகக் கொள்ள வகை செய் கின்றது. இந்த வகையில் இவை நிகழும் குறிப்பு வினைகளை இனிக் கருதலாம்.

(1) வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே (குறு. 7.1,2)

இந்த எடுத்துக்காட்டில் காலன என்ற குறிப்புவினைமுற்று *காலில் உள்ளன* என்ற பொருண்மை விளக்கத்துக்கும், *மேல* (< * மேலவ்) என்பது *மேல் உள்ளன* என்ற பொருண்மை விளக்கத்துக்கும் உரியன வாகும். *காலன, மேல* (< * மேலவ்) ஆகியவற்றில் நிகழும் - *அன், - அவ்* இரண்டும் *உள்ளன, உள்ளவை* என்ற பொருண்மையவாகலின் அவை உள்வினைக் குறிப்பு வினைமுற்றுக்களாகக் கொள்ளத்தக்கவையா கின்றன. *அன* என்பதில் *அன்* என்பது உள்வினையாகும். அதனையடுத்து நிகழும் அகர விகுதி பலவின்பால் விகுதியாகும். - *அ (வ்)* என்பது பலவின் பாற் பொருண்மை குறித்த உள்வினையாகும். *அன* என்பதில் நிகழும் அகர விகுதியானது இருப்புப் பொருண்மையை உணர்த்தாத இயைபு விகுதியாக நிகழ்வதற்குக் காரணம் அதன்முன் நிகழும் *அன்* என்பது உள்வினைப்பகுதியாக இனங்காணப்பட்டதேயாகும். இதன் அடிப்படையில் *செய்தனன், செய்தனள், செய்தனர், செய்தன* ஆகிய வாய்பாட்டு வினைகளில் நிகழும் - *அனன், - அனள், - அனர், -அன* ஆகியவை உள் வினைக் குறிப்பு முற்றுக்களாகக் கொள்ளப்படும். இவை குறிப்பு வினைமுற்றுக்களின் வழியாகத் தெரிநிலைப் பொதுவினை முற்றில் இடம்பெற்றவையாகும்.

2 3. *செய்தது, பாடியது* ஆகிய வாய்பாட்டுச் சிறப்பு வினைகளில் நிகழும் - *அது* என்பதும் கோட்பாட்டு நிலையில் உள்வினையாகக்

கருதத்தக்கதாகும். இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டினைக் கருதுக.

(2) கையது வேலே கர்லன புனைகழல் (புறம். 100. 1)

இந்த எடுத்துக்காட்டில் *கையது* என்பது *கையில் உள்ளது* என்ற பொருண்மை விளக்கத்துக்கு உரியதாகும். எனவே *கையது* என்பதில் நிகழும் அதுவென்கிளவி *உள்ளது* என்ற பொருண்மையைக் குறிக்கும் உள்வினைக் குறிப்பு வினைமுற்றாகக் கொள்ளத்தக்கதாகின்றது. இந்த உள்வினைக் குறிப்பு வினைமுற்றில் நிகழும் - *அது* என்பதில் உள்ள அகரக் கிளவி உள்வினைப்பகுதியாகும். அதனையடுத்து நிகழும் துகரக்கிளவி உள்வினைத்தன்மையற்ற ஒன்றன்பால் இயைபு விகுதி யாகும். ஏனெனில் அது உள்வினைப் பகுதியை அடுத்து நிகழ்கிறது. அகரக்கிளவியாகிய உள் வினைப் பகுதியின் அடிநிலை வடிவம் **அம்* எனக் கொள்ளத்தக்கதாகும். இதனின்றும் - *அது* என்பது ன் + **அந்து* (< * *அம் - து*) என்பதினின்றும் தோன்றியதாகக் கொள்ள முடியும். **அந்து* என்பதன் பகுதியாகிய **அம்* என்பது இந்த ஆய்வில் உள் வினை யாகக்கொள்ளப்படுகிறது. *செய்தமை, பாடியமை* ஆகிய வாய்பாட்டு வினைகளிலும் பழந்தமிழில் நிகழும் *செய்தமாறு* (= செய்ததால்) வாய் பாட்டுத் தொடர்களிலும் காணப்படும் செய்தம், பாடியம் ஆகிய வாய் பாட்டு வினைகளில் *அம்* என்பதன் நிகழ்ச்சியைக் காணலாம். *செய்தவன்* என்பதில் நிகழும் - *அவ்* செய்தனள் என்பதில் நிகழும் - *அன்* ஆகிய இரண்டும் **அம்* என்பதன் திரிபாகக் கருதத்தக்கவையாகும். ஆயினும், செய்தவன் என்பது *செய்தான் / செய்தோன்* எனத் திரிந்தமைவதைப் போலச் செய்தனள் என்பது திரிவதில்லை இங்கே குறிப்பிடப்பட்ட *அம்* என்பது விரிவான ஆய்வுக்கு உரியதாகும் அதனைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன் மேலும் சில குறிப்பு முற்றுக்களைக் கருத்தில் கொள்ள வேண்டி யுள்ளது.

(3) மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
(புறம். 109, 11, 12)

களிற்றினிர் (= களிறு உள்ளவிர்), தேரினிர் (= தேர் உள்ளவிர்) ஆகிய வற்றில் நிகழும் *- இனிர்* என்பது உடைமைப் பொருண்மையைக் குறித்த உள்வினைக் குறிப்பு முற்றாகும். இதில் *-இன்* என்பது உள் வினைப் பகுதியாகும்.[6] இது *என்* என்ற உள்வினையின் திரிபாக இருக்குமா என்பது ஆய்வுக்குரியது.

3. 0. ஐயென் உள்வினை

3. 1. வழக்கற்றுப்போன உள்வினைகளுள் *ஐ (= அய்)* என்பதும் ஒன்றாகும். இதன் நெடில் வடிவம் *ஆய்* என்பதாகும். தெலுங்கில் நிகழும் *அகு* (agu) என்ற உள்வினைப்பகுதியும், தமிழில் நிகழும் *ஆகு* எனும் உள்வினைப்பகுதியும் *ஐ (அய்), ஆய்* ஆகியவற்றின் அடியாகத் தோன்றியவையாகும். இந்தப் பின்னணியுடன் இனி ஐயென் உள்வினை பற்றிச் சிந்திக்கலாம். பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருதுக.

(4) (அ) காலவை... கிண்கிணி (கலி. 85. 1, 2)

(ஆ) கையதை ... அவிர் தொடி (கலி. 85. 6, 7)

(இ) கையதை ... வேல் (பரி. 21 8, 9)

காலவை (= காலில் உள்ளவை), கையதை (= கையில் உள்ளதானது) இந்த இரண்டிலும் நிகழும் *- அவை, - அதை* ஆகியவை பொருண்மை விளக்கத்தின் அடிப்படையில் உள்வினைக் குறிப்பு முற்றுக்களாகும். இவற்றுள் *- அவ், -அ* இரண்டும் உள்வினைப் பகுதிகளாகும். கையதை என்பதில் ஈற்று *ஐ, ஆனது* என்ற பொருண்மை விளக்கத்துக்கு உரிய தாகலின் அதுவும் உள்வினைக்குறிப்பு முற்றாகும். *மள்ளர் கையதை கூர் வாள் (அகம் 144 14, 15)* (= மள்ளர் கையில் உள்ளதாகிய கூர்வாள்) என்ற தொடரில் நிகழும் கையதை என்பது குறிப்புப் பெயரெச்ச வினை முற்றாகும் இதில் ஈற்றில் நிகழும் *ஐ* யென்பது *ஆகிய* என்ற உள்வினைக் குறிப்புப் பெயரெச்சத்தின் பொருண்மையதாகும். *கூர்வாள் மள்ளர் கைய தை* என்ற வாக்கியத்தில் *கையதை* என்பது பயனிலையாகச் செயல்படு கிறது இதன் பொருண்மை விளக்கம் கையில் உள்ளதாகும் என அமை யும் இங்கே கையதை என்பதில் நிகழும் *- அது* என்பதும் அதனை யடுத்து நிகழும் ஐயென் கிளவியும் குறிப்பு வினைமுற்றுக்களாகக் கொள்ளத்

தக்கனவாகின்றன. ஐயென் கிளவி உள்வினையாக அமைந்து வாக்கியச் சூழலுக்கேற்பப் பயனிலையாகவும் பெயரெச்சமாகவும் செயல்படு கின்றது.[7] *கையதை அவிர்தொடி* என்ற தொடரில் ஐயென்பது குறிப்பு வினைமுற்றுப் பெயராகச் செயல்படுகிறது.

3. 2. தெரிநிலைச் சிறப்பு வினைகள் நிகழும் பின்வரும் எடுத்துக் காட்டுக்களையும் கருத்தில் கொள்க.

(5) (அ) உடுத்தவை, . . . பொலங்காழ் (கலி. 85. 3)

(ஆ) தைஇய பூந்துகில் (கலி. 85. 4)

(இ) பூண்டவை எறியா வாளும் எற்றா மழுவும் (கலி. 85. 8)

(ஈ) சூடின, . . . முக்காழ் (கலி. 85. 12, 13)

முன்னதாக (4) இல் குறிக்கப்பெற்ற *காலவை, கையதை* ஆகிய வற்றின் பொருண்மை விளக்கங்களைக் கருத்தில் கொண்டு (5)இல் நிகழும் *உடுத்தவை (= உடுத்துள்ளவை), தைஇய (= தைஇயவை / உடுத் துள்ளவை), பூண்டவை (= பூண்டுள்ளவை), சூடின (= சூடியுள்ளவை)* ஆகியவற்றில் நிகழும் *-அவை, -அ* ஆகியவை பொருண்மை விளக்கத்தின் அடிப்படையில் பலவின்பால் குறிப்பு வினைமுற்றுப் பெயர்களாகக் கொள்ளத்தக்கவையாகின்றன. *-அவை* என்பதில் *அவ்* என்பது உள் வினைப்பகுதியாகும். இதனையடுத்து நிகழும் ஐ (= *அய்*) என்பது பலவின் பால் இயைபு விகுதியாகும். இதனைக் கருத்தில்கொண்டு *பாடினென், பாடினம், பாடின, பாடினன், பாடினள், பாடினர்* ஆகியவற்றில் நிகழும் இயைபு விகுதிகள் உள்வினைக் குறிப்பு வினைமுற்றுக்களாகக் கொள்ளத் தக்கவையாகும். ஆனால் *பாடியது* என்ற சிறப்பு வினையில் நிகழும் *-அது* என்பதில் அகரக்கிளவி உள்வினைப்பகுதியாகவும் துகரக் கிளவி ஒன்றன் பால் இயைபு விகுதியாகவும் கொள்ளத்தக்கனவாகும் *உடுத்தவை, பூண்டவை* ஆகியவற்றின் பொருண்மை விளக்கத்தைக் கருத்தில் கொண்டு *செய்தவன், செய்தவள், செய்தவர்* ஆகிய வாய்பாட்டு வினை களில் நிகழும் *- அவன், - அவள், - அவர்* ஆகியவையும் உள்வினைக் குறிப்பு

வினைமுற்றுக்களாகக் குறிக்கப்பெறும். இவற்றில் *அவ்* என்பது உள் வினைப்பகுதியாகவும் அதனையடுத்து நிகழும் *அன், அள், அர்* ஆகியவை இயைபு விகுதிகளாகவும் கொள்ளப்படும். பாடினன் என்பதில் *அன்* என்பது ஆண்பால் குறித்த உள்வினைக் குறிப்பு வினைமுற்றாகவும் செய்தவன், செய்பவன், பாடியவன், பாடுபவன் ஆகிய வாய்பாட்டு வினைகளில் நிகழும் - *அன்* என்பது ஆண்பால் இயைபு விகுதியாகவும் குறிக்கப்படுவதற்கான பின்புலங்கள் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும்

4.0. கன்னடச் சான்று

4. 1. செய்தவன், செய்தவள், செய்தவர், செய்தவை, பாடியவன், செய்பவன், பாடுபவன் முதலான வாய்பாட்டு வினைகளில் உள்வினைக் குறிப்பு வினைமுற்றுக்களாக *- அவன், - அவள், -அவர், - அவை* ஆகியவை இனங்காணப்பட்ட நிலையில் கன்னடத்தில் நிகழும் உள்வினைத் திரிபுகளை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். திப்தூர் கன்னடத்தில் *அவ்னெ (= உளன்), அவ்ளெ (= உளள்), அவ்ரெ (= உளர்), அய்த்எ / எய்த்எ (= உளது), அவெ (= உள)* ஆகியவை *அவ்* என்னும் உள் வினையடியாகத் தோன்றி நிகழும் முற்று வினைத்திரிபுகளாகும் (A. S. Acharya 1971 : 46). இவற்றுள் *அய்த்எ / எய்த்எ* என்பதில் நிகழும் *அய் (=ஐ) / எய்* என்பது *அவ்* என்பதன் மாற்றுருபாகும் முன்னதாக *மள்ளர் கையதை கூர்வாள்* என்ற தொடரில் உள்ள *கையதை* என்பதில் நிகழும் ஈற்று ஐகாரம் உள் வினை என்று கொள்ளப்பட்டது. கன்னடத்தில் *அய்த்எ / எய்த்எ* என்பதில் நிகழும் *அய் / எய்* என்பதும் தமிழில் உள்வினையாகக் கொள்ளப்பட்ட ஐயென் கிளவியும் ஒன்றேயாகும்.

4 2 ஆக்கம், இருப்பு ஆகிய பொருண்மைகளை உணர்த்தும் *அகு* (agu) என்னும் வினையின் பழங்கன்னட வினைத்திரிபு மரபை இக்கால கன்னடம் தக்க வைத்துக்கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார் பி. எஸ். சுப்ரமணியம் (P S. Subramanyam, 1971 : 256). இந்த வினைத்திரிபு மரபில் *அய் (= ஐ)* என்பது வினையடியாக நிகழ்கிறது. கருதுக.

தன்மை -	ஒருமை : *அ (ய்)தேனெ*	' உள்ளேன் / ஆகிறேன்'
	பன்மை . *அ (ய்)தேவெ*	' உள்ளோம் / ஆகிறோம்'

முன்னிலை - ஒருமை :	அ (ய்)தி / அ (ய்) தீ	' உள்ளாய் / ஆகிறாய்'
பன்மை :	அ (ய்)திரி	' உள்ளீர்கள் / ஆகிறீர்கள்'
படர்க்கை - ஆண் :	அ (ய்)தானெ	' உள்ளான் / ஆகிறான்'
ஆண் : பன்மை :	அ (ய்)தாரெ	' உள்ளார்கள் / ஆகிறார்கள்'
பெண் :	அ (ய்)தாளெ	' உள்ளாள் / ஆகிறாள்'
ஒன்றன் :	அ (ய்)த்எ / அதெ / இதெ	' உள்ளது / ஆகிறது'
பலவின் :	அ (ய்)தாவெ / அவெ / இவெ	' உள்ளன / ஆகின்றன'

இந்த வினைத்திரிபில் நிகழும் *அய் (= ஐ)* என்னும் உள்வினை பழந் தமிழில் நிகழும் ஐயென்பதினின்றும் வேறுபட்டதன்று. இரண்டும் ஒன்றே. இந்த வினைத்திரிபுகளில் வினையடியை அடுத்து நிகழும் தகரம் அலையொலியன் (Voiced Phoneme) ஆகும்.

4.3. கர்நாடக மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் வழங்கும் கன்ன டக் கிளைமொழிகளில் விகுதி நிலையில் அமைந்த உள்வினைக் குறிப்பு முற்றுவினைகள் திரட்டப்பட்டு உபாத்யாயாவில் (U. P. Upadh yaya, 1976 : 143) வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைக் கீழே காணலாம்.

இடம் — எண்	**பெல்லாரி கன்னடம்**	**குல்பர்கா கன்னடம்**	**கும்தா கன்னடம்**	**நஞ்சன்கூடு கன்னடம்**
தன்மை - ஒருமை	இனெ	ஈனி	இயெ	இனி
பன்மை	இவெ	ஈவி	ஈரு	இவி (ம்)
முன்னிலை -				
ஒருமை	இ	இ	இயெ	இயே
பன்மை	இரி	ஈரி	ஈரு	இரி
படர்க்கை-ஆண்	அனெ	ஆன	இய	அனெ
பெண்	அளெ	ஆள	--	அளெ
பலர்பால்	அரெ	ஆர / ஈரு	ஈரு	அரெ
ஒன்றன்பால்	அய்த்எ	அத (ada)	இதெ (ide)	அதெ (ade)
பலவின்பால்	அவெ	ஆவ / அவ	--	அவெ

மேலே குறிக்கப்பெற்றுள்ள உள்வினைகள் *இரு* என்ற உள்வினை இருப்பு வினையின் அடியாகத் தோன்றிய நிகழ்கால உள்வினைகள் என்றும் இவை இறந்தகால வினையெச்சத்தையடுத்து நிகழ்ந்து, நிகழ் நிறை (Present Perfect) வினைகளைத் தோற்றுவிக்கின்றன என்றும் cgh¤ahahF¿¥ãL»wh®.vL.kho +ï bd > *மாடினெ (பெல்லாரி), மாடி + ஈனி > மாடீனி (குல்பர்கா), மாடி + இயெ > மாடியெ (கும்தா), மாடி+ இனி > மாடினி (நஞ்சன்கூடு) 'நான் செய்திருக்கிறேன்'.* உபாத்யா யாவின் முடிபுகளை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள முடியுமென்று தோன்றவில்லை. இவரது பட்டியலில் காணப்படும் பல உள்வினைத்திரிபு வடிவங்கள் *இரு* என்ற வினையின் அடியாகத் தோன்றியவையாகயிருக்க வாய்ப்பில்லை. முன்னிலைப்பன்மை வடிவங்கள் *இரு* என்பதனடியாகத் தோன்றியிருக்கலாம். எஞ்சியவை *அகு* என்பதன் வேர்ச்சொல்லாகிய *அய்* (= ஐ) என்பதன் அடியாகவும் *அன் / என்* என்பதன் அடியாகவும் தோன்றியனவாகக் கருதலாம். பலவின்பால் வடிவங்கள் *அ*மென் கிளவி யின் திரிபாக இருக்க வாய்ப்புள்ளது. *அது* என்னும் ஒன்றன்பால் வடிவம் *அம்* என்பதன் அடியாகத் தோன்றியதாகக்கொள்ள வாய்ப்பிருந்தாலும் *அய்த்*ள என்ற வடிவம் இந்தக் கருதுகோளுக்கு எதிராக இருக்கிறது.[8] ஆனால் ஒன்றுமட்டும் தெளிவாகிறது. இயைபு விகுதிகள் அனைத்தும் உள்வினைக்குறிப்பு வினைமுற்றுக்கள் என்ற நமது கருதுகோளை உபாத் யாயாவின் பட்டியல் உறுதிப்படுத்துகிறது. இந்தக் கருதுகோள் புதிய நோக்கில் இயைபுவிகுதிகளை அணுகவேண்டியதன் அவசியத்தை வலி யுறுத்துவதாகவே நமக்குத் தோன்றுகிறது.

5.0. அவ் ஈற்றுப் பலவின்பால் வினைகள்

5. 1. பழந்தமிழில் செய்த வாய்பாட்டு வினைகள் பலவின்பால் வினைகளாக நிகழ்கின்றன. இந்த வினைகள் **செய்தவ்* வாய்பாட்டி னவாக மீட்டுருவாக்கம் செய்யத்தக்கவையாகும். இதனை அரண் செய்யும் வகையில் பழந்தமிழில் ஒரோவழி குறிப்பு வினைமுற்றிலும் பரவலாகத் தெரிநிலை வினைமுற்றுக்களிலும் *-அவ்* என்பது பலவின்பால் விகுதி யாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எ.டு. *இவ்வே, கடியுடை வியனகரவ்வே*

(*புறம்.* 95. 1, 3 / * நகரவ்), *கரப்பரியவ்வே* (நற். 23. 9 / * அரியவ்), *அணி பவ்வே* (நற். 177.6 / * அணிபவ்), *முன்னியவ்வே* (நற். 269.9 / * முன்னியவ்), *வேட்பவ்வே* (புறம். 270.4 / * வேட்பவ்), *புரவி நின்றவ்வே* (புறம். 295. 5, 3 / * நின்றவ்) இவற்றில் நிகழும் *அவ்* உள்வினைத் தன்மையதாகிய பலவின் பால் குறிப்பு வினைமுற்றாகும். உள்வினைகள் இயைபு விகுதிக ளாக நிகழத்தொடங்கிய நிலையை இது புலப்படுத்துகிறது.

5. 2. கன்னடத்தில் பலவின்பால் இயைபு விகுதியாக நிகழும் *அவு* (*எ.டு.: மாடிதவு, 'செய்தன', மாடுதவு - 'செய்கின்றன'* / ஹவ்யக கன்னடம் (D.N.S. Bhat, 1971 : 29) என்பதும் பழந்தமிழில் *அணிபவ்வே* (நற். 177. 6), *வேட்பவ்வே* (புறம். 270. 4) முதலானவற்றில் காணப்படும் - *அவ்* என்பதும் ஒன்றேயாகும். பலவின்பால் விகுதியாகிய இந்த - *அவ்* உள் வினைக் குறிப்புமுற்றாகும். ஆனால் செய்தவன், செய்தவள், செய்தவர், செய்தவை முதலான வாய்பாட்டு வினைகளில் நிகழும் *-அவன் / -அவள் / - அவர் / - அவை* ஆகியவற்றில் காணப்படும் *-அவ்* என்பது உள்வினைப் பகுதியாக மட்டுமே நிகழ்கின்றது. அதனையடுத்து நிகழும் இயைபு விகுதிகளே இதற்குக் காரணம்.

6.0. கழிநெடில் வினைகளின் தோற்றம்

செய்தவன், செய்பவன், செய்தனன் முதலான வாய்பாட்டு வினை களில் *- அவன், - அனன்* ஆகியவை உள்வினைத்தன்மையதாகிய குறிப்பு வினைமுற்றுக்களாக இனங்காணப்படுவதால் மேற்படி வினைகள் வண்ணனை நிலையில் (Descriptive Level) *செய்து / செய்பு + அவன், செய்து + அனன்* என்ற அமைப்பினவாகக் கொள்ளப்படும். இந்த அமைப்புகளில் நிகழும் செய்து வாய்பாட்டு வினைகள் பொதுவினை முற்றுகள் (Impersonal Finite Verbs) எனச் சுட்டப்பெறும். சிறப்பு வினை முற்றுக்கள் (Personal Finite Verbs) பொதுவினைமுற்றுக்களின் அடி யாகத் தோன்றி நிகழ்வனவாகும்.[9] இந்தப் பொதுவினைகள் பலதிறத்தன. *செய்தவ், செய்தன், செய்பவ், பாடினவ், பாடுபவ்* ஆகிய வாய்பாட்டு வினைகளும் பொதுவினைமுற்றுக்களே. இவற்றின் ஈற்றில் நிகழும் *-அவ், - அன்* ஆகியவை உள்வினைகளாகும். இந்த உள்வினைகளையடுத்தே

பின்னர் இயைபு விகுதிகள் நிகழத்தொடங்கிச் செய்தவன், செய்பவன், செய்தனன் முதலான வாய்பாட்டுச் சிறப்பு வினைகள் மொழியில் இடம் பெற்றிருக்க வேண்டும். கன்னடத்தில் நிலைமை சற்று மாறுபடுகின்றது. இந்த மொழியில் இறந்தகால, எதிர்காலச் சிறப்பு வினைகளில் நிகழும் ï i aò É FâfŸ F¿š É FâfshF«.vL :*குடிதனு (= குடித்தான்), கேளிதளு (= கேட்டாள்), குடிவனு (= குடிப்பான்), கேளுவரு (= கேட்பார்கள்).*[10]

7.0. அம்மென் கிளவி

*7. 1. முன்னதாக இயைபு விகுதிகளின் முன் நிகழும் அவ், அன், ஆகிய வடிவங்கள் அம்மென் கிளவியின் திரிபாகக் கருதத்தக்கவை எனக் குறிக்கப்பட்டது. மகரம் வகரமாகவும் னகரமாகவும் திரியும் நிகழ்ச்சி தமிழில் இயல்பாகக் காணப்படுகிறது. எ.டு. முடம் + அன் > முடவன், புலம் + அர் > புலவர், *ஒரும் + அன் > ஒருவன் (கருதுக : * ஒரும் + தி > ஒருந்த்இ > ஒருத்தி), * சிறும் + அன் > சிறுவன் (கருதுக : * சிறுமி < * சிறும் + இ), மரம் > மரன், நிலம் > நிலன். கன்னடத்திலும் மகரம் வகரமாகத் திரிகிறது. நாமு > நாவு, ' நாம் ' , பாமு > ஹாவு 'பாம்பு'. அம்மென் கிளவியின் நிகழ்ச்சியானது செய்தமாறு, செய்தமை ஆகிய வாய்பாட்டு வினையமைப்புக்களிலும் நிகழும் என்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. செய்தவாறு வாய்பாட்டு வினைகளும், செய்தமாறு வாய்பாட்டு வினைகளும் பொருண்மை விளக்கத்தில் மாறுபட்டாலும் முந்தியதில் நிகழும் செய்தவ் வாய்பாட்டு வினைகளைப் பிந்தியதில் நிகழும் * செய்தம் வாய்பாட்டு வினைகளின் திரிபாகவே கருதலாம்.*

7.2. அம்மென் கிளவியின் நெடில் வடிவம் ஆம் என்பதாகும். ஆம் என்பது ஆய் என்ற உள்வினையின் அடியாகத் தோன்றிதாகும். அதில் நிகழும் மகரம் உம்மைக் கிளவியின் எச்சமாகும். இதனைக் கருத்தில் கொண்டு அம்மென் கிளவியும் அய் என்ற உள்வினைக் குறிற்பகுதியின் அடியாகத் தோன்றியதாகக் கருதலாம். இத்தகைய ஆய்வுப்போக்கானது செய்தவன், செய்தனன் ஆகியவற்றில் இயைபு விகுதிகளின் முன் நிகழும் அவ், அன் ஆகியவை உள்வினைகள் என்ற கருதுகோளை வலுப்படுத்து

வதாக உள்ளது. இந்த ஆய்வில் நாம் தொடாத பகுதியும் உண்டு. இயைபு விகுதிகள் உள்வினையாகக் கருதத்தக்கவை எனில் சிறப்பு வினைமுற்றுக் களின் பொருண்மை விளக்கம் எத்தகையதாக இருக்கும்? அவன் சொன்னது உண்மையாகும் என்ற வாக்கியத்தில் ஆகும் என்ற உள்வினை யைப் போன்றதே உள்வினைத்தன்மை பொருந்திய இயைபு விகுதிகளின் செயல்பாடும்.[11] எனினும் இந்தக் கருதுகோளின் வன்மை, மென்மை ஆய்வுக்குரியது.

அடிக்குறிப்புகள்

1. செய்தான், செய்தாள், செய்தார் முதலான வாய்பாட்டு நெடில் வினைகளுக்கு இணையாகச் செய்தன், செய்தள், செய்தர் முதலான குறில் வினைகள் செவ்வியல் தமிழில் காணப்படவில்லை கன்னடத்தின் நிலை இதற்கு எதிர்மாறானது எ.டு குடிதனு (= குடித்தான்), குடிதளு (= குடித்தாள்), குடிதரு (= குடித்தார்கள்) முதலான குறில் வினைகளுக்கு இணையாக நெடில் விகுதிகள் கன்னடத்தில் காணப்படவில்லை நெடில் வினைகள் என்பவை கழிநெடில் வினைகளின் திரிபாகும். கன்னடத்தில் நிகழும் கலியோனு (= கற்போன்), கொட்டோளு (= கொடுத்தோள்) ஆகியவை * கலியுவனு, * கொட்டவளு ஆகிய கழிநெடில் வினைகளின் திரிபாகும். ஆயினும் இந்த வினைகளிலிருந்து * கலியானு, * கொட்டாளு என்பது போன்ற நெடில் வினைகள் கன்னடத்தில் நிகழாமைக்குக் காரணம் குறில் வினைகளின் நிகழ்ச்சி வரலாற்று நிலையில் தொன்மையா னது என்பதும் அவை அழுத்தமாக அந்த மொழியில் நிலைகொண்டு விட்டன என்பதுமேயாகும். செவ்வியல் தமிழில் கழிநெடில் வினைகளின் திரிபாகிய நெடில் வினைகள் அழுத்தமாக வேரூன்றிவிட்டதால் குறில் வினைகளின் நிகழ்ச்சிக்கு இங்கே வாய்ப்பில்லாமல் போய்விட்டது ஆயினும் பேச்சுத்தமிழில் தன்மை, முன்னிலையில் குறில் வினைகளின் நிகழ்ச்சி காணப்படுகிறது. எ.டு. செய்தென் / செய்தன், செய்வென் ;

செய்தொம் / செய்தம், செய்வொம் ; செய்தெ / செய்தி ; செய்வெ / செய்வி, செய்திங்க. படர்க்கையில் குறில் வினைகளின் நிகழ்ச்சி பொதுப் பேச்சுத் தமிழில் (Standard Spoken Tamil) காணப்பட வில்லை.

2. செய்தவன், செய்தவள், செய்தவர், செய்தவர்கள் ஆகிய கழி நெடில் வினைகளைப் படர்க்கை வினைகளாகக் கருதமுடியாது. மாறாக அவற்றை ஆண்பால், பெண்பால், உயர்பால், பலர்பால் குறித்த பால் வினைகளாகவே (Gender Verbs) கருதவேண்டும். செய்தது, செய்தவை ஆகிய வினைகள் தன்மை, முன்னிலை இடப்பெயர்களின் பயனிலையாக நிகழ்வதில்லை எனவே இவற்றை மட்டும் படர்க்கை வினைகளாகக் கருதலாம் பொதுவாகத் திராவிட மொழிகளிலும் சிறப்பாகத் தமிழிலும் படர்க்கை என்பது மறு சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

3 ஆவேன், ஆவோம், ஆவாய், ஆவீர், ஆவான், ஆவாள், ஆவார், ஆவர், ஆகும் ஆகியவை உள்வினைகளாகவும் (Copula Verbs) ஆக்க வினைகளாகவும் (Become Verbs) செயல்படும். உள்வினைகளாகச் செயல் படுகையில் அவை குறிப்புவினை முற்றுக்களாகும். ஆகிய என்ற உள் வினைப் பெயரெச்சமும் குறிப்புப் பெயரெச்சமாகும். எனவே இவற்றின் அமைப்பு ஆகு + இயைபுவிகுதி /இய எனக் கொள்ளப்படும். ஆக்க வினைகளாகச் செயல் படுகையில் அவை ஆகு -வ் + இயைபு விகுதி / ஆகு- இய் + அ என்ற அமைப்பினவாக அவை கருதப்படும்.

4 யாரை (அகம். 32. 8 , ஐங் 87. 4, கலி. 8826, நற். 155. 4, பதி. 52. 24), யாரீர் (அகம் 390 141 , புறம் 141. 15, 150 23), யாரேம் (கலி. 82. 18, 95 29), யாரன் (குறு. 19. 5) என்பன போன்ற குறிப்பு வினைமுற்றுக்களில் நிகழும் இயைபு விகுதிகள் உள்வினைக் குறிப்பு முற்றுக்களாகும் ஆனால் உள் வினையை அடுத்து நிகழும் இயைபு விகுதிகளை அவ்வாறு கொள்ள முடியாது காரணம் வெளிப்படையானது. இதேபோல் யாரேம் ஆவேம் ' who are we' என்பதில் நிகழும் இயைபு விகுதிகளையும் உள்வினைக் குறிப்பு முற்றாகக் கருதமுடியாது.

5 காலம் குறிப்பாக அறியப்படும் முற்றுவினைகளின் நிலைக்களன் களாகத் தொல்காப்பியர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவார்.

(1) அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானும்
அப்பாற் காலங் குறிப்பொடு கொள்ளும்

(சொல். சேனா. 213)

(2) அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியுங் குறிப்பே காலம்

(சொல். சேனா. 214)

(3) இன்றில உடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வருஉங் கிளவியோடு தொகைஇ
அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்

(சொல் சேனா 220)

தொல்காப்பியரின் குறிப்புவினை தொடர்பான இந்த நிலைக்களன்கள் இயைபு விகுதிகளை உள்வினைக்குறிப்பு முற்றுக்களாகக் கொள்ளும் ஆய்வுக்கு உறுதுணை புரியும். இந்தக் கட்டுரையில் தொல்காப்பிய நிலைக்களன்களை விரிவாக ஆராய நாம் முற்படவில்லை

6. இன் என்பது இம்மென் கிளவியின் திரிபாகக் கொள்ளத்தக்கதா என்பது ஆய்வுக்குரியது.

7. பழந்தமிழில் செய்ததை வாய்பாட்டுத் தெரிநிலை கவைப் பயனிலைகளின் (Tensed Cleft Predicates) ஈற்றில் நிகழும் ஐகாரமும் இத்தகைய ஆய்வுக்கு உரியதாகும் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்க

அ) ஊர்ந்ததை வேழம் (பரி 21 1, 2)

ஆ) தொட்டதை . அடையல் (பரி 21. 3, 7)

இ) பூண்டதை .. கமழ்தார் (பரி. 21 10, 11)

ஈ) அமர்ந்ததை .. தண்பரங்குன்றம் (பரி 21 12, 15)

இந்த எடுத்துக்காட்டுக்களில் *செவ்வேள்* (= முருகன்) என்பது தோன்றா எழுவாயாகும் ஊர்ந்ததை *வேழம்* என்பது *செவ்வேள் ஊர்ந்ததானது வேழம்* என்ற பொருண்மை விளக்கம் பெறும் ஏனைய மூன்று எடுத்துக் காட்டுக்களும் இத்தகைய பொருண்மை விளக்கத்துக்கு உரியனவாகும் இதனைக் கருத்தில் கொண்டு *ஊர்ந்ததை, தொட்டதை, பூண்டதை, அமர்ந்ததை* ஆகியவற்றின் ஈற்றில் நிகழும் ஐயென்கிளவியை *ஆனது* என்ற உள்வினைப் பொருண்மை விளக்கத்துக்கு உரியதாக்கலாம் இத்தகைய ஆய்வானது மேற்படி ஐயென்கிளவியை உள்வினையாகக் கொள்ள வகைசெய்கிறது கன்னடத்தில் *ஓடுத்தானெ (= ஓடுகிறான்), ஓடுத்தெ (= ஓடுகிறது)* முதலான நிகழ்கால வினைமுற்றுக்களின் ஈற்றில் நிகழும் எகரம் வரலாற்று நிலையில் மேலே குறிப்பிட்ட ஐயென் கிளவியின் திரிபாகும் *செய்யாதெ (= செய்யாமல்), ஓடதெ (கன்) (= ஓடாமல்)* ஆகிய வினையெச்சங்களின் ஈற்றில் நிகழும் எகரமும் மேற்படி ஐயென்கிளவியின் திரிபாகவே தோன்றுகிறது

8 அம்மென் கிளவியை *அய்-ம் என்பதன் திரிபாகக் கொண்டால் இந்தச் சிக்கல் எழ வாய்ப்பில்லை

9 திராவிட மொழிகளில் சிறப்பு வினைமுற்றுக்கள் இறந்தகால, நிகழ்கால வினையெச்சங்களின் அடியாகத் தோன்றி நிகழ்பவை என்று கால்டுவெல் (Robert Caldwell 1961 489, 496) கருதுகிறார் ஆயினும் சிறப்பு வினைமுற்றுக்களின் அடித்தளமாக அமையும் காலப்பகுதிகள் (Tense Bases) அனைத்துமே வினையெச்சங்களாகச் செயல்படுவதில்லை இந்த சிக்கலைக் கால்டுவெல்லும் செய்தனன், செய்தவன் வாய்பாட்டு வினைகள் தொடர்பான ஆய்வில் எதிர்கொள்கிறார் ஆகவே அவரது கருதுகோளை ஏற்பதற்கில்லை

10 கன்னடத்தில் செய்தவன், செய்பவன் முதலான வாய்பாட்டுக் கழிநெடில் வினைகள் நிகழ்ந்தமைக்கான தடயங்களை மைசூர் கன்னடத்

தில் வழங்கும் பின்வரும் வினையமைப்புக்களில் காணலாம். (U.P. Upadhaya & N.D. Krishnamurthi, 1972).

(1) bando : ru (p. 219) < * bandavaru 'வந்தவர்'

(2) bardo : ru (p. 220) < * baredavaru 'வரைந்தவர்'
(= எழுதியவர்)

(3) beLedo : ru (p. 221) < * beLedavaru 'விளைத்தவர்'

(4) ho :do : ru (p. 216) < * ho:davaru 'போந்தவர்'

(5) beLiyou : ru (p. 221) < * beLiyuvaru 'விளைப்பவர்'

(6) bariyo : ru (p. 219) < * bariyuvaru 'வரைபவர்'
(= எழுதுபவர்)

(7) bariyo : nu (p. 220) < * bariyuvanu 'வரைபவன்'
(= எழுதுபவன்)

(8) bariyado : ru (p. 220) < * bariyadavaru 'வரையாதவர்'
(= எழுதாதவர்)

(9) bariyado : nu (p. 221) < * bariyadavanu 'வரையாதவன்'
(= எழுதாதவன்)

(10) கலியோரு (பக். 216) < * கலியுவரு 'கற்பவர்'

(11) கலியோனு (பக். 219) < * கலியுவனு 'கற்பவன்'

(12) கலியோளு (பக். 219) < * கலியுவளு 'கற்பவள்'

(13) ஓதோரு (பக். 219) < * ஓதுவரு 'ஓதுபவர்'

(14) நேயோரு (பக். 221) < * நேயுவரு 'நெய்பவர்'

(15) மாடோரு (பக். 217) < * மாடுவரு 'செய்பவர்'

(16) காணோது (பக் 221) < * காணுவது 'காண்பது'

(17) கொடதோரு (பக். 216) < * கொடதவரு 'கொடாதவர்'
(= கொடுக்காதவர்)

ஹவ்யக கன்னடத்திலும் இந்தத் தடயங்களைக் காணமுடிகிறது. (D. N. S. Bhat, 1971: 48, 49). பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருதுக.

(18) ho : po : nu < * ho: pavanu 'போகிறவன்'

(19) ho : po : Lu < * ho: pavaLu 'போகிறவள்'

(20) ho : po : ru < * ho: pavaru 'போகிறவர்'

(21) ho : gaddo : nu < * ho: gaddavanu 'போகாதவன்'

(22) bando : Lu < * bandavaLu 'வந்தவன்'

(23) கொட்டோனு < * கொட்டவனு 'கொடுத்தவன்'

(24) கொட்டோளு < * கொட்டவளு 'கொடுத்தவள்'

(24) கொட்டோரு < * கொட்டவரு 'கொடுத்தவர்'

ஆயினும் மேலே குறிப்பிட்டது போன்ற எடுத்துக்காட்டுக்களின் நிகழ்ச்சி யானது குறில் இயைபு விகுதிகளைக்கொண்ட சிறப்புவினைகளின் நிகழ்ச்சியைப் பாதிக்கவில்லை. குடிதனு, குடிதளு, குடிதரு முதலான வினைமுற்றுக்களில் நிகழும் -அனு, -அளு, -அரு ஆகிய இயைபு விகுதி கள் உள்வினைக் குறிப்பு முற்றுக்களாகக் கருதற்பாலனவாகும். குடிதவு (= குடித்தன), கொட்டவு (= கொடுத்தன) முதலான வற்றில் -அவு என்பதும் உள்வினைத் தன்மை பொருந்திய இயைபு விகுதியாகக் கொள்ளத்தக்கதாகும்

11. தமிழில் செய்திலன், செய்தானல்லன் ஆகிய எதிர்மறை வினை களுக்கு இணையான உடன்பாட்டுவினைகளை இனங்கண்டுவிட்டால் இயைபு விகுதிகளின் தொன்மையான செயல்பாட்டினைக் கண்டறிய வாய்ப்புள்ளது. மேற்படி எதிர்மறை வினைகளில் நிகழும் இலன், அல்லன் ஆகியவை துணைநிலை வழக்கில் நிகழ்வனவாகும். இவற்றுக்கு இணை யான உடன்பாட்டு வினைகளை இருப்புப்பொருண்மையை உணர்த்து வனவாகவே இருக்கும். இந்த வினைகளின் பகுதிகளை உள், ஆகு எனக் குறிப்பிடலாம் உள் என்பது இலன் என்பதற்கும் ஆகு என்பது அல்லன் என்பதற்கும் எதிரான உடன்பாட்டு வினைகளாகும். இவற்றின் நிகழ்ச் சியும் துணைநிலை வழக்கில் அமைந்ததாகும். இந்த வினைகளின் விகுதி வடிவங்களாக இயைபு விகுதிகளைக் கருதமுடியும்.

துணை நூல்கள்

கோதண்டராமன், இரா., 2002, *கழிநெடில் வினைகள்*, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் அறக் கட்டளைச் சொற்பொழிவில் 2002 மார்ச் 27, 28 ஆகிய தேதிகளில் எழுதி வழங்கிய ஆய்வுரை.

Acharya, A.S., 1971, **Tiptur Kannada,** Deccan College, Post Graduate and Research Institute, Poona.

Bhat. D. N. S., 1971, **An Outline Grammar of Havyaka Kannada,** Deccan College, Post Graduate and Research Institute, Poona.

Caldwell, Robert, 1961, **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages,** University of Madras, Madras.

Subrahmanyam, P. S., 1971, **Dravidian Verb Morphology (A Comparative Study),** Annamalai University, Annamalai Nagar.

Upadhyaya, U.P., 1976, **A Comparative Study of Kannada Dialects,** University of Mysore, Mysore.

Upadhyaya, U.P., & Krishnamurthy, N.D., 1972, **Conversational Kannada,** N.D.K. Institute of Languages, Bangalore.

உயர்திணை விகுதியாக்கப் பெயர்

ஆ. கார்த்திகேயன்

கா ரன் என்ற விகுதி பெயர்ச்சொற்களோடு இணைந்து புதிய உயர்திணைப் பெயர்கள் உருவாகப் பயன்படுகிறது. இந்த விகுதியைக் குறித்தும், இவ்விகுதி சேர்ந்து உருவாகும் பெயர்ச்சொற்கள் குறித்தும் இக்கட்டுரை விவரிக்கிறது.

தமிழ் மொழியில் அஃறிணைப் பெயர்களை உயர்திணைப் பெயர்களாக்கச் சில விகுதிகள் பயன்படுகின்றன. அரசியல் என்ற சொல்லோடு 'வாதி' என்ற விகுதி சேர்த்து அரசியல்வாதி என்ற சொல் பெறப்படுகிறது தொழில் என்ற சொல்லோடு 'ஆளி' என்ற விகுதி சேர்த்து தொழிலாளி என்ற சொல் உருவாக்கப்படுகிறது. கிராமம் என்ற சொல்லும் 'வாசி' என்ற விகுதியும் இணைந்து கிராமவாசி என்ற சொல் உருவாகிறது பார்வையாளன் என்ற சொல்லில் பார்வை என்ற சொல் லும் 'ஆளன்' என்ற விகுதியும் இணைந்துள்ளன. அரசியல்வாதி, தொழி லாளி, கிராமவாசி, பார்வையாளன் ஆகிய சொற்கள் யாவும் உயர்திணை விகுதியாக்கப் பெயர்களாகும். இந்த வரிசையில் - காரன் என்ற விகுதியும் முக்கியமான ஒன்றாகும் இவ்விகுதி புதிய புதிய சொற்களோடு குறிப்பாக, கடன் சொற்களோடு இணைந்து மேலும் புதிய சொற்கள் உருவாகப் பயன்படுகிறது. யூனிட்காரர், கேமிராக்காரர் போன்ற சொற்களைக் கவனித்தால் இந்த உண்மை தெரியவரும்

இந்த விகுதி நீண்ட நாட்களாகவே தமிழ் மொழிச் சொல்லுரு வாக்கத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது துன்னக்காரர் 'தையல்

காரன்' என்ற பொருளில் சிலப்பதிகாரத்தில் முதன் முதலாக வந்துள்ளது. வேலைக்காரன் என்ற சொல் 'பணியாளர் தொகுதி அரசருடைய பணியிலே தலைநிற்பவராய், அப்பணியில் வழுவ நேர்ந்தால் உயிரையும் மாய்க்கத் துணிந்தவர்' என்ற பொருளில் கல்வெட்டுகளில் காணப்படு கிறது' (காண்க. தமிழண்ணல், 2001). இவ்விகுதி சேர்த்து காலந்தோறும் உருவாக்கப்பட்ட சொற்களைக் குறித்த வரலாற்று ஆய்வு மிகவும் ஆர்வ முடையதாக அமையும். ஜி.யு போப் தயாரித்த தமிழ் உரைநடை வாசிப்பு நூலில் காணப்படும் சில சொற்கள் தற்போது புழக்கத்தில் இல்லை

ஆசியக்காரன்

விண்ணப்பக்காரன்

மரத்துக்காரன்

மரக்காரன்

நீதிக்காரன்

பதிலிக்காரன்

ஆசியக்காரன் - சிரிப்பு ஊட்டுபவன் என்ற பொருளுடைய இச் சொல் புழக்கத்தில் இல்லை. விண்ணப்பக்காரன் என்ற சொல்லுக்குப் பதில் தற்காலத்தில் விண்ணப்பதாரர் என்ற சொல் பெருமளவு பயன்படுத் தப்படுகிறது. மரம் என்ற சொல்லினடியாகப் பிறந்த மரத்து, மர ஆகிய இரண்டு பகுதிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன நீதிக்காரன் என்ற சொல்லுக்குப் பதிலாக நீதிபதி என்ற சொல் பயன்பாட்டிற்கு வந்துள் ளது. பதிலிக்காரன் என்ற சொல் 'Substitute' என்ற பொருளில் அறவே இல்லை. இத்தகைய சொற்களை ஆய்வு செய்தால் கால ஓட்டத்தில் சொல்லுருவாக்க விதிகளுக்கு ஏற்படும் மாற்றத்தை அறிந்துகொள்ள முடியும்.

இந்த விகுதி பற்றிய சுருக்கமான விவரத்தைப் போப், வின்ஸ்லோ, கமலேஸ்வரன் ஆகியோர் தந்துள்ளனர் இந்த விகுதி பொதுவாக அஃறிணைப் பெயர்களோடு இணைந்து புதிய சொற்கள் உருவாகின்றன என்று முன்னர் குறிப்பிட்டோம் அஃறிணைப் பெயர்கள் அடிப்பகுதி

யாக விளங்குகின்றன. அடிப்பகுதியாக வரும் பெயர்கள் தனிப்பெயர் களாகவோ கூட்டுப்பெயர்களாகவோ இருக்கலாம். வண்டிக்காரன் என்ற சொல்லில் வரும் வண்டி என்பது தனிப்பெயராகும். கடன்காரன் என்ற சொல்லில் கடன் என்பது தனிப்பெயராக அமைந்த அடிப்பகுதியாகும். ஆனால் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளில் அடிப்பகுதி கூட்டுப்பெயர் களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

சிறுபுத்திக்காரன்	(சிறு + புத்தி)
கறுப்புச் சட்டைக்காரன்	(கறுப்பு + சட்டை)
எதிர்க்கட்சிக்காரன்	(எதிர் + கட்சி)
ஆளும் கட்சிக்காரன்	(ஆளும் + கட்சி)
தேனீர்க்கடைக்காரன்	(தேனீர் + கடை)
பொய்க்கால் குதிரைக்காரன்	(பொய் + கால் + குதிரை)
கல்நெஞ்சக்காரன்	(கல் + நெஞ்சம்)

இவற்றுள் கடைக்காரன் என்ற சொல்லிலிருந்து தேனீர்க் கடைக்காரன் என்ற சொல் உருவானதாகக் கொள்ள முடியும். கட்சிக்காரன் என்ற சொல்லின் நீட்சியாக எதிர்க்கட்சிக்காரன், ஆளும் கட்சிக்காரன் ஆகிய சொற்கள் பிறந்துள்ளன. ஆனால் கல்நெஞ்சக்காரன் என்ற சொல்லில் நெஞ்சக்காரன் என்ற சொல் இல்லை. கல்நெஞ்சம் 'காரன்' விகுதியோடு இணைகிறது. பொய்க்கால் குதிரை என்ற சொல் 'காரன்' விகுதியோடு இணைகிறது

'காரன்' என்ற விகுதி பொதுவாக அஃறிணைப் பெயர்களோடு இணையும் என்று குறிப்பிட்டோம் ஆனால் இந்த விகுதி உயர்திணை உறவுமுறைச் சொற்களோடு இணைந்து எந்தவிதப் பொருள் மாற்றமும், சொல் வகைப்பாட்டு மாற்றமுமின்றி வருவதைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக,

அண்ணன்	அண்ணன்காரன்
அத்தை	அத்தைக்காரி

அம்மா அம்மாக்காரி

" Expressive derivation does not change the referential scope of its input ; however expressive derivation also does not change the lexcial category of the base " (Robert Beard, 1998 : 60) மேலும் இந்த விகுதி ஒரு எடுத்துக்காட்டில் மட்டும் வினைச் சொல்லோடு இணைந்து வந்துள்ளதைக் காணமுடிகிறது. ஏமாற்றுக்காரன் என்ற எடுத்துக்காட்டில் ஏமாற்று என்பது வினைச் சொல்லாகும். இதுபோன்ற வேறு வினைச் சொல்லுடன் இவ்விகுதி சேர்ந்து வருமா என்பதையும் காண வேண்டியிருக்கிறது.

காரன் என்ற விகுதி சேர்த்து உருவாக்கப்படும் புதிய சொல்லுக்கும் அடிப்பகுதியாக விளங்கும் சொல்லுக்கும் இடையில் நிலவும் இலக்கண உறவு கவனிக்கத்தக்கதாகும்.

மேளக்காரர்	(மேளத்தை வாசிப்பவர்)
சினிமாக்காரர்	(சினிமாவில் நடிப்பவர்)
வீட்டுக்காரர்	(வீட்டுக்குச் சொந்தக்காரர்)
தறிக்காரர்	(தறியால் நெய்பவர்)
கோபக்காரர்	(கோபப்படுபவர், அனுபவிக்கிறவர்)

காரன் விகுதி சேர்த்து ஒரு சொல் உருவாக்கப்பட்டவுடன் - காரி (பெண்பால் விகுதி) - காரர் (பலர்பால் விகுதி) ஆகிய விகுதிகளையும் இணைத்து மேலும் சொற்கள் உருவாக்க வாய்ப்பிருக்கிறது எடுத்துக் காட்டு :

கடன்காரன், கடன்காரி, கடன்காரர்

சில வேளைகளில் தேர்வுக் கட்டுப்பாடுகள் இருந்தால் ஒரு குறிப்பிட்ட சொல்லுக்கு இணையான அல்லது தொடர்புடைய சொற்கள் உருவாக்க முடியாமல் போகலாம். எடுத்துக்காட்டாக 'பச்சைப்பிள்ளைக்காரி' என்ற சொல்லுக்கு ஆண்பால் பெயரோ, பலர் பால் பெயரோ இருக்க முடியாது. அவ்வாறே 'பிள்ளைத்தாச்சிக்காரி' என்ற சொல்லுக்குப்

பிள்ளைத் தாச்சிக்காரன் என்ற சொல் இருக்க முடியாது. இங்கே தேர்வுக் கட்டுப்பாடுகள் முக்கியப் பங்காற்றுகின்றன. உரைகாரர் என்ற சொல்லைப் பழைய நூல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்களைக் குறிக்கப் பயன்படுத்துவர். இச்சொல் தற்போது பயன்பாட்டில் இருந்தாலும் இது ஒரு பழைய சொல். எனவே, உரைகாரி என்ற புதிய சொல் தோன்றுவது தடைப்படுகிறது.

இவ்விகுதி எவ்வகைப் பெயர்ச்சொற்களோடு வரும் என்பது அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று. பெரும்பாலும் நாடு, நகரம், ஊர் போன்ற இடத்தைக் குறிக்கும் பெயர்ச்சொற்களோடு வரும்.

டென்மார்க்காரர், மும்பைக்காரர்
கிராமத்துக்காரர், மதராஸ்காரர்

தொழில்முறைக் கருவிகளையும் தொழில்களையும் குறிக்கும் பெயர்ச் சொற்களோடு இணைந்து ஒரு தொழில் செய்பவர் என்ற பொருளில் வருகிறது.

வாத்தியக்காரர் தவில்காரர்
சினிமாக்காரர் பத்திரிகைக்காரர்
பூக்காரி

மனிதர்களின் உணர்வுநிலை / பண்புகள் ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்ச்சொற்களோடு இணைந்து இவ்விகுதி பயன்படுத்தப்படலாம்.

கல்நெஞ்சக்காரன் கோபக்காரன்
ரோஷக்காரன் அவசரக்காரன்
சிறுபுத்திக்காரன் தகிடுதத்தக்காரன்
பத்தாம் பசலிக்காரன்

இன்னும் எவ்வகைப் பெயர்ச்சொற்களோடு வரும் என்பதையும் கண்டறிய வேண்டியுள்ளது.

வீட்டுக்காரன் என்ற சொல் வீட்டுக்குச் சொந்தக்காரன் என்ற பொருள் தருகிறது. இங்கு இச்சொல்லின் பொருள் வீடு என்ற அடிப் பகுதியிலிருந்து பெறப்படுகிறது. வீட்டுக்காரன் என்ற சொல் கணவன்

என்ற பொருளைக் குறிக்கும் போது மரபுச் சொல்லாகிவிடுகிறது. முதற் பொருளைக் குறிக்கும் சொல்லோடு 'பக்கம்' என்ற சொல்லை இணைத்து 'பக்கத்து வீட்டுக்காரன்' என்ற சொல் உருவாக்க முடியும். ஆனால் மரபுச் சொல்லோடு அவ்வாறு செய்ய இயலாது. ஈட்டிக்காரன் என்ற சொல்லும் மரபுச் சொல்தான். ஏனெனில் ஈட்டி என்ற சொல்லின் பொருளுக்கும் ஈட்டிக்காரன் என்ற சொல்லின் பொருளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

எவ்வகைப் பெயர்ச்சொற்களோடு இவ்விகுதி சேராது என்பதும் கண்டறியப்பட வேண்டும். வானம், மேகம், உலகம் போன்ற சொற் களோடு - காரன் விகுதி சேருவதில்லை. உலகம் என்பதும் இடத்தைத் தான் குறிக்கிறது. ஆனாலும் வருவதில்லை. வானம், மேகம் இவற்றைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. நிலவு, சூரியன், நட்சத்திரம் போன்ற பொருட்களும் பொதுவானவை. இதனால் சொல்லுருவாக்கத்தில் தடையிருக்கலாம். வடமொழியில் கலாகார் - Artist என்ற சொல் உள்ளது. மலையாளத்தில் கலாகாரன் என்ற சொல் உள்ளது. ஆனால் தமிழில் கலைக்காரன் என்ற சொல் உருவாகவில்லை. கலைஞன் என்ற சொல் இருப்பது கலைக்காரன் என்ற சொல்லுருவாகத் தடையாக இருக்கலாம். அறிவாளி, அறிஞன் போன்ற சொற்கள் இருப்பதால் அறிவுக்காரன் என்ற சொல் உருவாகத் தடையாக அமையலாம்

தமிழ்மொழியில் உள்ள இந்த விகுதி (காரன்) வடமொழியில் - கார் என்ற விகுதியோடு தொடர்புடையது. வடமொழியில் சித்கார், கலாகார், சங்கீத்கார் போன்ற பல சொற்களில் இவ்விகுதி இருப்பதைக் காணலாம். பல தெற்காசிய மொழிகளிலும் இவ்விகுதி பயன்படுத்தப்பட லாம். மலையாளத்தில் கூட்டுக்காரன் 'நண்பன்', வல்லக்காரன் 'ஓடக் காரன்' போன்ற பல சொற்கள் உள்ளன தமிழிலும்கூட பல கிளை மொழிகளிலும் அவற்றிற்கேயுரிய சொற்களோடு இவ்விகுதி பயன்படுத் தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் நெய்த்துக்காரன், தூர்ப்புக்காரன், வெட்டுக்காரன் போன்றவை இம்மாவட்டத்துக்கே உரியவை. இந்நிலையில் இவ்விகுதியைப் பற்றி ஒரு விரிவான ஆய்வு தேவை.

துணை நூல்கள்

Kamaleswaran., 1974, Nouns in Tamil (Unpublished Thesis), Annamalai University, Annamalai Nagar.

Pope. G. U., 1855, **A Hand Book of the Tamil Language**, Asian Educational Services, New Delhi (Reprint - 1993).

Pope. G. U., 1905, **Tamil Prose Reader**, Asian Educational Services, New Delhi (Reprint - 1982).

Robert Beard., 1998, **Derivation in The Hand Book of Morphology**, N. zwicky, Blackwell, U. K.

தமிழண்ணல்., 2001, *வளர்தமிழ்*, சிங்கைச் சுடர் (ஆகஸ்ட் - செப்டம்பர்) இதழ், சிங்கப்பூர்.

முன் பழந்தமிழில் செயப்படுபொருள் - உருபேலாத நிலை

அரு. பரமசிவம்

முன்னுரை

முன்பழந்தமிழில் உயர்திணைச் செயப்படுபொருள் ஐயுருபையும் ஐயுருபுத் தொக்கு வருதலையும் பெற்று வந்துள்ளது முன்பழந்தமிழ் அமைப்பில் சில வாக்கியங்கள் சொல் வரிசை முறையில் நெகிழ்ச்சி பெற்றுள்ளன. உயர்திணைச் செயப்படுபொருள் ஐயுருபு தொக்கு வருகிற வாக்கிய அமைப்புகளில் பல்வேறு வினைகளுக்கு முன்வரும் பெயர்த் தொடர்களே செயப்படுபொருள் என நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் விரவுப் பெயரிலும் ஐயுருபு பெற்று வரும் அமைப்புகள் சிறுபான்மையாக முன்பழந்தமிழில் வந்துள்ளன. இவ்வமைப்புகளிலும் வினைக்கு முன்னர் இடப்பட்டுச் செயப்படுப்பொருள் உணர்த்தப்படுகிறது. மேலும் உயிரற்ற அஃறிணைப் பெயர்த் தொடர்கள் ஐயுருபு தொக்கு வரும் அமைப்புகள் முன்பழந்தமிழில் பெரும்பான்மையாக வந்துள்ளன. இவ் அமைப்புகளில் வினைக்கு முன்னர் இடப்பட்டுச் செயப்படுப்பொருள் உணர்த்தப்படுகிறது.

1. செயப்படுபொருள் உருபேலாத நிலையும் உருபேற்ற நிலையும்

முன் பழந்தமிழில் செயப்படுபொருள் (Accusative) எனும் புற அமைப்பு உருபேலாத நிலையிலும் ஐ என்ற உருபு பெற்ற நிலையிலும் வந்துள்ளன.

1.1. தொல்காப்பியர் கூறும் செயப்படுபொருள்

தொல்காப்பியர் செயப்படுபொருள் வேற்றுமையை ' ஐயெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி ' எனும் வரியால் சொல்லதிகார வேற்றுமை யியல் நூற்பா 71 இல் குறிப்பிட்டு உள்ளார்.

1.2. செயப்படுபொருள் பற்றி உரையாசிரியர்கள், மொழியியல் அறிஞர்கள்

இச்செயப்படுபொருளை வினைமுதற்றொழில் பயனுறுவது எனச் சேனாவரையரும் (பக். 56), வினையினால் குறிக்கப்பட்ட பொருள் எனத் தெய்வச்சிலையாரும் (பக் 39) வினைச் சொல்லுக்குத் தகுந்தபடி மாறுவது என, கு. பரமசிவமும் (1983; 138, 139) குறித்துள்ளனர்.

1.3. செயப்படுபொருள் - வினையையொட்டி

இச்செயப்படுபொருள் வேற்றுமை மூன்று வகைகளாகப் ã Ç ¡ fYg£ LŸ s J m Ê î É i d fs hš (Verb of Destruction) உணரப் படுவதான வேறுபடுக்கப்படு செயப்படுபொருள் (Affected Patient) என்பதும் பல்வேறு செய்வினையாலும் (Action Verbs) உளவியற் பாங்கான வினைகளாலும் (Psychological Verbs) உணரப்படுவதான எய்தப்படு செயப்படுபொருள் (Unaffected Patient) என்பதும், ஆக்க வினைகளால் (Verbs of Creation) உணரப்படுவதான இயற்றப்படு செயப் படுபொருளும் (Factitive Patient) அம்மூன்று வகைகளாகும்.

2.0 முன் பழந்தமிழில் உயர்திணைச் செயப்படுபொருள் ஐயுருபு ஏற்று வருதல்

1) வழிபடு வோரை வல்லறி தீயே (புறம். 10 : 1)

2) கடுவனும் அறியும்அக் கொடியோ னையே (குறு. 26 8)

3) அமர்க்கண் அஞ்ஞையை அலைத்த கையே (அகம் 145 : 22)

4) ஆட்டன் அத்தியைக் காணீ ரோவென (அகம் 236 : 16)

5) அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே (அகம் 154 : 15)

6) அணங்குகால் அரிவையை நசைஇ (அகம். 212 : 8)

7) ஒள் நுதல் அரிவையை உள்ளுதொறும் (ஐங். 322 : 4)

8) வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
அரிவையைப் பெறுகதில் அம்ம யானே (குறு. 14 : 2, 3)

9) ஒருவனை ஒருவ னடுதலும் (புறம். 76 : 1)

10) பெரியோரை வியத்தலு மிலமே (புறம். 102 : 12)

மேற்சுட்டப்பெற்ற முன்பழந்தமிழ்த் தரவுகளில் வழிபடுவோரை (1) கொடியோனை (2), அஞ்ஞையை (3), அத்தியை (4), அரிவையை (5, 6, 7, 8), ஒருவனை (9), பெரியோரை (10) எனும் உயர்திணைச் செயப் படுபொருட் பெயர்கள் ஐயுருபு பெற்று வந்துள்ளன. இவ்வுயர்திணைச் செயப்படுபொருட்பெயர்கள் ஐயுருபு பெற்று வரு தலைத் தொல்காப்பியர் எழுத்திகாரத் தொகை மரபில் இரண்டாம் வேற்றுமைத்திரிபு பற்றிக் குறிக்கிற இடத்தில் 'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்' (நூற்பா. 158) எனக் கூறியுள்ளார். இவ்உயர் திணைச் செயப்படுபொருட் பெயர்கள் குறிப்பிட்ட ஒருவரைச் சுட்டும் தன்மையினவாதலால் கட்டாயமாக ஐயுருபை ஏற்று நின்றுள்ளன.

மேற்சுட்டப்பெற்ற தரவுகளில் வரும் உயர்திணைச் செயப்படு பொருட் பெயர்கள் *அந்த, தன்* எனும் அடைமொழிகளால் சிறப்பிக்கப் படலாம்.

1) அ *அந்த வழிபடுவோரை வல்லறிதீயே*

2) அ கடுவனும் அறியும் *அந்தக் கொடியோனையே*

3) அ *அந்த அஞ்ஞையை* அலைத்த கையே

4) அ *அந்த அத்தியைக்* காணீரோ

5) அ *அந்த அரிவையை* உள்ளுதொறும்

9) அ *அந்த ஒருவனை* ஒருவன் அடுதலும்

10) அ *அந்தப் பெரியோரை* வியத்தலும் இலமே

தரவு 1இல் வழிபடுவோரை எனும் உயர்திணைச் செயப்படு பொருட் பெயர் ஐயுருபேற்று அ எனும் செயல்வினை முன் வரும்போது எய்தப்படுவது எனும் பொருளிலும்,

தரவு 3இல் அஞ்ஞைுயை எனும் உயர்திணைச் செயப்படுபொருட் பெயர் ஐயுருபேற்று அலை எனும் செயல்வினை முன் வரும் போது வேறுபடுக்கப்படுவது எனும் பொருளிலும் வந்துள்ளன.

வரிசை முறையை (Word Order) விளக்கும்போது தமிழ் S (ubject), O (bject) V(erb) என SOV மொழி அமைப்புடையது. முன்பழந்தமிழில் பெரும்பாலான வாக்கிய அமைப்புகள் SOV அமைப்பிலேயே அமைந் துள்ளன தரவு எண் 2 இல் கடுவனும் (Subject) அறியும் (Verb), அக் கொடியோனையே (Object) என SVO அமைப்பில் அமைந்துள்ளது. இவ்வமைப்பு சொல் வரிசை முறை நெகிழ்ச்சி அடைந்துள்ளது என்பதைக் காட்டி நிற்கிறது.

ஃபில்மோர் (The Case for Case, 1968 : 21) வேற்றுமை உறவுகளை விளக்கும் போது வேற்றுமை வடிவம் சில குறிப்பிட்ட மொழிகளில் சொல் வரிசை முறைக் கட்டுப்பாட்டு அமைப்பாலும் உணர்த்தப்பெறும் என்கிறார் (The term case form to mean the expression of a case relationship in a particular language whether through affixation, suppletion, use of clitic particles of constraints on word order).

மேலும் சில அமைப்புகள் சொல் வரிசை முறையில் (Word Order) நெகிழ்ச்சியைக் காட்டுகின்றன. இத்தரவுகள் உயர்திணைச் சொற்கள் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று நிற்பதைக் காட்டுகின்றன பெயரும் வினையும் தனித்து வளர்ந்தபோது ஐ தனி வேற்றுமை உருபாக வளர்ச்சியுற்ற நிலையைக் காட்டுகிறது.

2. 1. முன்பழந்தமிழில் உயர்திணைச் செயப்படுபொருள் தன்னுருபு தொக்கு வருதல்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத் தொகை மரபில் நூற்பா 158 இல் இரண்டாம் வேற்றுமைத் திரிபைப் பற்றிக் குறித்துள்ளார் 'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்' எனும் வரியில் இதனை விளக்கியுள்ளார் இவ்வரிக்கு விளக்கம் உரைத்த இளம்பூரணர் உயர்திணையுள் ஐயுருபு ஒழிந்து வரும் இடங்களும் மொழியில் உள எனக் குறித்துள்ளார் உயர்திணையுள் ஐயுருபு தொக்கு நிற்றலை நன்னூலாரும் எழுத்ததிகார

நூற்பா 255இல் குறித்துள்ளார். முன்பழந்தமிழில் வாக்கியங்களில் உயர் திணையுள் ஐயுருபு தொக்கு வருவன கீழே காட்டப்பட்டுள்ளன.

11) போற்றார்ப் பொறுத்தலும் (புறம். 2 : 7)

12) கொடியோர்த் தெறுதலும் (புறம். 29. 9)

13) காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம் (புறம். 35 : 29)

14) நேரார்க் கடந்த முரண்மிகு திருவின்
தேர்வண் கிள்ளி தம்பி (புறம். 43 : 9, 10)

15) தம்மைப் பிணித்தோர்ப் பொறுக்குஞ் செம்மல் (புறம். 43 : 18)

16) வள்ளியோர்ப் படர்ந்து (புறம். 47 : 1)

17) நெடுவேட் பரவும் அன்னை (அகம் 272 : 15)

18) செந்நா யேற்றை கேழ றாக்க (அகம். 21 : 18)

19) ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை (புறம் 68 : 7)

20) அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும் (புறம். 99 : 1)

இத்தரவுகள் பயனிலையுடன் கூடிய ஒரே தொகுதியாக உள்ளன இவ்வமைப்புகள் தொகைகளாக உள்ளன. உயர்திணையுள் வேற்றுமை உருபுகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

போற்றார்ப் பொறுத்தல் (11), கொடியோர்த் தெறுதல் (12), காவலர்ப் பழிக்கும் (13), நேரார்க் கடந்த (14), பிணித்தோர்ப் பொறுக்கும் (15), வள்ளியோர்ப் படர்ந்து (16), ஆடவர்ப் பிணிக்கும் (19) எனும் இத் தரவுகளில் இரண்டாவது சொல்லின் மொழி முதல் வெடிப்பொலி இரட்டித்தலாலே சொற்கள் ஒரு நீர்மைப்பட்டு ஐயுருபைத் தவிர்த்துள்ளன.

இவ்வாறு உயர்திணைப் பெயர்கள் ஐயுருபு பெற்று வராததை இளம்பூரணர் எழுத்ததிகார உரையில் (பக் 86, 87) வேறுபட முடித்தல் எனக் குறித்துள்ளார்.

இத்தரவுகளில் வருகிற போற்றார் (11), கொடியோர் (12), காவலர் (13), நேரார் (14), பிணித்தோர் (15), வள்ளியோர் (16), ஆடவர் (19) எனும் உயர்திணைப் பெயர்கள் செயப்படுபொருள் + வினை எனும் சொல் வரிசை முறையைக் கொண்டே செயப்படுபொருள் என நிர்ணயிக் கப்பட்டுள்ளன. பல்வேறு வினைகளுக்கு முன் வந்துள்ள பெயர்த்தொடர் களே செயப்படுபொருள் வேற்றுமைகளாகும். செயப்படுபொருள் வேற்றுமை உருபேலாது பயன்படுத்தப்படும்போது வினைக்கு முன்னர் இடப்பட்டுச் செயப்படுபொருள் வேற்றுமைப் பெயர்கள் உணர்த்தப் பட்டுள்ளன. மேலும் இத்தகைய எடுத்துக்காட்டுகளில் பெயர்த்தொடர் கள் வந்துள்ள இடம் என்ற கருத்து அடிப்படையிலேயே பெயர்த் தொடர்களுக்கும் உரிய வேற்றுமை நிர்ணயிக்கப்பட்டுள்ளது (The Choice of Prepositions to go with each case element, where these are determined by idiosyncratic properties of the verb rather than by a general rule, C. J. Fillmore, The Case for Case, 1967 : 29).

இத்தரவுகளில் வந்துள்ள பொறு (11), தெறு (12), பழி (13), கட (14), பிணி (15), படர் (16), பரவு (17), தாக்கு (18), பேணு (20) எனும் வினைகளின் மாற்றிலக்கண உடைமைகளே (Idiosyncratic properties) இவை பெற்று வரும். உயர்திணைச் செயப்படுபொருட் பெயர்களை வெற்றுருபு பெற்று வர அனுமதித்துள்ளன.

பேச்சு வழக்கில் கீழ்க்கண்டவாறு பார் எனும் வினையின் மாற்றி லக்கண உடைமை, உயர்திணைப் பெயரான செயப்படுபொருளை வெற்றுருபு பெற்று வருமாறு அனுமதித்துள்ளது.

21) அவனுக்குப் பெண் பார்த்தார்கள்

மேலும் மலையாளப் பேச்சு வழக்கில் கீழ்க்கண்டவாறு காண் எனும் வினையின் மாற்றிலக்கண உடைமை, உயர்திணைப் பெயரான செயப்படு பொருளை வெற்றுருபு பெற்று வருமாறு அனுமதித்துள்ளது.

22) ஒரு பொண்ணு கண்டு (மலையாளம்)

கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகள் பேச்சு வழக்குகளில் உயர்திணைப் பெயர்களான செயப்படுபொருள்கள் பல்வேறு செயப்படுபொருட்

குன்றா வினைகள் வரும்போது வெற்றுருபு பெற்று வருவதைக் காட்டு கின்றன.

23) நான் டியூசனுக்கு ஒரு நல்ல வாத்தியாரு தேடிக்கிட்டிருக்கேன்

24) நல்ல ஆள் பிடிச்சு அனுப்பு

25) பையனுக்கு ஒரு நல்ல பொண்ணு வேணும்

26) ஒரு ஊர்ல ஒரு ராட்சசன் இருந்தான். அவன் ஒரு நாளைக்கு ரெண்டு மனுசன் திம்பான்

இவ் எடுத்துக்காட்டுகளில் உயர்திணைப் பெயர்களான வாத்தியார், ஆள், பொண்ணு, ஆகியன செயப்படுபொருளாக வந்தும் ஐ உருபை ஏற்கவில்லை.

ng¢R tH;»š Ñœ;f© ltW பார் எனும் வினையின் மாற்றிலக்கண உடைமை, உயர்திணைப் பெயரான செயப்படுபொருளை வெற்றுருபு பெற்று வருமாறு அனுமதித்துள்ளதைக் காணலாம்.

27) அவனுக்குப் பெண் பார்த்தார்கள்

3.0. ஐயுருபு பெற்ற அஃறிணைச் செயப்படுபொருள்

அ) விரவுப் பெயரில் ஒழியாது வருதல்

ஒரு குறிப்பிட்ட ஒன்றைச் சுட்டுகிற உயிருடைப் பொருட் பெயர் ஐயுருபேற்று வருதலை முன்பழந்தமிழ் இலக்கியத்தில் காணுகிறோம்

28) சிறுதலை பிணையிற் றீர்ந்த நெறி கோட்
டிரலை மானையுங் காண்பர் கொல் (குறு 183.3,4)

இத்தரவில் வரும் உயிருடைப் பொருட் பெயரான, குறிப்பிட்டுச் சுட்டப்படுவதான இரலைமான் எனும் பொருட்பெயர் ஐயுருபேற்றுச் செயப்படுபொருளைச் சுட்டுகிறது

ஐயுருபு பெற்ற அஃறிணைச் செயப்படுபொருள் மொழியில் வருவது பற்றித் தொல்காப்பியர் எழுத்ததிகார நூற்பா 158இல் விரவுப் பெயருக்கு அவ்வியல் நிலையலும் என்று குறித்துள்ளார்

விரவுப்பெயரில் ஐயுருபு விரிந்து நிற்றலை நன்னூலாரும் சூத்திரம் விருந்து பல கூறுகளில் வேறுபட்டு நிற்பதையும் காணலாம். 255 இல் குறித்துள்ளார். இம்மாதிரித் தரவுகளின் வரவு முன்பழந்தமிழ் இலக்கியங்களில் சிறுபான்மையாக உள்ளது.

இத்தரவில் செயப்படுபொருளான *இரலைமான்* என்பது ஐ உருபையேற்றுப் பயன்படுத்தப்படும்போது வினைக்கு உடனடி முன்னர் இடப்பட்டுச் செயப்படுப்பொருள் வேற்றுமைப் பெயர்த் தொடர் உணர்த்தப்பட்டுள்ளது. மேலும் இத்தகைய இடத்தில் பெயர்த்தொடர் வந்துள்ள இடம் என்ற கருத்து அடிப்படையிலேயே பெயர்த்தொடர் வேற்றுமை நிர்ணயிக்கப்படுகிறது.

பேச்சு வழக்கில் *உதை* எனும் செயப்படுப்பொருள் குன்றா வினையை ஏற்கும் அஃறிணை விரவுப்பெயர் ஐயுருபைப் பெற்று வருவதைப் பார்க்கிறோம்.

29) நான் நாயை உதைத்தேன்

மலையாளப் பேச்சு வழக்கிலும் *அடி* எனும் செயப்படுபொருள் குன்றா வினையை ஏற்கும் அஃறிணை விரவுப்பெயர் ஐயுருபைப் பெற்று வந்துள்ளது.

30) நாயெ அடிச்சு (மலையாளம்)

3.1. அஃறிணைப் பெயரிடத்து உருபு தொக்கு வருதல்

31) பிறர் *பழி* கூறுவோர் மொழிதே றலையே (புறம். 10 : 2)

32) பூக்கொய்து (புறம். 10 : 5)

33) புறம் *பெற்ற* வயவேந்தன் (புறம். 10. 10)

34) மறம் *பாடிய* பாடினியும்மே (புறம். 10 : 11)

35) பாணர் தாமரை *மலை*யவும் (புறம். 12 : 1)

36) புனைதேர் *பண்ண*வும் (புறம். 12 : 2)

37) ஏம நன்னா டொள்ளெரி *யூட்டி*னை (புறம். 16 : 17)

38) பிறர்மண் ணுண்ணும் செம்மல் (புறம். 20 : 13)

39) வேளை வெண்பூக் கறிக்கும் (புறம். 23: 21, 22)

40) திண்டிமில் வன்பரதவர் வெப்புடைய
மட்டுண்டு (புறம். 24 : 4, 5)

41) ஆன்முலை அறுத்த அறனிலோர் (புறம். 34 : 1)

42) மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர் (புறம். 34 : 2)

43) நளியிரு முந்நீர் நாவா யோட்டி (புறம். 66 1)

44) வென்றமர்க் கடந்த (புறம். 66 : 4)

45) குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி (புறம் 67 : 6)

46) குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சி (புறம். 69 : 10)

47) குறவர் மாக்கள் ; தேறல் மகிழ்ந்து (புறம். 129 : 1, 2)

48) முட்புற முதுகனி பெற்ற கடுவன் (புறம். 158 : 23)

49) ஐவனம் வித்தி (புறம். 159 : 17)

50) புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் (புறம். 160 : 18, 19)

மேற்சுட்டப் பெற்றுள்ள தரவுகளில் வருகிற அஃறிணைப் பெயர்களான பழி (31), பூ (32), புறம் (33), மறம் (34), தேர் (36), எரி (37), மண் (38), பூ (39), மட்டு (40), முலை (41), கரு (42), நாவாய் (43), அமர் (44), அயிரை (45), கோட்டுமா (46), தேறல் (47), ஐவனம் (49), வறுமுலை (50) என்பன தன்னுருபு தொக்கு வந்துள்ளன. இம் மாதிரித் தன்மைகள் முன்பழந்தமிழ்த் தரவுகளில் பெரும்பான்மையாகக் காணக் கூடியனவாக உள்ளன.

மேற்காட்டப் பெற்ற முன்பழந்தமிழ் இலக்கியத் தரவுகளில் செயப்படுபொருள் வேற்றுமை உருபேலாது பயன்படுத்தப்படும்போது வினைக்கு உடனடி முன்னர் இடப்பட்டுச் செயப்படுபொருள் வேற்றுமைப் பெயர்த் தொடர்கள் உணர்த்தப்பட்டுள்ளன. மேலும் இத்தகைய மேற்சுட்டப் பெற்ற தரவுகளில் பூ (32), தாமரை (35), தேர் (36), மண்

(38), பூ (39), மட்டு (40), நாவாய் (45), தேறல் (47), முதுகனி (48), ஐவனம் (49) என்னும் உயிரற்ற அஃறிணைப் பெயர்கள் குறிப்பிட்ட ஒன்றைச் சுட்டாத நிலையில் ஐயுருபையேலாது செயப்படுபொருளாகப் பல்வேறு செயல்வினைகளை ஏற்று வந்துள்ளன. மலையாளப் பேச்சு வழக்கில் செயப்படுபொருள் குன்றா வினையை ஏற்ற உயிரற்ற அஃறிணைப் பெயர்த்தொடர்கள் முன்பழந்தமிழ்த் தரவுகளைப் போன்று ஐ உருபேலாது வந்துள்ளன.

51) ஒரு மரம் முறிச்சு (மலையாளம்)

தமிழகப் பேச்சு வழக்குகளில் செயப்படுபொருள் குன்றா வினையை ஏற்ற சுட்டுப் பதிலிடு பெயர்கள் (Demonstrative pronouns) ஐயுருபு பெற்று வருகின்றன.

52) நான் அதைக் குடித்தேன்

செயப்படுபொருள் குன்றாமையை ஏற்கும் வேறுபடுக்கப்படு வினையை ஏற்ற உயிரற்ற அஃறிணைப் பெயர்கள் பேச்சு வழக்கில் ஐயுருபு பெற்று வருகின்றன (The patients of a group of transitive verbs (Verbs of Impact) will be overtly marked).

53) நான் பானையை உடைத்தேன்

மேற்சுட்டப் பெற்ற முன்பழந்தமிழ் இலக்கியத் தரவுகளில் வந்துள்ள பூ (32), புறம் (33), மறம் (34), தாமரை (35), தேர் (36), எரி (37), மண் (38), பூ (39), மட்டு (40), முலை (41), கரு (42), நாவாய் (43), அயிரை (45), கோட்டுமா (46), தேறல் (47), முதுகனி (48), ஐவனம் (49) ஆகிய அஃறிணைப் பெயர்ச் சொற்கள் செயப்படு பொருளை இயல்பாகவே உணர்த்துவதால் வேற்றுமை உருபைத் தனியே சேர்க்க வேண்டியதில்லை, அதனால் ஐயுருபைப்பெறாமலே வந்துள்ளன.

4.0. நிறைவுரை

முன்பழந்தமிழிலும், இக்காலத் தமிழிலும் வேற்றுமையுருபாக ஐ மட்டும் வழங்கி வருகிறது இவ்வேற்றுமையில் உயர்திணைப் பெயர்கள் இவ்வுருபைப் பெற்றும், பெறாமலும் வந்துள்ளன. இவ்வாறே அஃறிணைப் பெயர்கள் ஐயுருபைப் பெற்றும் பெறாமலும் வந்துள்ளன. பெரும்பாலான தமிழ் வாக்கியங்கள் SOV அமைப்பிலும் ஒரு சில சொல்

வரிசை முறையில் நெகிழ்ச்சி அடைந் தும் காணப்படுகின்றன. SOV அமைப்பில் வருகிற வாக்கியங்களில் செயப்படுபொருள் + வினை எனும் நிலையிலேயே செயப்படுபொருள் வேற்றுமை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சில வினைகளின் மாற்றிலக்கண உடைமைகளே உயர்திணைப்பெயர் களில் ஐயுருபு தொக்கு வருகிற நிலையை அனுமதிக்கின்றன. ஐயுருபு பெற்ற விரவுப் பெயர்கள் முன்பழந் தமிழில் சிறுபான்மையாக வருகின் றன. இவ்வமைப்பில் செயப்படு பொருள் + வினை எனும் நிலையிலேயே செயப்படுபொருள் வேற்றுமை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அஃறிணைப் பெயரிடத்துத் தன்னுருபு தொக்கு வருகிற அமைப்பிலும் வினைக்கு முன்னர் செயப்படுபொருள் இடப்பட்டுச் செயப்படுபொருள் வேற்று மைப் பெயர்த்தொடர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐயுருபு வெளி பட வந்தால் என்ன பொருள் தருமோ அப்பொருளையே உருபேலாத நிலையிலும் சுட்டுகிறது எனக் காண்கிறோம்.

துணை நூல்கள்

அகநானூறு, 1968, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

குறுந்தொகை, 1965, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் – இளம்பூரணர் உரை, 1944, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

புறநானூறு, 1972, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

Filmore, 1968, **The Case for Case, Universals in Linguistic Theory**, (ed.) E. Bach & Harms, Holt, Rienchart & Winston, Newyork.

பேச்சுத்தமிழின் தனிப்பட்ட தொடரியல் கூறுகள்

எம். சுசிலா

பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று தமிழ் மொழியின் இரு பக்கத் தோற்றங்கள். இவை இரண்டிற்கும் இடையே நெருங்கிய உறவு உண்டு. ஒரு மொழி என்பது ஒலிகள், ஒலிகளால் ஆன சொற்கள், சொற்களால் ஆன தொடர் களைக் கொண்டது. தமிழ்மொழியில் பேச்சுத்தமிழ் ஒலிகளும் எழுத்துத் தமிழ் ஒலிகளும் நெருங்கிய உறவுடையவை. எந்த எழுத்துக்குரிய ஒலி பேச்சுத்தமிழில் மாறி ஒலிக்கிறது என எளிதில் இனம் காணமுடியும்.

உ	சொல் இறுதியில்	குற்றியலுகரம் (பருந்து)
	சொல் முதல் உயிர் மெய்யில்	முற்றியலுகரம் (குறள்)
ன்	சொல் இறுதியில்	மூக்கொலி அவ (ன்)
	பிற இடங்களில்	முழு ஒலி (அவனுடைய)

இதுபோன்றே பேச்சுத்தமிழ்ச் சொற்களும், எழுத்துத்தமிழ்ச் சொற்களும் நெருங்கிய உறவுடையவை.

கலைத்தான் - கலைச்சா (ன்) (- ந்த் -> ச்ச் - ஐ)

பாய்ந்து - பாஞ்சு (- ந்த் -> ஞ்ச் - ய்)

ஆனால் தொடர்களை நோக்கும்போது பேச்சுத்தமிழில் வழங்கும் பல தொடர்கள் எழுத்துத்தமிழில் காணக் கிடைப்பதில்லை. எடுத்துக் காட்டாக வாக்கிய இறுதியில் வரும் உயர்வு ஒருமை விகுதியை,

மழை வராதுங்க

என்பதை எழுத்துத்தமிழில் கொண்டு வர இயலவில்லை. இது போன்ற பல அமைப்புகளைத் தமிழ் கொண்டுள்ளது. இத்தகைய பேச்சுத் தமிழ்க் கூறுகளில் ஒருசில மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

1. பெயர்கள்

எண்ணுப்பெயர்களான ஒன்று, நான்கு ஆகியவை பேச்சுத்தமிழில் பயன்படுவது போன்று எழுத்துத்தமிழில் பயன்படுவதில்லை.

ஒண்ணு செய்

நாமதான் நாலையும் யோசிக்கணும்

நாலு காசு சம்பாதிக்கற வழியைப் பார்

பேச்சுத்தமிழில் பெயர்கள் வினையடைகள் போன்று வருவதைக் காணலாம்.

அவ ஒருத்தியா என்ன செய்வா ?

நீயா ஒண்ணும் செய்யாதே !

அந்தஸ்து தன்னாலே வரும்

தாய்க்குத் தாயா அக்காவுக்கு அக்காவா இருந்தா

பெயர்களுடன் வெற்றொலி இணைந்து வருவதையும் பேச்சுத் தமிழில் காணலாம்.

நானும் அவருமா வர்றோம்

ரெண்டு பேருமா போய் வாங்கிட்டு வாங்க

கோயில் இருக்கற ஊருங்களுக்கா போங்க

இரண்டு பெயர்களை இணைக்கப் பயன்படும் ஆவது என்ற சொல்லுருபு (கண்ணனாவது ராமனாவது வருவான் என்பது போன்று) பேச்சுத்தமிழில் வேறுவகைகளிலும் பயன்படுகிறது.

அவனாவது பாஸ் பண்ணிட்டான் இவன் அதுவும் இல்லை

அவனாவது பாஸ் பண்றதாவது

பொதுப்பெயர்களுடன் மட்டுமே வரும் பெயரடையான பெரிய பேச்சுத்தமிழில் சிறப்புப் பெயருடனும் வருகிறது.

பெரிய அரிச்சந்திரன்னு நினைப்பு

முழுமை உணர்த்தும் பெயரான 'எல்லாம்' பேச்சுத்தமிழில் வெற்றாகவும் வருவதைக் காணலாம்.

எல்லாம் நீ கொடுத்த புத்தகங்கள் தான் இது

2. எழுவாய் அற்ற வாக்கியங்கள்

எங்க வீட்டுக்கு வெள்ளை அடிச்சிருக்கு

வாசலில் கோலம் போட்டிருக்கு

போன்ற எழுவாய் அற்ற வாக்கியங்களும் பேச்சுத்தமிழுக்கே உரியவை.

3. தொழிற் பெயர்கள்

தொழிற் பெயர்களைப் பொறுத்தவரை எழுத்துத்தமிழில் இறந்த காலம் (செய்தது), எதிர்காலம் (செய்வது) ஆகிய இரு காலங்களே இருக்கும்போது பேச்சுத்தமிழில் நிகழ்காலமும் (செய்கிறது) காணப்படுகிறது.

விஷயம் இருக்கறதனால்தானே வந்திருக்கேன்

அடுத்தவங்களுக்காக வாழறதும் முகமூடி
போட்டுக்கறதும் எனக்குப் பிடிக்காது

கடனை அடைக்கறதுக்கு என்ன செய்யறது ?

அவர் நாளை வந்துடறதா சொன்னார்

4. நிரப்பியத் தொடர்கள்

நிரப்பியத் தொடர்கள் சொல், நினை போன்ற வினைகள் வரும் போது அவற்றை நிரப்பி வருபவை

நான் மழை வரும் என்று நினைத்தேன் / சொன்னேன்

ஆயினும் பேச்சுத்தமிழில் இவை எத்தகைய வினைகள் இல்லாமலும் வரும்.

பொண்ணு பார்க்கன்னு யாரும் வரக்கூடாது

அவரு வேணுங்கறவங்க, வேணாங்கறவங்கனு பாக்கமாட்டார்

நிரப்பியத் தொடரை அடுத்து *அப்படி* என்ற ஒரு சொல்லை இட்டுக் கூறுவதும் பேச்சுத்தமிழில் தான் உள்ளது.

நாளைக்கு போகலாம் அப்படீங்கிறியா ?

நிரப்பியத் தொடரில் முழுமையற்ற வாக்கியங்களையும் காணலாம்.

யாரைன்னு சொல்றது ?

வேணுங்கற பணம் இருக்கு

எழுவாய் அல்லாத ஒரு பெயரை நிரப்பியத் தொடரின் எழுவாயாக்கிக் கூறுவதும் பேச்சுத்தமிழில் மட்டுமே உள்ளது.

கொடி எட்ட மாட்டேங்குது

துணி காய மாட்டேங்குது

இது புரிய மாட்டேங்குது

5. நிபந்தனைத் தொடர்கள்

நிபந்தனைத் தொடர்கள் பொதுவாக *மழை வந்தால், அவர் போனால்* என்பது போன்று வினையுடன் தான் வரும். ஆனால் பேச்சுத்

தமிழில் பெயருடன் நிபந்தனை எச்சம் இணைவதைப் பார்க்கலாம்.

நான்னா அப்படி செய்யமாட்டேன்

இதுவானா அழ ஆரம்பிச்சுடுது

இடைக்காலத்தமிழ் இலக்கியங்களில் இந்த அமைப்பு *யானேல், அவனேல்* போன்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஒரு வாக்கியத்துடன் *ஆனால்* என்ற சொல்லை இணைக்கும் பண்பும் (வருவார் எனில் / ஆனால்) பேச்சுத்தமிழில் காணப்படுகிறது.

அங்கே போனேன்னா

அவங்க வந்தாங்கன்னா

நிபந்தனைத் தொடருடன் *போ* என்ற வினை இணைக்கும் பண்பும் பேச்சுத்தமிழில் மட்டுமே காணப்படுகிறது.

போயிட்டு வந்தா போச்சு, போனாப் போ

6. **துணை வினைகள்**

உடைந்து போ, பறந்து போ போன்ற பல வினைகளுடன் வரும் *போ* என்ற துணைவினை பேச்சுத்தமிழில் மட்டுமே *பிடிக்கும், நட* ஆகிய வினைகளுடன் வரும்

உன்னை எனக்கு பிடிச்சுப்போச்சு

இத்தனை நடந்து போச்சு

விடு என்ற துணைவினையை அடுத்தும் இந்த வினை வரும்.

பணம் போயிட்டு போவுது

சாப்பிட்டுட்டுப் போறாங்க, விடு

அதிர்ஷடமிருந்தா வேலை கிடைச்சுட்டுப் போவுது

பொதுவாகத் துணைவினைகள் இல்லாமலும் வினைகள் வரும். வந்துவிட்டான் - வருவான் ஆனால் போ என்ற வினை விடு என்ற துணை வினையுடன் இணைந்து பிரிக்க முடியாமல் வருவதைப் பேச்சுத்தமிழில் காணலாம்.

நீ தான் சிநேகிதியாப் போயிட்டியே

செயப்பாட்டுத் துணைவினையான படு, கூடாது என்ற பொருளில் வருவதும் பேச்சுத் தமிழில் காணப்படுகிறது.

நீ ஒரு விஷயம் மறக்கப்படாது

அதெல்லாம் நீங்கள் படிக்கப்படாது

கொள் என்ற துணைவினை பிறவினைகளுடன் இணைந்து எடுத்துக்கொண்டு, எழுதிக்கொண்டு போன்று வருவதைப் போல கொள் வினையுடனும் இணைவதைப் பேச்சுத்தமிழில்தான் காண்கிறோம்.

கொண்டுகிட்டு வா

கொண்டு கொண்டு என்ற அமைப்பு இடைக்காலத் தமிழில் கம்ப ராமாயணத்தில் காணப்படுகிறது.

வை என்ற துணைவினை எடுத்துவை, போட்டு வை போன்று செயப்படுபொருள் குன்றா வினையுடன் மட்டுமே வரும் ஆனால் பேச்சுத் தமிழில் படு செயப்படுபொருள் குன்றிய வினையுடனும் வரும்.

அவர் கண்ணில் பட்டு வைக்காதே

கீழே விழுந்து வைக்காதே

விடு என்ற துணவினை போய்விடு, வந்துவிடு போன்று தலைமை வினைகளுடன் வரும் ஆனால் பேச்சுத்தமிழில் இது நிரப்பியத் தொடரைத் தலைமைவினையுடன் இணைக்கும் என்று என்ற சொல்லுடன் இணைந்து வருகிறது

அவர் பணம் தரமாட்டேனுட்டார்

பொதுவாகத் துணைவினைகள் இல்லாமலும் வினைகள் வரும் வந்துவிட்டான் - வருவான் ஆனால் போ என்ற வினை விடு என்ற துணை வினையுடன் இணைந்து பிரிக்க முடியாமல் வருவதைப் பேச்சுத்தமிழில் காணலாம்

நீ தான் சிநேகிதியாப் போயிட்டியே

செயப்பாட்டுத் துணைவினையான படு, கூடாது என்ற பொருளில் வருவதும் பேச்சுத் தமிழில் காணப்படுகிறது

நீ ஒரு விஷயம் மறக்கப்படாது

அதெல்லாம் நீங்கள் படிக்கப்படாது

கொள் என்ற துணைவினை பிறவினைகளுடன் இணைந்து எடுத்துக்கொண்டு, எழுதிக்கொண்டு போன்று வருவதைப் போல கொள் வினையுடனும் இணைவதைப் பேச்சுத்தமிழில்தான் காண்கிறோம்

கொண்டுகிட்டு வா

கொண்டு கொண்டு என்ற அமைப்பு இடைக்காலத் தமிழில் கம்ப ராமாயணத்தில் காணப்படுகிறது

வை என்ற துணைவினை எடுத்துவை, போட்டு வை போன்று செயப்படுபொருள் குன்றா வினையுடன் மட்டுமே வரும் ஆனால் பேச்சுத் தமிழில் படு செயப்படுபொருள் குன்றிய வினையுடனும் வரும்

அவர் கண்ணில் பட்டு வைக்காதே

கீழே விழுந்து வைக்காதே

விடு என்ற துணைவினை போய்விடு, வந்துவிடு போன்று தலைமை வினைகளுடன் வரும் ஆனால் பேச்சுத்தமிழில் இது நிரப்பியத் தொடரைத் தலைமைவினையுடன் இணைக்கும் என்று என்ற சொல்லு டன் இணைந்து வருகிறது

அவர் பணம் தரமாட்டேனுட்டார்

அவன் பேச மாட்டேன்னுட்டான்

இந்த அமைப்பும் இடைக்காலத் தமிழில் காணப்படுகிறது.

7. எழுவாய் - பயனிலை உடன்பாடு

தமிழ்மொழியில் எழுவாய் - பயனிலை உடன்பாடு ஒரு பொதுவான இலக்கண விதி. ஆனால் பேச்சுத்தமிழில் ஒரு சில அமைப்புகளில் இந்த விதி காணப்படுவதில்லை. சில வாக்கியங்கள் தொழிற்பெயர் கொண்டு முடிகின்றன.

அதனாலே நான் தமிழ் படத்துக்கே போயிடறது

நீங்க சாப்பிட்டு பிறகு பேசறது

மேலும் சில வாக்கியங்கள் போல, ஆம், ஆக்கும் கொண்டு முடிகின்றன.

அவர் வந்தாப்பல

அவர் வந்தாராம்

அவர் வந்தாராக்கும்

v G ¤J ¤j Ä Ê š *ஆடு, ஓடு* போன்ற வினைகளே *ஆடிற்று, ஓடிற்று* என - *ற்று* விகுதி ஏற்று வரும். *வா, விடு* ஆகிய வினைகள் - *அது* விகுதியே ஏற்கும் (வந்தது, வந்துவிட்டது). ஆனால் பேச்சுத்தமிழில் இவையும் -ற்று விகுதி ஏற்று வரும்.

மழை வந்திச்சு, மழை வந்திடுச்சு

8. வினாப் பெயர்கள்

வினாப் பெயரான *என்ன* என்ற சொல் வேற்றுமை விகுதி ஏற்கும்.

நான் என்னத்தை சொல்லிவிட்டேன் ?

என்னத்தினாலே இப்படி நடந்தது ?

வினையடை விகுதி ஏற்றும் வருவதைப் பேச்சுத்தமிழில்தான் காண முடிகிறது.

நீ என்னமா போகலாம் ?

அவ என்னமா பாடினா ?

நிபந்தனைத் தொடருடனும் இந்த வினாப்பெயர் வரும்.

நீ வந்தா என்ன, நல்லா படிச்சா என்ன

ஒரு செயலை ஆட்சேபிக்கவும் இந்தச் சொல் பயன்படும்.

நீ என்ன புத்தகத்தை எல்லாம் கிழிச்சுப் போடறே ?

அவளுக்கு என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு ?

ஒரு பொருளை எளிமைப்படுத்தவும் இச்சொல் பயன்படுகிறது.

நீ என்ன அமெரிக்காவுக்கா போறே ?

ஸ்கூட்டர் என்ன காரே வாங்கலாம்.

ஏன் என்ற வினைச்சொல் செயவென் வாய்பாட்டு விகுதியான *-வான், -பான்* ஆகியவற்றுடன் வருவதையும் பேச்சுத்தமிழில் காணலாம்.

அங்கே போய் பார்ப்பானேன் ?

அவ்வளவு தூரம் போவானேன் ?

ஆ என்ற விகுதியும் வரும்

நான் வரவா, நான் எழுதவா

இந்த ஆ விகுதி இரண்டு வாக்கியங்களை இணைக்கவும் பயன் படுகிறது.

நான் போனேனா. . . அங்கே அந்தப் பெரியவர் இல்ல

வினாச்சொல் ஏவல் வினையுடன் வருவதையும் பேச்சுத்தமிழில் காணலாம்.

எப்ப பார் புத்தகமும் கையுமா இருப்பார்

9. பயனிலையுடன் விகுதிகள்

இந்த ஆய்வுரையின் துவக்கத்தில் கூறியபடி உயர்வு ஒருமை விகுதிகள் பயனிலையுடன் இணைவதைப் பேச்சுத்தமிழில்தான் காண முடியும்.. .

வாரேங்க, சொல்றேங்க

பயனிலை இடத்தில் வரும் வினாச்சொற்களுடனும் பெயர்களுடனும் கூட இவ்விகுதிகள் வரும்.

இது என்னங்க ?

அது என் மகன்ங்க

அவ பேர் முல்லைங்க

விளிச்சொல்லில் வரும் விகுதிகளும் பயனிலையுடன் இணைகின்றன

மழை வராதும்மா, கணக்கு புரியலேப்பா

சொல்லுடி சொல்லுடா

10. விளிச்சொற்கள்

இந்தாங்க ! இந்தாம்மா !

ஏங்க ! என்னங்க !

போன்ற விளிச்சொற்கள் பேச்சுத்தமிழுக்கே உரியவை.

11. சொல் இரட்டிப்பு

பல சொற்கள் பேச்சுத்தமிழில் இரட்டித்து வருகின்றன.

புத்தகமும் கிடையாது கித்தகமும் கிடையாது

காலாகாலத்தில கல்யாணத்தை முடிக்கணும்

12. கூடுதல் பொருள்

இறுதியாகப் பேச்சுத்தமிழில் பல சொற்கள் ஒரு கூடுதலான பொருளைத் தருவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன

உன்னை வேறு கெடுக்கிறார்கள்
வயிறு வேறு கெட்டுப்போகிறது
இவளைப் போய் குற்றம் சொல்றாங்களே
நான் பாட்டுக்கு போய்க்கிட்டிருந்தேன்
நீ பாட்டுக்கு போயிடாதே !
அப்ப எப்படி இந்த புத்தகம் இங்கே வந்தது
பேசாமல் பிச்சை எடுத்துப் பிழைக்கலாம்
ஏதோ நான் உண்டு என் வேலை உண்டுன்னு
இருக்கேன்
எனக்கு என்னமோ இது நல்லாயிருக்கும்னு தோணுது
அங்கே வந்தெல்லாம் பேசமுடியாது

இங்கே தரப்பட்டிருப்பவை சில கூறுகள்தான். மேலும் மேலும் தரவுகளைச் சேகரிக்கும்போது பேச்சுத்தமிழ் தனக்கே உரிய பல தொடர் அமைப்புகளைச் சுதந்திரமாக அமைத்துச் செல்வதையும் அதனுடைய தொடரியல் இலக்கணம் எழுத்துத் தமிழின் தொடரியல் இலக்கணத்தி இடங்களில் பெயர்த்தொடர்கள் வந்துள்ள இடம் என்ற கருத்து அடிப்படையிலேயே பெயர்த்தொடர் வேற்றுமை நிர்ணயிக்கப்படுகிறது.

தமிழ் வழி அறிவியல் கல்வி

பொன். கோதண்டராமன்

அறிவியல் கல்வியைப் பெறுவதற்கு நாம் பெரும்பாலும் இப்போது ஆங்கிலத்தைப் பயன்படுத்தி வருகிறோம். உலக நாடுகளில் அறிவியல் கல்விக்கு ஆங்கிலம் மட்டும் தான் பயன்படுகிறது என்று நினைக்கக் கூடாது. மற்ற மொழிகளும் பயன்பட்டு வருகின்றன. ஒரு கல்வியைப் பெறுவதற்கு மொழி என்பது ஒரு கருவி. இன்ன மொழியில் தான் அறிவியல் கல்வியைப் பெறவேண்டும் என்று திட்டவட்டமான கட்டுப்பாடு எதுவும் இல்லை. எந்தக் கல்வியையும் எந்த மொழியிலும் பெறலாம். அறிவு வளர்ச்சி வரலாற்றில் இந்த அடிப்படை உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு துறையில் அறிவு பெறுவது என்பது வேறு; ஒரு மொழியில் புலமை பெறுவது என்பது வேறு. இதையே வேறுவிதமாகச் சொன்னால் ஆங்கிலத்தில் நன்கு புலமை பெற்ற ஒருவனுக்கு அறிவியல் அறிவு இல்லாமலும் போகலாம். அறிவியல் அறிவை நிரம்பப் பெற்ற ஒருவனுக்கு ஆங்கிலப் புலமை இல்லாமலும் போகலாம். உலக நாடுகளில் பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் ஜப்பானியம், முதலான மொழிகளிலும் அறிவியல் கல்வி உயர்நிலையில் வழங்கப்படுகிறது

தமிழ் மொழி கடந்தகால வரலாற்றில் எத்தனையோ புதிய சூழ் நிலைகளை எதிர்கொண்டு வந்திருக்கிறது இந்த நூற்றாண்டில் அறிவியல் கல்வியைத் தமிழ் மொழியில் பெற வேண்டும் என்பது புதிய சூழலாகத் தோன்றுகிறது ஆனால், இந்தச் சூழலையும் சரியாக எதிர் கொள்ளுகின்ற

வலிமை - எதிர் கொள்ளுகின்ற பாங்கு தமிழ் மொழிக்கு உண்டு என்பதை அண்மைக்கால வரலாறு நமக்கு உணர்த்தியிருக்கிறது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பள்ளி இறுதிக்கல்வி வரை தாராளமாகத் தமிழ் மொழி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பிறகுங் கூடக் கல்லூரிக் கல்வியில் பட்டப்படிப்பு வரையிலும் தமிழ் மொழியைச் சில அறிவியல் துறைகளில் நாம் பயன்படுத்தியிருக்கிறோம். முழுமையாக உயர்நிலைக் கல்வியைத் தமிழ் மொழியில் பெற முடியுமா என்ற வினா அடிக்கடி இங்கே எழுப்பப்பட்டு வருகிறது. அறிவியல் கல்வி மட்டுமல்ல, எந்தக் கல்வியையும் எந்த மொழியிலும் பெற முடியும் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. தமிழ் மொழி காலந்தோறும் புதிய சூழ்நிலைகளை எதிர்கொண்டு, வெற்றி பெற்று வந்திருக்கிறது. கடந்த கால வரலாற்றில் தருக்கம், கணிதம், மருத்துவம், சிற்பம், தத்துவம், யோகம், வானியல், அரசியல் முதலான எத்தனையோ துறைகளில் தமிழ் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த நூற்றாண்டிலும் நாம் தாராள மாகத் தமிழை அறிவியல் துறையிலும், பொறியியல் துறையிலும் பயன் படுத்த முடியும், பயன்படுத்தி வெற்றி பெற முடியும்.

இப்படிச் சொல்லுவதன் மூலம் ஆங்கில அறிவு நமக்கு அறவே தேவையில்லை என்று சொல்லுவதாக ஆகாது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், ஜப்பானியம் முதலான மொழிகளையும் நாம் தெரிந்து கொள்வது நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்தும். அறிவியல் கல்வியை மேலும் மேம்படுத்தும். இந்த அறிவைப் பெறுவதற்காக நாம் மற்ற மொழிகளைத்தான் நம்பியிருக்க வேண்டும் என்ற நிலை கூடாது. தமிழ் மக்களுக்கு இந்த அறிவு முழுமையாகப் பயன்பட வேண்டுமானால் அறிவியல் அறிவும் பொறியியல் அறிவும் மற்ற துறை அறிவும் தமிழிலும் கிடைக்க வேண்டும். அத்தகைய சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

ஒரு மொழியை வாழ்க்கையில் பல்வேறு எல்லைகளில் பயன் படுத்தும் பொழுது தான் அந்த மொழியின் எல்லை விரிவு பெறும். அந்த மொழியில் உள்ள சொல் வளம் பெருகும் அந்த மொழியை அப்படி வளர்த்தெடுப்பதற்கு நாம் தகுந்த வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். தமிழ்

நாட்டில், அறிவியல் கல்விக்குத் தமிழைப் பயன்படுத்தினால் தமிழ் அறிவியல் மொழியாக உயரும். தமிழைப் பயன்படுத்தாமலே இருந்து விட்டால் தமிழ் அறிவியல் மொழியாக உயர முடியாது. ஒரு மொழி எந்த எந்தத் துறைகளில் மிகுதியாகப் பயன்படுகிறதோ அதற்கேற்றபடிதான் அந்த மொழியின் வளர்ச்சி அமைய முடியும். தமிழ்நாட்டில் தமிழுக்கு எல்லா இடங்களிலும் இயல்பாகவே வாய்ப்பு வழங்கப்படவேண்டும். ஆட்சி, கல்வி, வழிபாடு பொதுமக்களின் ஊடகம் ஆகிய எல்லாவற் றிலும் இந்த மொழி பயன்படுத்தப்படவேண்டும். தமிழை வீட்டு மொழி யாக மட்டும் வைத்துக் கொண்டிருக்க கூடாது. தமிழை ஊடக மொழி யாக மட்டும் வைத்துக் கொண்டிருக்க கூடாது. தமிழை முழுமையாக ஆட்சி, கல்வி, நீதி ஆகிய துறைகளிலும் பயன்படுத்தும்போது தான் இந்த நூற்றாண்டில் தமிழை நாம் முழுமையாக வளர்த்தவர்களாக ஆவோம்.

விடுதலை பெற்ற பிறகு ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மக்களின் மொழிக்கு உரிய வாய்ப்புகளைத் தந்து அந்த மொழியை வளர்த் தெடுத்திருக்கிறார்கள். மலேசியா, இந்தோனேஷியா முதலான நாடுகளில் அவர்கள் விடுதலை பெற்ற பிறகு அந்த நாட்டு மக்கள் மொழியையே பல்கலைக்கழகக் கல்வி வரை பயன்படுத்தி அந்த மொழிகளை வளப் படுத்தியிருக்கிறார்கள். ஒரு மொழியைப் புதிய சூழலில் பயன்படுத்தும் பொழுது அதற்கேற்ற வகையில் அந்த மொழிக்குச் சொல்வளம் வேண்டும் அந்த மொழியில் புதிய நூல்கள் உருவாகும் வகையில் நூல்களை அமைக்கும் முறையைப் பற்றியும் கற்பிக்க வேண்டும். இவை பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்த்து மொழி மேம்பாட்டுக்காக மொழியியல் துறையில் ஒரு தனிப் பிரிவையே உருவாக்கியிருக்கிறார்கள். மொழி வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் மொழியியலில் ஒரு தனிப் பிரிவையே நாம் காண்கிறோம். மொழி வளர்ச்சித் திட்ட வல்லுநர்கள் உருவாக்கிய கோட்பாடுகளைப் பயன்படுத்தி உலக நாடுகளில் மலேசியா, இந்தோனேஷியா, நார்வே, சுவீடன் முதலான நாடுகள் அறிவியல், பொறியியல் துறைகளில் தத்தம் மொழிக்கு வளம் சேர்த்திருக்கின்றன.

இப்படிப்பட்ட முயற்சியில், முதலாவதாக, எல்லோருக்கும் மனதில் தோன்றுவது புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுகின்ற ஒரு பணி. புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுகின்ற பணியை நாம் கலைச் சொல்லாக்கம் என்று குறிப்பிடுகின்றோம் எந்த ஒரு துறைக்கும் கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாக ஆகிறது. அப்படிக் கலைச் சொற்களைத் தொகுத்துக் கலைச்சொல் விளக்க அகர வரிசைகளை நாம் உருவாக்கிக் கொள்ளுவது ஒரு இன்றியமையாத பணி. அந்தப் பணி தமிழகச் சூழலில் தன்னார்வ அமைப்புகளின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு நிறைவேறியிருக்கிறது அதோடு பல்கலைக்கழகங்களும் அரசு நிறுவனங்களும் இத்தகைய பணிகளை அவ்வப்போது ஆங்காங்கே செய்து வந்திருக்கின்றன. அந்தப் பணிகளை ஒருமுகப்படுத்தி, நெறிப் படுத்திச் செம்மையாக்கி மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு இப்பொழுது நம்முன் நிற்கிறது.

தமிழில் அறிவியல் இதழ்கள்

தமிழில் உயர்நிலை ஆய்வுக் கட்டுரைகளை வழங்கவும், பொது மக்களுக்குச் செய்திகளைத் தமிழில் எடுத்துச் சொல்லவும் நல்ல இதழ்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய இதழ்கள் தொடர்ந்து முறையாக வெளிவர வேண்டும் நூலகங்களில் அவை முறையாக வைத்துக் காக்கப் பட வேண்டும். அறிவியல் இதழ்கள் பெருகும் பொழுதுதான் இயல்பாகக் கலைச்சொற்கள் பெருகும். கலைச்சொற்களை ஒரே நாளில் சிலர் உட்கார்ந்து கொண்டு உருவாக்கிச் சேர்த்துக்கொள்ள முடியாது அப்படிச்செய்தாலும் அது கதைக்கு உதவாது. கட்டுரை எழுதும்போது கட்டுரை ஓட்டத்திலேயே பல கலைச்சொற்கள் உருவாகக்கூடும். அத்தகைய கலைச்சொற்கள் இயல்பானவையாகவும் பொருத்தமானவை யாகவும் அமையும். இதழ்களின் பணி இந்த வகையில் மிக முக்கியமானது

நூலாக்கம்

இதழ்களுக்குக் கட்டுரை எழுதுவதென்பது வேறு ; ஒரு குறிப் பிட்ட மையப்பொருளை வைத்துக்கொண்டு ஒரு நூலை உருவாக்குவது

நூல்களை உருவாக்கச் சில தனிப்பயிற்சிகள் தேவை. அத்தகைய பயிற்சிகளைப் பெற்ற வல்லுநர்களால் அறிவியல் நூல்கள் உருவாக்கப் பட வேண்டும் நூலாக்கத்திலும் பொது மக்களுக்காக உருவாக்குகிற நூல்கள், மாணவர்களுக்குப் பாடப்பகுதிகளாக உருவாக்குகிற நூல்கள் என்று இரண்டு வகைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பொது மக்களுக்காக உருவாக்கப்படுகின்ற நூல்கள் ஒரு பக்கமிருக்க, மாணவர் களுக்கு உரிய பாட நூல்களும் உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பணிகளுக்குச் சில தனிப்பயிற்சிகள் தேவைப்படுகின்றன. அத்தகைய பயிற்சிகளைப் பெற்ற பிறகு ஆசிரியர்கள் நூலாக்கத்தில் ஈடுபட வேண்டும் அப்படி உருவாக்கப்படுகின்ற நூல்கள் முறையாகப் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுவனவாக அமையும்.

பாடநூலாக்கம்

மாணவர்களுக்குப் பாட நூல்களை ஆக்கும்பொழுது பாடத் திட்டத்தை மட்டும் மனத்தில் கொண்டு பாடப்பொருளைத் தெளிவாக வரையறுத்துக்கொண்டு பாட நூல்களை உருவாக்க வேண்டும். அப்படி யில்லாமல் மொழிபெயர்த்து உருவாக்கப்படுகிற பாடநூல்களும் உண்டு. மொழிபெயர்த்துப் பாட நூல்களை உருவாக்குவதனால் குறையில்லை. ஆனால், எப்பொழுதும் மொழிபெயர்ப்பை மட்டுமே நம்பிக் கொண்டி ருக்கக் கூடாது

பாடநூலாக்கத்திற்கென்று ஒரு பயிற்சி தேவை என்று முன்பே குறிப்பிட்டோம் பாடப்பொருளில் தேர்ச்சி பெற்றவராகவும் அந்தத் துறையில் வல்லுநராகவும் இருக்கும் ஒருவரால்தான் பாட நுல்களைச் செம்மையாக உருவாக்க முடியும். ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்கள் சிலரையாவது தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பாட நூலாக்கப் பயிற்சியும் தர வேண்டும். முன்பே பாடநூலாக்கப் பயிற்சி பெற்றவராக இருந்தால் இந்தப் பயிற்சியைக் கட்டாயப்படுத்தத் தேவையில்லை. ஆனால், பாடநூலாக்கப் பயிற்சி மட்டும் இன்றியமை யாத ஒரு பயிற்சி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பாடங்களை நடத்தும்பொழுது தமிழைக் கருவி மொழியாகப் பயன்படுத்திக் கொண்டு அறிவியல் செய்திகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். அப்படி வழங்கும்பொழுது அறிவுப்பரிமாற்றம் மட்டுமே முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும். அறிவுப் பரிமாற்றத்திற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது. தேவையானால் ஆங்கிலச் சொற்களையும் ஆங்காங்கே பயன்படுத்தலாம். பாடநூல்களை உருவாக்கும்பொழுது ஆங்கிலச் சொற்களைப் பிறைக்கட்டில் கொடுக் கலாம். இப்படிக் கொடுப்பது நாம் வழக்கமாகப் பின்பற்றி வருகிற ஒரு மரபுதான். மாணவர்கள் விளக்கம் பெற வேண்டிக் கேள்வி கேட்டால் தமிழிலேயே கேட்க அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். அப்படிக் கேள்வி கேட்பவர்களை ஊக்குவிக்க வேண்டும். பதில் சொல்வதையும் தமிழிலேயே சொல்ல வேண்டும். பிற மொழிச் சொற்களைப் பயன்படுத் தினால் அது ஒரு குற்றமல்ல. பிற மொழிச் சொற்களைத் தேவைக்கேற்ப ஆங்காங்கே பயன்படுத்திக்கொண்டாலும் தவறில்லை ஆனால், தமிழில் அறிவியல் சொல்லித் தரப்படவேண்டும். அறிவியல் கல்விக்குத் தமிழைப் பயன்படுத்த வேண்டும்.

கருத்தரங்குகள், மாநாடுகள்

கருத்தரங்குகளையும், மாநாடுகளையும் மாநில அளவில் நடத்தும் பொழுது தமிழில் அந்த மாநாடு அல்லது கருத்தரங்கு நடைபெற வேண்டும் என்பதை இன்றியமையாத கடமையாகக் கருத்தில் கொள்ள வேண்டும் தமிழில் அந்த மாநாடும் கருத்தரங்கும் நடைபெற்றால்தான் மாணவர்கள் அவற்றின் மூலம் முழுமையாகப் பயன் பெறமுடியும் தமிழுக்கு இத்தகைய இடம் தருவது என்பது இயல்பான ஒன்றாக இருக்க வேண்டும் இதற்காகத் தனிப்பட்ட முயற்சிகள், போராட்டங்கள் உருவாக இடந்தரக் கூடாது. மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் தமிழ் மொழியின் மூலம் நடத்தும் பொழுது தமிழின் பயன்பாட்டு எல்லை விரிவு பெறுகிறது. அப்படி மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தும் பொழுது தமிழை முறையாகப் பயன்படுத்தத் தெரியவேண்டும். வேண்டும் கருத்தரங்குகளில் இது ஒரு பொதுப் பண்பாடாக இங்கே உருவாக வேண்டும்.

கடந்த கால வரலாற்றில் வடமொழியிலும் தமிழிலும் நன்கு புலமை பெற்ற அறிஞர்கள் பலர் தமிழில் நல்ல நூல்களை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த நூல்கள் இன்றும் எல்லோராலும் போற்றப்படுகின்ற நூல்களாக விளங்குகின்றன. இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம், கணிதம், வானியல், யோகம் முதலான பல்வேறு துறைகளில் வடமொழி அறிவும் தமிழ் அறிவும் பெற்றவர்கள் நூல்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே நாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

தமிழ் தெரியவில்லை என்பதோ ஆங்கிலம் தெரியவில்லை என்பதோ ஒருவருக்குத் தீராக் குறையாக ஆகிவிடக்கூடாது. ஆங்கிலம் மட்டுமே தெரிந்த ஒருவரிடம் இருக்கிற அறிவைத் தமிழ் மொழி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அறிவைத் தமிழில் வழங்குவதற்குரிய வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அதைப்போலவே தமிழ் மட்டும் தெரிந்த ஒருவருக்கு இருக்கிற அறிவு ஆங்கில மொழியின் மூலமும் வெளிப்பட வேண்டும். அதற்குரிய வாய்ப்புகளும் உருவாக்கப்பட வேண்டும். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளும் இக்காலத் தேவைதான். இங்கே மீண்டும் மீண்டும் நாம் வற்புறுத்திச் சொல்ல வேண்டிய ஒன்று, தமிழைப் பலி கொடுத்துவிட்டு ஆங்கிலத்தை வளர்க்க முயலக்கூடாது என்பதுதான். தமிழுக்கு உரிய இடம் தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் கட்டாயமாகத் தரப்பட வேண்டும். அறிவியல் தொழில்நுட்பத் தேவைக்கேற்பத் தமிழ் மொழியை வலுப்படுத்தித் தமிழ்க்கல்வியை வளப்படுத்தப் பிற மொழிகளைக் கற்றுக் கொள்ளுவதில் எவ்விதமான குறையும் இல்லை.

தமிழின் பயன்பாட்டு எல்லையை விரிவாக்கிக் கொள்ள வேண்டும் என்று நாம் சொல்லும் பொழுது கடந்த கால வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை இங்கே நாம் குறிப்பிட வேண்டும். செய்தித்தாள்களும், மாத இதழ், வார இதழ் முதலான ஊடகங்களும் உருவாக்கப்பட்ட பொழுது தமிழ் அங்கே மிக நல்ல அளவுக்குச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வானொலி,

தொலைக்காட்சி முதலானவற்றிலும் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் ஊடகங்கள் எல்லாவற்றிலும் தமிழ் தொடர்ந்து பயன் படுத்தப்பட்டு வருகிறது. அங்கே தமிழுக்குத் தடையில்லை. அதைப் போலவே எல்லாத்துறைகளிலும் எல்லா நிலைகளிலும் தமிழ் பயன்படுத் தப்பட வேண்டும். பொது மக்களுக்கு உரிய ஊடகங்களில் தமிழ் பயன் படுத்தப்படாமல் போயிருந்தால் தமிழ் வீட்டு மொழியாக மட்டுமே இருந்திருக்கும். பொதுமக்கள் ஊடகங்களிலும் தமிழ் பயன்படுத்தப் பட்டதால்தான் இன்று தமிழின் பயன்பாட்டு எல்லை ஓரளவுக்காவது விரிந்திருக்கிறது.

எங்கே தொடங்குவது ?

கல்வி, ஆட்சி, நீதி முதலான எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்று முன்பே குறிப்பிட்டோம் இவற்றில் கல்வித்துறையில் தமிழை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டால் மற்ற துறைகளில் தமிழ் இயல்பாக, எளிதாக ஆட்சி பெறும்.

கல்வித்துறையில் தமிழை நன்கு பயன்படுத்தத் தெரிந்த ஒருவர் பிற்காலத்தில் மற்ற துறைகளில் பணியாற்றச் செல்லும்பொழுது தமிழை அங்கே எளிமையாகப் பயன்படுத்த முடியும் ; இயல்பாகப் பயன்படுத்த முடியும். ஆகவே, எங்கே தொடங்குவது என்ற ஒரு வினாவை எழுப் பினால் தமிழை முழுமையாகப் பயன்படுத்த அந்தப் பணியை நாம் கல்வித் துறையில்தான் தொடங்க வேண்டும் மற்ற துறைகளில் வெற்றி பெறுவது இதன் மூலம்தான். ஆட்சித்துறையில் தமிழ் இப்பொழுது தங்கு தடையில்லாமல் பயன்படுத்தப்பட்டு வருவது மற்ற துறைகளில் இருப் பவர்க்கு மிகச் சிறந்த ஊக்கமாக விளங்குகிறது வற்புறுத்தலுக்கும், அச்சுறுத்தலுக்கும் இடமில்லாமல் தமிழ் எல்லாத் துறைகளிலும் இயல் பாகவே பயன்படவேண்டும். வேண்டா வெறுப்புக்கு இடம் தராமல், போலித்தனத்துக்கு இடந்தராமல் தமிழை எல்லாத் துறைகளிலும் பயன் படுத்த வேண்டும். இப்படி நாம் தமிழகத்தில் " தமிழ் ! தமிழ் ! " என்றுமுறையாக வினா எழுப்பவும், முறையாக விளக்கம் தரவும் தெரிய என்பது வேறு சிறந்த கட்டுரைகளை எழுதத் தெரிந்த ஒருவர் முறையாக

நூல்களை உருவாக்கத் தெரிந்தவர் என்று கருத முடியாது. முறையாக சொல்லுவது போலவே மற்ற மாநிலங்களிலும் அந்தந்த மக்கள் மொழி அங்கே பயன்பட வேண்டும். அதுதான் இயல்பான வளர்ச்சியாக இருக்கும். அந்தத் திசையை நோக்கி நாம் இந்தப் புதிய நூற்றாண்டில் விரைந்து முன்னேறியாக வேண்டும். அப்படி நாம் முன்னேறவில்லை யானால் அதனால் வருகிற இழப்பை நம்முடைய எதிர்காலச் சந்ததிகளால் ஈடுசெய்ய முடியாமல் கூடப் போய்விடும்.

காலந்தோறும் புதிய புதிய சூழ்நிலைகளை எதிர்கொண்டு வெற்றி பெற்று வீறு நடை போட்டு வருகிற தமிழ் நாம் வாழுங்காலத்தில் மேலும் வீறுநடை போட வேண்டும். தொய்வில்லாமல் புதிய சூழல்களை இந்த மொழி சந்திக்க வேண்டும். இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கிற அறிவியல் தொழில்நுட்ப வாய்ப்புகள் எல்லாவற்றையும் பயன்படுத்தித் தமிழை வலிமையான மொழியாக, வளமான மொழியாக ஆக்கியாக வேண்டும்.

தமிழ் ஒரு உலகப் பெருமொழி

இக்காலத்தில் நாற்பது ஐம்பது நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் இருக்கிறார்கள். மூன்று நான்கு நாடுகளில் தமிழ் அலுவல் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் விளங்கி வருகிறது. இந்தச் சூழ்நிலைகளை மனதில் வைத்துப் பார்க்கும் பொழுது ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ் ஒரு உலக மொழியாக, ஒரு உலகப் பெரு மொழியாக, ஒரு உலகப் பொதுமொழியாக விளங்கி வருகிறது என்று சொன்னால் கூட அது பிழையாகாது. இந்த மொழியை மேலும் வளர்த்தெடுப்பதற்கு இந்த நூற்றாண்டில் உள்ள தமிழர்களின் பங்களிப்பும் சரியாகத் தமிழுக்குக் கிடைக்க வேண்டும்.

தமிழ் எந்தச் சூழலையும் எதிர்கொள்ளும், வெற்றி பெறும். அதற்கு ஏற்ற வாய்ப்புகளை நாம் உருவாக்கித் தரவேண்டும். உரிய வல்லுநர் களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் நிறுவனமும், மக்களும், அரசும் மன உறுதி மிகுந்த வல்லுநர்களும் ஒன்று

சேர்ந்து செயல்படும் பொழுது இந்தப் பணி மிக எளிதாகவே நிறைவேறும்.

சுருக்கமாகச் சொன்னால், மக்கள் மொழியினால்தான் மக்களின் அறிவுத் திறமையை வளர்க்க முடியும். மக்கள் மொழியினால்தான் மக்களின் ஆளுமையை உயர்த்த முடியும். மக்கள் மொழியைப் புறக்கணித்தால் மக்களைப் புறக்கணித்ததாக ஆகும். மக்கள் மொழியை மேலும் சிறப்பாக வளர்த்தெடுக்க எல்லா வகையிலும், எல்லா நிலையிலும் எல்லோரும் முன் வரவேண்டும்.

குடிபெயர்ந்த தமிழரிடையே தாய்மொழிப் பயன்பாடு

ஜெ. நீதிவாணன்

தமிழகத்திலிருந்து வெளியேறித் தென்னாசிய நாடுகள், தென் கிழக்காசிய நாடுகள், மேற்கிந்தியத் தீவுகள், ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் அண்மைக்காலத்தில் மேல்நாடுகள் ஆகியவற்றில் குடியேறியுள்ள தமிழர் களது சரியான எண்ணிக்கை நமக்குக் கிட்டவில்லை. கிடைக்கின்ற சில எண்ணிக்கைகளிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வரும் பல நாடுகளுக்கும் நேரடியாகச் சென்று தகவல் களைத் திரட்டி " உலகத் தமிழர்கள் எங்கெங்கு, எவ்வாறு, எவ்வளவு காலமாக வாழ்ந்து அழிந்தனர். இப்போது எப்படியெப்படி எல்லாம் வீழ்ந்து கொண்டிருக்கின்றனர் " என்பதை விளக்க முன்வந்த இர. ந வீரப்பன், " பல நாடுகளின் புள்ளிவிவரம் சரிவரத் தெரியவில்லை" (1985 : 3 - 49) என்று குறிப்பிட்டிருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. மக்கள் தொகையே சரிவரக் கிடைக்காத நிலையில் அவர்களது தாய் மொழிப் பயன்பாடு பற்றிய ஆய்வுகளையும் நாம் எதிர்பார்க்க முடியாது கிடைக்கின்ற ஒரு சில தகவல்கள் குடிபெயர்ந்த தமிழர்களின் தாய் மொழிப் பயன்பாடு மிகவும் அருகிவருவதையோ முழுக்கவும் தாய் மொழியை இழந்துவிட்ட நிலையையோதான் காட்டுகின்றன தமிழகத் தில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் தெலுங்கர்கள், கன்னடர்கள், சௌராட்டிரர்கள் போன்ற சிறுபான்மைச் சமூகத்தினர் தங்களது தாய் மொழியை இன்னும் இழந்துவிடாமல் வீட்டு மொழியாகப் பயன்படுத்தி

வரும்போது குடிபெயர்ந்த தமிழர்கள் தங்கள் தாய்மொழியை மிக விரைவாக இழப்பதற்குரிய காரணங்கள் சரிவர இனங்காணப்பட வில்லை என்றே தோன்றுகிறது.

மொழி, நாடு, மதம் முதலானவை ஒரு இனம் தன்னை இனங் காட்டிக் கொள்வதற்குப் பயன்படுத்தும் அடையாளங்களாகக் கருதப்படு கின்றன. எனினும், இவற்றுள் மொழியே மிகப்பல இனங்களின் அடை யாளமாகக் கொள்ளப்படுகிறது என்று ஜோனதன் பூல் (1979 : 19) குறிப் பிடுகிறார். கனடா நாட்டுச் சமுதாயங்களிடையே அவர் நடத்திய ஆய்வின் முடிவாக இதனைக் கண்டார். மாக்ஸ்முல்லர் மொழியை 'மனித மனத்தின் சுய சரிதை' என்று வர்ணித்தார். தேசியம் என்பதும் மொழித் தேசியம் என்பதும் ஒன்றே என்ற கிலெய்ப் (1979 : 60) தேசிய அடையாளத்திலிருந்து மொழியை எப்போதும் பிரிக்க முடியாது என்கிறார். "மனிதன் தன்னுடைய மனித அடையாளத்தை நிறுவிக் கொள்ள மொழி அவசியம் தேவை" என்கிறார் லெபர்மான் (1979 : 89). "ஏகாதிபத்திய நாடுகள் மற்றொரு நாட்டை உருக்குலைக்க முயன்ற போதெல்லாம் அவை மேற்கொண்ட முதல் தாக்குதலும் இறுதித் தாக்குதலும் மொழியின் மேல்தான் மொழியை வென்றுவிட்டால் அது அனைத்தையும் வென்ற மாதிரிதான்" என்கிறார் பாபி ஜோன்ஸ் (1970 : 21). உரிமை இழந்த நாடுகள் தேசிய ஒற்றுமையைத் தூண்டுவதற் குப் பயன்படுத்திய ஆயுதம் மொழியே என்றும் சமூக மொழியியலார் குறிப்பிடுவர்.

இம்முடிவுகளெல்லாம் குடிபெயர்ந்த மக்களுக்குப் பொருந்துமா என்பதைப் பல சமூக மொழியியலார் ஆராய்ந்துள்ளனர் பல நேரங் களில் அத்தகைய சமூக ,தினர் தங்கள் மொழியை அடியோடு இழந்து விடுவதையோ, அல்லது ஏதாவது ஒரு தேவைக்கு மட்டும் பயன்படுத்து வதையோ கண்டுள்ளனர். பல அய்ரோப்பிய நாடுகளிலிருந்து குடி பெயர்ந்து இஸ்ரேல் நாட்டுக்குக் குடியேறிய யூதர்களது தாய்மொழிப் பயன்பாட்டை ஆராய்ந்த ஹாஃப்மன் மற்றும் ஃபிஷர்மன் ஆகிய இரு வரும் இதற்கான பல காரணங்களைத் தந்துள்ளனர் (1972 : 347 - 64)

ஒரு நிலையான அரசும், ஹீப்ரு மொழியைக் கற்பதனால் விளைந்த பொருளாதார மேம்பாடு முதலானவையும் இக்குடியேறிகள் தங்களது தாய்மொழியை விரைவிலேயே இழப்பதற்குக் காரணமாயின. கடுமை யான போட்டிகள் நிறைந்த ஒரு சமுதாயத்தில் நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய சில தேவைகளும், தமது தாய் மொழியைக் கைவிட்டு ஹீப்ரு மொழியை மேற்கொள்வதற்குக் காரண மாயின குடியேறிய போது இருந்த வயதும் ஒரு முக்கியக் காரணமா கிறது சோவியத்ரஷ்யாவில் குடியேற்றம் மற்றும் மொழி பற்றிய ஆய்வு நடத்திய லூயிஸ் (1972 : 321 - 26) சிறிய தேசீயக் குழுக்கள் விரைவிலேயே தாய்மொழியை இழக்கக் கூடும் என்றும், கட்டாயக் குடிபெயர்வுகள் விரைவிலேயே மொழிப் பற்றை வீழ்த்திவிடும் என்றும் குறிப்பிடுகிறார். ஹாஃப்மனும், ஃபிஷர் மனும் நெருக்கமான குடியிருப்புகள் மாற்றத்தைத் தாமதிக்கலாம் என்கின்றனர் மேலும் பன்மொழியம், ஒரு இனம் தனது தாய்மொழியைத் தக்கவைத்துக் கொள்ளத்தக்க நல்ல சூழலல்ல என்றும் அவர்கள் கருது கின்றனர் (1972 : 361 - 3). நகர்ப்புறச் சூழலை விடக் கிராமப்புறச் சூழல் தாய்மொழி மற்றும் இனப்பற்றைக் காப்பதற்குத் துணை செய்யவல்லது என்று லூயிஸ் (1972 : 329) கருதுகிறார்.

சமூக மொழியியலார் மேற்கண்ட ஆய்வுகளிலிருந்து கீழ்க்காணும் முடிவுகளுக்கு வருகின்றனர் ஒரு இனத்தின் அடையாளச் சின்னமாக மொழியே பெரிதும் போற்றப்படுகிறது எனினும், ஒரு சமூகம் குடி பெயரும் போது அக்குடியேற்றம் தாய்மொழிப் பயன்பாட்டில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது அந்நிலையில் தாய்மொழிப் பயன் பாடு குறைந்து அடியோடு இழக்கப்படுமானால் அவ்வினத்தின் அடை யாளச் சின்னமும் மாறலாம் அப்படியானால் ஒரு இனத்தின் அடை யாளச் சின்னமாக மொழிக்குப் பதிலாக எது மேற்கொள்ளப்படுகிறது என்பது மிகவும் இன்றியமையாத ஒரு கேள்வியாகும். குடிபெயர்ந்த தமிழரது குடியேற்றமும், தாய்மொழிப் பயன்பாடும் இதற்கு ஓரளவு விடையளிக்கவல்லன முதலிலேயே குறிப்பிட்டதுபோல உலகெங்கும் குடியேறியுள்ள தமிழரது தாய்மொழிப் பயன்பாடு பற்றி நமக்குத் திட்ட வட்டமான ஆய்வு முடிவுகள் எதுவும் இல்லை சில குறிப்பிட்ட

நாடுகளில் மட்டுமே நிலைமை தெளிவாகத் தெரிகிறது. ஈழநாடு, மலேசியா, சிங்கப்பூர் போன்றவை இதனுள் அடங்கும். இக்கட்டுரை மொரீசியிஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றுக்குக் குடி பெயர்ந்து சென்ற தமிழர்களைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

தமிழர்களின் குடிபெயர்வு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு காரணங்களுக்காக நடந்துள்ளது. படையெடுத்துச் சென்று வெற்றி கொண்ட நாடுகளில் தங்கியவர்கள் சிலர்; மேல்நாடுகளின் ஆதிக்கக் காலத்தில் அவற்றின் அடிமை நாடுகளில் தோட்டத் தொழிலுக்காக ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றவர்கள் இன்னொரு சாரார் முதல் இரண்டு குடிபெயர்வில் ஈடுபட்டவர்கள் பிராமணர் அல்லாதார். மூன்றாவது குடிபெயர்வில் ஏறக்குறைய எழுபது விழுக்காடு பிராமணர்கள். இவ் வெண்ணிக்கை அங்குள்ளோரால் ஊகத்தின் அடிப்படையில் தரப்படு வதேயாகும். முதலிரண்டு பிரிவினரது பொருளாதார நிலை மிகச் சாதரண நிலையிலிருந்து மிகவும் கீழ்ப்பட்ட நிலை. மூன்றாவது பிரிவினர் மிகவும் செல்வ நிலையிலுள்ளோர். முதலிரண்டு பிரிவினரும் தங்களது பாரம்பரிய, குல, கிராமியச் சமயங்களையும், கடவுள்களையும் தம்மோடு எடுத்துச் சென்றனர் மூன்றாவது பிரிவினர் பிராமணிய இந்து சமயத்தையும் கடவுள்களையும் எடுத்துச் சென்றனர். முதலிரண்டு பிரிவினரும் கீழைநாடுகளிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும் குடியேறியவர்கள் மூன்றாவது பிரிவினர் செல்வம் கொழிக் கும் மேல்நாடுகளுக்குக் குடியேறியவர்கள் அனைவருக்குமிடையே காணப்படும் பொதுப்பண்பு 'தாய் மொழி இழப்பு' என்பதேயாகும்

தாய்மொழிப் பயன்பாடு குறைந்து கொண்டே வந்து ஒரு கால கட்டத்தில் முழுவதுமாக அது வழக்கிலிருந்தே மறைந்துள்ளது சில நாடுகளில் இது இரண்டாவது தலைமுறையிலேயே நடந்துள்ளது சில நாடுகளில் பத்துத் தலைமுறைகள் கழிந்திருக்கின்றன தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையினர் வீட்டு மொழியாகவாவது தங்கள் தாய்மொழியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கக் குடிபெயர்ந்த தமிழர்களோ வீட்டு மொழியாகக் கூடத் தங்கள் தாய்மொழியைக் காக்க முடியவில்லை

1598 இல் டச்சுக்காரர்களது வருகையோடுதான் மொரீசியஸ் நாட்டு வரலாறு தொடங்குகிறது எனலாம். அராபியர்களும், போர்ச்சுக் கீசியர்களும் இந்நாட்டை அதற்கு முன்னரே அறிந்திருந்தாலும் அங்குக் குடியேறும் எண்ணம் எதையும் கொண்டிருக்கவில்லை. 1638இல் முதலாவது டச்சுக் குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டது. அவர்களது நாட்டு இளவரசரின் பெயரையே தீவுக்குச் சூட்டி அதனை மொரீசியஸ் என்று அழைத்தனர். எனினும், டச்சுக்காரர்கள் நீண்டநாள் அங்குத் தங்க வில்லை. பிரெஞ்சுக்காரர்கள் 1725இல் தங்களது முதல் குடியிருப்பை நிறுவினார்கள். 1810 இல் மொரீசியஸ் ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கு உட் பட்டது ; 1968 இல் விடுதலை பெற்றது.

ஐரோப்பிய ஆதிக்கக்காரர்கள் ஆப்பிரிக்காவிலிருந்தும் இந்தியா விலிருந்தும் அடிமைகளையும் கூலிகளையும் இத்தீவுக்குக் கொண்டு வந்தனர். பிரெஞ்ச் மற்றும் ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலியினரைப் பெரிதும் கொண்டு வந்தனர். இவர்கள் போஜ்புரி, தமிழ், தெலுங்கு, மராத்தி மற்றும் உருது மொழி பேசுவோர்; இந்து மதம், இஸ்லாம், கிறித்தவம் ஆகிய மதங்களைச் சார்ந்தவர்கள். மக்களே இல்லாத தீவாக இருந்த மொரீசியஸ் மக்களது கால்பட்ட தொடக்கக் காலத்திலிருந்தே பன்மொழி வழங்குகிற பல இனச் சமுதாயமாக விளங்கத் தொடங்கியது. குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பணிகள் அனைத் தும் பிரெஞ்ச் ஆதிக்கக் காலத்திலேயே ஏற்பட்டதால் இன்றும் கூட இத் தீவு ஒரு பிரெஞ்ச் குடியிருப்புப் பகுதியைப் போன்றே காட்சியளிக்கிறது

ஆங்கிலமே அதிகாரபூர்வமான ஆட்சி மொழியானாலும் கூட, தீவில் ஒலிப்பதும், பயன்படுவதும் பிரெஞ்ச் கிரியோல் மொழிதான். எல்லா வகையான மக்கள் தொடர்புச் சாதனங்களும் பயன்படுத்துவது இம்மொழியைத்தான் முழுக்கவும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிற செய்தித்தாள் ஒன்று கூட கிடையாது. பிரெஞ்ச் ஆதிக்கம் ஒழிந்தாலும் பிரெஞ்ச் பண்பாட்டை எவரும் அழிக்க முடியவில்லை. மொரீசிய மக்கள் தங்களது கல்வி, பொருளாதாரப் பண்பாட்டு, தொழில் நுட்ப வளர்ச்சிக்காகப் பிரான்சு நாட்டையே முன் மாதிரியாகக் கொள்கின்

றனர். இந்திய அரசு கோடிக்கணக்கான ரூபாயை உதவித் தொகையாக வழங்கினாலும் இந்தியச் செய்திகள், அரசியல் நிகழ்ச்சிகள் முதலானவை இத்தீவின் செய்தித்தாள்களிலோ, வானொலி, தொலைக்காட்சி முதலான வற்றிலோ முக்கிய இடத்தைப் பெறுவதே இல்லை. தாய்நாடான இந்தியா மொரீசியஸ் இந்தியர்களுக்கு ஒரு பண்பாட்டு முன்மாதிரியாக இல்லை. மேலும், இவ்விந்தியர்கள் மொரீசியசுக்குக் குடிபெயர்ந்த போது அவர்கள் அறிந்திருந்த இந்தியா வேறு. இன்றுள்ள இந்தியா வேறு. பிரெஞ்ச் கிரியோல் மொழி அறியாத மொரீசியரே இன்று இல்லை. அதுவே தீவின் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம் கல்வி என்னும் துறையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதுவே பயிற்று மொழியாகும். எனினும், அனைவருமே கட்டாயப் பாடமாக இல்லாவிட்டாலும் பிரெஞ்சு மொழியையும் படிக் கின்றனர். மாறாக, பல்வேறு இனக்குழுக்களும் தங்களது தாய்மொழி யைப் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. அம்மொழியைப் படிப்பதற்கு வாய்ப்பு இருந்தாலும் அம்மொழித் தேர்வில் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற நிலை கல்வித்திட்டத்தில் இல்லை தமிழ்நாட்டிலேயே ஒரு தமிழ்க்குழந்தை தனது தாய்மொழியைப் படிக்காமலேயே பல்கலைக் கழகப் பட்டப்படிப்பை முடிக்க முடியும் என்ற நிலை இருக்கும் போது மொரீசியஸ் நாட்டிலுள்ள இந்நிலை தாய்மொழிப் பயன்பாட்டிற்கு எந்த அளவு துணை செய்யவல்லது என்பதை விளக்க வேண்டியதில்லை. தங்களது தாய்மொழி ஒரு பண்பாட்டு அடையாளச் சின்னமே தவிர, போட்டி மிகுந்த ஒரு சமுதாய அமைப்பில் வெற்றி பெறத் தேவையான வற்றை அது தரமுடியாது என்பதை மொரீசியஸ் தமிழர்களும் நன்கு உணர்ந்துள்ளனர். ஹாஃப்மன் மற்றும் ஃபிஷர்மன் குறிப்பிட்டதைப் போல, இத்தகைய ஒரு சமூகச்சூழல் தாய்மொழிப் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்து இறுதியில் அது வழக்கொழியக் காரணமாகிறது

முதன்முதலாகத் தமிழர்கள் மொரீசியஸ் நாட்டுக்குக் கட்டாயப் படுத்தியே அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். தமிழ்நாட்டின் ஒரு பகுதியில் ஏற்பட்ட கடுமையான வறட்சியும் பஞ்சமுமே பல தமிழர்கள்

நாட்டை விட்டு வெளியேறக் காரணமாக இருந்துள்ளன. ஏராளமான செல்வத்தைத் திரட்டி, தாயகத்திற்குத் திரும்பிவிடலாம் என்று ஒப்பந்தக் காரர்கள் அவர்களை நம்பவைத்துக் கட்டாயப்படுத்திக் கப்பல்களில் ஏற்றியனுப்பியுள்ளனர். லூயிஸ் குறிப்பிட்டதைப் போல இத்தகைய கட்டாய குடிபெயர்வுகளும் தாய்மொழிப் பயன்பாட்டைப் பெரிதும் குறைக்கவல்லன. குடியேற்றம், தொழில்மயமாக்கம், நகர்ப்புறவாக்கம் ஆகியவை பல இன மக்களைத் தொடர்புகொள்ள வைப்பதோடு கலப்பு மணங்களுக்கும் வழி வகுப்பதால், அத்தகைய சூழலும் சிறுபான்மை யினரின் தாய்மொழிப் பயன்பாட்டிற்கு உகந்ததல்ல என்பர் சமூக மொழியி யலார். தமிழர்கள் இதற்கு விதிவிலக்கல்ல.

ஹாஃப்மனும், ஃபிஷர்மனும் குறிப்பிட்டுள்ளதைப் போல நெருக்க மான குடியிருப்புகள் தாய்மொழிப் பயன்பாட்டைக் காக்கவல்லன. மொரீசியஸ் தமிழர்களோ தீவின் பல பகுதிகளிலும் பரவலாகக் குடியே றினர் எனவே, தாய்மொழிப் பயன்பாடு குறையலாயிற்று. எனினும், கிராமப்புறங்களில் குடியேறிய தமிழர்களது குடியிருப்புகள் நெருக்கமா னவையாக இருந்ததால் அவர்களது தாய்மொழிப் பயன்பாடு நகர்ப் புறத்தில் குடியேறியவர்களைவிடச் சற்று அதிகமாகக் காணப்படுகிறது. நகர்ப்புறங்கள் பன்மொழிச் சமுதாயங்களைக் கொண்டவை. எனவே அனைவருக்கும் பொதுவான ஒரு தொடர்பு மொழி தேவைப்படுகிறது அதன் விளைவாகத் தாய்மொழியின் பயன்பாடு விரைவாகக் குறைகிறது இதே நிலைதான் மொரீசியஸ் தமிழர்களிடம் காணப்படுகிறது. இன்றைய இளைய தலைமுறை தனது தாய்மொழியை அறவே இழந்து விட்டது

மொரீசியஸ் தலைநகர்ப் பகுதியான போர்ட் லூயியை நிர்மானித் தவர்கள் பாண்டிச்சேரிப் பகுதியிலிருந்து சென்ற கிறித்துவத் தமிழர்களே என்று நம்பப்படுகிறது, எனவே, தொடக்க காலத்திலிருந்தே கிறித்து வர்கள் நகர்ப்புறவாசிகளாகவே இருந்துள்ளனர் இந்துத் தமிழர்களை விட மிக விரைவில் இக்கிறித்துவத் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை இழந்ததற்கு இதுவே காரணமாகலாம் இன்று பெரும்பாலான கிறித்து

வத்தமிழர்கள் ஸ்டான்லி எனப்படும் ஒரு நகர்ப்புறப் பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றனர். தங்களுடைய முன்னோர்கள் இந்தியாவி லிருக்கும் போதே கிறித்துவ மதத்தைத் தழுவியவர்கள் என்று இவர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

கிறித்துவத் தமிழர்கள் தங்களது தாய்மொழிப் பயன்பாட்டை விரைவாக இழந்தமைக்கு இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. மொரீசியஸ் வரலாற்றின் ஒரு கால கட்டத்தில், கிறித்துவச் சடங்குகளின் வழியிலான திருமணங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுவதற்கு உரியவை யாக இருந்தன. இதனால் கட்டாய மதமாற்றம் நடைபெற வழி ஏற்பட்டது. இதே காலத்தில் இந்தியாவிலிருந்து மொரீசியசுக்குப் பெண்கள் குடியேறுவதில் சில தடைகள் இருந்தன. மிகக் குறைந்த பெண்களே குடியேற அனுமதிக்கப்பட்டனர். 1834க்கும் 1840க்கு மிடையே 25,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மொரீசியசுக்குக் குடி யேறினர். ஆனால் அவற்றுள் 901 பேர் மட்டுமே பெண்கள் (கெய்த்தான் 1985 : 13) திருமணம் செய்ய விரும்பிய இந்திய ஆண்களுக்குத் தேவை யான இந்தியப் பெண்கள் கிடைக்கவில்லை. இந்திய ஆண்கள், கறுப்பு இனப் பெண்களைத் திருமணம் செய்தனர். விளைவாக, முலாட்டோ எனப்படும். கலப்பினம் பெருகியது. கிறித்துவத் தமிழர்களும் இத்தகைய சமூக மாறுதலுக்கு உள்ளானார்கள். தமிழ்மொழியின் பயன்பாடு குறைவ தற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. முதலில் குடியேறிய இந்துத் தமிழர்கள் பெரிதும் கிராமப்புறங்களில் தோட்டத் தொழிலாளர்களாகக் குடியேறியதால் அவர்களது சமூக அமைப்பு மாறுபட்டிருந்தது

கிறித்துவத் தமிழர்களிடையே நிகழ்ந்த இனக்கலப்பு,அவர்களை இந்துத் தமிழர்களிடமிருந்து பெரிதும் பிரித்துவிட்டதெனலாம் கிறித் துவத் தமிழர்களை இன்றைய இந்துத் தமிழர்கள், தமிழர்களாகவே ஒப்புக் கொள்வதில்லை என்றால் மிகையாகாது இருவருமே இன்று தாய் மொழியை இழந்துவிட்டாலும் கிறித்துவர்கள் முதலிலேயே இழந்து விட்டதாலும் அது ஏறக்குறைய முழுமை பெற்றுவிட்டதாலும் இந்நிலை காணப்படுகிறது. இந்துத் தமிழர்கள்அளவு மீறிய சமயப்பற்றாளர்கள்

நூற்றுக்கணக்கான கோவில்களைக் கட்டியுள்ளனர். தீமிதி, காவடி போன்றவற்றைப் பரந்த அளவில் கொண்டாடுகின்றனர். அத்தகைய சமயப்பற்றையே தமிழ்ப்பற்று என்று எண்ணுகின்றனர். மொழியை இழந்தாலும், சமயத்தை இழக்காததால் தாங்கள் மட்டுமே உண்மையான தமிழர்கள் என நம்புகின்றனர். இன அடையாளச் சின்னமாக, மொழியைக் கைவிட்டுவிட்டு மதத்தையே இன்று அவ்விடத்தில் வைத்துப் போற்றுகின்றனர். மொழி, மதம் இரண்டையுமே இழந்துவிட்ட கிறித்துவத் தமிழர்களை இதன் காரணமாகத் தமிழர்கள் என ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர். தாய்மொழிப் பயன்பாடு அறவே அழிந்தாலும் மதத்தின் அடிப்படையில் ஒன்று சேர எண்ணுகின்றனர்.

கிறித்துவத் தமிழர்களது தாய்மொழிப்பற்று, பயன்பாடு ஆகியவை பற்றிக் குறிப்பிடத்தக்க ஆய்வு எதுவுமே காணப்படவில்லை. சஞ்சீவி துரைராஜ் எனும் கத்தோலிக்கப் பாதிரியார் இது பற்றிக் குறிப்பிடுகையில் மேல் நாட்டவர்கள் இந்தியரையும் இந்துக்களையும் ஒன்றாகக் கருதிய அறியாமையே இதற்குக் காரணமெனக் கூறுகிறார் (1977 : 39 - 40). இந்தியக் கிறித்துவர்கள் தங்களது மதத்தைப் போற்றுகின்ற அதே நேரத்தில் தங்களது பழமையான இந்தியப் பண்பாட்டையும் போற்ற வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். கிறித்துவர்கள் தங்களது தாய் மொழியைப் படிக்காததற்கு என்ன காரணம் இருக்க முடியுமென்று அவர் விளக்க முயல்கிறார். தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் தங்களது சமயக்கல்வி அல்லது தாய்மொழிக்கல்வி ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டுமென்ற நிலையுள்ளது. சமயக்கல்வியைக் கற்பதற்கு வேறு வாய்ப்பு எதுவுமே இல்லாத காரணத்தால் கிறித்துவர்கள் வேறு வழியின்றித் தாய்மொழியைக் கற்க முடியாமல் போகிறது என்பது அவரது விளக்கம். கிறித்துவத் தமிழர்களும், மொழியை விட மதத்திற்கே முதலிடம் தருகிறார்கள் என்பதே உண்மை. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. பள்ளிகளில் பயன்படுத்தப்படும் தமிழ்ப் பாடநூல்கள் அனைத்துமே இந்து மதக்கடவுள்களையும், மதக்கருத்துகளையும், திருவிழாக்களையும் பற்றி மட்டுமே பேசுகின்றன. மதச்சார் பின்மை என்பதற்கு அங்கு இடமில்லை எனவே கிறித்துவத் தமிழர்கள்

அத்தகைய பாடங்களைப் பயில்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இரு மதத்தினருமே தங்களது மதத்தைக் காரணம் காட்டித் தாய்மொழிப் பயன்பாட்டை பெரிதும் குறைத்து விட்டனர்.

1983 -ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 66, 154 பேர் தமிழைத் தம்முடைய முன்னோர் மொழியாகக் கூறினர். 35, 646 பேர் மட்டுமே அதனை வழக்கமாகப் பேசுவதாகக் கூறினர் (தினன் 1986 ; 21). ஆனால் இந்த எண்ணிக்கை கூட நம்பத்தகுந்ததல்ல என்று பலரும் கருதுகின்றனர். அதுவே உண்மையாகலாம். கணக்கெடுப்பின்போது மொரீசிய மக்கள் இந்துக்கள், முஸ்லீம்கள், சீனர்கள் மற்றும் பொது மக்கள் தொகை என்று வகைப்படுத்தப்படுகின்றனர். இதன் விளைவாகக் கிறித்துவத் தமிழர்கள் நான்காவது பிரிவினுள்ளும், இந்துத் தமிழர்கள் முதற் பிரிவினுள்ளும் அடக்கப்படுகின்றனர். மொத்தத்தில் தமிழன் என்ற இனம் தனக்கென ஒரு அடையாளச்சின்னத்தை இழந்துவிட்டது. இந்திய - மொரீசிய கத்தோலிக்கக் கழகத்தின் கணிப்புப்படி அத்தீவில் சுமார் 20,000 கிறித்து வத் தமிழர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கை சரியானதா என்பது தெரிய வில்லை. சரியாக இருந்தாலும் எதிர்காலத்தில் ஒரு போதும் இவர்கள் பிற தமிழர்களோடு சேர்த்து எண்ணப்படப் போவதில்லை. தாய்மொழி யைப் பயன்படுத்துவதில் காணப்பட்ட ஆர்வமின்மை, இன்று மொரீசியஸ் தமிழர்களை ஒன்று சேர முடியாத இரு பிரிவுகளாகப் பிரித்துவிட்டது. இந்நிலை இந்துத் தமிழர்களிடையேயும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது தாய்மொழியை இழந்து, அதனிடத்தில் மதத்தை ஏற்றுக்கொண்ட இந்துத் தமிழர்கள், மொரீசியஸ் அரசு விதிகளுக்கேற்ப இந்துக்களேயன்றி தமிழர்கள் என்று கணக்கிடப்படப் போவதில்லை.

இந்துக்கள் என்ற ஒரு பெரும் பிரிவினுள் இவர்கள் அடக்கப் பட்டால், எண்ணிக்கையில் அதிகம் உள்ள போஜ்புரி மொழி மக்களும் இத்தமிழர்களும் ஒன்றாகவே கருதப்படுவர். விளைவாகத் தமிழ்ச் சிறு பான்மையினர் தங்களது தனித்தன்மையை அறவே இழக்க நேரிடும். தாய் மொழிப் பயன்பாட்டை இழந்த மொரீசியஸ் தமிழர்கள் தங்களது தனித்

தன்மையையும் மதத்தின் பெயரால் இழக்கத் தயாராக உள்ளனரா என்பதைக் காலம் மட்டுமே கணிக்க முடியும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிற மேல்நாடுகளிலும் குடியேறிய தமிழர்கள் அண்மைக் காலத்தில் குடிபெயர்ந்தவர்கள். உயர்ந்த படிப்பு கொண்டவர்கள். பொருளாதார நிலையில் மேம்பட்டவர்கள். எழுபது விழுக்காட்டினர் ஒரே ஜாதியைச் சார்ந்தவர்கள். இவர்களுடைய குடியேற்றப் பாணி பிற நாட்டுத் தமிழர்களது பாணியிலிருந்து வேறுபட்டது. தாய்மொழிப் பயன்பாடு இவர்களிடையே மிக விரைவாகக் குறைந்து கொண்டே வருகிறது. சில குடும்பங்களில் இரண்டாவது தலைமுறையிலேயே தாய்மொழி இழக்கப்பட்டுவிட்டது. சமூக மொழியியலார் கூறுவதைப் போல நெருக்கமில்லாத பரவலான குடியிருப்புகள், நகர்ப்புறச்சூழல், தொழில்மயமாக்கம், கடுமையான போட்டிகள் நிறைந்த சமூகச்சூழல் ஆகியவை இந்நாட்டில் சிறுபான்மையினர் தங்களது தாய்மொழியை இழப்பதற்குக் காரணங்களாய் அமைந்துள்ளன. ஆனால், சீனர்கள், கொரியர்கள், இத்தாலியர்கள் போன்ற சிறுபான்மையினர் இன்றும், தங்களது தாய்மொழியை இழக்காமல் வீட்டு மொழியாகவாவது பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். இது தமிழ்நாட்டுத் தெலுங்கர்களையும் சௌராட்டிரர்களையும் நினைவுபடுத்துகிறது.

தமிழர் போன்ற சிறுபான்மையினர் மேல்நாடுகளில் ஏன் விரைவாகத் தாய்மொழியை இழக்க வேண்டும் என்பதற்குத் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. இத்தமிழர்கள், தங்களுக்கு நல்ல ஆங்கில அறிவு உள்ளதால் அந்தந்த நாட்டு மக்களோடு உறவாடுவதற்கு எந்தத் தடையுமில்லாமலிருப்பதால் அவர்களை எளிதில் புரிந்துகொள்ள வாய்ப்பாக உள்ளது என்றும், தங்களது தாய்மொழியைப் பயன்படுத்துவதற்கு எந்தத் தேவையுமில்லையென்றும் கருதுகின்றனர். மேலும் அந்தச் சமூகச் சூழலில் முன்னேறுவதற்குக் கடுமையான போட்டிகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் அதனை வெல்வதற்கு ஆங்கிலமே துணை செய்யும் என்பதனால், தங்கள் குழந்தைகளோடு பெற்றோர்கள் வீட்டில் கூட ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர் இதற்கு மாறாகச் சீனர், கொரியர் போன்றவர்கள் ஆங்கிலக் கல்வியறிவு அதிகம் இல்லாதவர்களாகவும்,

உயர்ந்த படிப்பு இல்லாதவர்களாகவும் இருப்பதனாலேயே தங்களது தாய்மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதாகக் கருதப்படுகிறது. ஆனால், மொரீசியத் தமிழர்கள் முதலில் குடியேறிய காலகட்டத்தில் ஏறக்குறைய இதே நிலையில் இருந்தவர்கள்தாம். அப்படியானால் அவர்களிடையே தாய்மொழிப் பயன்பாடு குறைவானேன் என்பது விளங்கவில்லை. அமெரிக்க அய்க்கிய நாட்டின் அரசியல் சட்டத்தின்படி எந்த ஒரு மொழியும் தேசிய மொழியாக அறிவிக்கப்படாவிட்டாலும் ஆங்கிலமே அந்நாட்டின் தேசிய மொழி என்பது நடைமுறை காட்டும் உண்மை. ஆகவேதான் ஆங்கில அறிவு படைத்த நமது தமிழ்க்குடியேறிகள் தமிழ்ப் பயன்பாட்டைப் புறக்கணித்துவிட்டனர் என்றும் சிலர் கருதுவதுண்டு.

தாய்மொழி தெரிந்திருந்தாலும் பிறர் முன்னிலையில் அதனைப் பயன்படுத்துவதற்குக் கூச்சப்படுகின்ற ஒரு விதமான தாழ்வு மனப்பான்மையும் இங்குள்ள தமிழரிடையே காணப்படுகிறது. தமிழ் கற்க வரும் தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டில் இருக்கும் தாத்தாவுக்குத் தமிழில் இரண்டு வரி கடிதம் எழுதத் தெரிந்தால் போதும் என்ற அளவில் மட்டும் தான் தாய்மொழிப் பயன்பாட்டை மேற்கொள்ள விரும்புகின்றனர்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடிமகனாக மாறவேண்டும் என்ற ஆர்வம் பலரிடமும் காணப்படுவதால், 'எங்களுக்கு எதற்குத் தமிழ்' என்று எண்ணுகிற போக்கும் பல இளைய தலைமுறையினரிடம் காணப்படுகிறது. மற்ற நாடுகளைப் போலல்லாது இந்நாடு மிகவும் பரந்துபட்ட நாடாக இருப்பதனால் தமிழ்க்குடியேறிகளிடையே நெருக்கமான உறவும், தகவல் தொடர்பும் இல்லாமற் போனது ஒரு குறிப்பிடத்தக்க காரணமாகலாம்.

மொரீசியஸ் நாட்டுத் தமிழர்களுக்கும் இந்நாட்டுத் தமிழர்களுக்குமிடையே காணப்படும் ஒற்றுமை, மொழியை இழந்துவிட்டு அந்த இடத்தில் மதத்தை வைக்கின்ற போக்காகும் இந்நாட்டிலும் கோவில்கள் கட்டுவதற்குப் பல லட்சக்கணக்கான டாலர்கள் செலவழிக்கப்படுகின்றன. இந்து மதம் தங்கள் அனைவரையும் ஓரினமாகக் காட்டிவிடும்

என்று நம்புகின்ற போக்கு வளர்ந்து வருகின்றது. இப்போக்கு வளரு மானால், பிற நாடுகளில் நிலவும் நிலையைப் போன்று தாங்களும் பிற இந்துக்குழுக்களோடு சேர்க்கப்பட்டுத் தம்முடைய தனித்தன்மை அழிக்கப்பட்டு விடும் என்ற உண்மையைப் பலரும் புரிந்து கொள்ள வில்லை.

ஒரு அறச் செயலுக்காக நன்கொடை அளிக்கும் வேளையில் ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை நிறுவுவதற்குப் பணம் அளிப்பீர்களா அல்லது ஒரு கோவில் கட்டுவதற்கு அளிப்பீர்களா என்ற கேள்வியை ஒரு ஆய்வில் கேட்ட போது மூன்றில் ஒரு பங்கு தமிழர்கள் மட்டுமே தமிழ்த் துறை நிறுவுவதற்கு என்று கூறினர் (நீதிவாணன், 1996). தாய்மொழிப் பயன்பாட்டைப் பற்றி இத்தமிழர்கள் பெரிதும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

தாய்மொழிப் பயன்பாட்டை விரைவாகக் குறைத்து, காலப் போக்கில் அதனை இழந்துவிடுகின்ற இப்போக்கு, தமிழ்க் குடியேறி களிடம் மட்டுமே காணப்படுகின்றதா அன்றி இது தமிழனின் இயல்பான குணமா என்பதனை நாம் இன்னும் சிந்திக்கத் தொடங்கவில்லை. குடி பெயர்ந்த தமிழர்களது இப்பண்பு கடல் கடந்ததும் திடீரென்று எங்கிருந்து வருகின்றது என்பது புலனாகவில்லை. இது தமிழனது இயல் பான குணமாக இருக்குமானால் 'தமிழன் தனது மொழியின் மீது தீராத காதல் கொண்டவன்' என்று நாம் நம்புவது ஒரு பெரும் மாயையாகத் தான் இருக்க முடியும் 'ஒரு இனக்குழுவின் தனித்தன்மையை விளக்கும் அடையாளச் சின்னமாகப் பெரிதும் மொழியே இருக்க முடியும்' என்ற சமூக மொழியியலார் கருத்து தமிழரைப் பொறுத்த அளவில் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

துணை நூல்கள்

வீரப்பன். இர. ந. 1985. **உலகத்தமிழர்**, புரட்சிப்பண்ணை, சேலம்.

Arokeum, R. P. Michel., 1977, **Lest We Forget**, 'Silver Jubilee Souvenir', I. M. C. A., Mauritius.

Bachi, Roberto, 1956, '*A Statistical Analysis of the Revival of Hebrew in Israel*', Scripta Hierosolymitana III.

Benoit, Gaetan, 1985, **The Afro - Mauritians : An Essay**, Mahatma Gandhi Institute, Moka, Mauritius.

Chowriamah, Solange, 1977, '*Christianity in Tamil Nadu*', Silver Jubilee Souvenir, Indo Mauritian Catholic Association, Mauritius.

Dinan, Monique, 1986, **The Mauritian Kaleidoscope** : Languages and Religions, Port Louis, Mauritius.

Hofman, E. John and Fisherman, Haya., 1972, '*Language Shift and Maintenance in Israel*' in Joshua A Fishman (ed.), Advances in the Sociology of Language II, Mouton, The Hague.

Jones, Bobi., 1970, '*Why I Write in Welsh*', Planet 2 (Oct - Nov)

Khleif, B. Bud, 1979, '*Language as an Ethnic Boundary in Welsh - English Relations*', International Journal of Sociology and Language.20.

Lewis, E. Glyn, 1972, '*Migration and Language in the U. S. S. R*', in Joshua A Fishman (ed.) A.S.L., II.

Lieberman, E. James., 1979, *Esperanto and Trans - National Identity : The Case of Dr. Zamenhof*, IJSL. 20.

Neethivanan. J., 1996, *Tamil Studies in America Today*, Seminar on Research on Tamil in Tamiladu and Abroad, I.I.T.S, Madras.

Pool, Jonathan, 1979, '*Language Planning and Identity Planning*', International Journal of the Sociology of Language 20, Mouton, The Hague.

Roy J.N., 1960, **Mauritius in Transition**, Curepipe Road, Mauritius.

Sanjivi Dorairaj Fr., 1977, '*You are my Witnesses*', Silver Jubilee Souvenir, I. M. C. A., Mauritius.

தெ.பொ.மீ யின் மொழி கற்பித்தல் சிந்தனைகள்

சு. இராசாராம்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தமிழ் மரபிலக்கணங்களில் ஆழ்ந்த அறிவுடையவர். இருந்தும், மரபுகளை மீறிய அறிவியல் நோக்குடையவர். மரபுத்தளத்தில் நின்று அறிவியல் கருத்துகளை உள்வாங்கிக் கொண்ட பண்பினர் என அவரைக் கூறலாம். தம் சமகால மொழியியல் வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் மொழிப் பிரச்சினைகளின் தத்துவார்த்த மற்றும் வரலாற்று அணுகுமுறைகளை ஏற்றுக்கொள்ள அவருக்குத் தடையாக இருந்தது இல்லை. தமிழ்மொழி வரலாற்றை இந்த அணுகுமுறைகளின் அரவணைப்பிலேயே அவர் விவரித்தார். மொழி கற்பித்தல் சிந்தனைகளைப் பொறுத்தவரையிலும் இவ் அணுகுமுறையையே அவர் போற்றினார். ஏட்டு மொழிக் கல்வி வகுப்பறைச்சுவர்களைத் தாண்டிச் சமுக வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க வகையில் புதிய வடிவம் பெற வேண்டுமென்று விரும்பினார் மொழியின் ஒவ்வொரு கூறும் ஆழமாகவும் அகலமாகவும் பயிலப்பட வேண்டும் என்னும் தம் கருத்தை மொழி கற்பித்தலில் பதித்த பெருமை உடையவர் தெ. பொ. மீ. 1930 வரை ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மொழி கற்பித்தல் வரலாற்றில் பேசப் பட்ட மொழி கற்பித்தல் பிரச்சினைகளை அவர் நன்கு அறிந்திருந்தார். இக்கால எல்லைக்குள்ளேயே தெ. பொ மீ. யின் மொழி கற்பித்தல் பற்றிய சிந்தனைகள் அடங்கிவிட்டன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இக் fhy t i ua i wi a The Teaching of Tamil Grammar (1958) என்னும் கட்டுரையில் தெ பொ. மீ குறிப்பிட்டுச் செல்லும் மொழியியலாரின் நூல்

களை ஆராய்ந்து பார்க்கும்போது நம்மால் உறுதிப்படுத்த முடிகிறது. இந் நூல்களை இக்கட்டுரையில் அவர் எங்கும் குறிப்பிடவில்லை. அவர் மேற் கோளாகக் காட்டும் கருத்துகளின் அடிப்படையில் இக்கட்டுரையாசிரி யரால் நூல்கள் இனங்காணப்பட்டு அவரது மொழி கற்பித்தல் சிந்தனை களின் பின்புலம் இங்கு விவரிக்கப்படுகிறது.

தெ. பொ. மீ. யின் மொழி கற்பித்தல் பற்றிய சிந்தனைகள் அவர் எழுதிய பல மொழியியற் கட்டுரைகளுள் The Teaching of Tamil Grammar (1958) என்னும் கட்டுரையிலேயே காணக்கிடக்கின்றன. கட்டுரை எழுதப்பட்ட காலத்திற்கேற்ற கற்பித்தல் கோட்பாட்டு வளர்ச்சியின் முதிர்ச்சியையும் அறிவியல் அணுகுமுறையையும் இக்கட்டுரையில் நாம் காண முடிகிறது. 1930களில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மொழி யியலறிஞர்களிடையே நிலவிய சிந்தனையோட்டமும் விவாதங்களும் இக்கட்டுரையில் பிரதிபலிக்கின்றன. தெ. பொ. மீ. ஆங்காங்கு மேற்கோள் காட்டிச் செல்கின்ற மொழியியலறிஞர்கள் இக்காலத்திய மொழி கற்பித் தல் கோட்பாட்டு வளர்ச்சிக்கு விதையாக விழுந்தவர்கள். தெ. பொ. மீ. இவர்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு மொழி கற்பித்தல் ஆய்வில் தனித்து நிற்கிறார்.

மொழி கற்பித்தலையும் இலக்கணம் கற்பித்தலையும் தெ. பொ. மீ. ஒன்றாகவே கருதினார். மொழியில் இலக்கணம் ஒரு பகுதி என்பதைவிட இலக்கணமே மொழி என்னும் கருத்து The Teaching of Tamil Grammar (1958) என்னும் கட்டுரையில் மேலோங்கி நிற்பதை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். மொழி கற்பித்தலின் பல்வேறு பரிமாணங்களை இக் கட்டுரையிலே அவர் விளக்குகிறார். யெ. ஸ்பெர்சன் (Jespersen), பால்மர் (Palmer), தார்ண்டைக் (Thorndike), கோயின் (Gouin) போன்ற மொழி கற்பித்தல் கோட்பாட்டாளர்களை மேற்கோள் காட்டுவதன் மூலம் அக் காலத் தாய்மொழி கற்பித்தலில் புதுமைகளைப் புகுத்த வேண்டியதின் கட்டாயத்தைத் தெ. பொ. மீ. வலியுறுத்துகிறார்.

1. குழந்தையின் மொழி ஈட்டல் வளர்ச்சிக்கேற்ப மொழியைக் கற்பித்தல்

2. மொழி கற்பித்தல் அணுகுமுறை
3. இலக்கணத்தை இயல்பாகக் கற்பித்தல்
4. நிலைபேறாக்க மொழியில் பேச்சுத்திறனை வளர்த்தல்
5. கற்பிப்பதற்கு ஏற்ற வகையில் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுதல்
6. சொற்கோவை வளர்ச்சியை மேம்படுத்துதல்
7. வாய்மொழிப் பயிற்சியை (drills) ஊக்குவித்தல்
8. மொழி விளையாட்டுகளைப் பயன்படுத்துதல்
9. மொழியாசிரியர்
10. மொழி கற்கும் மாணவர்

என்னும் மொழி கற்பித்தலின் பல்வேறு கூறுகளை தெ. பொ. மீ. நன்கு அணுகி ஆராய்ந்துள்ளார்.

குழந்தையின் மொழியீட்டலுக்கும், மொழி கற்பித்தலுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றிய ஆய்வுகள் இன்று மொழி கற்பித்தல் களத்தில் ஏராளமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நோக்கில் உளவியலை மொழி கற்றலுக்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் உண்ட் (Wundt, 1877). இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடத்தை உளவியல் (Behaviourist psychology) உருக்கொண்டது உண்டின் உளவியல் கோட்பாட்டின் அடிப்படையில் தான் என்பர். முப்பதுகளில் நடத்தை உளவியலாரிடையே குழந்தையின் மன வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் இடையேயுள்ள உறவு ஆழமான விவாதங்களுக்கு உட்பட்டது குழந்தைக்கு மொழியைக் கற்பிக்க முற்படும்போது அதன் மொழி வளர்ச்சி நிலைகளைத் துல்லியமாகத் தெரிந்துகொண்டால் அதற்கேற்ப மொழிக் கூறுகளை சிறப்பாகக் கற்பிக்க முடியும். தெ. பொ. மீ. அயோவா குழந்தை நல ஆய்வுக்கழகம் (Iowa Child Welfare Research Station) மேற்கொண்ட ஆய்வைக் குறிப்பிட்டு 33 படிநிலைகளில் என்னென்ன இலக்கணக்கூறுகளைக் குழந்தை கற்க இயலும் என்பதை அட்டவணைப்

படுத்திக் காட்டுகிறார் (1958 : 120 - 22). மொழியைக் கற்பிக்கும் மொழியாசிரியர்களின் கற்பித்தல் முறையும் பாடநூல்களும் இதனடிப்படையில் திட்டமிடப்பட வேண்டும் எனத் தெ. பொ. மீ. கூறுகிறார்.[1] தெ. பொ. மீ. யின் இவ்வணுகுமுறை மொழி கற்பித்தலில் ஒரு நடத்தை உளவியல் சார்பாளராக அவரை நமக்குக் காட்டுகிறது முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் மொழியியலை முழுவதுமாக ஆக்கிரமித்திருந்த இவ் அறிவியல் போக்கில் தெ. பொ. மீ. தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார் என்பதை நாம் அறிய முடிகிறது.

நடத்தை உளவியலில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட தெ. பொ மீ. இலக்கணத்தை விதிகளாகத் தொகுத்துக் கற்பிப்பதைவிடக் கற்போர் இயல்பாகவே அதனைப் புரிந்துகொள்ளும் வகையில் கற்பிக்க வேண்டும் என்னும் கருத்தை முன்வைக்கிறார். கோயினின் இலக்கண முறையை (Grammatical Method) எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார் (1958 : 132)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் வாழ்ந்த கோயின் தாம் செருமன் மொழியைக் கற்ற அனுபவத்தின் வாயிலாக அக் காலத்தில் மொழி கற்பித்தலில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஒல்லாந்தர் (Ollendorf), யாகோடாட் (Jacotot), இராபர்ட்ஸன் (Robertson), பிளியோத் (Ploetz) ஆகியோரின் மொழி கற்பித்தல் கருத்துகளை அடியொற்றி இலக்கணம் கற்பித்தல் முறையை உருவாக்கினார். மொழி விதிகளைக் கற்பித்தல், விதிகளை வெளிப்படையாகக் கூறாமல் மொழிப் பயிற்சிகள் மூலம் கற்பித்தல் எனும் இரு கருத்துகள் தொடர்பான சர்ச்சை பதினேழாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்தது கொமெனியஸ் (Comenius) என்னும் கல்வியாளர் மொழி விதிகளை நேரடியாகக் கற்பித்தலை விட அவற்றை மொழிப்பயிற்சிகளின் மூலம் கற்பிப்பது எளிது (Keatinge : 1910) [2] என நிறுவியதைக் கோயின் ஏற்றுக்கொண்டு தம் இலக்கண முறையைக் கொமெனியசின் கருத்தையொட்டி உருவாக்கினார். கோயினின் இவ்விலக்கண கற்பித்தல் முறை தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கப் பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தெ. பொ. மீ. கூறுகிறார்.

மொழி கற்பித்தல் அணுகுமுறையைப் பொறுத்தவரையில் பட்டறிவு வாத (Empiricism) அணுகுமுறையைத் தெ. பொ. மீ. போற்றினார். மொழி என்பது பழக்கங்களின் தொகுப்பு. மொழியைக் கற்பிக்க வேண்டும் : மொழியைப் பற்றியன்று. இலக்கண விதிகளைக் கற்போர் தாமாகவே உணர்ந்துகொள்ளும் வகையில் விதியுணர்வு முறை (Inductive Method) மொழி கற்பித்தலில் பின்பற்றப்பட வேண்டும். விதி வரு முறையில் (Deductive Method) அன்று. கற்றல் என்பது கற்போரை அறியாமலேயே பழக்கங்களின் மூலம் நிகழவேண்டும் என்னும் பட்டறி வாதக் கருத்துக்குத் தெ. பொ. மீ. உடன்பட்டவர். தம் உடன்பாட்டை அவர் வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும் மொழி கற்றலில் வாய் மொழிப் பயிற்சியின் முக்கியத்துவத்தையும் மொழி விளையாட்டுகளின் தேவையையும் இலக்கணம் கற்பித்தலில் விதியுணர்வு முறையின் பங்கையும் கூறும்போது மொழி கற்பித்தல் அணுகுமுறை குறித்த அவரது சிந்தனை தெளிவுபடுகிறது மொழி ஈட்டல் (Language acquisition) குறித்த அவரது நிலைப்பாடு இதற்குச் சான்றாகும்.

இன்றைய தாய்மொழிக் கல்வி ஆய்வுகளில், பள்ளிக் கல்விக்கு அறிமுகமாகும் குழந்தையின் மொழிக்கும், பள்ளி மொழிக்கும் (School Language) இடையேயுள்ள வேறுபாடு முதன்மை இடம் பெறுகிறது தமிழைப் போன்ற இரட்டை வழக்கு மொழிகளில் குழந்தையின் கல்வி வளர்ச்சிக்கு இவ் வேறுபாடு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதன் விளைவாகக் குழந்தையின் பேச்சுமொழி மொழிக் கல்விக்குப் பயனற்றது என்ற மனப்போக்கு இப்போது பெரிதும் வளர்ந்துள்ளது. இம் மனப் போக்கு பேச்சை ஒரு மொழித் திறனாக வளர்க்கத் தடையாக உள்ளது. தாய்மொழிக் கல்வியைப் பொறுத்த வரையில் பேச்சுத் திறனைக் குழந்தை ஏற்கனவே கைவரப் பெற்றிருப்பதால் அதனை வளர்க்கும் நோக்கம் தாய் மொழிக் கல்வித் திட்டத்தில் முக்கிய இடம் பெறுவதில்லை. தெ பொ மீ தாய் மொழி கற்பித்தலில் பேச்சுத்திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்னும் கருத்துடையவர் நமது நாகரிகமும் பண்பாடும் எழுத்து மொழியைப் பெரிதும் போற்றுபவை பண்பாட்டைப் புலப்படுத்த உதவும் பேச்சுமொழிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை

விட எழுத்தறிவுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் அதிகம். ஆனால், பேச்சு மொழியே யதார்த்தம். எழுத்துமொழி அதன் நிழல் குறியீடு. மொழி என்பது முதலும் கடைசியுமாகப் பேச்சேயன்றி எழுத்து அன்று (1958) என்று தெ. பொ. மீ. கூறுகிறார்.

பேசுவதை ஒரு கலையாக மாணவரிடையே வளர்க்கவேண்டும். அதற்கு நிலைபேறாக்க மொழியை மெதுவாகப் பள்ளிக்கல்வியில் அறிமுகப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் தெ. பொ. மீ.[3] வாய் மொழிக் கட்டுரைப் பாடங்கள் (Oral compositions) மூலம் நிலைபேறாக்க மொழியில் மேடைப் பேச்சையும், பொதுவிவாதங்களில் கலந்து கொள்ளும் திறனையும் வளர்க்க வேண்டும் என பாலார்டு (Ballard) கூறுவதைத் தெ. பொ. மீ. ஆதரிக்கிறார்.

ஒரு மொழியின் எழுத்துச் சீர்திருத்தத்திற்கான சமூக அரசியல் தொழில்நுட்பக் காரணிகள் எவ்வளவு இருந்தாலும் எழுத்துகளைக் கற்பிப்பதில் அதற்கான காரணம் நன்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் எழுத்துகளின் மூலமே அடிப்படைக்கல்வி சாத்தியமாகிறது. எனவே, எழுத்துகளை விரைவாகக் கற்கும் வகையில் சீர்திருத்தம் அமைய வேண்டியது கட்டாயமாகும். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றி எழுதும்போது சீர்மையில்லாத புறநடை எழுத்துகளில் (எ.கா. ணா, றா, னா) மாணவர் இழைக்கும் தவிர்க்க முடியாத ஒப்புமையாக்கப் பிழை களைத் தெ. பொ. மீ. சுட்டிக்காட்டுகிறார். புறநடை எழுத்துகளையும் சீர்மைப்படுத்தி அவற்றைக் குழந்தைகள் கற்பதில் ஏற்படும் குழப்பங் களைத் தவிர்க்கலாம் என ஐம்பதுகளிலேயே தெ. பொ. மீ. எடுத்துக் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.[4]

இதைப்போலவே பள்ளிக்குழந்தையின் சொற்கோவை வளர்ச்சி பற்றிய தெ.பொ.மீயின் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. சாதாரண செய்தித்தாளில் கிட்டத்தட்ட 5000க்கு மேற்பட்ட சொற்கள் பயன் பாட்டில் இருக்கும்போது மழலை வகுப்பு தொடங்கி நடுநிலைப் பள்ளி வரையுள்ள பாடநூல்களில் 1000 அல்லது 2000 சொற்களுக்கு மேல் பயன்பாட்டில் இல்லை. பள்ளி மாணவர்களின் வயதுக்கும் படிப்பு

நிலைக்கும் ஏற்றவாறு சொற்கோவை வளர்ச்சி அமையவில்லை. ஆங்கிலத்தில் எட்வர்டு தார்ண்டைக் உருவாக்கியது போன்ற (Word frequency list) தமிழில் இன்னும் திட்டமிடப்படாதது துரதிருஷ்டமே என்று தெ பொ. மீ. கூறுகிறார்.

The Teachers Word Book (1921) என்னும் தார்ண்டைக்கின் Word frequency list ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கற்பிக்கும் கலைத்திட்டத்தில் அமெரிக்கக் குழந்தைகளின் வாசிக்கும் திறனை வளர்க்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இச்சொற்பட்டியலில் 10, 000 சொற்களை ஆங்கில மொழிப்பயன்பாட்டில் அதிகமாக வழங்கிவரும் சொற்களாகத் தார்ண்டைக் கணித்துள்ளார். 1932இல் இச் சொற்பட்டியலை மேலும் ஆராய்ந்து The Teachers Word Book of 20, 000 Words என்னும் சொற்பட்டியலை உருவாக்கினார் இச் சொற்பட்டியலின் அடிப்படைக் கொள்கைகளும் சொற்களின் எண்ணிக்கைப் பெருக்கமும் கடுமையான விமரிசனத்திற்கு உள்ளாயின

பாமர் 1921இல் வெளியான தார்ண்டைக்கின் சொற்பட்டியலை விமர்சித்துக் குறைவான சொற்களைப் பயன்படுத்திப் பாடநூல்கள் தயாரிப்பதில் ஆர்வம் காட்டினார். தொடர்ந்து Core Vocabulary பட்டியலை அவர் உருவாக்கினார் இதன் அடிப்படைக் கொள்கைகளையும் சொற்பட்டியலையும் Interim Reports on Vocabulary Selection (1930, 1931) என்று வெளியிட்டார் இவரது சொற்பட்டியல் 3000 தலைச்சொற்கள் (Head words) அடங்கியதாகும். சொற்பட்டியலின் பயன்பாடு பற்றி பாமரின் கருத்துகளைக் குறிப்பிடுகையில் அவரது இவ்வறிக்கைகளையே தெ பொ மீ நினைவு கூர்கிறார் (1958 : 119). மேலே காட்டிய கருத்துகளின் அடிப்படையில் தெ. பொ மீ யின் மொழி கற்பித்தல் சிந்தனைகளைக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

முதலாவதாக, மொழி கற்பித்தலைப் பொறுத்தவரையில் தெ. பொ மீ யின் சிந்தனைகள் பெரும்பாலும் தாய்மொழி கற்பித்தலைச் சார்ந்தவை எனலாம். 1930க்கு முன் தாய்மொழி கற்பித்தல் குறித்த கற்பித்தல் முறைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் அவர் பரிச்சயமுடையவராக

இருந்தார். தாய்மொழி கற்பித்தலில் பேச்சின் முக்கியத்துவம், இலக்கணம் கற்பித்தல், சொற்கோவையின் தேர்வும் வளர்ச்சியும், எழுத்துச் சீர்மை யின் இன்றியமையாமை, மொழி விளையாட்டுகளின் தேவை ஆகியன வற்றில் அவர் காட்டிய ஆர்வம் தெ. பொ. மீ. என்ற மொழியியலறிஞரின் பன்முகப்பார்வையின் அர்த்தமுள்ள பரிமாணமாகும்.

இரண்டாவதாக, தாய்மொழி கற்பித்தலுக்கும் அன்னிய மொழி கற்பித்தலுக்கும் இடையே நிலவிய அக்கால மயக்க நிலைக்குத் தெ. பொ. மீ விதிவிலக்காக இல்லை 1920களில் தாய்மொழி கற்பித்தலுக்கும் அன்னிய மொழி கற்பித்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடு அதிகமாக நிலைநாட்டப்படாத கருத்தாகவே இருந்து வந்தது. 1921இல் ஆங்கில மொழியை அமெரிக்கர்களுக்குக் கற்பிப்பதில் சொற்கோவையின் முக்கியத்துவத்தை உணர்ந்த தார்ண்டைக் The Teachers Word Book என்ற சொற்பட்டியலை ஒவ்வொரு சொல்லும் மொழியில் பயின்றுவரும் எண்ணிக்கையின் அடிப்படையில் தயாரித்தாரல்லவா ? தாய்மொழித் திறனை வளர்க்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட இச்சொற்பட்டியல் ஆங்கிலத்தை அன்னிய மொழியாகக் கற்பிக்கவும் பயன்படுத்தப்பட்டது. மேலும், இச் சொற்பட்டியலை மாதிரியாகக்கொண்டு ஆங்கிலத்தை அன்னிய மொழியாகக் கற்பிக்கப் பல சொற்பட்டியல்கள் தயாரிக்கப் பட்டன[5]. இதைப்போலவே பாமரின் அன்னிய மொழி கற்பித்தல் கருத்துகளைத் தாய்மொழி கற்பித்தலில் தெ. பொ. மீ. குறிப்பிடுகிறார் பாமர் 1917இல் மொழி கற்பித்தலில் மொழிக் கோட்பாட்டை விளக்கி அன்னிய மொழி கற்பித்தலைத் தாய்மொழி கற்பித்தலிலிருந்து வேறு படுத்திக் காட்டியிருந்தார். இருந்தபோதிலும் அவரது கருத்துகள் தாய் மொழி கற்பித்தலில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் இலக் கணத்தைக் கற்பிப்பதில் பாமரின் கருத்துகளைத் தெ. பொ. மீ. கையாள் வது இக்காலகட்டத்தின் குழப்ப நிலைக்கு அவரும் விதிவிலக்காக இல்லை என்பதைக் காட்டுகிறது.

மூன்றாவதாக, மொழி கற்பித்தல் அணுகுமுறைகளுள் பட்டறிவு வாத அணுகுமுறையைத் தெ. பொ மீ பின்பற்றினார் தாய்மொழி

கற்பித்தலாயினும் அன்னிய மொழி கற்பித்தலாயினும் தம்மை ஒரு பட்டறிவுவாதியாகவே இனங்காட்டினார். யெ. ஸ்பெர்சன், பாமர், கோயின், ரைபர்ன் ஆகியோரின் பட்டறிவுவாதம் சார்ந்த மொழி கற்பித்தல் கருத்துகளைத் தம் நூல்களிலும் கட்டுரைகளிலும் இவர் மேற்கோள் காட்டுவது முக்கியமான அகச்சான்றாகும். நடத்தை உளவியல் கோட்பாட்டையும் அமைப்பு மொழியியல் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்ட கேட்டல் பேசல் கோட்பாட்டை Audiolingual Theory வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும் தமது சமகால அமைப்பு மொழியியல் கோட்பாட்டு வளர்ச்சியோடு மொழிகற்பித்தல் குறித்த சிந்தனைகளையும் அவர் உள்வாங்கிக் கொண்டார் என்பதை எவரும் மறுதலிக்கவியலாது. யெ. ஸ்பர்சனோடும், பாமரோடும் தம்மை இனங் காட்டிக் கொள்ளும் ஒரு பட்டறிவுவாதியாக அமைப்பு மொழியியலின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட சிந்தனையாளராகத் தெ. பொ. மீ விளங்குகிறார். 1959க்குப் பின்னர் குறிப்பாக சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாட்டு வளர்ச்சியைத் தொடர்ந்து rationalism மொழியியல் கோட்பாட்டு வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற காலத்திலும் யெ ஸ்பெர்சனையும் பாமரையும் போலத் தெ. பொ. மீ. தம்மைப் பழைய ஒப்பிலக்கண மரபின் வழித்தோன்றலாகவே கருதினார்.

நான்காவதாக, தெ. பொ. மீ. யின் மொழி கற்பித்தல் பற்றிய கோட்பாட்டுச் சிந்தனை அமைப்பு மொழியியல் கோட்பாட்டைச் சார்ந்ததாக இருந்தது பாமர் பிரிட்டிஷ் பயன்பாட்டு மொழியியலின் தந்தை எனக் கருதப்படுபவர் மொழி கற்பித்தல் குறித்து அறிவியல் அணுகு முறையோடு கூடிய பல கோட்பாடுகளை உருவாக்கியவர். அமைப்பு மொழியியல் கோட்பாட்டு வளர்ச்சிக்கு முன்னரே மொழிக் கோட்பாட்டை மொழிகற்பித்தல் ஆய்வில் சிந்தித்த பெருமை பாமர்க்கு உண்டு என்று பார்த்தோம் மொழியைப் பற்றிய ஆய்வு அதன் ஒலிகள் (Phonetics), ஒலியன்கள் (Phonemics), எழுத்துமுறை (Orthography), சொற்பிறப்பியல் (Etymons) (Derivation or Etymology) , பொருண்மையியல் (Semantics) தொடரியல் தொடர்புக் கூறுகள் (Ergonics) ஆகியவை அடங்கியதாக அமைதல் வேண்டும் என பாமர் குறிப்பிடுவார் (Palmer,

1917). தெ. பொ. மீ. யின் தாய்மொழி கற்பித்தல் சிந்தனைகள் பாமரின் இக்கருத்துகளை அடியொற்றியே அமைந்துள்ளன. The Teaching of Tamil Grammar (1958) என்னும் கட்டுரையில் தெ. பொ. மீ. யின் இந்நிலைப் பாடு தெளிவாகிறது.

ஐரோப்பிய மொழி கற்பித்தல் கோட்பாட்டின் முன்னோடி களாகக் கருதப்படும் ஹென்றிஸ்வீட் (Henry Sweet), வியாதோர் (Vieotor), பாசி (Passy), யெ. பெர்சன் ஆகியோர் ஐரோப்பிய மொழி களின் ஒப்பிலக்கண அறிவையும் ஒலியியலறிவையும் மொழி கற்பித்த லோடு இணைத்து மொழியியலின் முக்கியத்துவத்தை மொழி கற்பித் தலில் நிறுவினர். இதனைத் தொடர்ந்து முப்பதுகளிலும் நாற்பது களிலும் மொழியாசிரியர்கள் மொழியியலில் நாட்டம் செலுத்தினர். பிரான்ஸ் நாட்டில் பாலி (Bally), மெய்யே (Meillet), மார்தினே (Martinet) போன்றோரும் பிரிட் டனில் ஹென்றி ஸ்வீட், டானியல் ஜோன்ஸ் போன்றோரும் டென்மார்க்கில் யெ. ஸ்பெர்சன், ஹெம்ய்லெவ் (Hjemslev) போன்றோரும் மொழி கற்பித்தலில் அமைப்பு மொழியியலின் பங்கை வலியுறுத்தியவராவர். தெ. பொ மீ. தம் வாழ்நாளிலேயே அமெரிக்க மொழியியலார் மொழி கற்பித்தல் குறித்த ஆய்வுகளில் முன்னிலை வகித்திருந்தும் கூடுதலாக இந்தோ ஐரோப்பிய மொழியியல் சிந்தனைப் பள்ளிகளோடு தம்மை இனங்காணும் மனப்பாங்கினராக விளங்கியது இங்குக் குறிப்பிடத்தக்கது

குறிப்புகள்

1. With the help of this we have to observe the Tamil child and prepare an outline of the progressive stages of the development of the linguistic sense in the Tamil child and correlate it with the age, before utilising that valuable information in preparing a scheme of study or a scheme of speech training for our children (1958 : 122).

2. ... all languages are easier to learn by practice from rules Keatinge : 1910.

3. The child coming to the school does speak Tamil but that Tamil is so far removed from the standard Tamil, which is really for that very reason a foreign language to the child. The beginning is the important crisis. " Now you know", says Socrates, " that in every enterprise the beginning is the mainthing especially dealing with a young and tender nature. For at that time it is more plastic and into it the stamp which it is desired to impress sinks deepest". The dialects and their knowledge are necessary for this approach. These ought to be approached with a sense of appreciation and reverance. The conception of corruption in a language ought to be forgotton. Slowly the standard dialect should be introduced (1958 : 127).

4. A comon Error Note Book of a higher form of a city High School reveals to use difficulties the children are experiencing in our educational institutions, where their difficulties honest toil and first trials at creative expression, are condemned as errors by a tyrannical adult world of teachers, in their attempt at mechanising and standar dising the human talent of the morrow. The longer ka and other syllabic letters ending in long a, are with a few exceptions/ written with the consonants followed by what in Tamil is called *Kaal* of the form கா, சா The exceptions ணா, றா, னா are a source of confusion to the children believing in the uniformity of Nature, which is the basis of all our sciences. These unsophisticated ones more often than not write these exceptional letters also with a *kall* as ண ா, றா, ன ா (1952 : 154).

5 Although this work was intended as a basis for the reading curriculum in the teaching of English as the mothertongue, it was influeential as a prototype for similar investigations undertaken in the interest of foreign language teaching (Stern, 1983 · 100).

துணை நூல்கள்

Jesperson, O., 1909, **How to Teach a Foreign Language**, Allen and Unwin, London.

Keatinge, M.W., 1910, **Great Didactic of John Amos Comenius**, Russel and Russel, NewYork.

Meenakshisundaram, T. P., 1958, '*The Teaching of Tamil Grammar*', In Prof T. P. Meenakshisundaram Sixty First Birthday Commemmoration Vol. (1961), , Annamalai University, Annamalai Nagar.

.. . ., 1952, '*The Tamil Script Reform*', In Prof. T. P. Meenakshisundaram Sixty First Birthday Commemmoration Vol. (1961), Annamalai University, Annamalainagar.

Palmer, F.E., 1917, **The Scientific Study and Teaching of Languages**, Oxford University Press, London.

Stern, H. H., 1983, **Fundamental Concepts of Language Teaching**, Oxford University Press, London.

Wundt, W., 1877 - 1905, **Volkerpsychologic**, Vol.1. Die Sprache, Wilhelm Engelmann Verlag (292), Leipzig.

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் இலக்கணத்தின் பங்கு

க. இராமசாமி

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தமிழ் கற்க முயலும் போது அது அவர்களுக்கு இரண்டாம் மொழியாகிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தும் அரசியல், வரலாறு, தொழில் மற்றும் பொருளாதாரக் காரணங்களால் பிறமொழிச் சூழலில் நீண்ட காலம் வாழ நேரும் தமிழர்கள் தாய்மொழியை இழந்துவிடாமலிருக்கும் பண்பாடு காரணமாகத் தமிழ் கற்க முயல்வதும் ஓர் இரண்டாம் மொழிச்சூழலே. தமிழல்லாத பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ்ச் சூழலில் வாழ்ந்து கொண்டு தமிழைக் கற்பதும் ஓர் இரண்டாம் மொழிச் சூழல்தான் என்றாலும் இது பெரும்பாலும் முதல் மொழிச்சூழலாகவோ அதற்குச் சமமானதாகவோ கருதப்படுகிறது. தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பவர்கள் குழந்தைகளாகவும் இருக்கலாம். வயது வந்தோராகவும் இருக்கலாம். இவ்வாறு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பவர்களின் நோக்கம் ஆளுக்கு ஆள் குழுவினருக்குக் குழுவினர் வேறுபடலாம். மேற்கூறிய சூழல்களில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும்போது இலக்கண அறிவைப் பயன்படுத்துவது எந்த அளவிற்குத் தேவையானது என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கையான தாய்மொழிச் சூழலோடு இயைந்து தமிழைப் பையப்பைய ஆசிரியரின் உதவியின்றிப் பேசக் கற்றுக்கொள்ளும் முயற்

சியில் இலக்கண அறிவு துணை நிற்கலாம். எனினும் இங்கு இலக்கணத்தின் பங்கு அவ்வளவு குறிப்பிடத்தக்கதல்ல. இம்முயற்சியில் இலக்கணத்தின் பங்கு வெளிப்படத் தோன்றுவதில்லை. ஆயினும், தக்க ஆய்வுகளின் மூலம் இவ்வாறான சூழல்களில் இலக்கண அறிவின் பயனை நிறுவ முயலலாம். மாந்தருக்கு இயற்கையாகவே வாய்க்கப்பெற்றிருக்கும் பொதுமையான இலக்கண அறிவு அனைத்துக் கருத்துப்பரிமாற்றச் சூழல்களிலும் பயன்படவே செய்யும்.

ஆசிரியரின் உதவியுடன் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் சூழல்களில் இலக்கண அறிவைப் பயன்படுத்துதல் தவிர்க்க இயலாதவொன்றாகும். குழந்தைகளுக்குக் கற்பிக்கும்போது இதன் அளவு குறையலாம் - வயதுவந்தோருக்குக் கற்பிக்கும்போது இதன் அளவு கூடலாம் - அவ்வளவே. நீண்டகாலப் பயிற்சிகளில் இடையிலும் கடையிலும் இலக்கண அறிவின் தேவை உணரப்படும். ஆனால் குறுகிய காலத் தீவிரப் பயிற்சிகளில் தொடக்கத்திலேயே இதன் தேவை உணரப் படும். ஒரு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும்போது இலக்கண உணர்வு உந்தப்படுவதற்குக் காரணங்களாக அமைவன மாந்தருக்கு இயற்கையாக வாய்க்கப்பெற்ற பொதுமையான இலக்கண அறிவும் ஏற்கனவே எய்தியுள்ள தாய்மொழி முன்னறிவும் ஆகும். இனி, தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது பல்வேறு படிநிலைகளிலும் இலக்கண அறிவின் இன்றியமையாமையை நிறுவ முயல்வோம்.

தமிழ் எழுத்துகளையும் ஒலிகளையும் கற்பிக்கும்போது கற்போர் ஏற்கனவே அறிந்த மொழியின் எழுத்துக்களோடும் ஒலிகளோடும் ஒப்பு நோக்கி வேற்றுமைகளை வெளிக்கொணரும்போதுதான் பயிற்சியாளர் தெளிவு பெறுகிறார். மொழியாசிரியரும் தன் பணியை நிறைவு செய்தவ ராகிறார். உயிரொலிகளைக் கற்பிக்கும்போது பெரும் இடர்ப்பாடுகள் ஏற்பட வாய்ப்பில்லை. குறிப்பாக முற்றியலுகர குற்றியலுகர வேறுபாட்டிற்கான சூழல்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அசாமியா, ஒரியா, வங்காள மொழிக்காரர்களுக்குக் குறில் நெடில் மாத்திரை அளவு சிறப்பாக வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். இந்திக்காரர்களுக்கும்

பிறருக்கும் எகர, ஏகார வேறுபாடு உணர்த்தப்பட வேண்டும். க, ச, ட, த. ப என்னும் ஐந்து வல்லின எழுத்துக்கள் ஒவ்வொன்றும் தொடர்புடைய மூன்று மூன்று ஒலிகளை உள்ளடக்கியுள்ளன என்பதை ஒலியனியல் துணைகொண்டு விளக்கம் பெறச் செய்யவேண்டும். பிறமொழிகளில் இம்மூன்று ஒலிகளையும் குறிக்க மூன்று வேறுபட்ட எழுத்துகள் பயன் படுத்தப்படுவதற்கான காரணமும் எடுத்துரைக்கப்பட வேண்டும். றகரம், ழகரம், தந்நகரம், டண்ணகரம், றன்னகரம் இவற்றிற்கிடையிலான ஒலிப்பு வேறுபாடுகள், லகர, ளகரத்திற்கிடையிலான ஒலிப்பு வேறுபாடு - இவற் றையெல்லாம் தீவிரப் பயிற்சியோடு கூடவே பிறப்பியல் அடிப்படை யிலும் விளக்கி வேறுபாடுணரச் செய்ய வேண்டும். ஒலிகள் ஒலியன் நிலையை அடைதல் மொழிக்கு மொழி வேறுபடுவதையும் ஒலியனே எழுத்தாக வரிவடிவம் பெறுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

பன்மை விகுதிகளான -கள், -க்கள், - வை இவற்றைக் கற்பிக்கும் போது -க்கள் மற்றும் -வை ஏற்கும் பெயர்களைத் தொகுத்துக் கூறிவிட்டு ஏனைய பெயர்களோடு -கள் வருவதைச் சுட்டிக்காட்ட வேண்டும். வேற்றுமை மற்றும் வேற்றுமை மயக்கத்திற்கு வரும்போது கற்போரின் தாய்மொழி அல்லது கருவி மொழியில் வேற்றுமை வழங்கும் நிலை களைக் கருத்திற் கொண்டாக வேண்டும். நான்காம் வேற்றுமை உருபான 'கு' வை இந்திக்காரர்கள் இரண்டாம் வேற்றுமையில் பயன்படுத்து வார்கள். காரணம் இந்திமொழியில் को என்னும் உருபு இரண்டாம் வேற்று மையிலும் நான்காம் வேற்றுமையிலும் வருகிறது. மலையாளம் பேசுவோர் தமிழ் கற்கும்போது ஐந்தாம் வேற்றுமை உருபான 'இல்' என்பதை நான்காம் வேற்றுமைப் பொருளில் பயன்படுத்துவார்கள். ஏனென்றால் மலையாள மொழியில் 'இல்' என்பது நான்காம் வேற்றுமை உருபு. எனவே இரண்டாம் மொழி கற்போரின் தாய்மொழி பற்றிய இலக்கண அறிவு ஓரளவேனும் மொழியாசிரியருக்குத் தேவைப்படுகிறது. தாய்மொழி இலக்கண உணர்வைக் கற்போருக்குத் தூண்டுவதும் அவசி யமாகிறது. தமிழ் ஒரு பின்னொட்டு மொழி, இதில் பிறமொழிகளைப் போல முன்னொட்டு கிடையாது என்னும் உண்மை வலியுறுத்தப்பட வேண்டும்.

புணர்ச்சி இலக்கணம் பற்றிய அறிவும் தவிர்க்க இயலாததா யுள்ளது. அத்துச் சாரியை பற்றியும், யகர, வகர உடம்படுமெய்கள் வரும் இடங்கள் குறித்தும் குறிலை முதலாகக் கொண்ட மெய்யீற்று ஓரசைச் சொற்களில் இறுதி மெய் இரட்டித்தல் குறித்தும் க ச த ப என்னும் வல் லெழுத்துக்கள் மிகுமிடங்கள், மிகாவிடங்கள் குறித்தும் இலக்கண விளக் கங்கள் அளித்தாலன்றி இரண்டாம் மொழி கற்பித்தல் நிறைவெய்து வதில்லை.

தமிழ்மொழியின் தொடரமைப்பில் சொற்கள் எழுவாய் செயப் படுபொருள் பயனிலை என்கிற அடுக்கு முறையில் வருவது அடிப்படை யானது. ஆனாலும் சிறுசிறு பொருள் வேறுபாடுகளுடன் இவற்றின் முறை மாற்றப்படலாம் என்கிற பொதுவுண்மை எடுத்துக் கூறப்பட வேண்டும். பெயரெச்சத்தொடர்கள் தமிழில் தழுவும் பெயருக்கு முன்னால் வர ஆங்கிலம் இந்தி போன்ற மொழிகளில் பெயருக்குப் பின்னால் வரும். - வந்த பையன் - the boy who came - लड़का जो आया வினையெச்சம் தமிழில் முற்றுவினைக்கு முன்னால் வரும் - ஓடிவந்தான் - ஆங்கிலத்தில் பின்னால் வரும் - He came running. நேர்க்கூற்று, அயற் கூற்றுகளில் வரும் இணைப்புச் சொல்லான 'என்று' தமிழில் துணைக் கிளவியத்திற்குப் பின்னும் ஆங்கிலம், இந்தி மொழிகளில் தலைமைக் கிளவியத்திற்குப் பின்னும் (என்று சொன்னார் - said that) வருவது தமிழில் பெயருக்குப் பின்னால் இடைச்சொற்கள் வருதல் போன்ற அடிப்படை அமைப்பு வேறுபாடுகளையெல்லாம் எடுத்துக் கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழைப் பன்னோக்குடன் இரண்டாம் மொழியாகக் கற்பவர் களுக்கு எழுத்துத்தமிழ் பேச்சுத்தமிழ் இரண்டையும் கற்பித்தாக வேண்டும். எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத்தமிழிற்கு மாற்றும் விதி முறைகள் இங்கே இன்றியமையாத இடம் பெறுகின்றன. இரண்டாம் மொழி கற்பித்தலில் இலக்கண அறிவு தேவையா இல்லையா என்பதல்ல வினா. யார் யாருக்கு எந்தெந்தச் சூழல்களில் எவ்வளவு தேவை என்பது தான் நம்முன் உள்ள வினா. இது பற்றி மேலும் விரிவான ஆய்வுகள் தேவை.

மொழி மரபும் இலக்கண மரபும் வரலாற்றுப் பார்வை

கி. நாச்சிமுத்து

தமிழுக்கு எழுத்து தோன்றிய சுமார் கி.மு. 4ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் வரலாற்றைக் கல்வெட்டு, மண்பாண்டக் குறியீடு முதலிய எழுத்துச் சான்றுகளினடிப்படையில் தெளிவாக வரையறுக்க முடியும் அது போன்றே அக்காலத்திற்கு முந்திய தொல் பழங்கால வரலாற்றை ஒப்புமை மொழியியல்வழி ஆராய்ந்து சொல்ல முடியும். இவ்விரு நிலைகளிலும் மூலத் திராவிட நிலையிலிருந்து அண்மைக் காலம் வரை தமிழ் மொழி வரலாற்றை வகுத்துரைக்கும் முயற்சிகள் எழுந்துள்ளன. இத்துறையில் தெ. பொ. மீ. யின் தமிழ்மொழி வரலாறு என்ற நூலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அதுவும் ஒருவகையில் மொழி வரலாற்றை முற்றாக வரையறுத்துச் சொன்னதாகக் கொள்ள முடியாது. அதற்குப் பிறகு பல துறைகளில் மொழியியல் ஆராய்ச்சிகள் நடந்துள்ளன எனில் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய அத்தகைய இன்னொரு முதல் நூல் வெளிவராதது மொழியியல் ஆராய்ச்சியின் குறை என்றே சொல்ல வேண்டும். இது போன்றே தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள் கொள்கைகள் பற்றி பி.சா. சுப்பிரமணியசாத்திரி, தெ.பொ மீ, செ. வை. சண்முகம் போன்றோர் நூல்கள் எழுதியிருப்பினும் அவற்றை எல்லாம் வைத்துத் தொகுத்தெழுதிய வரலாற்று நூல்கள் எழாததும் பெரிய குறையே.

தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் கற்பிக்கும் எந்நிலை ஆசிரியனாயினும் இவற்றில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பது அடிப்படையாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு இளங்கலை, முதுகலை பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பினும் இவை ஆசிரிய னாகப் போகும் ஒருவருக்கு எந்நிலையில் உதவுகின்றன என்பது கேள்விக் குரியதே. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் இலக்கியத்திற்கும் பொருத்த மான இலக்கணவிதிகளும் விளக்கங்களும் அமைந்த கையேடு ஒன்று இருப்பின் பெரிதும் பயன்படும் (எ.கா. சங்க இலக்கிய இலக்கணம், ராஜம் ராமமூர்த்தி), (ஆங்கிலம்).

இனி தமிழ் மொழி மரபில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களில் சில வற்றின் வரலாற்றைச் சுட்டிக்காட்டி அவற்றால் எழும் சிக்கல்களைத் தமிழ்ப் பயிற்று களத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிப் பேசுவோம். அடுத்ததாகத் தமிழ் இலக்கண மரபின் வரலாற்றைச் சுருக் கமாக எடுத்துரைத்து அவை இலக்கியம், இலக்கணக் கொள்கைகளாகக் கொண்டவற்றின் பின்னணியை எடுத்துக்காட்டி அவை தமிழ் மொழிக் கல்விக்குப் பயன்படுமாற்றை விளக்கலாம்.

1. தமிழ்மொழி வரலாறு - ஒரு பொதுப்பார்வை : ஒலியியல்

மூலத்திராவிட மொழியிலிருந்த ஒலிகளை இன்றும் வைத்துப் போற்றுவது தமிழ் என்பதை விட மலையாளம் என்பதே பொருந்தும். மரபிலக்கணங்கள் கூறும் அடிப்படை ஒலிகளைச் சற்றேறக்குறைய மாற்ற மின்றி இன்றும் பேச்சு வழக்கில் போற்றும் மொழி மலையாளம் மட்டுமே. தமிழில் எழுத்து வழக்கில் இவை அனைத்தும் உள்ளன. பேச்சு வழக்கில் ஒரு சில வழக்குகளில் பெரும்பாலான ஒலிகளும் இருப்பினும் (ர, ற போன்றவை தவிர) இவை பேச்சு வழக்கில் அவ்வாறே வழங்க வில்லை எனலாம். இது மொழி வரலாற்றில் நிகழ்ந்த மாற்றம்.

சாதாரணப் பேச்சு வழக்கில் இல்லை எனினும் நாம் பொதுப் பேச்சு மொழியாகக் கொள்ளும் செந்தமிழ் வழக்கில் (மேடைப்பேச்சு, உயர்நிலைப்பேச்சு என்பன) இவற்றைப் பேண முயல்கிறோம். இதை மொழி கற்பிக்கும் சூழலில் கவனத்தில் கொள்ள வேண்டும். செந்தமிழி

விருந்து பிறழ்ந்த நிலையில் பேச்சு வழக்கு அமையினும், உயர்நிலை வழக்கு மொழி கற்பிக்கும் சூழலில் நாம் மாதிரிச் சட்டங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டியிருப்பதால் எல்லா ஒலிகளையும் முறை யாக ஒலித்து மாணவனுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். முந்தைய தலைமுறைத் தமிழாசிரியர்கள் இதைக் கவனத்தில் கொண்டிருந்தனர். இன்றைய தலைமுறை ஆசிரியர்கள் சாதாரணப் பேச்சுவழக்கில் பேசு மாறே வகுப்பறையிலும் பேசிவிடுவதால் மாணவனுக்கு மாதிரிச் சட்ட மான பொது ஒலிப்பு முறையில் பயிற்சி கிடைப்பதில்லை. இன்றைய தலைமுறைத் தமிழரில் பலர் வானொலி, தொலைக்காட்சி போன்ற செய்தித் தொடர்பு சாதனங்களில் மொழியைச் செம்மையாகக் கையா ளாமல் தம் விரசமான ஒலிப்புகளாலும், தப்பு, தவறுதலான சொல் வாக்கிய அழுத்தத்தாலும் தம் மொழிச்சுரணைக் குறைவையும், ஆளுமை யின்மையையும் வெளிக்காட்டி நகைப்புக்குள்ளாகின்றனர். இதை நாம் கீழ்நிலை வகுப்புகளிலேயே செப்பம் செய்ய வேண்டியிருப்பினும் கல்லூரி நிலையிலுள்ள ஆசிரியர்க்கும் இதில் பொறுப்பு உண்டு. தம்மை யும் திருத்தி மாணவரையும் திருத்த இவர்கள் முயல வேண்டும். கேரளத் தில் உள்ளது போன்று மொழி உணர்வு குடும்பச் சூழலிலும் ஏற்பட்டால் மொழிஆட்சி திருத்தம் பெறும். இவ்விடத்தில் ஒலிமாற்றங்களில் பேச் சில் திரிந்த வடிவங்களை மேடைப் பேச்சில் தக்க சூழல் அறிந்து பயன் படுத்துவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் (எ.கா. காற்று - காத்து, வைத்து - வச்சு, இலை - எலை).

ஒலியனியல்

தமிழில் பிறமொழித் தாக்கத்தால் புதிய ஒலியன்கள் தோன்றியுள் ளன. வடமொழி வழி வந்த ஹ, ஷ, ஸ, க்ஷ, ஸ்ரீ போன்றவற்றை நாம் ஓரளவு ஏற்றுக்கொண்டுள்ளோம். இன்று ஆங்கிலம் போன்ற மொழித் தாக்கத்தால் க, த, ப போன்றவற்றில் ஒலிப்பு ஒலிப்பில்லா நிலையில் பகைப்பு ஏற்பட்டுப் பொருள் வேறுபடும் சூழல்கள் தோன்றியுள்ளன. இவற்றை நாம் பேச்சுமொழியில் ஏற்றிருந்தாலும் எழுத்து மொழியில் ஏற்று அவற்றைச் சுட்டும் எழுத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை

இதற்காக எழுத்து முறையைச் சீரமைக்க வேண்டும் என்று கந்தையா (Indian Linguistics) போன்றோர் தீவிரமாக வாதாடினாலும் நாம் இன்னும் அதற்குச் செவிசாய்க்கத் தயாராக இல்லை. முன்பு வடமொழியிலிருந்து நேர் ஒலிகள் உள்ள இடத்து தற்சமமாகவும் ஏனைய இடங்களில் தத்பவமாகவும் நாம் எழுத்துப் பெயர்க்கும் முறையை ஏற்றுக் கொண்டோம். ஆனால் இன்று அறிவியலில் பெயர்களை எழுத்துப் பெயர்ப்பு செய்யும்போது தற்சமமே சிறந்தது, எனவே எழுத்துச் சீர் திருத்தம் செய்ய வேண்டும் என்ற கருத்து சற்று ஓங்கி ஒலிக்கிறது. ஆனால் தமிழில் உள்ள எழுத்துக்களைக் கொண்டே இவற்றை நாம் ஓரளவு சாதித்துதான் வருகிறோம் (இலங்கைத் தமிழில் Toronto என் பதை ரொறன்ரோ என்றெழுதுகின்றனர். தமிழகத்தில் Tata வை டாடா என்றெழுதுவது ஒலி உணர்வற்ற தன்மையைக்காட்டும்) டங்கல் போன்ற பெயர்களில் ட என்ற ஒலிப்பில்லா ஒலியாக ஒலிப்பதால் வானம் இடிந்து விடவா போகிறது என்று கேட்பவர்களும் உண்டு. ஆனால் தமிழ் மொழித்தூய்மை வாதத்தை எதிர்க்கும் சிலர் பிறமொழித் தூய்மை வாதத்தை வற்புறுத்தும் முரண்பாடு வியப்பாகத்தான் இருக்கிறது. தமிழை டமில் என்றெழுதலாம், ஹிந்தியை இந்தி என்றெழுதக் கூடா தாம். லக்ஷ்மணன் என்றுதான் எழுதவேண்டுமாம். இப்படிசிலர்.

இதுபற்றி, பாரதி, ராஜாஜி உட்பட விவரம் தெரிந்தவர்கள் கூடக் கொஞ்சமும் மொழியியல் சுரணையின்றிப் புதிய எழுத்து வேண்டும் என்று எழுதியுள்ளனர். ஆங்கிலப் பெயர்களைச் செவ்வையாக ஆங்கிலத்தில் எழுதலாம். தமிழில் எழுதாவிட்டால் அது குறையன்று. பிற மொழியை எழுத ஒரு மொழிக்கு எழுத்தைச் சேர்த்துக் கொண்டு போனால் எங்கோ போய் நிற்கும் ?

புணர்ச்சி

தமிழ் மொழியிலக்கணங்களில் சந்தி இலக்கணம் விரிவாகப் பேசப்பட்டிருப்பினும் இன்றைய எழுத்து வழக்கில் சந்தி பொதுவாகப் போற்றப் பெறுவதில்லை. பாடநூல்களிலும் இலக்கணங்களிலும் கூறப் படும் விதிகள் அந்த நூல்களிலேயே மீறப்படுகின்றன. வெளியில்

பத்திரிக்கைகளில் சந்தி புறக்கணிக்கப்படுகிறது. இச்சூழலில் மொழி கற்கப் புகும் மாணவன் தெளிவின்றிக் குழப்பமே அடைகின்றான். திரிபுப் புணர்ச்சிகளாக அமையும் புல் தரை - புற்றரை, கல்தூண் - கற்றூண் போன்றவை இன்றைய மொழியில் இல்லை எனினும் பழைய இலக்கிய மொழியை அறிந்துகொள்ள இத்தகு விதிகள் தேவையாகும். இன்றைய மலையாளப் பேச்சு மொழியில் புற்கூடு, பாற்சோறு, கற்றச்சன் போன்ற பழைய சந்தி பெற்ற சொற்கள் காணப்படுகின்றன. ஏனெனில் இத்தகைய சந்தி விதிகளில் பல பழஞ்செய்யுள் நடையில் காணப்படுகின்றன. பழஞ் செய்யுளைச் சந்தி பிரித்துப் படிப்பதே இன்றைய ஆசிரியருக்குப் பெருந் தலைவலி என்று தோன்றுகிறது. சந்தியை எளிமையாக்க வேண்டும் என்பது பற்றிப் பல்வேறு கருத்துகள் காணப்படுகின்றன. அகச்சந்தியை மட்டும் போற்றினால் போதும் (காக்கிச்சட்டை) புறச்சந்தியைப் போற்ற வேண்டியதில்லை என்று கூறும் தீர்வும் முற்றிலும் பொருந்தும் என்று தோன்றவில்லை (காலைப்பிடித்தான், காலை பிடித்தான்).

மலையாள மொழியில் உயிர்ப்புணர்ச்சி (ஓடியெத்தி), தொகைச் சொற்புணர்ச்சி (இரட்டப்பாத), வினையெச்சப்புணர்ச்சி (ஓடிப்போயி போன்றவை) தமிழில் உள்ளதை விடச் சீராகக் கடைப்பிடிக்கப்படுகிறது. செய்யுட் சந்தியைப் பிரித்துப் படிப்பது தமக்கு ஒரு சிக்கலாகவே இல்லை என்று கூறுமளவுக்குச் சந்தி உணர்வு கூர்மை பெற்றுள்ளனர் மலையாளி கள். தமிழில் வேண்டாத இடத்துச் சந்தி (வந்தப்பெண்), முழுமையும் ஓரினமாதல் தவிர்க்கப்படல் (புல்தரை - புல்த்தரை), பாதி ஓரினமாதல் (புற்தரை), பிறமொழிச் சந்தி (ஆதிபகவன், அக்கினி (ப்) பிரவேசம்) முதலியவை சிக்கலைத் தோற்றுவிக்கின்றன. செய்யுளில் புணர்ச்சியில் விழிப்புணர்ச்சி (மாயிரு மருப்பிற் பரலவலடைய இரலை தெறிப்ப) உண்டு. உரைநடையில் அத்தகைய இடங்களில் (கல் அரசனின் தலையில் பட்டு, சிறிது காயம் ஏற்படுத்தியது) நிறுத்தற்குறிகளை ஆண்டு வாக்கிய விட்டிசையும் உணர்த்த முடியும் (கி. நாச்சிமுத்து, இன்றைய மொழியில் புணர்ச்சி - தமிழ் - மலையாளம் ஒப்பாய்வு).

தமிழில் காணப்படும் விகற்ப சந்திகளும் (குளக்கரை, குளங்கரை) சந்தி விதி மாற்றங்களும் (தமிழ்ச் சொல் - தமிழ்ச்சொல் ழ ற ள மாற்றத்தை உணர்த்தும்) மொழி வரலாற்றில் அது மீட்டுருவாக்கச் சான்றுகளாக அமைகின்றன.

உருபனியல்

தமிழ் மொழி காலந்தோறும் மாறிவருவதை உருபனியல் அமைப்பு நன்கு உணர்த்துகிறது. பழந்தமிழில் ஐம்பாற்பிரிவினை இருந்தது. இன்று ஆண்பால் ஒருமை (பையன்), பன்மை (பையன்கள், வந்தான்கள்), பெண்பால் ஒருமை (பெண்), பன்மை (பெண்கள், வந்தாளுகள்) என்பனவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. பழங்காலத்தில் இல்லாத புதிய வேற்றுமை உருபுகள், சொல்லுருபுகள் வழக்கிற்கு வந்துள்ளன. தொல்காப்பியர் காலத்தில் ஐந்தாம் வேற்றுமை உருபு ட இன் ஒப்புப் பொருளில் வந்துள்ளது. நன்னூலார் காலத்தில் அது நீங்கல் பொருளைப் பெரிதும் உணர்த்திற்று. இவையெல்லாம் இன்று வேறு சொல்லுருபுகளால் உணர்த்தப்படுகின்றன. வினைகள் தனிச் சொற்களாக இருந்தவை துணை வினைகளோடு கூடிய கூட்டு வினை வடிவங்களாக மாறி நுட்பமான பொருள் வேறுபாடுகளை உணர்த்து கின்றன. செய்யா என்ற வினையெச்ச வாய்பாடு செய்யுளில் மட்டுமே உள்ளது. ஆனால் ஒரோ வழி பழைய வடிவங்கள் இன்றைய ஆட்சியில் காணப்படுவதுண்டு (வருவன் - போவன், பேசுவம்). ஏரிக்கரையின் மேலே போறவளே... பேசுவம் குயிலே). குறிப்பு வினை வடிவங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன (நல்லன் - நல்லவன்).

தொடரனியல்

சங்கச்செய்யுள் நடை செறிவானது. தொகைச் சொற்களும், குறிப்பு வினை வடிவங்களும் அந்நடையில் மிகுதியும் காணப்படுகின்றன. காலப் போக்கில் செயப்பாட்டு வினைவாக்கியங்கள், வினைச்சுட்டு வாக்கியங் கள் (யாதனின் யாதனின் . . . அதனின் அதனின்) முதலிய வாக்கிய அமைப்புகள் தமிழில் வரத்தொடங்கின. இன்று மற்றும் என்பதை இணைப்பு இடைச்சொல்லாக ஆள்வது ஆங்கிலம் வழி வந்த

வழக்காகும். இன்று நாம் எழுதும் வாக்கிய அமைப்புக்களில் ஆங்கில வாக்கிய அமைப்புக்களின் பாதிப்பு மிகுதியும் உள்ளது.

பொருளியல்

இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட வரலாற்றில் தமிழில் நடந்த சொற்பொருள் மாற்றத்தை நாம் உணராமல் இருக்க இயலாது. பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை அவர்கள் 'சொல் வரலாற்று நியதி' என்ற கட்டுரையில் 'இந்தப்பத்திரிகை நான் வாங்கியது' என்ற வாக்கியம் எவ்வாறு இடைக்காலத் தமிழனுக்கு விளங்கியிருக்காது என்பதை எடுத்துக்காட்டி விளக்குவார். புதிய சொற்களும், புதிய பொருளும் தமிழில் வந்த வண்ணம் உள்ளன. பழையன கழிதலும் நிகழ்ந்து b fh© LŸ s J .J ¥òuî (E f®¢á)v‹ W Fws há Ça® (1050) பயன் படுத்தும் பொருளிலா நாம் இன்று அச்சொல்லைப் பயன்படுத்து கிறோம்? இயக்கத்திற்கும் எழுச்சிக்கும் இன்று நாம் கொள்ளும் பொருள் எப்போது தோன்றியது? மறுமலர்ச்சி என்ற சொல் இந்த நூற்றாண்டில் தோன்றியதல்லவா? 1938இல் வெளிவந்த தமிழ்ப் பேரகராதியையும் 1992 இல் வெளிவந்த க்ரியாவின் தற்கால தமிழகராதியையும் ஒப்பு நோக்கிய போது பின்னதில் 10 பக்கங்களில் 49 புதிய சொற்களைக் காணமுடிந்தது. அதாவது அவ்வகராதியிலுள்ள சொற்களில் மூன்றில் ஒரு பகுதி புதிய சொற்கள்; பொருளும் அப்படித்தான். கிளர்ச்சி என்றால் இன்று நாம் கலவரம் என்ற பொருளில் பயன்படுத்துகிறோம். தியாகம் என்றால் கொடை என்று முன்பு பொருள் இன்று ஈதல் என்ற பொருளில் வழங்கு கிறோம். எனவே பழந்தமிழ்ச் சொல்லுக்கு மட்டுமின்றி இன்றைய சொல்லுக்கும் பொருளறிய அகராதியைப் பார்க்க வேண்டியுள்ளது.

உரைக்கட்டு

மொழியில் தொடரமைப்புக்கு மேற்பட்ட நிலையில் வாக்கியங் களின் கோவையாக அமையும் செய்யுள் அல்லது உரைநடையின் உரைக் கட்டமைப்பு நிலை மொழி மரபில் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. உரைக்கட்டு பேசும்பொருளுக்கு ஏற்ப - அறிவியல் செய்தி, புனை விலக்கியம் என்பதற்கேற்ப மாறி அமையும். தமிழில் இதுபற்றித் தொல்

காப்பியர் கிளவியாக்கம் செய்யுளியல், மரபியல் முதலியவற்றில் சிந்தித்துள்ளார். கிளவியாக்கத்தில் வினாவிடை அமைப்பு, இயற்பெயர் - சுட்டுப் பெயர், முற்றும்மை வழங்கும் முறை, இனஞ் செப்பல் போன்றவற்றை இந்நிலையில் நின்றே தொல்காப்பியர் பேசுவார். மரபியலில் உத்திகள் என்பவை அறிவியல் செய்திகளை உரைக்கும் உரைக்கட்டு நெறிகள் பற்றியன. எ.டு. அதிகாரம், உடம்பொடு புணர்த்தல் என்பவை இலக்கணச் செய்திகள், நீதிநூற் செய்திகள். இவற்றை எடுத்து விளக்கும்போது பயன்படுமாற்றைத் தொல்காப்பியம், குறள் போன்றவற்றின் உரையில் காணலாம். பொருள்கோள், மாட்டு, விகாரம் என்பவை புனை விலக்கியமாம் செய்யுளில் இடம் பெறுபவை.

கிளை மொழியியல் ஒப்புமை மொழியியல் செய்திகள்

திசைச்சொல், திரிசொல் என்று செய்யுள் ஈட்டச் சொல்லாகக் கிளைமொழி, அயல்மொழி வழக்குகளை முன்பே ஏற்றுக்கொண்டுள் ளனர் இலக்கண ஆசிரியர்கள். சிலப்பதிகாரத்தில் மலைநாட்டு வழக்கும் (சிறுமகள் - பேத்தி) சிந்தாமணியில் (குளிர்தல் -தங்குதல்), கன்னட வழக்குகளும், கம்பராமாயணத்தில் (அக்கடா) தெலுங்கு வழக்குகளும் உள்ளது போலவே வட்டார வழக்குச் சொற்களும் இலக்கிய மொழியில் கலந்து வந்துள்ளன. அன்று நாட்டுப்புற இலக்கியங்கள் வட்டார மொழி யில்தான் எழுந்தன. இன்று வட்டார, சமூகக் கிளை மொழிகளில் இலக்கியம் படைக்கின்றனர். இவற்றால் மொழியின் பரப்பும் வீச்சும் ஆழமும் மிகுகின்றன. மொழி ஆசிரியன் இவற்றின் வளத்தையெல்லாம் அறிந்து இக்கால இலக்கியத்தைக் கற்பிக்க வேண்டும். பாரதி பாஞ்சாலி சபதத்தில் 'அவள் தீண்டலை எண்ணி ஒதுங்கினாள்' என்றவிடத்து 'தீண்டல்' (மாதவிடாய், 267 / 3) என்று ஆள்வது நெல்லை வழக்காகும். கவிமணி 'மடைச்சீப்புகள் மோதித் திறந்து வந்தேன்' என்ற அடியில் சீப்பு (மதகிலுள்ள அடைபலகை) என்று ஆள்வது நாஞ்சில் வழக்காகும் பாரதிதாசன் 'குளிர் நறுஞ் சந்தனஞ்சார் பொதிகையில் குளிர்ந்தும்' (தென்றல்) என்று பாடும்போது தங்கியும் என்ற பழம் பொருளில் பாடுகிறார். இன்றெழும் கவிதையும், சிறுகதையும், நாவலும் கற்பிக்கும்

ஆசிரியர்கள் இம்மொழி மரபுகளை வளத்தை அறிந்து வைத்துக் கொள்வது, அவர்களின் மொழித்திறனை மிகுவிக்கும். இதற்குத் தக்க அகராதிகள் வெளிவராதது குறையே. இவற்றை ஆக்குவதிலும் மொழி ஆசிரியர்கள் முயலலாம்.

2. தமிழ் இலக்கண மரபு : வரலாற்றுப் பார்வை

தமிழில் 39 இலக்கண நூல்கள் கிடைக்கின்றன. அவற்றிற்கு எழுந்த பல உரைகளும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் மொழியிலக்கணத்தைப் பேசும் இலக்கண நூல்கள் பத்து. அதுபோகப் பிற்காலத்தில் மேனாட்டார் எழுதிய பல இலக்கண நூல்களும், மொழியியல் வழி எழுந்த இலக்கண விளக்கங்களும் உள்ளன. இந்நூல்கள் இலக்கியமாகக் கொண்டவை எவை ? இவற்றிற்கு அடிப்படையான இலக்கணக் கொள்கைகள் எவை ? என்பவற்றைப் பற்றிய அறிவு மொழிக் கல்வியைச் செழுமைப் படுத்தும். அவற்றில் சிலவற்றைப் பற்றி இங்குச் சுருக்கமாகக் குறிப் பிடுவோம்.

தொல்காப்பியம்

தொல்காப்பியர் சங்க இலக்கியத்தை இலக்கியமாகக் கொண்டே தம் இலக்கணத்தை எழுதியிருக்கக் கூடும். தொல்காப்பிய இலக்கண வழிப்பட்டெழுந்ததே சங்க இலக்கியம் என்ற கருத்தும் காணப்படுகிறது. இது எவ்வாறாயினும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் தொல்காப்பிய விதிகளுக்குச் சங்க இலக்கியத்தையே பெரும்பாலும் எடுத்துக் காட்டுகின் றனர். இதனால் சங்க இலக்கியக் கல்விக்குத் தொல்காப்பிய இலக்கண அறிவு தவிர்க்க முடியாததாகிறது.

தொல்காப்பியரின் இலக்கணக் கோட்பாடு பற்றி பலரும் எழுதியுள்ளனர். தமிழில் வளமாக இருந்த ஓர் இலக்கண மரபை ஒட்டி எழுந்ததே தொல்காப்பியம் எனினும் பாணினீயம், ஐந்திரம் முதலிய இலக்கண மரபுகளையும் தொல்காப்பியர் வாங்கிக்கொண்டார் என் பதில் தவறில்லை.

தொல்காப்பியர் பிறப்பியலில், புணரியலில் வகுத்துக் கொள்ளும் விதிமுறைகள் முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. (எ.டு. தொண்ணூறு

புணர்ச்சி நும்கை (நீயிர் கை)) தொல்காப்பியர் புணர்ச் சியை அல்வழி - வேற்றுமை என்று தொடரியல், பொருளியல் நோக்கில் விளக்குவது இங்குக் கவனிக்கத்தக்கது. தொல்காப்பியர் உருபனியலிலும் தொடரியல் அணுகுமுறையை மேற்கொண்டிருந்தார் எனலாம். தொல்காப்பியர் கூறும் காரகக் கொள்கை (வேற்றுமைப்பொருள், பெயரெச்சம்) வட மொழிக் கொள்கைகளோடு ஒப்புமையுடையது. சொற்களின் இலக் கணம் கூறும்போது அவர் சூத்திரம் அமைக்கும் முறை நுட்பமானது (222). சொற்களைத் 1) தன்னையே சுட்டியும், 2) தொகுதிப் பெயர் சுட்டியும், 3) வாய்பாடு கூறியும், 4) விகுதி சுட்டியும், 5) உடம்பொடு புணர்த்தும் அமைக்கும் திறம் அறிவியல் வழிப்பட்டு அமைகிறது. தொல் காப்பியர் முன்னிலை வினையாலணையும் பெயர்களைப் படர்க்கை வினையாலணையும் பெயர்களிலிருந்து வருவிக்கும் நுட்பம் அவருடைய இலக்கண விதியாக்கத்தில் கொண்ட அறிவியல் அணுகுமுறையைச் சுட்டும் (தொல். சொல் 133, 139, 146).

வீரசோழியம்

தமிழில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் எழுந்த வீரசோழியம் முற்றிலும் வடமொழி மரபுகளைத் தழுவி எழுந்த இலக்கண நூல். இந்நூலாசிரியர் தம் காலத்து நூலையும் மொழியையும் இலக்கியமாகக் கொண்டே இலக்கணம் படைத்துள்ளார் எனலாம். இவர் கல்வெட்டு மொழியைத் தம் இலக்கணத்திற்கு இலக்கணமாகக் கொண்டார் என்று கூறுவார் வேலுப்பிள்ளை. வீரசோழியத்தார் தொல்காப்பிய நெறி களைக் கைவிட்டுப் புதிய இலக்கணக் கொள்கைகளையும், கலைச்சொற் களையும் கையாண்டார். புணர்ச்சியில் இவர் அல்வழி, வேற்றுமையைக் கைவிட்டார். விகாரப் புணர்ச்சியை இவர் ஆகமம் (தோன்றல்), ஆதேசம் (திரிதல்), லோபம் (கெடுதல்) என்று வடசொற்களால் குறிப்பிடுவார். வினைச்சொற்களின் பகுபத இலக்கணத்தை இவர் பகுதி, +இடைநிலை, விகுதி என்று இரண்டாகப் பிரித்துக் கூறுவார். பகுபதங்களின் பகுதி களைப் படைத்துக்காட்டி நன்னூலாருக்கு வழிகாட்டுபவரும் இவரே (காரிகை. 60). நிகழ்கால இடைநிலையை இவர்தான் முதன்முதலில்

சுட்டிச் சொல்வார். இவர் வடமொழி வழித் தமிழ் இலக்கணத்தை அணுகியவர். இந்நூல் புடைமாற்று இலக்கண வகையைச் சேர்ந்தது என்பார் இராசாராம் (வீரசோழிய இலக்கணக் கோட்பாடு). இன்று போல் இருந்த அக்கால இருமொழியச் சூழலில் இத்தகைய இலக்கண நூல் எழுந்ததில் வியப்பில்லை. ஆனால் இந்நூல் தனித்தமிழ் கற்றசூழலில் தமிழ் ஆசிரியர்களிடம் செல்வாக்குப் பெறாமற் போயிற்று.

நன்னூல்

தொல்காப்பியத்திற்கு அடுத்ததாக, ஒரு வகையில் சொன்னால், தொல்காப்பியத்தை விடவும் தமிழ் மொழி கற்பார் நன்னூலை விரும்பிக் கற்பது பெரும்பான்மையாக உள்ளது. இதற்குக் காரணம் நன்னூலின் சுருக்கம் மட்டுமல்ல. அதில் பயில்வார்க்கும் கற்பிப்பார்க்கும் எளிதில் உணரத்தக்க சில பயில்முறைத் தன்மைகள் அதிகம் அதில் காணப்படு வதும் இதற்குக் காரணமாகலாம். அடுத்து அது இடைக்கால வழக்கு களுக்கும் இலக்கணம் கூறியது ஒரு காரணமாகலாம். நன்னூலின் சிறப்பான அம்சம் அது உருபனியல் அணுகுமுறையைத் தன் பதவியல் மூலம் அறிமுகப்படுத்தி மாணாக்கருக்குச் சொல்லுணர்ச்சியை நன்கு ஏற்படுத்த உதவுவது ஆகும். தொல்காப்பியர் தன் கோட்பாட்டிற்கிசையக் கூறாது விடுத்த பண்புப் பெயர்ப்புணர்ச்சி முதலிய அகநிலைச்சந்திகளை நன்னூலார் கூறியிருப்பதும் இன்னொரு சிறப்புக் கூறாகும். பண்புத் தொகையைக் கரிதாகிய குதிரை, கரிய குதிரை, கரியது குதிரை எனச் சேனாவரையர். முதலியோர் விரிப்பதை விடுத்து நன்னூலார் கருமை ஆகிய குதிரை என விரிப்பது வாமணன், சினேந்திரன் செய்த சத்த நூலைப் பின்பற்றியது காரணமாகும் என்பார் பிரயோக விவேக ஆசிரியர் (49). மேலும் குணம் - குணியை ஒன்றாகக் கருதும் சமணக் கோட்பாடும் இதற்குக் காரணமாகலாம். நன்னூலின் இரண்டாம் வேற்று மைப்பாகுபாடும் சைனேந்திரன் மதம் பற்றியது என்பார் பிரயோக விவேக நூலார் (12).

பிரயோக விவேகம்

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுந்த இந்நூல் வீரசோழியப் போக்கை அடியொற்றித் தமிழ்ச் சொல்லிலக்கண இயலை விளக்க முயல் கிறது. இந்நூல் மேலும் குறள் பரிமேலழகர் உரை, திருவாசக உரை போன்றவற்றில் கண்ட இலக்கணச் செய்திகளை வரையறைப்படுத்தி இலக்கண விதியாக்கி உரைக்கிறது. இந்நூல் இடைக்கால இலக்கிய வழக்குகளுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறது. வேற்றுமை, வினையெச்சம் ஆக்கப் பெயர்கள் போன்றவற்றை இந்நூல் விளக்கியிருப்பது தமிழ் மொழி இயல்பை விளங்கிக் கொள்ள உதவுகிறது. முரணிலக்கணம் போன்ற மைந்து விளங்குவதால் தமிழ் - வடமொழி என்ற இரு மொழிக் கல்விக்கு மிகுந்த துணை செய்யக்கூடியது. இதனாற்போலும் தனித்தமிழ் பயில்வார் இந்நூலைப் பயில்வது அரிதாகியுள்ளது.

இலக்கணக் கொத்து (கி.பி. 17ஆம் நூற்றாண்டு)

இந்நூலைப் பயில்வது குறைவாயுள்ளது. இந்நூலும் சொல்லிலக் கணம் மட்டுமே உரைக்கின்றது. இதுவும் வடமொழிச் சார்பினதாயினும் தமிழ் முறையிலேயே தமிழ் இலக்கண நுட்பங்களை எடுத்துரைக்க முயல்கிறது. இடைக்கால இலக்கிய வழக்குகளையும் பிறவற்றையும் இது கருத்தில் கொண்டுள்ளது. வேற்றுமை, வினை என்பவை பற்றி இந்நூல் தரும் தெளிவுகள் கருதத்தக்கன (எ.டு.) துணை வினை வினையெச்சம் எதிர்மறையில் முடிதல், தொழிற் பெயரின் பொருள் வேறுபாடு.

தொன்னூல் விளக்கம்

வீரமாமுனிவர் செய்த இவ்விலக்கணம் தமிழ் மரபு வழியிலேயே அமைந்திருப்பினும் சில புதுமைகளையும் கொண்டுள்ளது என்பார் செ.வை. சண்முகம் (கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப் பணி 1993). வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகியவையும் செய்துள்ளார் என்பது இங்குக் கருதத்தக்கது.

இன்னும் நே நாதம், இலக்கண விளக்கம் மிமுத்துவீரியம், சாமி நாதம் முதலிய இலக்கண நூல்கள் தம்மளவில் சில புதுமைகளைக் கூறு

கின்றன. எனினும் தரவுத்தேர்வு, இலக்கணக் கொள்கை, பகுப்பாய்வு நெறி போன்றவற்றில் பெரிய புதுமைகளைச் சாதித்தார்கள் என்று கூற முடியாது.

உரையாசிரியர்கள்

இலக்கண உரையாசிரியர்களில் சேனாவரையர் இலக்கியம் காட்டு வதிலும் கொள்கை வழியிலான பகுப்பாய்வு முறைகளைச் சுட்டுவதிலும் வல்லவர் (எ.டு. சொல். சூத். 202, 206). நச்சினார்க்கினியரும் இத்தகைய வரே. நச்சர் குறிப்பாக தொல்காப்பிய இலக்கணத்தைச் சங்க இலக்கியக் காட்டுகள் கொண்டு விளக்குவதில் வல்லவர். ஏனைய உரையாசிரியர் களில் இளம்பூரணர் இலக்கண அடிப்படைகளைத் தெளிவுப்படுத்து தலில் வல்லவர். தெய்வச்சிலையார் பாணினீயம் முதலிய வடநூற் கருத்துகளை மனதிற் கொண்டு தொடரியல் முறையில் பல புதுமை களைச் சுட்டுவார் (எ.டு. வினையெச்சங்கள், வேற்றுமைகள்). கல்லாடர் வெறும் தொகுப்பாசிரியராய் மட்டும் அமையாமல் ஆங்காங்கே நுட்பங் களையும் காட்டுவார். நன்னூல் உரைகாரரில் மயிலைநாதர் முதல் உரை காரர். இவர் உரை பிற்காலத்தில் கண்டனத்திற்குள்ளாயிற்று (இலக் கணக் கொத்து). எனினும் பல அரிய எடுத்துக்காட்டுகளையும் இலக் கணப்பகுப்பாய்வு முறைகளையும் இதில் காணலாம். இவ்வுரையின் போதாமையை உணர்ந்து எழுந்தது - சங்கர நமச்சிவாயருடைய விருத்தி உரை, திராவிட மாபாடியகர்த்தராகிய மாதவச் சிவஞான சுவாமிகள் புதுக்கிய பெருமை உடையது. இவர் உரையில் பல மொழியியல் நுட்பங் களைக் காண முடியும். (365 - ஆகிய என்ற பண்புத்தொகை இணைப்புச் சொல்லை வினையடைச் சொல் என்பார் இவர்). சிவஞான சுவாமிகள் தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி இவற்றின் மூலம் தமிழ் இலக்கண மரபுகள் சிலவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளார் (வினைத் தொகையின் பகுதி தொழிற்பெயர்).

ஐரோப்பிய இலக்கண ஆசிரியர்கள்

வீரமாமுனிவருக்குப் பிறகு பல ஐரோப்பியர் தமிழ் இலக்கணம் எழுதினர். கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதினார். இவை பெரும்பாலும்

ஐரோப்பிய மொழிகளின், குறிப்பாக, லத்தீன் கிரேக்க இலக்கணங்களை யொட்டி அமைந்தன எனலாம். எனவே இவர்கள் தமிழிலக்கணத்தை விளக்கத் தம் மொழியிலிருந்த கலைச்சொற்களைப் பயன்படுத்தி விளக்க முயன்றனர். இன்னும் போப், ஆர்டன், ஆந்திரனோவ் போன்றோர் பணிகள் குறிக்கத்தக்கன. அம்மொழிகளிலிருந்த வினையடை, பெயரடை போன்ற கலைச்சொற்கள் இங்கும் புகுந்தன.

மொழியியல் வளர்ச்சிக் காலத்தில் அமைப்பியல், ஆக்கமுறைத் தொடரனியல் போன்ற கொள்கைகள் வழி, தமிழ் இலக்கணத்தை இன்னும் மேற்கத்தியரும் தமிழரும் எழுதி வருகின்றனர். இறுதியாகப் புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம் வழி வெளிவந்த Thomas Lehmann இன் A Grammar of Modern Tamil பெரிதும் தொடரியல் அணுகுமுறையை அடியொற்றிச் செல்லுகிறது. புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம் இன்று வரை நடந்த இலக்கண ஆய்வுகளின் அடிப்படையில் பழைய சூத்திர உரை வடிவில் இலக்கண நூல் ஒன்றை எழுதி வருகிறது. அது முற்றுப்பெற்றால் நம் கனவொன்று நனவாகும்.

இவ்வாண்டு (2003) வெளியான பொற்கோவின் ' இக்காலத் தமிழ் இலக்கணம்', ச. அகத்தியலிங்கத்தின் ' தற்காலத் தமிழ் மொழி அமைப்பு' போன்றவை வரவேற்கத்தக்கவை.

இத்துறையில் பேராசிரியர் கி. அரங்கன் அவர்களின் பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதாகும். மரபிலக்கணப் பயிற்சியும் மொழியியல் தேர்ச்சியும் உடைய அவரைப் போன்ற அறிஞர்களின் அரிய படைப்புகள் தமிழ் மொழி இலக்கண இலக்கிய ஆராய்ச்சியை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஒரு பொருட்பலசொல் பதிவுகளும் பொருள் வேறுபடுத்த நெறிமுறைகளும்

பெ. மாதையன்

ஒரு நல்ல அகராதி வெறுமனே சொற்பொருளை மட்டுமே தரும் இயல்புடையது அன்று. அது ஒவ்வொரு சொல்லின் பன்முகப் பட்ட பரிமாணங்களையும் பல்வேறு அகராதியியல் நெறிமுறைகளின் அடிப்படையில் பதிவு செய்துவைக்கும் பெட்டகமாகவும் விளங்கு கிறது. இதனால்தான் அகராதிப் பதிவுகள் காலந்தோறுமான தேவை களுக்கும் பயன்பாட்டாளரின் பல்வேறு தேவைகளுக்கும் மொழி கற்ற லின் பல்வேறு நோக்கங்களுக்கும் ஏற்ற வகையில் பல்வேறு பதிவுக்கூறு களையும் உடையனவாய்த் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளன. ஒவ் வொரு சொல்லும் குறிப்பிட்ட மொழிச் சமுதாயத்தில் பெற்றுள்ள இடம் அந்தச் சொல்லின் அகராதிப் பதிவுக்கூறுகளைத் தீர்மானிக் கிறது. மொழிப் பயன்பாட்டில் ஒருபொருட்பலசொற்கள் பெற்றுள்ள இடங்கள் வெவ்வேறுபட்டனவாக உள்ளன. இந்தப் பயன்பாட்டு வேறு பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டே இவற்றுக்கான பதிவுகள் அமைக் கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் ஒருபொருட் பலசொற்கள் என்பன அகராதியில் எவ்வாறு பொருள்வேறுபடுத்த நெறிமுறை களுடன் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன, அதில் உள்ள சிக்கல்கள் எவை என்பதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் அடிப்படை நோக்கம்.

1. ஒருபொருட்பலசொல்லும் பயன்பாட்டெல்லையும் குறிப்புப் பொருளும்

ஒருபொருட்பலசொற்கள் கருத்துப்பொருளில் (Designation) ஒத்திருந்தாலும் அவை குறிப்புப் பொருள் (Connotation), பயன்பாட்டெல்லை (Range of application) என்ற பொருட்கூறுகளில் வேறுபடும் இயல்புடையவை. குறிப்பிட்ட ஒருபொருட்பலசொல்லைப் பயன்படுத்தும் எல்லாச் சூழல்களிலும் அச்சொல்லின் பிற ஒருபொருட் பல சொற்களைப் பயன்படுத்த இயலாது. அதனால்தான் முழுமையான ஒரு பொருட்பலசொற்கள் மொழியில் இடம்பெறுவதில்லை ; அது அரிது எனும் கருத்து பொருண்மையியலாளரிடையே (Bloomfield, 1933 : 145) நிலவுகின்றது.

அணி, உடுத்து, கட்டு, சுற்று ; சூடு, பூண், போடு என்ற பல்வேறு ஒருபொருட்பலசொற்களும் ஒத்த ஒரே சீரான பயன்பாட்டை உடையன அல்ல. நகை என்பதோடு போடு, அணி என்பனவும் சேலை என்பதோடு கட்டு, உடுத்து, அணி, சுற்று என்பனவும் வேட்டி என்பதோடு கட்டு, உடுத்து என்பனவும் மாலை என்பதோடு சூடு, அணி, பூண், போடு என்பனவும் சட்டை என்பதோடு போடு என்பதும் சேர்ந்து வந்து ஒவ்வொரு ஒருபொருட்பலசொல்லும் வரையறுத்த பயன்பாட்டைப் பெற்றுள்ளன. இவ்வாறே மரணம், சாவு, இறப்பு, இறுதி (இறுதிக்காலம்), முடிவு (முடிவுகாலம்) என்பன மனிதர்களோடு சேர்ந்து வந்தாலும் இச் சொற்களைத் தாவரங்களோடு மரத்தின் மரணம், மரத்தின் சாவு, மரத்தின் இறப்பு எனப் பயன்படுத்துவதில்லை. இதேவேளையில் சாதல் என்பதைச் செடியுடன் சேர்த்துச் செடி செத்துவிட்டது எனப் பயன்படுத்த முடிகிறது. இவ்வாறே குறிப்பிட்ட ஒரு சொல் பொதுப்பயன்பாட்டில் இருந்தாலும் அது பிற ஒருபொருட்பலசொற்களைப் போன்று எல்லா இடங்களிலும் எல்லாப் பொருட் சூழல்களிலும் பயன்படுத்தப்படுவதில்லை. இறைச்சி, கறி, மாமிசம் எனும் மூன்றும் உணவுப்பொருளுடன் தொடர்புடைய நிலையில் ஆட்டுக்கறி, ஆட்டிறைச்சி, ஆட்டு மாமிசம் எனப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுடன் தொடர்புடைய சதை எனும் சொல் மாமிசம் எனும் சொல்லுடன் ஒத்திருந்தாலும்

கூட்டுச்சொல் உருவாக்கத்தில் இவற்றிடையே வேறுபாடு உள்ளது. மாமிசம் எனும் சொல் மாமிசமலை எனக் கூட்டுச் சொல்லாக உருவாவதைப் போல் சதை என்பதன் அடிப்படையில் சதைமலை எனும் கூட்டுச்சொல் உருவாவதில்லை. இதைப்போலவே சதை என்பது சதைப் பிடிப்பு, சதைப்பற்று, சதைபோடு என வரும் கூட்டுச் சொற்களில் மாமிசம் என்பதைப் பதிலீடு செய்யவியலாது. சதை, தசை என்பன இரண்டும் மாமிசம் என்பதிலிருந்து வேறுபட்டு 'அடிபட்டுக் கன்றிப் போன சதைப்பகுதி / தசைப்பகுதி' என muscle என்ற பொருளில் வருகின்றன இவ்வாறு இவ்விரண்டும் ஒத்துவந்தாலும் பிடிப்பு என்ற சொல்லுடன் இணைந்து வருகையில் இவை தம்முள் பொருளில் வேறு பட்டுள்ளன சதைப்பிடிப்பு என்பது சதை நிறைய இருக்கின்ற நிலை (forming of flesh, accumulation of flesh) என்ற பொருளில் வர, தசைப்பிடிப்பு தசையில் ஏற்படும் இறுக்கத்தால் வரும் வலி (cramp) என்ற பொருளில் வேறுபட்டு வருகின்றது. சதை, தசை எனும் இரு சொற் களிடையே இக்காலவழக்கில் இல்லாத சில வேறுபாடுகள் இருப்பதைச் சென்னைப் பல்கலைக்கழக அகராதிப் பதிவுகள் காட்டுகின்றன. தசை பழங்களின் சதைப்பற்று என்ற பொருளில் வந்துள்ளதையும் ; தசைபிடி, தசைப்பற்று என்பன சதைபிடிக்கை என்ற பொருளில் (Fleshness, Pulpi- ness) வந்துள்ளதையும் இந்த அகராதி பதிவுசெய்துள்ளது. இந்த அகராதியில் சதைப்பிடிப்பு என்ற பதிவு இல்லை சதைப்பற்று (Pulby part) எனும் பதிவே இடம்பெற்றுள்ளது. இவ்விரண்டும் மாமிசம் போல் 'மாமிசப்பட்சிணி' என்பதைப்போல் சதைப்பட்சிணி, தசைப் பட்சிணி என வருவதில்லை. இவற்றைப் போலவே இறைச்சி என்பது சில வட் டாரவழக்குளில் மாட்டிறைச்சியை மட்டுமே சுட்டப் பயன்படுத்தப்படு கின்றது இறைச்சிக்கு இணையான கறி எனும் சொல் 'மீன் இறைச்சி' என மீனுடன் இணைந்து மீனின் சதைப்பகுதி என்ற பொருளில் வரு வதில்லை. 'மீன்கறி' எனும் கூட்டுச்சொல் சில வட்டார வழக்குகளில் பயன்படுகின்றது; அது தொடுகறி எனும் பொருட் புலத்தினுள் அடங்கிக் கெட்டியாக வைக்கப்பட்ட ஒருவகைத் தொடுகறி எனும் பொருளில் வழங்குகின்றது. குறிப்பிட்டகால மொழிக்குள் மட்டுமல்ல காலந்

தோறுமான மொழி வழக்குகளிலும் ஒரு பொருட் பல சொற்களிடையே பலவித வேறுபாடுகள் உள்ளன.

இவ்வகைப் பயன்பாட்டுச் சூழல் வேறுபாடுகளைப் போலவே ஒவ்வொரு சொல்லும் பிற சொற் களுடன் சேர்ந்து கூட்டுச்சொல்லாக உருப்பெறுவதிலும் ஒருபொருட்பலசொற்களிடையே பலவித வேறு பாடுகள் உள்ளன. உடல், உடம்பு, தேகம், சரீரம் என்பன ஒருபொருட் பலசொற்களாக இருந்தாலும் இவற்றின் கூட்டுச்சொல்லாக்க முறைகள் வேறுபட்டனவாய் உள்ளன. உடல் என்பதன் அடியாய் உடல்உறவு, உடல்நலம், உடல்நிலை, உடற்கல்வி, உடற்கட்டு, உடற்கூற்றியல், உடற் பயிற்சி என்பனவும் தேகம் என்பதன் அடியாய்த் தேகக்கட்டு, தேகப் பயிற்சி என்பனவும் உருப்பெற, உடம்பு என்பதன் அடியாய் இவ்வகைக் கூட்டுச் சொற்கள் உருவாவதில்லை. தேகம் என்பது கூட உடல் என்ற சொல்லளவுக்குக் கூட்டுச்சொற்களை உருவாக்கவில்லை. *உடம்புறவு, *உடம்புநலம், *உடம்புக்கல்வி, *உடம்புப்பயிற்சி, *உடம்புக்கட்டு என உடம்பு என்ற சொல் கூட்டுச் சொல்லாக்கத்தில் பயன்படுத்தப்படுவதில் லை. இருந்தபோதிலும் உடம்புக்கு என்ன ? உடம்பைப் பார்த்துக் கொள், உடம்புக்கென்ன கேடு ! என்ற தொடர்களின் உருவாக்கத்தில் உடம்பு என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது ; உடல், தேகம் என்ற சொற்கள் இங்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

இவ்வாறு ஒருபொருட்பலசொற்கள் வெவ்வேறுபட்ட பயன் பாட்டெல்லைகளை, சொல்லிணைவு நிலைகளை உடையனவாய் உள்ளன. இந்தப் பயன்பாட்டெல்லைகள் குறிப்பிட்ட குறிப்புப் பொரு ளையும் தருவனவாய் உள்ளன. ஆசான், ஆசிரியர், குரு, வாத்தியார், வாத்தி என்பனவற்றில் ஆசான் என்ற சொல் தன் ஆசிரியர் மீது ஒருவர் பெருமதிப்பு வைத்துள்ளார் என்ற குறிப்புப்பொருளையும் கொண்ட தாய் உள்ளது. வாத்தி என்பது மதிப்பு குறைவான கொச்சைவழக்கு எனும் குறிப்பு உடையது. இத்தகைய வேறுபாடுகள் எல்லாம் கவனத் தில் கொள்ளப்பட்டே ஒருபொருட்பல சொற்களுக்கான அகராதிப் பதிவுகள் அமைக்கப்படவேண்டும்.

2. ஒருபொருட் பலசொல்லும் பொருள் வேறுபடுத்த நெறிமுறைகளும்

ஒரு அகராதியில் ஆயுதம் - கருவி, கருவி - ஆயுதம், சாதனம் - கருவி, தளவாடம் - ஆயுதம், கருவி, சாதனம் என ஒருபொருட் பல சொற்களை மட்டுமே பொருட்சொற்களாகத் தந்துவிட்டுப்போவதில் பயன் இல்லை. இன்றைய சூழலில் அகராதிகள் மொழித்திறன் வளர்ச் சிக்கான கருவிநூல்களாகவே பயன்படுகின்றன. அகராதிகள் ஒரு மொழியின் பயன்பாடு பற்றிய இயல்பான பல்வேறு பரிமாணங்களை யும் தந்தால்தான் அகராதிப் பயன்பாட்டாளர் அந்த மொழியை முழு மையாய்ச் சூழல் அறிந்து பயன்படுத்த முடியும். சொற்களின் இயல் பான பயன்பாடுகளை ஆவணப்படுத்த வேண்டியதே ஒரு அகராதியின் அடிப்படைப் பண்பு, அடிப்படை நோக்கம் என்பதால் ஒருபொருட்பல சொற்களின் பல்வேறுபட்ட பயன்பாட்டு வேறுபாடுகளும் அகராதிப் பதிவில் ஆவணப்படுத்தப்படவேண்டியது மிகமிக அவசியம். இந்த அகராதியியல் நடைமுறை பல்வேறு முறைகளில் தமிழ் அகராதியியல் மரபில் பின்பற்றப்பட்டு வளர்ந்து வந்துள்ளது.

1. குறிப்பான்களைத் (Labels) தருதல், 2. விளக்கக் குறிப்பு (Gloss) தருதல், 3. மேற்கோள் வழி வேறுபடுத்துதல், 4. கூட்டுச்சொற் களைப் பதிவுகளாய்த் தருதல் என்ற வழிமுறைகளில் ஒருபொருட் பல சொற்களுக்கு இடைப்பட்ட பயன்பாட்டு வேறுபாடுகள் அகராதிப் பதிவுகளில் காட்டப்படுகின்றன.

2. 1. குறிப்பான் தருதல்

பொட்டுக்கடலை, உடைத்த கடலை, பொரிகடலை என்பன வழக்குநிலையில் குறிப்பிட்ட வட்டார வேறுபாடுகளை உடையவை. மம்மு, சோச்சி, பூவா என்பன சோறு, உணவு, சாப்பாடு என்பனவற்றின் பயன்பாட்டிலிருந்து வேறுபட்டுக் குழந்தைப்பேச்சு எனும் வழக்கு வரையறை உடையவை. கடிதம், கடுதாசி என்பன முறையே உயர்வழக்கு, பேச்சுவழக்கு என்ற வேறுபாட்டை உடையன. மவுத்தாதல், மரித்தல்

என்பன முஸ்லிம் வழக்கு, கிறித்தவ வழக்கு என்ற மத வேறுபாட்டை உடையவை. ஒருபொருட்பலசொற்களின் இந்த வழக்கு வேறுபாடுகளை எல்லாம் பதிவில் குறிப்பிட்டுக் காட்டத் துறைக்குறிப்பான், தகுதிக் குறிப்பான், இடக்குறிப்பான் போன்ற குறிப்பான்கள் பயன்படுத்தப் படுகின்றன.

ஆய் – Excrement ; மலம். | Loc. Nurs. |

இசகுபிசகு – 1 Fix, awkward predicament... | Loc. |

2. Irregularity ; முறைகேடு ... | Loc. |

எகனை – by wrong analogy with மோனை

1. Rhym in Tamil ; எதுகை | Vul. |

எலியன் – Little boy ; பொடியன். | Loc. |

அர்ணாள் – | Vulg. for | அரைநாண்

தவக்களைக்காய் – 1. see தவளை, | Madr. |

கசட்டை – Astringency ; துவர்ப்பு | J. |

(சென்னைப் பல்கலைக்கழக அகராதி)

விறுவிறு என்று – | பே. வ. | வேகமாக

வீச்சம் - | வ. வ. | நாற்றம்

அருந்து - | உ. வ. | உணவு உண்ணுதல்

(க்ரியா அகராதி)

எனப் பதிவில் தரப்பட்ட குறிப்பான்கள் (கட்டங்களுக்குள் உள்ளவை) ஒரு சொல்லின் வழக்கு வேறுபாட்டை அறிய உதவுகின்றன. இவ்வாறே ஒரு சொல்லின் சொல்மூலம் வேறுபட்ட நிலையில்

வாய்தா – ◁ | U | Waida.

1. Instalment ; தவணை.

2. Due date; கெடு. Loc.

ஜவான் – ◁ | Persn. | Yavan

2. peon ; சேவகன்

3. Police constable ; போலீசுச்சேவகன். Mod.

எனப் பதிவில் காட்டப்பட்டு ஒருபொருட்பலசொற்களின் வேறுபாடு கள் காட்டப்பட்டுள்ளன.

2. 2. விளக்கக்குறிப்பு தருதல்

ஒருபொருட்பலசொற்கள் தம்முள் கருத்துப்பொருளில்/அடிப் படைப்பொருளில் ஒத்திருந்தாலும் அவற்றின் சொல்லாக்க அடிப்படை கள் வேறுவேறானவையாய் இருப்பது இயல்பு. நிகண்டுகளின் ஒரு பொருட் பலசொல் தொகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு ஒருபொருட் பலசொற்களுக்குள்ளும் இந்தச் சொல்லாக்க வேறுபாடுகள் இருப்பதை அவை வெளிப்படுத்துகின்றன. உந்தியிலுதித்தோன், மலர்மிசையோன், அன்னவூர்தி, அன்னமுயர்த்தோன், நான்முகன், மால்மகன், எண்கணன், வானவர்முதல்வன், மண்பொதுத் தந்தை, மறையோன், திசைமுகன், கமலயோனி, இரணியகருப்பன், படைப்போன் என்ற பல்வேறு பெயர்களும் பிரமனைக் குறிக்கும் ஒருபொருட்பலசொற்கள் (திவாகரம், நூற்பா 4). ஒரேபொருள் உடையனவாக இருந்தாலும் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரண அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ளன. உந்தியிலுதித்தோன் 'திருமாலின் கொப்புழ்த் தாமரையில் பிறந்தவன்' என்ற காரணத்தையும் மலர்மிசையோன் என்பது 'தாமரை மலரில் வீற்றிருப்பவன்' என்ற காரணத்தையும் அன்னவூர்தி என்பது 'அன்னத்தை வாகனமாகக் கொண்டவன்' என்ற காரணத்தையும் எண் கணன் என்பது 'எட்டு கண்களை உடையவன்' என்ற காரணத்தையும் உடையவை. இவ்வாறு ஒவ்வொரு ஒருபொருட்பலசொல்லும் கொண் டுள்ள காரணப் பொருண்மையைப் பதிவில் குறிப்பிடுவதன் மூலமும் ஒருபொருட்பலசொற்களின் வேறுபாட்டைப் பதிவில் காட்டலாம்.

கரும்பன்- மன்மதன், கருமபூமி - சுடுகாடு, கரைஞ்சான் - அகில், கலரவம் - குயில், கலங்கழிமடந்தை- கைம்பெண், கலாபி -ஆண்மயில் (தமிழ்ச்சொல்லகராதி) என வெறுமனே ஒருபொருட் பலசொற்களைப் பொருட்சொற்களாகத் தருவதைக் காட்டிலும் இந்தச் சொற்களின் உருவாக்கத்திற்குப் பின்னுள்ள காரணத்தைப் பின்வருமாறு பதிவில் தருதல் அவசியம்.

கரும்பன் – God of Love, who has a sugar-cane bow; கரும்பை வில்லாகவுடைய மன்மதன்.

கலன்கழிமடந்தை – Lit. Woman who has given up wearing ornaments; Widow; கைம்பெண்.

அரவாய்க்கடிப்பகை – Serrated leaf of the Margosa, as hostile to demoniac influence; அரம் போன்ற விளிம்புடைய வேப்பிலை.

அலழேந்தி – Siva, dancing with fire in his hand; சிவன்.

(சென்னைப் பல்கலைக்கழக அகராதி)

மேற்காட்டியவாறு பெயராக்கக் காரணத்தைக் குறிப்பிடுவதைப் போல் ஒருபொருட்பலசொல்லின் பயன்பாட்டு எல்லையையும் பதிவில் குறிப்பிட்டுக் காட்டவேண்டும். உடல், தேகம் எனும் இரு சொற்களில் உடலைப் போல தேகம் எனும் சொல் பரந்த பொருள் உடையது அன்று. உடல் மனிதருடன் விலங்கின் உடம்பையும் குறிக்கப் பயன் பட்டாலும் தேகம் மனிதர் உடலை மட்டுமே குறிப்பிடும் சொல்லாய்ப் பயன்படுத்தப்படுகின்றது. இதைப் பதிவில்

உடல் - 1. (மனிதனின் அல்லது விலங்கின்) முழு உருவம்.

தேகம் - (மனித) உடல். (க்ரியா)

எனப் பொருட்சொல்லுக்கு முன் அடைப்புக்குறிக்குள் இச்சொற்களின் பயன்பாட்டு எல்லையைக் குறிப்பிடல் வேண்டும். தீ, நெருப்பு என்ற இரண்டு சொற்களின் பயன்பாட்டுச் சூழல்களிலிருந்து வேறுபட்டு அக்கினி சில குறிப்பிட்ட பயன்பாட்டு எல்லையை உடையதாய் உள் ளது. இந்நிலையில் இதன் பயன்பாட்டு எல்லைக் குறிப்புடன்

அக்கினி - (பெரும்பாலும் சமயச் சடங்குகளில்) நெருப்பு.

அசதி - (வேலையால்) களைப்பு; (பலக்குறைவால்) சோர்வு.

அயர்ச்சி (உடல்) சோர்வு, களைப்பு; (மன) தளர்ச்சி.

களைப்பு - (வேலையால்) சோர்வு; (நோயால்) பலம் இழந்த நிலை.

(க்ரியா)

எனப் பதிவமைக்க வேண்டும்.

கைநனை என்ற சொல்லுக்கு உணவு உண்ணுதல் என்பது கருத்துப்பொருள் என்றாலும் இந்தச் சொல் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலைக் கொண்டதாய் உண், தின், சாப்பிடு போன்ற சொற்களிலிருந்து வேறுபட்டுள்ளது. இதை,

i fei d -¤jš Lit. to wet the hand.
To partake of food in another's house;
பிறர் வீட்டில் உணவு கொள்ளுதல்
(சென்னைப் பல்கலைக்கழக அகராதி)

எனப் பதிவில் காட்டுதல் அவசியம். சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் தரப்பட்டுள்ள இந்தப் பொருள் பிற ஒருபொருட் பல சொற்களின் பொருளிலிருந்து வேறுபட்டிருந்தாலும் இந்தச் சொல்லின் பண்பாட்டுச் சூழல் இந்த அகராதிப்பதிவில் முழுமையாக வெளிப்படவில்லை. இது வெளிப்படும் வகையில்,

கைநனை (ஒருவர் வீட்டில் உறவை நிலைநாட்டும் அல்லது உறுதிப்படுத்தும் முறையில்) உணவைத் தொடுதல், உணவு உண்ணுதல்

(க்ரியா)

என உரிய விளக்கக்குறிப்பைப் பதிவில் தருதல் வேண்டும். இதைப் போலவே கொட்டிக்கொள் என்ற சொல் குறிப்பிட்ட உணர்வு வெளிப்பாட்டை வெளிப்படுத்தும் இயல்புடையது. இந்தச் சொல்லுக்கு வெறுமனே உண்ணுதல் என்றோ சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் உள்ளபடி *கொட்டிக்கொள்(ளு)-தல்* 1. To gulp down in large quantities; நிரம்ப உண்ணுதல் என்றோ பொருளைத் தராமல்

கொட்டிக்கொள் - (வெறுப்புடன் கூறும்போது)
சாப்பிடுதல். (க்ரியா)

என விளக்கக்குறிப்பு தருதல் பொருள் தெளிவுக்கும் பயன்பாட்டுச் சூழல் அறிதலுக்கும் பயன்படும்.

2. 3. மேற்கோள் தருதல்

வேறுபட்ட பயன்பாட்டுச்சூழல்களே பொருள்வேறுபாட்டுக்கு அடிப்படை. ஒவ்வொரு சொல்லும் ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டுச் சூழலில் தான் பொருள் வேறுபாட்டைத் தருகிறது. சொற்களின் இந்தப் பயன்பாட்டுச்சூழல்கள் அகராதியின் ஒவ்வொரு பதிவிலும் தனியே குறிப்பிடப்படுவதில்லை. இந்தப் பயன்பாட்டுச்சூழல்களைக் குறிப்பிடு வதற்கான ஒரு வழியாகத்தான் மேற்கோள் தரும் முறை அகராதிப் பதிவமைப்பில் பின்பற்றப்படுகிறது. இந்த அகராதியியல் நெறிமுறைப் படியும் ஒருபொருட்பலசொற்களின் பயன்படுத்த வேறுபாடுகளைக் காட்டலாம்.

கொட்டிக்கொள் - (அனுபவித்துச் சாப்பிடுதல் என்ற
முறையில் அல்லாமல்) வயிற்றை நிரப்பிக்கொள்ளுதல்.
(க்ரியா)

என்ற பொருள் தெளிவாகப் புலப்படாத நிலையில் இதற்கெனத் தரப் பட்ட 'வேகவேகமாகக் கிடைத்ததைக் கொட்டிக்கொண்டு அலுவலகத் துக்குக் கிளம்பினேன்' என்ற மேற்கோள் பதிவில் தரப்பட்ட பொருளை மேலும் தெளிவாக்குகிறது.

உட்கொள் - (வாய் வழியாக உணவு முதலியவற்றை)
உள்ளே இறங்கச் செய்தல், சாப்பிடுதல் (க்ரியா)

இந்தப்பதிவில் தரப்பட்டுள்ள உணவு முதலியவற்றை என்ற விளக்கக் குறிப்பை விளங்கும் வகையில் உட்கொள்ளப்படும் பிற எவை என்பது மேற்கோளில் 'உட்கொண்ட உணவும் மருந்தும் ஒத்துக் கொள்ளவில்லை' எனத் தரப்பட்டுள்ளது. மீன் போன்றவை உண்ப தைக் குறிக்கவும் இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது என்ற குறிப்பை

யும் 'பெரிய மீன்கள் சிறிய மீன்களை உணவாக உட்கொள்கின்றன' என்ற மேற்கோள் தெளிவாக்குகிறது.

அன்னம், ஆகாரம், உண்டி, உணவு, சாதம், சாப்பாடு, சோறு என்பவை ஒருபொருட்பலசொற்களாக இருந்தாலும் இவற்றின் பயன்பாட்டில் பலவித வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறுபாடுகள் இந்தப் பதிவுகளில் தரப்பட்ட மேற்கோள்தொடர்களில் வெளிப்படுகின்றன.

அன்னம் – உணவு ; சோறு ; food, cooked rice.

வாழை இலையில் தும்பைப்பூப் போன்ற
அன்னம் படைத்து நெய் விட்டாள்.

ஆகாரம் - (திட, திரவ) உணவு ; solid, liquid food .

குழந்தைகளுக்குச் சத்தான ஆகாரம்
தரவேண்டும். நோயாளிகளுக்குக் கஞ்சி தான்
இரவில் ஆகாரம்.

உணவு - (உயிர்வாழ) உண்ணுவது ; சாப்பாடு ;
ஆகாரம் ; food.

சாப்பாடு - 1. (பொதுவாக) உணவு (குறிப்பாக) சாதம்;
(generally) food, (particularly) meal.

வேலைக்காரிக்கு மூன்று வேளையும்
சாப்பாடு போட்டு மாதம் முப்பது ரூபாய்
கொடுக்கிறேன். / இது இட்லி அரிசியா
சாப்பாட்டு அரிசியா.

சோறு - 1 உலையில் இட்டு வேகவைக்கப்பட்ட
அரிசி ; சாதம் ; cooked rice .

இரவுச் சாப்பாட்டுக்குச் சோறும் ரசமும்
போதும். / ஒரு பானைச் சோற்றுக்கு
ஒரு சோறு பதம் என்பது பழமொழி.

2. (பொதுவாக) உணவு ; (generally) food. *ஒரு*
வேளைச் சோற்றுக்கே வழி இல்லாமல்
திண்டாடுகிறான் (க்ரியா)

மேற்காட்டிய பதிவுகளில் தரப்பட்டுள்ள மேற்கோள்தொடர்கள் பொருட்சூழலு டன் ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் எவை என்பதையும் காட்டுகின்றன. 'திரவ உணவு, உணவு தானிய உற்பத்தி' என்ற சொல்லிணைவுகள் உணவு என்ற சொல்லுக்கு மட்டுமே உரியவை. இங்கு வேறு சொற்களைக் கையாள முடியாது. சாப்பாடு என்ற சொல் அரிசி என்ற சொல்லோடு சேர்ந்து சாப்பாட்டு அரிசி என வரும்போதுதான் சோறு என்ற பொருளில் வரும் என்ற குறிப்பை இந்த மேற்கோள் காட்டுகிறது. இவ்வாறு ஒருபொருட் பல சொற்களின் வரையறுத்த பயன்பாடுகளைச் சொல்லிணைவு (Collocation) நிலைகளைக் குறிப்பிட அகராதிகளில் மேற்கோள் பகுதி முழு மையாகப் பயன்படுத்தபடவேண்டும்.

2. 4. கூட்டுச்சொல் பதிவு

ஒவ்வொரு ஒருபொருட்பலசொல்லுக்கும் குறிப்பிட்ட சொல் லிணைவு வரையறை (Collocation restriction) உண்டு. இந்தச் சொல் லிணைவு வரையறைகள் கூட்டுச்சொல் உருவாக்க நிலையிலும் வெளிப் படுகின்றன. இந்தக் கூட்டுச்சொல்லாக்க நிலைகள் எல்லாம் பதிவுகளில் குறிப்பிட்டுக் காட்டத் தகுந்த சூழல்கள் அகராதிப்பதிவுகளில் இல்லை. ஒரு பொருட்பலசொற்களின் இந்தக் கூட்டுச்சொற்களைப் பதிவுகளாய்த் தருவதன் மூலம் ஒரு பொருட்பலசொற்களின் சொல்லிணைவு முறை களை அகராதிகளில் வெளிப்படுத்தலாம்.

மரணம், சாவு, இறப்பு என்ற மூன்று சொற்களில் மரணம் தொடர்பான மரணயோகம், மரணசூசம் என்பனவும் சாவு தொடர் பான சாவெடி, சாவெழுத்து என்பனவும் மட்டுமே தமிழ்ச்சொல்லகரா தியில் (1910) கூட்டுச்சொற் பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக்கழக அகராதியிலோ சாவு தொடர்பான சாவுக்காணிக்கை, சாவுக்காயம், சாவுசெத்தவன், சாவெழுத்து (நச்செழுத்து) என்பனவும் (க்ரியாவில் சாவுகிராக்கி, சாவுமணி என்பன மட்டும்), மரணம் தொடர் பான மரணக்களை (மரணக்குறி), மரணக்குறி, மரணக்கெடி (மரண பயம்), மரணகண்டசாஸ்திரம் (மரணக்குறிகளைக் கூறும் நூல்), மரண

கண்டி, (மரணகண்டசாஸ்திரம்), மரணகண்டிகை (மரணகண்ட சாஸ்திரம்), மரணகண்டிதம் (மரணகால நிர்ணயம்), மரணகாயம், மரண காலம், மரணசிட்சை (மரணதண்டனை , ஆயுள்வரையிலான சிட்சை), மரணசீவன் (இறக்கும் வாழ்வு), மரணசூதகம் (சாவுத்தீட்டு), மரண சேஷ்டை (மரணாவஸ்தை), மரணதண்டனை, மரணபத்திரம் (மரணசாசனம்), மரணபயங்கரம் (மரணபயம்), மரணயாகம், மரண யோகம், மரணவாக்குமூலம், மரணவேதனை, மரணஸ்தம்பனம் (மரணம் வராமல் நிறுத்திக்கொள்ளும் வித்தை), மரணசூசம் (மரண சௌசம்), மரணசௌசம் (சாவுத்தீட்டு), மரணாவஸ்தை என்பனவும் கூட்டுச் சொற்களாய்த் தரப்பட்டுள்ளன. இதைப் போலவே உள்ளம், நெஞ்சு, மனம் தொடர்பான கூட்டுச்சொற்களும் இந்த அகராதியில் பதிவு களாய்த் தரப்பட்டுள்ளன. உள்ளம் தொடர்பாக மிகச் சில சொற்களே இடம்பெற்றிருக்க நெஞ்சு தொடர்பான நெஞ்சகம், நெஞ்சடித்தல், நெஞ்சடைத்தல், நெஞ்சடைப்பான் (மாட்டுநோய் வகை), நெஞ்ச டைப்பு, நெஞ்சழி-தல் (மனம் நிலைகுலைதல்), நெஞ்சறிசுட்டு (குறிப்பிட் டவர்கள் தொடர்புடையவர்கள் மட்டுமே அறிந்து கொள்ளத் தகுந்த வகையில் பொருள் தரும் சுட்டு), நெஞ்சறை.(மார்புக்கூடு), நெஞ்சன் (துணிவுடையோன்), நெஞ்சாங்கட்டை(மார்பெலும்பு), நெஞ்சாங் குலை (மார்பு, ஈரற்குலை), நெஞ்சாங்குழி (தொண்டைக்குழி), நெஞ்சாங் கொழுந்து (நெஞ்சாங்குலை), நெஞ்சார, நெஞ்சாறல் (துக்கம்), நெஞ்சி டித்தல் (அச்சத்தால் இதயந்துடித்தல்), நெஞ்சிலேதெண்டல் (நெஞ்சு நோவுகை), நெஞ்சிற்பாரம் (துக்கம்), நெஞ்சுக்கட்டு (நெஞ்சுச்சளி), நெஞ்சுக்கண்டரை (உடம்பில் சிவப்பு இரத்தம் பாயும் பெரிய குழாய்), நெஞ்சுக்குத்து (மார்பு வலி), நெஞ்சுக்கோழை, நெஞ்சுகரித்தல் (நிரம்ப உண்டல், உணவு செரியாமை போன்ற காரணங்களால் வாந்தி உண்டா கும்படி தொண்டை கரகரத்தல்), நெஞ்சுகல-த்தல் (மனம் ஒன்றுபடுதல்), நெஞ்சுகாய்தல் (மனம் சோர்கை), நெஞ்சுச்சளி, நெஞ்சுத்தடுமம், நெஞ்சுத்தடுமல், நெஞ்சுத்தடுமன், நெஞ்சுத் துடிப்பு, நெஞ்சுத்துணிகரம் (மனத்துணிவு), நெஞ்சுத்துணிவு, நெஞ்சுதட்டு-தல் (அறைகூவுதல்), நெஞ்சு துடித்தல் (இரக்கங்கொள்ளுதல்), நெஞ்சுநெஞ்சென்றுகுத்து-தல்,

நெஞ்சுநோ, நெஞ்சுநோவு, நெஞ்சுப் பள்ளம் (நெஞ்சுக்குழி), நெஞ்சு பக்கிடுதல் (மனத்தில் அச்சம் தோன்றுதல்), நெஞ்சுபதறு-தல், நெஞ்சு புகை-தல், (நெஞ்சில் கோழை இன்றி இருமுதல்), நெஞ்சுபுண்ணா-தல் (மனம் நோதல்), நெஞ்சுரப்பு (நெஞ்சுரம்), நெஞ்சுரம் (மனதிடம்), நெஞ்சுருகு-தல், நெஞ்சுவட்டு-தல் (குமட்டுதல்), நெஞ்சுவலி, நெஞ்சு வறட்சி, (நெஞ்சில் கோழை இன்றி இருமுதல்), நெஞ்சுவிடுதூது, நெஞ்சுளு-த்தல் (மனம்முறிதல்), நெஞ்சுறைப்பு (தைரியம்), நெஞ்செரி-தல், நெஞ்செலும்பு, நெஞ்சைப்பிடி-த்தல் (கழுத்தைப் பிடித்தல்), நெஞ்சைப்பிள-த்தல், நெஞ்சொடுபுலத்தல் (அன்பற்ற காதலன் அல்லது காதலி இடம் செல்லும் மனத்துடன் புலவிகொண்டு காதலனோ காதலி யோ புலம்பும் ஒரு அகத்திணைத்துறை), நெஞ்சோர்மம் (மனத்துணிவு) என 57 கூட்டுச்சொற்கள் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. மனம் என்ப தற்கோ மனக்கசப்பு, மனக்கசிவு, மனக்கடினம் (நெஞ்சழுத்தம்), மனக் கண், மனக்கணக்கம் (மனத்துயர்), மனக்கறுப்பு (பகைமை), மனக்குருடு (அறிவின்மை) என்பன போன்று ஏறத்தாழ 168 கூட்டுச்சொற்கள் இந்த அகராதியில் பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன. இவ்வாறு தரப்படும் கூட்டுச்சொற் பதிவுகள் ஒருபொருட்பல சொற்களின் சொல்லிணைவு நிலைகளை அறியவும் அவற்றின் சொல்லாக்கமுறைகளை அறியவும் காலந்தோறுமான கூட்டுச்சொல்லாக்க வேறுபாடுகளை அறியவும் பயன்பாட்டாளருக்குப் பெரிதும் உதவுகின்றன. இராட்லர் (1834), வின்சுலோ (1862) அகராதிகளில் இவ்வகைக் கூட்டுச்சொற்கள் அந்தந்தப் பதிவுச்சொற்களைத் தொடர்ந்து துணைப்பதிவுகளாகத்(Sub entries) தரப்பட்டிருப்பது மொழிகற்றலில் இவை பெற்ற முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

3. பதிவுச் சிக்கல்கள்

இவ்வாறு ஒருபொருட்பலசொற்களுக்கான வேறுபடுத்த நெறி முறைகளைப் பின்பற்றுகையில் மிகுந்த கவனத்துடன் இந்தப் பதிவுக் கூறுகளை, பொருட்கூறுகளைப் பதிவில் தருதல் அவசியம். குறிப்பிட்ட நெறியை ஒருபொருட்பலசொற்களின் எல்லாப் பதிவுகளிலும் கட்டா

யம் பின்பற்றுதல் வேண்டும். இல்லையேல் தெளிவைத் தரவேண்டிய அகராதியே குழப்பத்திற்கும் காரணமாகிவிடும்.

3. 1. எல்லா ஒருபொருட்பலசொல் பதிவுகளிலும் மேற்கோள் தருதல்

கொட்டிக்கொள் (ளு)-தல் 1. To gulp down in large quantities; நிரம்ப உண்ணுதல்.

எனச் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் உள்ளவாறு பொருளை மட்டுமே தந்துவிட்டு உரிய மேற்கோளைத் தராமல் போவது பதிவுச் சொல்லின் உரிய பயன்பாட்டுச்சூழலைப் பயன்பாட்டாளர் அறியத் துணைபுரியாது.

· கைநனைத்தல் – To partake of food in another's house; பிறர் வீட்டில் உண்ணுதல்.

எனப் பகுதி நிலையில் மட்டுமே பொருளைத் தந்துவிடும் சூழலில் உரிய மேற்கோள் தரப்பட்டிருந்தால் சொல்லின் பயன்பாட்டுச்சூழல் வழி எஞ்சிய பொருட்கூறைப் பயன்பாட்டாளர் பெற்றுக்கொள்வார்; இல்லையேல் பொருள் முழுமையற்றதாகவே அமைந்துவிடும்.

உண்டி - உணவு, சாதம் - சோறு என, க்ரியா அகராதியில் தந்துள்ளபடி வெறும் ஒருபொருட் பலசொல்லை மட்டுமே தந்து விட்டுப் போவதில் பயன் ஏதும் இல்லை. ஒருபொருட்பலசொற்களாக இருந்தாலும் அவை வேறுபட்ட பயன்பாட்டு வரையறைகளை, சொல் லிணைவு நிலைகளை உடையவை என்பதைக் கவனத்தில் கொண்டு மேற்கோள் தருதல் மூலமாகப் பயன்பாட்டு வரையறைகளைப் பயன் பாட்டாளருக்கு உணர்த்தவேண்டும். உண்டி உயர்வழக்காய் இருக்கும் நிலையில் இன்றைய பொதுவழக்கில் இருக்கும் சிற்றுண்டி, சிற்றுண்டிச் சாலை என்ற கூட்டுச்சொற்களில் பயன்பட்டாலும் தனிச் சொல்லாய் இக்கால வழக்கில் எந்தச் சூழலில் ஆளப்படுகிறது என்பதைக் காட்ட மேற்கோள் தருதல் அவசியம்.

3. 2. பொருட்சொல் சிக்கல்

ஒருபொருட்பலசொற்கள் பொருட்சொற்களாகத் தரப்படும் பொழுது அவை ஒத்த பொருட்சூழலில் பயன்படுத்தத் தகுந்தனவா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டே தருதல்வேண்டும். க்ரியா அகராதியில் சாப்பாடு என்ற பதிவில் '(குறிப்பாக) சாதம்' என்ற பொருளும் அதற்கு 'இட்லி அரிசியா சாப்பாட்டு அரிசியா' என்ற மேற்கோளும் தரப்பட்டுள்ளது. இந்த மேற்கோளில் உள்ளபடி சாப்பாடு என்ற சொல் அரிசி என்ற சொல்லுடன் சேர்ந்து வரும் சூழலில், உணவு பரிமாறும் சூழலில் 'கொஞ்சம் சாப்பாடு போடு' எனக் கூறுகையில் சோறு என்ற பொருளில் வரும். எனவே இந்தச் சூழல் பற்றிய தகவல் விளக்கக் குறிப்பாய்த் தரப்பட்டிருக்க வேண்டும். Cooked rice என்ற பொருளில் மட்டுமே வரும் எனச் சாதம் என்ற சொல்லுக்குப் பொருள் தந்து விட்டுச் சாப்பாடு என்ற பதிவில் சாதம் என்பதைப் பொருட்சொல்லாய்த் தந்திருப்பது பொருத்தமாயில்லை. ஆங்கிலப் பொருள் வேறு '(particularly) meal' எனத் தரப்பட்டுள்ளது. இவ்வாறே சோறு எனும் பதிவில் உணவு என்ற பொருளும் 'ஒருவேளைச் சோற்றுக்கே வழி இல்லாமல் திண்டாடுகிறேன்' என்ற மேற்கோளும் தரப்பட்டுள்ளது. இந்த மேற்கோளில் சாதம் என்பதைப் பதிலீடு செய்ய இயலாது; ஆனால் ஒருவேளை உணவு, ஒருவேளை சாப்பாடு என்பனவற்றைப் பதிலீடு செய்ய இயலும். எனவே சாப்பாடு என்ற பதிவில் சாதம் என்ற சொல்லுக்குப் பதில் இந்தச் சொல்லைவிட விரிந்த பயன்பாட்டில் வரும் சோறு என்பதை ஒருபொருட்பலசொல்லாய்த் தந்திருக்கலாம். சாதாரணமாகப் பேச்சு வழக்கில் சோத்தரிசி(சோற்றரிசி) எனக் குறிப்பிடும் வழக்கம் உள்ளதும் இங்குக் கவனிக்கப்பட வேண்டும்.

சுற்றம் - உறவு, சொந்தம் ; relation.

எங்கள் திருமணத்திற்குச் சுற்றம்சூழ
வந்திருந்து ஆசீர்வதிக்க வேண்டும்.

இந்தப் பதிவில் தரப்பட்டுள்ள உறவு, சொந்தம் என்ற ஒரு பொருட் பலசொற்களைப் பதிவில் உள்ள மேற்கோள் தொடரில்

பதிலீடு செய்ய இயலாது. சுற்றம் என்ற சொல் மட்டுமே இந்தப் பயன் பாட்டுச் சூழலுக்குப் பொருத்தமானது. இந்த மேற்கோள் தொடரில் உறவினர் சூழ, சுற்றத்தார் சூழ, சொந்தங்கள்சூழ என்பனவற்றைப் பதிலீடுசெய்ய இயலும். சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் சுற்றம் என்பதற்குச் சுற்றத்தார் எனப் பொருள் தரப்பட்டுள்ளதையும் இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே இந்தப் பதிவில் உறவினர், சுற்றத்தார், சொந்தங்கள் என்ற சொற்களைப் பொருட்சொற்களாகத் தந்திருக்க வேண்டும்.

3. 3. சொல்லின் அனைத்துப் பயன்பாடுகளும் பொருள் வரையறையும்

ஒருபொருட்பலசொற்களின் பயன்பாட்டுச்சூழல்கள் அனைத் தையும் திரட்டாமல், அறியாமல் அவற்றின் பொருளை வரையறுப் பதிலும் சிக்கல்கள் உண்டு.

தின் - 1. (விலங்கு இரை) உட்கொள்ளுதல்/ (மனிதர்களின் செயலாகக் குறிப்பிடும்போது) (பழம், முறுக்கு போன்ற பொருள் களைப் பல்லால் கடித்து) சாப்பிடுதல் எனும் இந்தப் பதிவின் பொருள் வரையறையில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் பழம் முறுக்கு போன்றவை, பல்லால் கடித்து சாப்பிடுதல் என்ற விளக்கக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன. பழம் சாப்பிட்டான், முறுக்கு சாப்பிட்டாள் என்ற பயன்பாட்டுச் சூழல்களுக்கு இந்தக் குறிப்புகள் தரப்படுவதில்லை. ‘மாடு தீனி சாப்பிட்டுவிட்டதா பார்’ என விலங்குகளுக்குச் சாப்பிடுதல் என்ற சொல்லைப் பயன்படுத்தும் வழக்குச் சூழல்களும் உண்டு. அவன் சோறு தின்கிறான் என்பது இன்றைய இயல்பான பயன்பாடு. எனவே தின் என்ற பதிவில் ‘(மனிதர்) உணவு, தின்பண்டம் போன்றவற்றை உண் ணுதல்’ எனப் பொருள் தருதலே இயல்பானது.

அன்னம் - உணவு ; சோறு ; food; cooked rice.

தும்பைப் பூப் போன்ற அன்னம் படைத்து
நெய்விட்டாள்.

இப்பதிவில் அன்னம் என்பதற்கு ‘உணவு’ பொருட்சொல்லாய்த் தரப்பட்டுள்ளது. தரப்பட்டுள்ள மேற்கோள் (தும்பைப் பூப் போன்ற அன்னம்) பதிவில் தரப்பட்டுள்ள சோறு என்ற ஒருபொருட் பல சொல் லுக்கே பொருத்தமானது. உணவு என்ற சொல்லுக்கு இணையாகவும் இந்தச் சொல் பயன்படுத்தப்படுவதற்கு ‘அன்னதானம்’ எனும் இந்த அகராதிப்பதிவே சான்று. இந்த அகராதியில் பதிவாக இடம்பெற்ற இந்தக் கூட்டுச்சொல்லின் அடிப்படையில் அன்னம் என்ற சொல் உணவு என்ற பொருளிலும் வரும் என்பதைப் பயன்பாட்டாளர் விளங்கிக்கொள்வார். ஆனால் தீ, நெருப்பு போன்ற பதிவுச்சொற்கள் பதிவில் தரப்பட்டுள்ள பொருளோடு வேறுபொருளிலும் வரும் என்பதற்கு இந்த அகராதிப்பதிவுகளே சான்றுகளாக இருந்தாலும் உரிய அந்தப் பொருள் பதிவில் தரப்படவில்லை. தீ, நெருப்பு இரண்டும் fire coal என்ற பொருளிலும் வரவல்லன. இதற்கு இந்த அகராதிப் பதிவும் இக்கால மொழிவழக்கும் சான்றுகளாக உள்ளன. ‘தீமிதி’ (த்தல்) என்பது இந்த அகராதியில் பதிவாக உள்ளது. இதைப் போல் ‘நெருப்புக்கோழி’ என்ற பதிவும் இந்த அகராதிப் பதிவாய் இடம் பெற்றுள்ளது. இந்த இரண்டு இடங்களிலும் தீ, நெருப்பு எனும் இரண் டும் fire coal என்ற பொருளிலேயே வருகின்றன. இக்காலப் பேச்சு வழக்கில் ‘பக்கத்து வீட்டிலிருந்து நெருப்பு வாங்கிவந்து அடுப்பு மூட்டி னாள்’ என்ற வழக்கும் ‘தீயை / நெருப்பை மிதித்துக் காலில் கொப்புளம் வந்து விட்டது’ என்ற வழக்காறும் உண்டு. இந்த பயன்பாட்டுச் சூழல்களில் தீ, நெருப்பு இரண்டும் fire coal என்ற பொருளிலேயே வரு கின்றன. எனவே இந்த இரண்டு பதிவுகளிலும் தீக்கங்கு என்ற பொருள் தரப்பட்டிருக்கவேண்டும். இவ்வாறே கொட்டிக்கொள் எனும் சொல் ‘என் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக் கொள்கிறாய்’ என வரும் பயன் பாட்டுச்சூழலும் உண்டு. இவை ஒருபொருட்பலசொல் பொருள் வரை யறையில் ஒருபொருட்பலசொற்களின் முழுமையான பயன்பாட்டுச் சூழல்களைப் பயன்கொள்ளவேண்டுவது அவசியம் என்பதை உறுதிப் படுத்துகின்றன.

4. ஒருபொருட்பலசொற்களை வேறுபடுத்திக் காட்டும் அகராதி யியல் நெறி தமிழ் இருமொழி அகராதி மரபு தொட்டுப் பேரளவில் கைக் கொள்ளப்பட்டுவந்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் முழுமையாய் அன்றி மிகுதியாய்ப் பின்பற்றப்பட்ட இந்த நெறி க்ரியா அகராதியில் குறிப்பிட்டுச்சொல்லத் தகுந்த வளர்ச்சியை அடைந்துள் ளது.

ஒருபொருட்பலசொற்களின் பதிவமைப்பு நெறிகளைத் திட்ட மிடுகையில் பொருள்வேறுபடுத்த நோக்கங்களும் கவனத்தில் கொள்ளப் பட்டே தரவுகளும் திரட்டப்படவேண்டும். திரட்டப்பட்ட தரவுத் தொகுப்பிலிருந்து ஒருபொருட்பலசொற்களின் தொகுதி தனியே திரட் டப்பட்டு ஒப்பீட்டு அடிப்படையில் பொருட்களும் பொருட் சூழல்களும் சொல்லிணைவுநிலைகளும் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

சோறு சாப்பிட்டான், சாதம் சாப்பிட்டான், சாப்பாடு சாப்பிட் டான் என்ற சூழல்களில் சோறு, சாதம் எனும் இரண்டும் வெறும் சோறு மட்டுமே அல்ல; இவை சாப்பாடு என்பதற்கு இணையான வையே. மதியம் என்ன சாப்பாடு என்பதற்கு இட்லி, தோசை, சப்பாத்தி, சோறு எனும் எதுவும் பதிலாக இருக்கலாம். காரணம் இங்குச் சாப்பாடு என்பது உணவு என்பதற்கு இணையான பயன்பாடாய் உள்ளது. தயிர் சாதம், தயிர்ச்சோறு, தயிர்சாப்பாடு என்ற பயன்பாடுகளைப் போல் தயிர் உணவு என்ற பயன்பாடு இல்லை. இவ்வாறு ஒவ்வொரு சொல்லும் தம்முள் வேறுபட்டிருக்கும் சூழலில் பல்பொருட்சொற்களாக வரும் ஒருபொருட்பலசொற்களின் பொருள்வேறுபடுத்தத்திற்கான மிகுதி யான பரந்துபட்ட பயன்பாட்டுச்சூழல்களுடனான தரவுகள் மிகமிக அவசியம்.

தாய்மொழியாளனின் உள்ளுணர்வு மட்டுமே ஒருபொருட்பல சொல்லின் முழுமையான பயன்பாட்டை, பொருளைத் தீர்மானித்து விடாது. எனவே வளமான தரவுகளும் அவசியம். எழுத்துத் தரவுகளி லிருந்து மட்டுமல்ல பேச்சுவழக்கிலிருந்தும் தேவையான தரவுகள் திரட்

டப்பட்டாக வேண்டும். தரவுகளின் அடிப்படையிலும் உள்ளுணர்வின் அடிப்படையிலும் ஒருநேரத்தில் தோன்றும் பொருள் பிறிதொரு நேரத் தில் வேறுபடவும் வாய்ப்புள்ளது. எனவே திரட்டப்பட்ட ஒருபொருட் பலசொல் தரவுகள் தாய்மொழியாளர் பலருடைய உள்ளுணர்வுடன் ஒத்துச்செல்கின்றனவா என்பதையும் பரிசோதித்து அறிதல் அவசியம். முன்னகராதிப் பதிவுகளும் அவற்றின் பொருள் வேறுபடுத்த நெறிகளும் இங்குக் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஒருபொருட்பலசொல் பற்றிய ஆய்வுகளும் பயன்கொள்ளப்படவேண்டும். எதிர்காலத்தில் ஒரு பொருட்பலசொல் பற்றிய வளமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

துணை நூல்கள்

சுப்பிரமணியன். பா. ரா., (முதன்மை ஆசிரியர்), 1992, **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி**, க்ரியா, சென்னை.

டபிள்யூ. கதிரை வேற்பிள்ளை, சி., 1999, **தமிழ்ச் சொல்லகராதி – மூன்று தொகுதிகள்**, மறுபதிப்பு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

சண்முகம்பிள்ளை, மு., 1990, **திவாகரம் – முதல்தொகுதி**, இ. சுந்தரமூர்த்தி (ப. ஆர்.), சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை.

Bloom field, L., 1933, **Language**, Holt, Rienchart, New York.

Tamil Lexicon, Vol. 1- 6, 1982, Reprint, University of Madras, Madras.

Zgusta, L., et.al., 1971, **Manual of Lexicography**, Mouton, The Hague.

சமூக வரலாற்று நோக்கில் வெட்டியும் முட்டாளும்

ஒய். சுப்பராயலு

வெட்டி

வெட்டி என்ற சொல்லுக்கு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியில் பயனின்மை என்ற பொருள் தரப்பட்டுள்ளது. மேலும் இது வ்யர்த என்ற வடமொழிச் சொல்லோடு ஒப்பிடுக என்று குறிப்புள்ளது. அதாவது வ்யர்த என்ற சொல்லிலிருந்து வெட்டி பிறந்திருக்கலாம் என்பது குறிப்பு. வெட்டிக்கு பழையவரி என்ற பொருளும் கொடுக்கப் பட்டுள்ளது. இவ்வகராதியில் வெட்டியை வேறு பல சொற்களோடு சேர்த்து கூட்டுப் பெயராகவும் தரப்பட்டுள்ளது (பக்கம் 3769 - 70)

வெட்டிக்காசு	
வெட்டிச்சோறு	
வெட்டிவரி	பழையவரி
வெட்டிப்பாட்டம்	
வெட்டிப்புடவை	

வெட்டிமை	வெட்டியான் ஊழியம்
வெட்டியான்	கிராம ஊழியன் , சவஞ்சுடுவோன்

வெட்டிப்பேச்சு	வீண்வார்த்தை
வெட்டிவேலை	பயனற்ற காரியம்

மேலே உள்ள சொற்களில் (வெட்டிப்பேச்சு, வெட்டிவேலை) ஆகியன இன்று வழக்கில் உள்ளவை. இன்று வழக்கில் உள்ள வெட்டியான் கல்வெட்டிலும் உள்ளது. மற்றவை கல்வெட்டுக்களில் மட்டும் வருபவை. 9ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை உள்ள நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களில் இச்சொற்கள் ஆளப் பட்டுள்ளன. அவையாவும் பழைய வரி என்று குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே வெட்டிக்கு பயனின்மை என்ற இன்றைய பொருள் ஒரு முரண் பாடாக உள்ளது.

உண்மையில் வெட்டி என்பதன் முதன்மைப் பொருள் உழைப்பு என்பதாகும். இச்சொல் விஷ்டி என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் உருவம் ஆகும். விஷ்டி குடிகள் அரசனுக்கு அல்லது நில உடைமை யாளருக்குச் செலுத்தும் உழைப்பு என வரலாற்றாசிரியர்களால் கொள்ளப்படுகிறது [1] பெரும்பாலும் இது கட்டாய உழைப்பு ஆகும்[2] தமிழ்க் கல்வெட்டுக்களில் இது வரிச்சொற்களுள் ஒன்றாக வருகிறது என்பதை இணைப்பில் உள்ள சான்றுகளிலிருந்து அறியலாம். இது ஓர் இறை அல்லது கடமை [3] அதாவது ஓர் அரசாங்க வரி என இச்சான்று களில் சுட்டப்படுகின்றது. உழுகுடிகள் (அல்லது குடிகள்) இதைச் செலுத்துவதாகவும் குறிக்கப்படுகிறது. ஆகவே அது குடிமை என்றும் (11ஆம் நூற்றாண்டிலிருந்து) பெயர்பெற்றது (இணைப்பு, எண். 5, 7).[4] வெட்டி என்பது கட்டாய உழைப்பாக இருப்பினும், நீர்நிலைகள், கால்வாய் முதலியவற்றைப் பராமரிக்கும் வெட்டி வேலையைச் செய்தவருக்கு (வெட்டியார்) வெட்டிப்பேறு அல்லது வெட்டப்பேறு என்ற மானிய நிலம் ஊர் நிலக்கிழார்களால் ஒதுக்கப்பட்டிருந்தது.[5] வெட்டியார், உழுகுடிகள் ஆகிய சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன [6] இவை சோழர் காலத்தில் (13ஆம் நூற்றாண்டு முடிய) பன்மையிலேயே பெரும்பாலும் ஆளப்பட்டுள்ளன. அதற்குப் பின் வெட்டியான் என்று ஒருமையிலும் சில கல்வெட்டுக்களில் காணப்படுகிறது (இணைப்பு, எண். 11); அங்கு ஊர்ப் பொது ஊழியன் என்ற பொருளில் வருகிறது.

முட்டையாள், முட்டாள்

முட்டையாள் என்ற சொல் பெரும்பாலும் கல்வெட்டுக்களில் (இணைப்பு, எண். 4 - 7, 14 - 15) வெட்டியைத் தொடர்ந்து வருவதால் இரண்டு சொற்களையும் சேர்த்து வெட்டி-முட்டையாள் என்ற கூட்டுச் சொல்லாகக் கொள்ளவும் வாய்ப்புண்டு. ஆனால் இவை பிரிந்துத் தனியாகவும் வருகின்றன. முதலில் (12ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பகுதி வரை) முட்டையாள் என்றும், அதைத் தொடர்ந்து முட்டாவாள் எனவும், 16ஆம் நூற்றாண்டில் முட்டாள் என்றும் வழங்குவதைப் பார்க்கிறோம். சிலபோது சுருக்கமாக முட்டி என்றும் ஆளப்படுகிறது.

ஆள் என்ற விகுதியிலிருந்து முட்டையாள் ஆட்கள் செய்யும் வேலையை, அதாவது உழைப்பைக் குறித்தது என்பதை ஊகிக்கலாம். இதுவும் உழுகுடிகள் செலுத்துவதாகச் சொல்லப்படுகிறது. இதேபோல உழைப்பாகச் செலுத்தும் வேறு இரு வரிகளும் ஆள் விகுதி கொண்டுள் ளன : காட்டாள், நெட்டாள். பொதுவாக, இடைக்காலத்தில் ஆள் என்ற சொல் ஏவல் வேலையைச் செய்பவர், அடிமை ஆகிய பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (இணைப்பு, எண். 10). முட்டாவாள் என்ற வடிவத்தை முட்டா ஆள் என்று பிரித்து, தொடர்ந்து பணிசெய்யும் ஆள் என்று கொள்ளலாம். நெட்டாள் (நெடுமை ஆள்) ஏறக்குறைய இதே பொருளைத் தரும். ஆயினும் முதல் வடிவமான முட்டையாள் இதே போல் பிரிந்து பொருள் தருமா என்பது சந்தேகம். அதை முட்டு ஆள் எனப் பிரித்துத் துணையாக அல்லது ஆதாரமாக உள்ள ஆள் என்று பொருள் கொள்ள வாய்ப்புண்டு. எப்படிக் கொண்டாலும் முட்டையாள் உழைப்பு செய்யும் ஆள் என்பதில் சிக்கலில்லை. இச் சொல்லின் இறுதித் திரிபே முட்டாள்.

முட்டாளுக்கு தமிழ் அகராதியில் (ப 3237) மூடன், அறிவில்லா தவன் எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இன்று இப் பொருள் வழக்கிலும் உள்ளது. ஆயினும் இச்சொல்லின் பிறப்பு பற்றிய குறிப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மூட என்ற வட சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் என்று நினைத்து, மூட முதலில் முட்டன் ஆகி

அதிலிருந்து முட்டாள் வந்தது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவதாக, முட்டு ஆள் என்று பிரித்து வாகனத்தைத் தாங்கும் பிரதிமை என்ற ஒரு பொருளும், கொத்துவேலைச் சிற்றாள் என்று இன்னொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளன. கொத்துவேலைச் சிற்றாள் என்ற பொருள், பணவிடு தூது என்ற சிற்றிலக்கியத்தில் வரும். செங்கலுக்கு நீறெடுத்து முட்டாளாய் நிற்பாரும் என்ற அடியிலிருந்து பெறப்பட்டுள்ளது. இந்தப் பொருள் உழைப்பு தரும் ஆள் என்ற பொருளோடு தொடர்புடையதைக் காணலாம்.

மேலே குறிப்பிட்ட செய்திகளிலிருந்து வெட்டி, முட்டாள் இரண்டுமே உழைப்பு மற்றும் உழைக்கும் ஆள் ஆகியவற்றைக் குறித்தன என்பது தெளிவு. காலப்போக்கில் அதே சொற்கள் முறையே பயனற்ற செயல், அறிவில்லாதவன் என்னும் பொருள்களைப் பெற்றதன் அடிப்படை என்ன? வெட்டி என்பது கட்டாய உழைப்பு ஆதலால் பெரும்பாலும் ஊதியம் பெறாத உழைப்பு என்று கொள்ள இடமுண்டு. ஆகவே அந்த உழைப்பு செய்பவனுக்கு அதனால் எந்தப் பலனுமில்லை. இந்தக் காரணத்தினால் வெட்டி பயனற்ற சொல் என்ற கருத்துக்கு இடம் கொடுத்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் முட்டையாள் அல்லது முட்டாளுக்கு இப்படி ஒரு விளக்கம் கொடுக்க இயலாது.

சமூக வளர்ச்சிப் பார்வையில் இந்தப் பொருள் மாற்றத்துக்கு விளக்கம் தரலாம். உலகில் பரவலாக பண்டைக்காலத்தில் நாகரிகம் பெற்ற சமூகங்களில் ஆள்பவர் ஆளப்படுபவர் என்ற இருவேறு படி நிலைகள் இருந்தன. ஆள்பவர் (அரச குலம், படைத்தலைவர், நிலக் கிழார், பெருவணிகர்) தங்களுக்குக் கீழ் இருந்த ஆளப்படுபவரைத் தாழ்த்திப் பார்ப்பது இயல்பாக இருந்தது. இந்தப் போக்கு சில நாடுகளில் நாளடைவில் வளர்ந்து வந்ததையும் காண்கிறோம் இந்தியாவில் வருணாசிரமக் கோட்பாடு வேரூன்றிய நிலையில் நான்காம் வருணத்தினரும், வருணங்களிலிருந்து புறந்தள்ளப்பட்டவரும் மேல் வருணத்தாரால் தாழ்வாக நினைத்து, நடத்தப்பட்டனர் என்பது வரலாற்றுண்மை.[7] குறிப்பாக, கி.பி. 3-4ஆம் நூற்றாண்டு முதல் மனு முதலிய

தர்மசாத்திரங்கள் வருணாசிரமக் கருத்தியலை முறைப்படுத்தி ஆள்பவருக்குத் துணை செய்தன. சாதிச் சமூக வளர்ச்சிக்கு இக்கருத்தியல் தூண்டுகோலாக அமைந்தது. தமிழ்நாட்டில் 10 -13ஆம் நூற்றாண்டுகளில் சாதிச் சமூகம் முழுமையடைந்தது. அந்த நிலையில் உடல் உழைப்பு தாழ்வு என்ற எண்ணம் வளரத்தொடங்கியது. உழைப்பவர் கீழ் சாதியினராக வெறுத்தொதுக்கப்பட்டனர். இந்தக் கருத்தியல் வளர வளர உழைப்பு குறித்த சொற்கள் இழிவான பொருளைப் பெற்றன. உழைப்பவர் இழிவானவர், அறிவில்லாதவர் என்று கருதப்பட்டனர். இந்தச் சமூக வளர்ச்சியின் வெளிப்பாடே வெட்டி, முட்டாள் போன்ற சொற்களின் பொருள் திரிபு என்றால் தவறாகாது.

இன்று தமிழ் மொழிக்கு உள்ள நிகண்டுகளும், அகராதிகளும் வரலாற்று முறையில் அமைக்கப்படாமையால் சமூக வரலாற்றுக்கு அவை அவ்வளவாகப் பயன்படுவதில்லை. பழம் நிகண்டுகளிலிருந்து சொற்கள் வழங்கிய சமூகச் சூழலை சிறிதும் அறிய இயலாது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி ஓரளவே இக்குறையை நீக்குகிறது. அண்மையில் வெளியான சாந்தி சாதனாவின் வரலாற்று முறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி (2001 - 2003) வரலாற்று முறையை மேற்கொண்டுள்ளது. அது முதல் முயற்சியே. அதைப் பின்பற்றி ஒரு முழுமையான வரலாற்றுமுறைத் தமிழ் அகராதி உருவாக்கலின் தேவையை இச் சிறு கட்டுரை உணர்த்தும்.

<u>அடிக்குறிப்பு</u>

1) D.C. Sircar, Indian Epigraphical Glossary, Motilal Banarsidas, Delhi, 1966, p.379. R.S. Sharma, Aspects of political institutions in Ancient India 3rd ed., Motilal Banarsidas, Delhi, 1991, pp. 218, 313, 382, 387. வட இந்தியாவிலும் வெட் என்ற சொல் வழக்கில் உள்ளது. மேலது, ப 29.

2) இக்கட்டாய உழைப்பு 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் குடிகள் மீது மிகுந்த பளுவாக இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. (இணைப்பு எண். 10).

3) இங்கு இறை, கடமை ஆகியன பொதுப்பெயராக வருகின்றன. பார்க்க : அடிக்குறிப்பு 4.

4) இடைக்காலத்தில் நிலவரி கடமை, குடிமை என இரண்டு பெரும் பிரிவுகளாக இருந்தது. கடமை நிலக்கிழார் தங்கள் நிலத்தின் பேரில் செலுத்தும் வரி ; பொதுவாக இது விளைவில் மூன்றில் ஒரு பங்கு ஆக இருக்கும். நிலத்தை உழுது பயிரிடும் குடிகள் அரசுக்கும் உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கும் (பெரும்பாலும் உழைப்பாக) செலுத்தும் வரிகள் தொகுதி குடிமை ஆகும். நிலக்கிழாரே தம் நிலத்தை உழுது பயிரிட்டால் கடமை, குடிமை இரண்டையும் அவரே செலுத்த வேண்டும் இறை, கடமை ஆகிய இரு சொற்களும் பொதுப்பெயராக வழங்கும் பொழுது அவை வரி என்ற பொருளிலும், சிறப்புப் பெயராக வழங்கும் பொழுது முக்கிய நிலவரியையும் குறித்தன.

Y. Subbarayalu, 'kudimai an Aspect of the Cola Revenue System', Studies in Cola History, Surabhi patippakam, Chennai, 2001,pp.60-64.

5) தெக, 8 : 689

6) பேரிளமையார் என்ற சொல்லும் இவற்றுக்கு இணையாக ஆளப்பட்டுள்ளது. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, தொகுதி 2, சாந்தி சாதனா, சென்னை, 2003, ப455.

7) R.S. Sharma, Sudras in Ancient India, 2nd ed., Motilal Banarsidass, Delhi, 1980.

இணைப்பு

1. தெக, 3 : 12 (கி. பி. 941) இவ்வூர் ஏறின குடிகளை வெட்டியும் வேதினையும் வாலக்காணமு கொள்ளப்பெறாதோமாகவும்

2 தெக,3 : 27 (கி.பி. 950) இன் நிலம் சுட்டி இறை எச்சோறு வெட்டி வெயதிகாணம் எப்பேர்ப்பட்டதும் காட்ட பெறாதோம்

3. தெக, 4 : 555 (1049) இன் நிலம் உழுங் குடிகளை சில்லிறை சோறுமாட்டும் வெட்டி அமைஞ்சியும் உள்ளிட்டன எப்பேர்ப்பட்ட இறைகளும்

4 தெக, 4 : 378 (1050) வெட்டி முட்டையாளும் எச்சோற்றுக் கூற்று நெல்லும்

5. தெக, 7 : 97 (1125) வெட்டி முட்டையாள் சில்லிறை சோறுமாட்டுச் செந்நீரமஞ்சி மற்றும் எப்பேறபட்ட திருக்கொற்ற வாய்தல் ஏறி போந்த குடிமை சொல்ல பெறாததாகவும்

6 தெக, 6 : 351 (1133) எச்சோறு கூற்றரிசி வெட்டி முட்டையாளுள்ளிட்டு எப்பேறபட்ட சில்லிறைகளும்

7. தெக, 7 : 1034 (1147) வெட்டி முட்டையாள் வெள்ளான்வெட்டி மற்றும் எப்பேர்பட்ட திருவாசல் குடிமை

8 தெக, 7 : 1031 (1187) இந்நிலத்துக்கு அந்தராயம் நெட்டாள் முட்டையாள் வேலிக்காசும்

9 புதுகோ : 193 (1236) சில்வரி பெருவரி நாடேன்ற எலவைகள் வெட்டி முட்டாவாள்

10 தெக, 6 : 50, 58 (1238) நம்மூர் இந்நாள் முதல் ப்ரஸாதஞ் செய் தருளின திருமுகப்படி தேவை செய்யுமிடத்துக் காவேரிக் கரையில் நம்மூர்க் கோலறை செய்யுமடத்து நில ஒபாதிக்கு குடிப்பற்றான நிலத்துக்கு வெள்ளாழர் கரை செய்யவும் அல்லாத திருமுகத்தேவையாய்

வரும் ஆளும் பண்டமும் ஊணொபாதி படவும் சென்னீர் வெட்டி செய்யுமிடத்து ஆளாகச் செய்யவும் இராராபுரத் துக்கு காசு பண்டார முள்ளிட்ட நெட்டாள் செய்யுமடத்து ஆட்டைக்கு மாத்தால் ஓராளாக வந்த ஆள் போலவும் இதுக்கு மேற்படப் போகாதொழியவும் இராரா புரத்துக்கு குறை வறுப்பு எடுக்குமடத்து எடுக்கவேண்டுவது குறை வறுப்பு எடுக்கவும் அல்லாத ஆளுக்குப் பொதுக்கூலி என்று கூட்டிக் கொள்ளாதொழியவும்.

11. ஆவணம் 7 : ப. 60 - 61 (1339) மாவடை வெட்டியானுக்கிடும் பணம் ஒலைச் சம்படம் வாசல்வரி கீற்றுவரி

12. இக, 1936-37 : 113 (1428) அதிகாரி சேனைபோவர் அங்கசாலைகள் விட்டி வேகாரி காடுவெட்டு அமஞ்சி இவைகள் என்று இத்தானங்களில் உவத்துரோகம் பண்ணாதபடி

13. புதுகோ : 730 (1511) இந்த வயலுக்கு வெட்டி முட்டி வேகாரி சூலவரி

14. புதுகோ : 733 (1520) எற்சோறு கூற்று அரிசி வெட்டி முட்டாளும் நாட்டிலே மேற்போட்டுக்கொண்டு

15. புதுகோ : 746 (1531) இறைமுறைமை வெட்டி முட்டாள் ஆள்த்தேவை ஏர்த்தேவை

இக : இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை - Annual Report on Epigrahy

தெக : தென்னிந்திய கல்வெட்டுக்கள் South Indian Inscriptions

புதுகோ : புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள்

Inscriptions of the Pudukkottai .

சமூக அறிவியலில் மொழிபெயர்ப்பு மற்றும் கலைச்சொல்லாக்கத்தின் பங்கு

தா. இராபர்ட் சத்தியஜோசப்

உலக மொழிகளில் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற வளர்ந்த மொழிகளும் நூற்றுக்கணக்கான வளரும் மொழிகளும் உள்ளன. இந்திய மொழிகள் அனைத்தும் வளரும் மொழிகளாகவே காணப்படுகின்றன. வளரும் மொழிகளுக்கு வளம் சேர்க்கும் வகையில் பல மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொழிபெயர்ப்புப் பணிகள் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ் வேறு நோக்கங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று ஒவ் வொரு மொழியிலும் வெவ்வேறு நோக்கங்களில் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன. முற்காலத்தில் மக்களின் தாய்மொழி அல்லது அவர்கள் பேசும் மொழியில் கல்வி கற்பிப்பதற்காகவும் சமுதாயத்தில் மேல்நிலை மக்களின் மொழிகளாகிய சமஸ்கிருதம், லத்தீன் போன்ற மொழிகளில் காணப்பட்ட மதக்கருத்துகளைப் பிற மக்கள் புரிந்து கொள்வற்காகவும் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற் றுள்ளன. இவ்வகையில் சமஸ்கிருத மொழியில் காணப்பட்ட இராமா யணம் மற்றும் மகாபாரதம் இந்தியாவின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதையும் வேதாகமம் பல்வேறு ஐரோப்பிய, ஆசிய மற்றும் ஆப்பிரிக்க மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதையும் குறிப்பிடலாம். அண்மைக்காலத்தில் மார்க்சீயக் கொள்கைகளை மக்களி

டையே பரப்புவதற்காகப் பல ஆசிய மொழிகளில் பல நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். தற்காலத்தில் அறிவியல்தொழில்நுட்ப நூல்களை ஐரோப்பிய மொழிகளிலிருந்து ஆசிய, ஆப்பிரிக்க மொழிகளில் மொழிபெயர்க்கும் போக்கு அதிகரித்து வருகிறது. இப்பணி தொடர்புடைய மொழி வளர்ச்சிக்கு மட்டுமின்றி அம் மொழி பேசும் மக்களின் முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவுகிறது.

சமூக அறிவியல் துறைகளில் குறிப்பாக, சமூகவியல், மானிடவியல், சமூகப்பணியியல், உளவியல், பொருளாதாரம் போன்ற துறைகளின் நூல்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே காணப்படுகின்றன. பயிற்றுமொழியும் ஆங்கிலமாகவே உள்ளது. தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி இன்றியமையாதது என்ற கருத்து வேரூன்றியுள்ள நிலையில் சமூக அறிவியல் துறைகளில் பாடநூல்கள் தமிழில் எழுதப்பட வேண்டும் அல்லது மொழிபெயர்க்கப்பட வேண்டும். அதோடு சமூக அறிவியல் துறைகளில் வளர்ந்துவரும் ஆய்வுமுறைகள், ஆராய்ச்சி நூல்கள், மற்றும் கலைக்களஞ்சியங்கள் போன்றவற்றைத் தமிழில் உருவாக்குவது தமிழ் மொழி வளர்ச்சிக்கு மட்டுமின்றி தமிழ்மொழி பேசும் மக்களின் அறிவுத்திறனை வளர்ப்பதற்கும் உதவும். இப்பணிகளுக்குக் கலைச்சொற்கள் இன்றியமையாதவையாக உள்ளன.

கலைச்சொல்லாக்கம்

கலைச்சொல்லாக்கம் என்பது காலந்தோறும் நடைபெறுவதாகும். புதிதாகத் தோன்றும் தொழில் நுட்பங்கள், புதிதாக உருவாக்கப்படும் பொருட்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும் சொற்கள் எந்த மொழி பேசும் மக்களிடையே அவை தோன்றுகின்றனவோ அம்மொழியிலேயே உருவாக்கப்படுகின்றன. இவை பிறமொழி பேசும் மக்களிடையே பயன்பாட்டிற்கு வரும்போது அவற்றிற்கான கலைச்சொற்கள் தங்கள் தாய்மொழியிலும் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறு கலைச்சொற்கள் உருவாக்கப்படும் வரையில் மூல மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். அவ்வாறு பிறமொழிச் சொற்களுக்கு இணையான தாய்மொழிச்சொற்கள் உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டில் வருவதற்குக்

காலதாமதம் ஏற்படும் நிலையில் பிறமொழிச் சொற்கள் நிலைபேறாக்கம் பெற்றுவிடுவதையும் காணலாம் சான்றாக 'Grinder' என்ற ஆங்கிலச் சொல் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள கல்வி அறிவற்ற மக்களிடை யேயும் நிலைபேறாக்கம் பெற்றுள்ளதைக் கூறலாம்.

நவீனப்பண்பாட்டு அறிவியல், தொழில்நுட்பக் கருத்துகளைத் தமிழில் வெளியிடுவதற்குப் பெரும்பாலும் தமிழ் மொழிக்குள்ளேயே சொற்கள் உருவாக்கப்படுகின்றன. தமிழில் தரமான இலக்கிய நயம் வாய்ந்த சொற்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதும் குறிப் பிடத்தக்கதாகும். பிற திராவிட மொழிகளோடு ஒப்பிடும்போது தமிழில் மிகக்குறைவான கடன் சொற்களே காணப்படுகின்றன. வடமொழி யாக்கம் மற்றும் மேற்கத்தியவயமாக்கம் போன்ற சமூகப்பண் பாட்டு மற்றும் அரசியல் காரணக்கூறுகளால் கட்டுப்படுத்தப்படும் நிலையில் மட்டுமே பிறமொழிச் சொற்கள் கடன் வாங்கப்படுகின்றன.

வரலாற்றுக்காரணங்களால் தமிழ்மொழி பேசும் மக்களின் சமூகப் பண்பாட்டுச் சூழலும் கலைச்சொல்லாக்கத்துக்குப் பெரிதும் உதவியது. தமிழ் மொழியில் காணப்படும் பிறமொழிச் சொற்களை அகற்றும் தூய தமிழ்வாதம் 1967இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் மேலும் வலு வடைந்தது. குறிப்பாக இந்தோ ஆரிய சொற்களை அகற்றித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதும் தமிழ் மொழிக்கூறுகளைக் கொண்டு சொற்களை உருவாக்குவதும், தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக்கப் பட்டுப் பல க்லைச்சொற்கள் உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க பணிகளாகும். இதேபோன்று தூய தமிழ் வாத இயக்கங்களால் ஏராள மான கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கலைச்சொற்கள் சமூக அறிவியல் துறைகளின் மொழிபெயர்ப்புப் பணிகளுக்கும் பெரிதும் உதவுகின்றன.

வடமொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ் மொழிக் கூறு களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தும் முறைக்குக் கீழ்க்காணும் சொற்களைச் சான்றுகளாகக் கூறலாம்.

சர்வகலாசாலை - பல்கலைக்கழகம்

மந்திரி - அமைச்சர்

பாடசாலை - பள்ளிக்கூடம்

வடமொழிச் சொற்களை அகற்றித் தமிழ்ச்சொற்களைப் பயன் படுத்துகிற அளவுக்கு ஆங்கிலச் சொற்கள் அகற்றப்படவில்லை என்றே கூறலாம். இருப்பினும் ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாகப் பல தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கிளாஸ்ரூம் - வகுப்பறை

பிளாக்போர்டு - கரும்பலகை

பஸ்ஸ்டாண்ட் - பேருந்து நிலையம்

இத்தகைய தமிழாக்கம் மற்றும் சொல் உருவாக்கம் மொழி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பணிகளாக உள்ளன. இதனால் தமிழ் மொழியின் ஆற்றல், துல்லியமான கருத்துப்பரிமாற்றம் போன்றவை வளர்கின்றன. தமிழ்மொழியின் சொல் உருவாக்க வளர்ச்சிக்குச் சான்றாக, கமில்சிவலபில் (Kamil V. Zvelebil, 1975) என்ற அறிஞர் குறிப் பிடுவதை இங்குக் காணலாம். அதாவது முற்காலத்தில் ‘பாஷா சாஸ் திரம்’ என்ற வடமொழிச்சொல் ‘Philology’, மற்றும் ‘Linguistics’ ஆகிய இரு சொற்களையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது (Linguist என்றால் பல பாஷைகள் கற்றவர் என்று கருதப்பட்ட காலம்). பின்னர் அச்சொல்லுக்குப் பதிலாகத் தமிழ் மொழிக்கூறுகளைக் கொண்டு ‘மொழிநூல்’ என்ற சொல் உருவாக்கப்பட்டது. இச்சொல்லும் Linguistics, Philology ஆகிய இரு சொற்களையும் குறிப்பிடுவதாக உள்ளது. தொடர்ந்து அண்மைக்காலத்தில் Linguistics என்ற சொல்லைக் குறிப்பிட ‘மொழியியல்’ என்ற சொல் உருவாக்கப்பட்டது. ‘மொழி நூல்’ என்ற சொல் Philology என்ற சொல்லைக் குறிப்பிட ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் மொழியில் கலைச்சொல்லாக்கம் மற்றும் தமிழாக்கப் பணிகள் பல நடைபெற்று வருகின்றன.

பொதுமொழியில் நடைபெற்றுவரும் சொல்லாக்கம் மற்றும் தமிழாக்க வளர்ச்சியைப் போன்று கலைச்சொல்லாக்கப் பணிகளும்

வளர்ந்து வருகின்றன. அதாவது குறிப்பிட்ட துறைசார்ந்த பொரு ளுடைய கலைச்சொற்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப் பட்டது. குறிப்பாக அறிவியல் துறைகளின் கலைச்சொல்லாக்கப் பணிகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. சமூக அறிவியல் துறை களில் அந்த அளவுக்குக் கவனம் செலுத்தப்படவில்லை என்றே கூறலாம். சமூக அறிவியல் கலைச்சொல்லாக்கப் பணிகளில் கலைக்கதிர் வெளி யீடான டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் பதிப்பித்துள்ள கலைச்சொல் அகராதி தொகுதி - 2 குறிப்பிடத்தக்க பணியாகும். இதுவும் ஒரு முழுமையான பணி எனக் குறிப்பிட இயலாது.

கலைச்சொற்களின் ஆதாரங்கள்

சமூக அறிவியல் கலைச்சொற்களின் மூல ஆதாரங்களை மூன்று முக்கிய வகைகளாகக் குறிப்பிடலாம்.

1. பிறமொழி மற்றும் பண்பாட்டுத் தாக்கம் இல்லாமல் தமக்கே உரிய முறையில் தமிழர்களிடையே தோன்றி வளர்ந்த சொற்கள்
2. பிற நாட்டு மொழித்தாக்கத்தால் ஏற்பட்டவை
3. முற்றிலும் ஆங்கில மொழி வாயிலாக வந்தவை

முதல் வகையில் தமிழர்களின் பண்பாடு, தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகிப் பன்னெடுங்காலமாக நிலவிவரும் சொற்கள் அடங்கும். இவ்வகைச் சொற்கள் பிற மொழித் தாக்கம் எதுவும் இல் லாமல் இயல்பாக உருவானவை. இவ்வாறு பண்பாட்டு அடிப்படையில் உருவான சொற்களுக்குச் சான்றுகளாக 'பரிசம்', 'மொய்', 'பங்காளி' போன்ற சொற்களைக் கூறலாம். தொழில் அடிப்படையில் உருவான சொற்களுக்குச் சான்றுகளாக வேளாண்மை, நெசவு ஆகிய தொழில் களில் உருவாகிய கலைச்சொற்களைக் கூறலாம்.

இரண்டாவது வகையில் பிற நாட்டு மொழித்தாக்கத்தால் உரு வாகும் சொற்கள் அடங்கும். நேரடியாகப் பிற மொழித்தாக்கத்தால்

ஏற்படும் சொற்கள் அல்லாமல் பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம் மற்றும் எபிரேய மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு வந்து பின்னர் தமிழ் மொழியை அடைந்த சொற்கள் பல உள்ளன. சான்றாக, 'Anthropology' என்ற சொல் 'Anthropos', 'Logus' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங் களைப் பெற்றது. கிரேக்கத்தில் இச்சொற்கள் முறையே 'மனிதன்', 'அறிவியல்' என்னும் பொருளை உடையவை. இச்சொல் கிரேக்க மொழி யிலிருந்து ஆங்கில மொழியை அடைந்து ஆங்கிலம் வாயிலாகத் தமிழுக் கும் வந்துள்ளது. இச்சொல்லுக்கு இணையான மானிடவியல் என்ற சொல் தமிழில் நிலைபேறாக்கம் பெற்றுவிட்டது. பிறமொழி அல்லது பண்பாட்டுத் தாக்கத்தால் உருவாகும் சொற்கள் சில நிலைகளில் தமிழ்ப் பண்பாட்டோடு ஒத்துப்போவனவாகவும் சில நிலைகளில் வேறுபடு வனவாகவும் காணப்படும். சான்றாக, Couvade - 'பேறுகாலத் தனிமை', 'Senicide - முதுமைக்கொலை' போன்ற சொற்களைக் கூறலாம்.

மூன்றாவது வகையில் முற்றிலுமாக ஆங்கிலமொழி வாயிலாக வந்த சொற்கள் அடங்கும். இவை ஆங்கில மொழி மூலம் அறியப்பட்ட வையாகவும் பரவலாக்கப்பட்டவையாகவும் இருக்கும். சான்றாகக் கீழ்க் கண்ட சொற்களைக் கூறலாம்.

Cultural blindness	- பண்பாட்டு மடைமை
Cultural Drift	- பண்பாட்டு சாய்வு
Greenbelt town	- பச்சைமண்டல நகரம்

மொழிபெயர்ப்பும் கலைச்சொல்லாக்கமும்

சமூக அறிவியல் கலைச்சொல்லாக்கத்தில் மொழிபெயர்ப்பு மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. அவ்வாறு கலைச்சொற்களை மொழி பெயர்க்கும் போது மூலமொழி மற்றும் குறிக்கோள் மொழிகளின் பண்பாட்டுக் கூறுகளையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது பல சொற்களை நேரடியாக மொழிபெயர்க்க இயலாத நிலை உள்ளது. சான்றாக White Magic - 'தூய மந்திரம்', Balck Magic - 'தீய மந்திரம்' ஆகிய சொற்களை எடுத்துக்காட்டலாம். நன்மை செய்கிற

மந்திரத்தைத் தூயமந்திரம் என்றும் தீமை செய்யும் மந்திரத்தைத் தீயமந்திரம் என்றும் இவை மொழிபெயர்க்கப்படுகின்றன. இவற்றை 'வெள்ளை மந்திரம்', 'கறுப்பு மந்திரம்' என நேரடியாக மொழிபெயர்க்க இயலாது.

பிறமொழி வாயிலாக அல்லது முற்றிலும் ஆங்கிலமொழி வாயிலாகக் கலைச்சொற்கள் உருவாக்கப்படும்போது அல்லது மொழி பெயர்க்கப்படும்போது கடன், கடன் விரிவு, கடன் மொழிபெயர்ப்பு, கடன் உருவாக்கம், மொழிபெயர்ப்பு மற்றும் உருவாக்கம், ஒலிபெயர்ப்பு போன்ற பல நடைமுறைகள் நிகழ்கின்றன. அவற்றைச் சற்று விரிவாகக் காணலாம்.

கடன் சொற்கள் (Loan Words)

பிறமொழிச் சொற்களில் எந்தவித மாற்றமும் செய்யாமல் அவ்வாறே பயன்படுத்தினால் அவை கடன் சொற்கள் எனப்படும். குறிப்பாக நாணயங்கள் மற்றும் சில அளவுகளைக் குறிக்கும் சொற்கள் எந்தவித மாற்றமும் இன்றி அவ்வாறே பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, கிலோ, லிட்டர், டாலர் போன்ற சொற்களைக் கூறலாம்.

கடன் விரிவு (Loan Extension)

குறிப்பிட்ட ஒரு பொருளில் பயன்படுத்தப்பட்ட பிறமொழிச் சொல் காலப்போக்கில் தொடர்புடைய பிற பொருளையும் குறிப்பிடு வதற்கு விரிவுபடுத்தப்படுவதுண்டு. சான்றாக Diaspora - 'சிதறிப் பரவல்' என்ற சொல் முற்காலத்தில் யூதர் தாயகத்திலிருந்து வெளியேறி உலக மெங்கும் சிதறிப் பரவிய நிகழச்சியைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டது. தற்போது இச்சொல் தங்கள் அரசின் பாதுகாப்பின்றி வெளி நாடுகளில் வாழும் எந்தக் குழுவினரையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படு கிறது இதே போன்று குறிப்பிட்ட ஒரு பொருளை உடைய சொல் தொடர்புடைய பிற பொருளைக் குறிக்கவும் விரிவுபடுத்தப்படுவதுண்டு. சான்றாக Group Climate - குழு பண்பமைதி, Black Magic - தீய மந்திரம் போன்ற சொற்களைக் கூறலாம்.

கடன் மொழிபெயர்ப்பு (Loan Translation)

பிற மொழிகளில் காணப்படும் சொற்கள் நேரடியாகக் குறிக்கோள் மொழியில் மொழிபெயர்க்கப்படுமேயானால் அது கடன் மொழிபெயர்ப்பாகும். சமூக அறிவியலில் கடன் மொழிபெயர்ப்புச் சொற்கள் மிகுதியாக உள்ளன.

Social mobility - சமூக நிலைபெயர்வு

Mass culture - திரள் பண்பாடு

Informal norms - இயல்பு விதிமுறைகள்

கடன் உருவாக்கம் (Loan Creation)

பொதுவாகக் கடன் உருவாக்கம் புதிய பொருட்களின் வரவின் போதும் பிற பண்பாட்டுக் கூறுகளைக் குறிப்பிடும் சொற்களை மொழி பெயர்க்கும் போதும் தோன்றுகிறது. பண்பாட்டுத் தொடர்பான கடன் உருவாக்கச் சொற்களுக்குச் சான்றுகளாகக் கீழ்க்காணும் சொற்களைக் கூறலாம்.

Senicide - முதுமைக் கொலை

Potlatch - தகுதி காட்டு சடங்கு

Feud - குடிமரபுப் பகை

மொழிபெயர்ப்பு மற்றும் உருவாக்கம் (Transcreation)

பொதுவாகக் கூட்டுக்கலைச்சொற்களில் மொழிபெயர்ப்பு மற்றும் உருவாக்கப் பணிகள் நடைபெறுகின்றன சொல்லின் ஒரு பகுதி மொழி பெயர்க்கப்பட்டும் இன்னொரு பகுதி உருவாக்கப்பட்டும் காணப் படும். சான்றாக,

Sociological Determinism - சமூகவியல் நியதிவாதம்

Virilocal family - கணவனகக் குடும்பம்

Cultural Drift - பண்பாட்டுச் சாய்வு

ஒலிபெயர்ப்பு (Transliteration)

மூலமொழிச் சொற்களுக்கு இணையான சொற்களை உருவாக்கவோ அல்லது மொழிபெயர்க்கவோ இயலாத நிலையில் அச்சொற்கள் ஒலிபெயர்க்கப்படுகின்றன. ஒலிபெயர்ப்பில் இரு வகைகள் உள்ளன. ஒன்று நேரடி ஒலிபெயர்ப்பு (Direct transliteration), இன்னொன்று மறைமுக ஒலிபெயர்ப்பு (Indirect transliteration). மூலமொழிச் சொற்களை அப்படியே குறிக்கோள் மொழியில் ஒலிபெயர்த்தால் அது நேரடி ஒலி பெயர்ப்பாகும். மூலமொழிச் சொற்களைக் குறிக்கோள் மொழியின் ஒலிமுறைக்கேற்ப மாற்றி ஒலிபெயர்த்தால் அது மறைமுக ஒலிபெயர்ப்பாகும். சான்றாக, Hawaiian System என்ற சொல் உலகளாவிய உறவு முறை அமைப்பில் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளைப் பாகுபடுத்தும் ஆறு வகைகளில் ஒன்றைக் குறிப்பதாகும். இச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை உருவாக்கவோ அல்லது மொழிபெயர்க்கவோ இயலாத நிலை உள்ளதால் ஒலிபெயர்க்க வேண்டியுள்ளது. ஒலிபெயர்க்கும்போது 'ஹவாயன் முறை' என அப்படியே ஒலிபெயர்த்தால் அது நேரடி ஒலி பெயர்ப்பாகும். 'ஹ' என்ற கிரந்த எழுத்தைப் பயன்படுத்தாமல் தமிழ் ஒலி அமைப்புக்கேற்ப 'கவாய முறை' என ஒலிபெயர்த்தால் அது மறைமுக ஒலிபெயர்ப்பாகும்.

சமூக அறிவியல் துறைகளில் தரமான ஆய்வு நூல்கள், பாட நூல்கள் மற்றும் கலைக்களஞ்சியங்கள் ஆகியவை தமிழ் மொழியில் எழுதப்பட வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது. இவை நிறைவேற்றப்பட வேண்டுமாயின் சமூக அறிவியலில் கலைச்சொல்லாக்கம் மற்றும் மொழிபெயர்ப்புப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் படவேண்டும்.

துணை நூல்கள்

இராபர்ட் சத்திய ஜோசப்., 1999, '*சமூக அறிவியல் கலைச் சொல்லாக்கம்*' (பொது அறிவியல்), அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

...., 2002, **சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி**, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுப்பிரமணியன். பா. ரா., '*கலைச்சொற்களும் அகராதியியலும்*', வெளியிடப்படாத அறக்கட்டளைச் சொற்பொழிவுக் கட்டுரை, மொழி அறக்கட்டளை, சென்னை.

Shanmugam. S,V., 1983, **Aspects of Language Development in Tamil**, All India Tamil Linguistics Association, Annamalainagar.

- - - --- -- - -., 2003, '*Sociolinguistics of Translation*', IJDL, Vol. XXXII, No. 1, pp. 63 - 72, Dravidian Linguistics Association, Thiruvananthapuram.

Zvelebil Kamil. V., 1975, '*Word - Borrowing and word making in Modern South Asian Languages : Tamil*', South Asian Digest of Regional Writing, Vol. 4 (1975), pp. 86 - 95. South Asia Institute, University of Heidelberg.

உ. வே. சா. பற்றிப் பாரதி

செ. வை. சண்முகம்

உ. வே சாமிநாதையருக்கு 1906 ஆம் ஆண்டு அன்றைய ஆங்கில அரசு மஹாமஹோபாத்தியாயா பட்டம் கொடுத்துக் கவுரவித்ததற்கு மாநிலக்கல்லூரியில் நடந்த ஒரு பாராட்டு விழாவில் நாவலர் சோம சுந்தர பாரதியார் வேண்டுகோளுக்கு இணங்கப் பாரதியார் 'உடன் பாடிப் படித்த கவிதை' யே மஹாமஹோபாத்தியாயா சாமிநாதய்யர் என்பது (குருசாமி, 1987 : 942). அது 3 பாடல்களை உடையது. அந்தக் கவிதையில் உள்ள முதல் பாடல் மட்டுமே இங்கு ஆராயப்படுகிறது.

இந்தப்பாடல் 1906 இல் எழுதப்பட்டது. அதாவது அவருடைய கவிதை வரலாற்றில் 11 ஆவது பாடலாக அமைந்துள்ளது. (குருசாமி, 1987 : 23). துவக்க காலப்பாடலாக இருப்பதால் பாடல் செந்தமிழ் நடையில் அமைந்துள்ளது. செம்பரிதி (சூரியன்), நறவு (தேன்), உம்பர் (மேல் உலகம்), பம்பல் (பரந்த வடிவு) போன்ற சொற்களும், கொல், ஆங்கண் - அனன் போன்ற இடைச்சொற்களும் யாப்பமைப்பும் அதை உறுதிப்படுத்துகின்றன. ஆரம்ப காலப் பாடலாக இருந்தாலும் கவிதை நயங்களான செறிவு, எச்சம் போன்ற பல கூறுகள் அமைந்துள்ளன.

பாடல்

செம்பரிதி ஒளிபெற்றான் பைந்நறவு
சுவை பெற்றுத் திகழ்ந்தது ஆங்கண்
உம்பரெல்லாம் இறவாமை பெற்றனரென்று
எவரேகொல் உவத்தல் செய்வார்
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா

தப்புலவன் குறைவில் சீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கின்றீரே

என்பதே அது. அதன் திரள் பொருள், சூரியன் ஒளி பெற்றது. தேன் இனிமை பெற்றது. தேவர்கள் சாவா வரம் பெற்றவர்கள் ஆகியவைகளுக் குள் ஒருவரும் மகிழ்ச்சி அடையாதது உ. வே. சா. குறையில்லாத புகழ் பெற்றதற்காகப் பொதுமக்கள் ஏன் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதே. அங்குக் கேள்வியும் வியப்பும் (எவரே கொல் ! என் கொல்) இணைந்து வாக்கியங்கள் அமைந்துள்ளன. ஏனென்றால் சூரியன் ஒளி பெற்றதும், தேன்சுவை பெற்றதும் தேவர்கள் இறவா வரம் பெற்றதும் அவைகளின் இயற்கைப் பண்புகள். அதுபோல உ. வே. சா. புகழ்பெற்றது என்பது அவருடைய இயற்கைப் பண்பு அதாவது அவருடைய தகுதிக்கு ஏற்றது அதனால் யாரும் பெரும் மகிழ்ச்சி அடைய வேண்டியதில்லை என்பது கவிஞரின் எண்ணம். இங்குக் கவிஞர் தேவருடனும், சூரியன், தேன் ஆகிய வற்றுடனும் ஒப்பிட்டுச் சொன்னதையும் வாசகர் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே பொதுமக்கள் பார்வையும் கவிஞரின் பார்வையும் மாறுபடுகின்றன என்பது தெளிவு.

பொதுமக்கள் அவர் உழைப்பால் செய்த தமிழ்த் தொண்டு அரசால் அங்கீகரிக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி அடைந்தார்கள். ஏனென் றால் அந்தத் தொண்டால் தமிழ்மொழி தொன்மையான மொழி பழைய இலக்கியம் படைத்த மொழி என்றெல்லாம் பெருமை பெற்றது தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைத்த பெருமை. எனவே தங்கள் மொழியின் இனத்தின் பெருமைக்குக் காரணமாக இருந்தவரை அன்னிய அரசு பெருமைப்படுத் தும்போது பொதுமக்கள் மகிழ்ச்சி அடைவதும் இயற்கையே. அப்படி இல்லாமல் அவருடைய செயலுக்குப் பாராட்டு கிடைத்தது இயல்பா னது என்பது கவிஞர் நினைப்பது ஊக்கம் உடையவனை ஆக்கம் அதர்வினாய் - தேடிச்சென்று சேருவதுபோன்றது. அது தன்னம்பிக் கையின் வெளிப்பாடு. எதிர்ப்பார்த்து ஏங்காததன் புலப்பாடு.

கவிஞர்கள் சொல்லவேண்டிய எல்லாக் கருத்தையும் முழுவதை யும் சொல்லிச் சென்று விடுவதில்லை. மாறுபட்ட முரண்பட்ட பண்பு

களை இணைத்தும் சமப்படுத்தியும் கூறும்போது கவிஞர்கள் முழு விளக்கமும் தருவதில்லை. இதைச் சிலர் பொருள் இடைவெளி (Semantic Gap) என்று கூறுவார்கள். அதைக் கருத்தாடல்காரர்கள் பொருள் இணைவு (Coherence) இல்லாதது என்று கூறுவார்கள். தமிழ் இலக்கண மரபில் 'மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்ற உத்தியாகவும் கொள்ளலாம். வாசகனே தன்னுடைய அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திப் புரிந்துக் கொள்ள முயலவேண்டும்.

கவிதை நிலையில் இங்கு உவகை படைத்தல் என்பது புதிய தொடராக்கம். எனவே அதன் பொருளை நிர்ணயிக்க வேண்டும். உவ (த்தல்) என்பது தனிவினை. எந்தத் தனிவினையையும் வினைத்தொழிற் பெயர் (செய்தல் என்ற வாய்ப்பாடு) + செய் என்ற வினையைச் சேர்த்துத் தொடர் வினையாக்க முடியும். பாரதியாரும் ஓயோம், சாயோம் என்பவைகளை முறையே ஓய்தல் செய்யோம், சாய்தல் செய்யோம் (தே. கீ. 5, 9, 3) என்றும், ஆள் என்ற தனிவினைக்குப் பதிலாக ஆட்சிசெய் (தே. கீ. 33. 6) என்றும் தனிவினைகளுக்குப் பதிலாகத் தொடர்வினைகளைக் கையாண்டுள்ளார். அந்த முறையை ஒட்டியே உவத்தல் செய்வார் என்று தொடர்வினையை இந்தக் கவிதையிலேயே (1, 2) கையாண்டுள்ளார். பொருள் தொழிற் பெயர் (உவகை, படிப்பு, ஓட்டம்) போன்றவை வினை என்ற முறையிலும் தொடர்வினை உண்டாகலாம் (உம். மகிழ் - மகிழ்ச்சிக் கொள், மகிழ்ச்சி அடை). அப்போது முதல் வினையின் பொருள் சிறிது மாறுபடும். அந்த முறையில் உவ என்ற தனிவினைக்குப் பதிலாக உவகை அடைதல் என்ற தொடர்வினையே பெரு வழக்கு. உவகைபடை என்ற தொடர்வினை கவித்துவ வழக்கே. பாரதியாரே படைத்தல் என்பதை உண்டாக்குதல் என்ற பொருளிலும் (வேதம் படை (த்தல்), சாதம் படை (த்தல்), தெய்வசாதி படை (த்தல்) (ப.வ. பா. 6, 7) பெறுதல் என்ற பொருளிலும் (நல்ல மனம் படைத்தோம்) (த.பா. 3.3. 4) ஓர் உள்ளம் படைத்துவிட்டோம் (அதே. 4. 2)) கையாண்டுள்ளார். எனவே படைத்தல் என்பது பெறுதல் என்ற பொருளிலேயே வந்துள்ளது. மகிழ்ச்சி பெறு என்ற பிரயோகமும் உள்ளது. இங்கு உவகை படைத்தல் என்பது

மகிழ்ச்சியைப் பெறுதல் என்று பொருள்படும் என்றாலும், உள்ளது, படைத்தல் என்ற சொல் அந்த மகிழ்ச்சி, அறிவு சார்ந்த நிலையில் உயர்வு சிறப்பு பெற்று இருக்கிறது என்பதைப் புலப்படுத்து கிறது. ஏனென்றால் உவகை அடைதல் என்பதுதான் மரபுத்தொடர். படைத்தல் என்பது ஒருவன் பிறருக்கு மரியாதையின் பொருட்டு சடங்காகக் கொடுத்தல்; அடைதல் என்பது ஒருவன் தானே பெறுதல். எனவே உவகை படைத்தல் என்பதற்குப் பொதுமக்கள் தாங்களாகவே அதிக மகிழ்ச்சி கொள்கிறார் கள் என்று பொருள்.

உ. வே. சா. வுக்குத் தகுதிக்குரிய சிறப்பு என்பதால் மக்கள் அதிகம் மகிழ்ச்சி கொள்ளவேண்டியதில்லை என்றாலும் பாரதியின் கருத்தை அந்தப் புதிய தொடர் புலப்படுத்துகிறது. அவரே இரண்டாவது அடியில் உவத்தல் செய் என்ற இன்னொரு வடிவத்தைக் கையாண்டுள்ளார். இதில் முரண் உள்ளது.

பம்பல் என்பதற்குப் பரந்த வடிவு, களிப்பு என்ற பொருள்கள் உண்டு. முன்னடியில் கும்பமுனி என்ற சொல் வந்துள்ளதைப் பார்த்தால் பம்பல் என்பதற்குப் பரந்தவடிவு என்று பொருள் கொண்டால் குறுகியது, பரந்தது என்று அடி முரண் அமைவதை உணரலாம். முதல் இரண்டு அடிகளில் உள்ள செம்பரிதி (சூரியன்), உம்பர் (மேல் உலகம், கிரகங்களுக்கு மேலே உள்ளது) என்ற இரண்டு சொற்களும் முதலாவதை விட இரண்டாவது உயர்ந்தது என்ற முறையில் முரணாக அமைந்துள்ள தாகக் கருதலாம். அப்படியானால் பொருள் நிலையிலும் பொதுமக்கள் பரிசு பெற்றதற்கு மகிழ்தல் என்பதுடன் கவிஞர் தகுதிக்குக் கிடைத்த பரிசு, எனவே மகிழவேண்டியதில்லை என்ற கருத்து முரணும் புதைந்துள்ளது. பாட்டின் உள்கிடையைப் புரிந்துக்கொள்ளப் பாடலின் மொழி அமைப் பைப் பார்ப்போம்.

இங்கு இரண்டு கலவை வினா வாக்கியங்கள் உள்ளன. அவை இரண்டு கருத்தன்களாகக் கருதத் தகுந்தவை. 1. எவரேகொல் உவத்தல் செய்வார் ?, 2. இதற்கு என்கொல் பேருவகை படைக்கின்றீரே ? என்ப வையே தலைமை வாக்கியங்கள். யார், நீர் என்ற முறையில் முரண் கருத்துகளே இருந்தாலும் இரண்டுக்கும் இடையே ஒற்றுமை ஒரளவு

தெளிவாக உள்ளது. எனவே இரண்டு கருத்தன்களுக்கு இடையே உள்ள முரண்களையும் ஒற்றுமைகளையும் பார்ப்போம்.

முரண்கள்

1. முதல் கருத்தனில் மூன்று உள் வாக்கியங்களும் இரண்டாவது கருத்தனில் ஒரு உள் வாக்கியமும் உள்ளன. 2. முதல் தலைமை வாக்கியத்தில் உவ (த்தல்) என்ற தனி வினைக்குப் பதிலாக உவத்தல் செய் என்ற தொடர்வினை அதுவும் வினைத்தொழில் பெயர் (Verbal Noun) செய் என்ற வினையாக்க வினையும், இரண்டாவது தலைமை வாக்கியத்தில் பொருள் தொழில்பெயர் (Verbal Derivative) - உவகை - படை என்ற வினை (உவகைப் படைத்தல்) வந்துள்ளன. 3. முதல் தலைமை வாக்கியம் அ) படர்க்கை பலர்பால் எதிர்கால வினைமுற்றும் (செய்வார்). ஆ) பலர்பால் எழுவாயும் (எவர்) பெற்றிருக்க, இரண்டாவது தலைமை வாக்கியம் அ. முன்னிலைப் பன்மை நிகழ் கால வினைமுற்று (படைக்கின்றீர்) பெற்று, ஆ. எழுவாய் இல்லாமல் உள்ளது. 4. முதல் கருத்தனில் உள் வாக்கியங் கள் என்று (பெற்றனர் என்று எவரோ ...) என்ற சொல் நிரப்புவான் மூலம் இணைக்கப்பட, இரண்டாம் கருத்தனில் - ஏன் விகுதி (பெற்றனனேல் ... உவகை படைக்கின்றீரே) மூலம் இணைக்கப்பட்டுள்ளது. 5. முதல் கருத்தனில் எழுவாய் படர்க்கை அதுவும் பலர்பால் பெயராகக் கேள்வி (எவர்) அமைய, இரண்டாம் கருத்தனில் பொருட்டு வினையடையாக்கக் கேள்வி (இதற்கு என்கொல்) அமைப்பு அமைந்துள்ளது.

ஒற்றுமைகள்

1. பெறு என்ற வினை எல்லா உள் வாக்கியத்திலும் வந்துள்ளது. 2. கொல் என்ற இடைச்சொல் இரண்டு தலைமை வாக்கியத்திலும் உள்ளது. 3. இரண்டு கருத்தனும் இரண்டிரண்டு அடிகள்.

இந்தப் பாட்டின் திரள்பொருள் என்ன ? சாமிநாதய்யர் மகாமகோபாத்யாயா பட்டம் பெற்றதற்குப் பொதுமக்கள் மகிழ்ச்சி ஏன் அடைகிறார்கள் என்பதை நேரடியாக - முன்னிலையாக (உவகை படைக்கின்றீர்) என்று கேட்கிறார். அதன் அர்த்தம் என்ன ? சாமிநாதய்

யர் மகாமகோபாத்யாயா பட்டம் பெற்றதற்கு மக்கள் மகிழ்ச்சி அடைய வேண்டியதில்லை என்று நினைக்கிறாரா ? அல்லது மகிழ்ச்சி அடைவ தற்கான காரணங்களைக் கேட்கிறாரா ? அல்லது அவருடைய உண்மை யான தகுதிக்கு அவர் பெற்ற சீர்த்தி குறைவு என்று நினைக்கிறாரா ? அவைகளில் சரியான பொருளைத் தீர்மானிக்க மேலே குறிப்பிட்டபடி முதல் கருத்தனின் உள் வாக்கியத்தில் உள்ள மூன்று பொருள்களுக்கும் (பரிதி, நறவு, உம்பர்) இரண்டாவது கருத்தனின் உள்ள ஒரு பொருளுக்கும் (சாமிநாதய்யர்) ஒற்றுமை, வேற்றுமைகளின் உள்கிடை யைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் முதல் கருத்தனின் உள் வாக்கியத்தில் உள்ள மூன்று பொருள்களும் (பரிதி, நறவு, உம்பர்) இரண்டாவது கருத்தனின் உள் வாக்கியத்தில் உள்ள ஒரு பொருளோடு (சாமிநாதய்யர்) உவமானம் - உவமேய உறவு உடையது போல அமைந் துள்ளது. உண்மையில் சூரியன் ஒளி பெற்றது போலவும் தேன் சுவை பெற்றது போலவும் தேவர்கள் இறவா வரம் பெற்றது போலவும்தானா சாமிநாதய்யர் புகழ் ? அல்லது அவைகளுக்குச் சமமானதா ? மேற்பட் டதா ? குறைவுபட்டதா ? என்ற கேள்விகள் எழுகின்றன.

முதலில் முதல் கருத்தனில் கூறப்பட்ட பரிதி, நறவு, தேவர் ஆகிய மூன்றும் கூட ஒரே சிறப்பு உடையவை அல்ல என்பது அறியத்தகுந்தது. அவை மூன்றும் இயற்கைப் பொருள்கள் அல்ல. பரிதி - சூரியன் தான் இயற்கைப்பொருள். நறவு - தேன் ஒரு இயற்கைப் பொருளானாலும் வண்டுகள் தங்கள் உணவுக்காகப் பல பூக்களைத் தேடிச் சென்று தேனைத் தயாரிப்பதால் ஒரு செயற்கைப்பொருளே. எனவே உம்பர் - (தொலைதூரத்தில் வாசிப்பவர் என்பது நேர்பொருள்) தேவர் கற்பனைப் பொருளே. அவர்கள் இறவாமை பெற்றது அவர்கள் செய்த தவத்தால். அது ஒரு தொன்மம். அவைகளின் சிறப்புகளாக முறையே ஒளி, சுவை, இறவாமை என்று பாட்டிலேயே கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவை மூன்றும் ஒரு பொதுமை பெற்றிருப்பது என்பது அடுத்த அடியில் எவரோ உவத்தல் செய்வார் என்று கூறுவதன் மூலம் புலனாகிறது. வாக்கிய நிலையில் செம்பரிதி ஒளி பெற்றான் என்று எவரோ உவத்தல் செய்வார் என்பது போல அடுத்த இரண்டு வாக்கியத்தையும் அதே முறை

யில் பொழிப்புரைப்படுத்தலாம். இங்கு எவரோ செம்பரிதி ஒளி பெற்றான் என்று உவத்தல் செய்வார் என்பதே முன்னுள்ள புதைநிலை வாக்கியம். எனவே, புதைநிலையில் மூன்று தனித்தனி வாக்கியங்களில் நிரப்பி வாக்கியம் (செம்பரிதி, ஒளி பெற்றான்) முன்னிறுத்தம் (Fronting) செய்யப்பட்டதன் மூலம் முக்கியத்துவம் கொடுத்துத் தலைமை வாக்கியம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இதே முறையில் அடுத்த இரண்டு வாக்கியங்களும் மொழி மாற்றம் (Transformation) செய்யப்பட்ட பின்னர் ஒத்த வினைத் தொடர் (என்று எவரோ உவத்தல் செய்வார்) என்ற முறையில் மூன்றில் இரண்டு கொடுக்கப்பட்டு ஒரு கலவை உம்மைத்தொகை வாக்கியமாக அமைக்கப்பட்டுவிட்டது. இந்தத் தொடரியல் விளக்கம் நிரப்பிக்கு - உள் வாக்கியத்துக்குப் பொருண்மை நோக்கில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைப் புலப்படுத்தும். மேலும் உம்மைத்தொகையாக அமைத்ததன் சிறப்பு என்ன? என்ற கேள்வி அடுத்து எழுகிறது. பொதுவாக ஒத்த பொருள்களையே உம்மைத் தொகையாக இணைப்பார்கள். ஆகவே அந்த மூன்று பொருள்களி டையே ஒத்த பண்பு என்ன? என்ற சிந்தனையைத் தூண்டுகிறது எனவே வாசகர் தான் பொருள் இடைவெளியை உணர்ந்து அவை ஒரு நிலையில் அந்தப் பொருள்களின் இயற்கைப் பண்பு என்று ஊகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. உண் மையில் பரிதி, நறவு, உம்பர் என்ற அந்த மூன்று சொற்களும் நேர்ப் பொருளை உணர்த்துவதோடு இயற்கைப் பொருளின் பிரதிநிதியாகவும் நிற்கின்றன. இதைக் குறியீட்டியலார் சுட்டிப்பொருள் (Indexical Meaning) என்பார்கள். அதாவது அவை முதலில் குறியீடா கவும் பின்னர் சுட்டியாகவும் பயன்படுகின்றன.

முதல் தலைமை வாக்கியத்தின் மூன்று உள்வாக்கிய அமைப்பும் மாறுபட்டுள்ளன. முதல் வாக்கியம் எழுவாய் (உயர்திணையாக - சூரியன் அஃறிணைப் பெயராக இருந்தும் பாட்டில் உயர்திணையாகக் கருதி வினைமுற்று ஆண்பால் விகுதி கொடுக்கப்பட்டுள்ளது) + செயப்படு பொருள் + பயனிலை என்ற அமைப்பும், இரண்டாம் வாக்கியம் எழுவாய் (ஒன்றன் பால்) + பாங்கு / வினையடைத் தொடர் (சுவை பெற்று) + செயப்படுபொருள் குன்றிய வினை (திகழ்ந்தது) பயனிலை என்ற அமைப்

பும் மூன்றாவது வாக்கியம் இடைவினையடை (ஆங்கன்) + எழுவாய் (பலர்பால்) + செ. பொ. (இறவாமை) + பலர்பால் வினைமுற்று (பெற்றனர்) என்ற அமைப்பும் உடையவை. ஆண்பால் விகுதியும் (- ஆன்), ஒன்றன் பால் விகுதியும் (- அது) இடைக்காலத் தமிழ் வடிவம். பலர்பால் வடிவம் (அனர்) சங்ககால வடிவம்.

சாமிநாதய்யர் பற்றிய வாக்கியம் எழுவாய்த் தொடர் (பெயரெச்சத்தொடர் - கும்பமுனி எனத் தோன்றும் . . . புலவன்) + செ. பொ. தொடர் (குறைவில் சீர்த்தி) பாங்கு வினைத் தொடர் (பம்பல் உற) + ஆண்பால் வினைமுற்று (பெற்றனன்). இங்கு ஆண்பால் விகுதி வடிவம் (- அனன்) சங்க கால வடிவம்.

இங்கு இரண்டு கருத்தனில் உள்ள உள்வாக்கியங்களின் மொழி அமைப்பு எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்று இருந்தாலும் எழுவாய், செயப்படுபொருள் ஆகிய இரண்டின் அமைப்பிலும் வேறுபாடு இருப்பதும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. முன்னதில் எழுவாய் சிறு தொடராக (செம்பரிதி, பைந்நறவு) இருக்கப் பின்னதில் பெயரெச்சத் தொடராக (கும்பமுனியெனத் தோன்றும் சாமிநாதப் புலவன்) இருக்கிறது. முன்னதில் செயப்படுபொருள் சிறப்புப் பெயராக (முறையே ஒளி, சுவை, இறவாமை) குறிப்பிடப்பட்டுப் பின்னதில் பொதுப்பெயராக (குறைவில் சீர்த்தி) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கும்பமுனி என்பது அகத்தியரைக் குறிக்கும். அகத்தியர்தான் தமிழை உருவாக்கினார் என்றும் அவர்தான் தமிழுக்கு முதல் இலக்கணம் எழுதினார் என்றும் இடைக்காலத்தில் நம்பப்பட்டது. இன்று நாம் அதைத் தொன்மமாகக் கொள்கிறோம். பாரதியார் காலத்திலும் அதை வரலாறாகக் கருதினார்கள். அதனால்தான் தமிழ்த்தாய் என்ற கவிதையில் (தே.கீ. 21. 1),

ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை
 ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
 மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்

என்று அவரே குறிப்பிட்டுள்ளார். இங்குக் கும்பமுனி என்றது சாமி

நாதய்யர் பழந்தமிழ் இலக்கியங்கள் மறைந்து போகாமல் தேடிக் கண்டு பிடித்துச் செம்பதிப்பாக வெளியிட்டுத் தமிழ் மொழிக்குப் புதிய வாழ்வு அளித்ததைக் குறிக்கும். கும்பமுனி என்பது ஒப்பானாகக் கையாளப் பட்டுள்ளது. அப்படியே (சாமிநாதப்) புலவன் என்றதும் இவருடைய புகழ் இலக்கியத் துறை சார்ந்தது என்பதை வலியுறுத்துகிறது. அதாவது முதல் கருத்தில் உள்ள மூன்று பொருள்களின் பண்பை மட்டும் எழு வாய்த்தொடரில் குறிப்பிட இங்கு எழுவாய்த் தொடரிலேயே அவரு டைய புகழை மறைபொருளாகப் புலப்படுத்திவிட்டார். செயப்படு பொருளைப் பொறுத்த வரையில் முன்னதில் அவைகளின் சிறப்பை வெளிப்படையாக - ஒரு சொல்லாக (ஒளி, சுவை, இறவாமை) அதாவது இலக்கணப்படி சிறப்புப் பெயரால் கூறப் பின்னதில் தொடராகவும் பொதுப்பெயராகவும் (குறை வில் சீர்த்தி) கூறியது அவைகளை விடச் சிறப்பு உடையது என்பதைப் புலப்படுத்தும். இந்தக் கவிதை சாமி நாதய்யர் மஹாமஹோபாத்தியாயா பட்டம் பெற்றபொழுது பாடப் பட்டது என்றாலும் அந்தச் செய்தி இரண்டாவது பாடலில்தான் 'பன்னிய சீர் மஹாமஹோ பாத்தியா யப்பதவி பரிவினீந்து' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இந்தக் குறைவில் சீர்த்தி என்று கூறியது அவருடைய பிற புகழ்களை - மேலே குறிப்பிட்டவைகளைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். அவைகளின் சீரமைப்பும் மாறுபட்டுள் ளன. முன் கருத்தனில் பரிதி (2), சீர் , நறவு (3), சீர் + பிணை, விட்டிசை, உம்பர் (4) சீர், அடி விட்டிசை. பின்னதில் எட்டு சீர் (ஒரு அடி +2 சீர்) பரிதி, நறவு, உம்பர் ஆகிய மூன்றையும் சாமிநாதய்யருடன் ஒப்பிடும் போது சாமி நாதய்யர் பற்றிய வாக்கிய அமைப்பு, சீரமைப்பு ஆகிய இரண்டு நிலைகளிலும் மாறுபட்டு தனித்துவம் பெற்றுள்ளது தெளிவாக இருக்கிறது. அதே சமயத்தில் உம்பர் என்பதோடு ஓரளவு அதிக ஒற்றுமை அமைந்துள்ளதும் சுட்டிக் காட்டத் தகுந்தது. உம்பர்தான் மற்ற இரண்டு பொருள்களைக் காட்டிலும் எண்ணிக்கை அதிகம் உடையது. சங்க கால வினை விகுதி வடிவம் என்ற முறையில் ஒத்துப்போகிறது. அதற்கு ஏற்ப உம்பர் இறவாமை பெற்றது போலச் சாமிநாதய்யர் 'இறப்பின்றி துலங் குவார்' (3,4) என்று பாரதியாரே கடைசிப் பாட்டில் பாராட்டியுள்ளார்.

ஏனைய இரண்டின் புகழையும் சாமிநாதய்யர் ஒருவகையில் பெற்றுள் ளார் என்று ஆகிறது. அது எப்படி என்று பார்ப்போம்.

பரிதி ஒளி பெற்றுத் திகழ்வது போலச் சாமிநாதய்யர் புகழ் பெற்று விளங்குகிறார். ஒளி என்பது புகழையும் குறிக்கும். சீர்த்தி என்ற சொல் லுக்கு மிகு புகழ் (தொல்காப்பியம், 796) என்று பொருள். சாமிநாதய்யர் புகழ், பழைய இலக்கிய நூல்களைக் கூடிய வரை செம்பதிப்பாகப் பதிப் பித்தது என்றாலும் அதன் மூலம் தமிழ்ச் சமூகம் இலக்கிய வளம் உடைய மொழி, சங்க இலக்கியம் என்ற மூல இலக்கியமும் புதிய இலக்கிய மரபும் உடைய மொழி என்று தமிழர்களைப் பெருமைப்பட வைத்து தமிழ்ச் சமூகம் புதிய வரலாற்றில் காலடி எடுத்து வைக்க உதவியது சிறப்பிக்கப் பட்டுள்ளது. அதாவது ஒரு வகையில் தமிழ்ச் சமூகத்துக்குச் சாமி நாதய்யர் சூரியன் போன்றவர் என்று பாடியுள்ளார்.

நறவு, சுவை பெற்றுத் திகழ்வதுபோலச் சாமிநாதய்யர் பதிப்பித்த இலக்கிய நூல்கள் சுவை உடையவை. காலமெல்லாம் புலவோர் வாயில் துதி அறிவாய் (3. 3) என்று அவர் கூறுவது சாமிநாதய்யர் பதிப்பித்த நூல்களைப் படித்துச் சுவைத்து அந்த நூல்கள் கிடைப்பதற்குக் காரண கர்த்தராக இருந்த சாமிநாதய்யரைப் புகழ்வதைக் குறிக்கும். அதாவது சுவை அவர் பதிப்பித்த நூலின் சுவை. அதாவது அவருடைய உழைப்பால் உருவானது. சுருங்கச் சொன்னால் இங்கு இயற்கைப் பொருள்களின் சிறப்பை விட மனிதனின் உழைப்பால் வரும் சிறப்பு உயர்ந்தது என்ப தையே உள் வாக்கியங்களின் முரண் ஆய்வு புலப்படுத்துகிறது. அந்த உண்மை கண்ணம்மா என் காதலி என்ற கவிதையிலும் வலியுறுகிறது (பார்க்க சண்முகம், 1999). தலைமை வாக்கியம் நிரப்புவான் (முதல் மூன்று உள் வாக்கியம்) + நிரப்பி (என்று) + எழுவாய் (எவரேகொல்) + எதிர்காலப் பலர்பால் வினை முற்று (உவத்தல் செய்வார்) என்ற அமைப்பு உடையது. எழுவாய் வினாப் பெயராகவும் (எவர்) வியப்பி டைச்சொல் (கொல்) பெற்று வந்திருப்பதால் இலக்கண நிலையில் உடன் பாட்டு வாக்கியமாக அமைந்திருந்தாலும் அந்த மூன்று செயல்களுக்கும் (பரிதி ஒளி பெற்றது, நறவு சுவை பெற்றது, உயிர்கள் இறவாமை பெற்றது) யாரும் மகிழ்ச்சி அடையமாட்டார்கள் என்று எதிர்மறைப் பொருள்

உடையதே. மேலும் இங்கு மனிதர்களுக்கு அல்லது இலக்கணப்படி எழுவாய்க்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாறாக இரண்டாவது தலைமை வாக்கியத்தில் பொருட்டு வினையெச்சத்துக்கு (என் கொல்) முக்கியத் துவம் கொடுக்கப்பட்டிருப்பதன் உட்கிடையையும் இரண்டிலும் ஒத்த வினையான உவ என்பது முதல் வாக்கியத்தில் அடை இல்லாமல் இருக்க, இரண்டாவது வாக்கியத்தில் அடை (பேர் உவகை) இருப்பதன் உள் கிடையையும் பார்ப்போம்.

இரண்டாவது தலைமை வாக்கியம் நியதி வினைத்தொடர் (- ஏல் - 'என்றால்' என்று பொருள்) + பொருட்டு வேற்றுமை (இதற்கு) க்ஷ + வினா பொருட்டு க்ஷ + அடை (என் - எதற்கு அல்லது ஏன் அதாவது இதற்கு - எதற்கு அல்லது இதற்கு ஏன்) + வியப்பிடைச்சொல் (கொல்) + செ. பொ. தொடர் (பேரு வகை) + முன்னிலைப் பன்மை நிகழ்கால வினைமுற்று (படைக்கின்றீர்) க்ஷ + தேற்ற இடைச்சொல் (- ஏ) இங்குள்ள சொற்கள் பல கேள்விகளை எழுப்புகின்றன. 1. இங்கு இதற்கு என்ற சொல்லைச் சேர்க்க வேண்டிய அவசியம் என்ன ? அதிலுள்ள இது என்ற ஒன்றன்பால் சுட்டுப்பெயர் எதைக் குறிக்கிறது என்ற இரண்டு கேள்விகள் எழுகின்றன. 'சீர்த்தி பெற்றான் என்றால் என்கொல் உவகைப் படைக்கின்றீர்' என்று கூறினாலேயே பொருள் முழுமை அடையும். மேலும் சீர்த்தி பெற்றதைக் குறிப்பதாக இருந்தால் அதற்கு என்பதே பதிலீட்டு வடிவம். அதுவும் சேய்மைச் சுட்டு வடிவமே வரவேண்டும். அந்த வடிவம் தான் இடப் பொருண்மை உணர்த்தாது வெறும் பதிலீட்டுப்பெயராக வரும். மேலும் பெற்றனனேல் என்பதை அடுத்துச் சுட்டு ஒன்றன்பால் பெயர் வருவது தேவை அற்றது. மாறாக இதற்கு என்ற வடிவம் வந்துள்ளதால் 'பெற்ற இந்தக் காரியத்துக்கு' என்ற பொருள் பட்டுச் சீர்த்தி பெற்றது என்ற கருத்து அழுத்தம் ஏற்பட்டு விடுகிறது. என்கொல் என்ற கேள்வி இதற்கு என்பதை அடுத்து வந்திருப்பது இன்னொரு விதமான விளக்கத்துக்கு இடம் கொடுக்கிறது. இதற்கு என்பதை என் (எதற்கு) என்பதைத் தழுவுவதாகக் கொண்டால் (இங்கு எங்கு வந்தாய், இப்படி எப்படிப் பேசினாய் என்பது போல இதற்கு எதற்கு உவகை) சாமிநாதய்யர் இன்னும் பல புகழைப் பெற்றிருக்கிறார்.

அதாவது மஹாமஹோபாத்யாய போன்ற பல உயர்ந்த பட்டம் பெற்றி ருக்கிறார் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது என்றாகும். எனவே பொது நிலையில் - குறைவில் சீர்த்தி பெற்றதற்காகவா உவகை அடைகிறீர் அது அவரின் இயற்கைப் பண்பு என்றும் இன்னொரு பொருளும் கொள்ளலாம். அப்படியானால் இந்தப் பாட்டிலும் மறைமுகமாக மஹா மஹோபாத்யாய பட்டம் பெற்றது கூறப்பட்டிருக்கிறது என்று ஆகும். என்கொல் என்பதில் கொல் என்பது கவிஞரின் வியப்பையும் உணர்த்து கிறது. என் என்பது திரள்பொருள் (Preposition), கொல் என்பது மனப்பாங்கு (Modality). சாமிநாதய்யர் பெருமையும் அவருடைய பெயர் வருணனை மூலம் மறைமுகமாகவும் 'குறைவில் சீர்த்தி பெற்றான்' என்று நேரடியாகவும் கூறி அதற்காக மக்கள் மகிழ்ச்சி அடையும்போது எதற் காக மகிழ்ச்சி அடைகிறீர்கள் என்று கேட்டது இன்னொரு குறிப்புப் பொருளையும் உணர்த்துகிறது.

ஒரு சிலர் (ஐன்ஸ்டீன் அவர் ஒரு விஞ்ஞானிகளின் விஞ்ஞானி) ஒரு பரிசு (உ..ம். நோபல் பரிசு) பெறுவதால் அதைப் பெறுபவரின் சிறப் பால் - அவருக்குக் கொடுக்கிற அளவுக்கு உயர்ந்தது (ஐன்ஸ்டினுக்குக் கொடுக்கிற அளவு நோபல் பரிசு உயர்ந்தது) என்ற முறையில் அந்தப் பரிசே சிறப்பு பெறும். மாறாக, ஒரு சிலர் ஒரு குறிப்பிட்ட காரியத்துக் காக ஒரு பரிசைப் பெறுவதால் பரிசு பெற்றவர் என்ற முறையில் அவர் சிறப்பு பெறுவார். அதாவது பரிசு பெற்றவரால் சிறப்பு பெறுவதும், பரிசைப் பெற்றதால் சிலர் சிறப்பு பெறுவதும் உண்டு. இங்குச் சாமி நாதய்யர்புகழ் முதல்வகையைச் சார்ந்தது என்பது குறிப்பால் உணர்த்தப் பட்டிருக்கிறதாகவும் கொள்ளலாம். அது முன்னிலைப் பன்மை வினை விகுதி கையாண்டிருப்பதால் வலியுறுவது பின்னர் விளக்கப்படும். நோபல்பரிசு பெர்னார்டு ஷாவுக்கு அறிவித்த போது அந்தப் பரிசு தன்னு டைய தகுதிக்குத் தாழ்ந்தது என்று கருதி நேரே போய் வாங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தகுந்தது. எனவேதான் சாமிநாதய்யர் புகழ் பெற்றது பற்றி மக்கள் மகிழ்ச்சி அடையும்போது அது அவருடைய உண்மையான தகுதிக்குக் குறைந்தது என்று கொண்டு கவிஞர் மக்கள் மகிழ்ச்சி அடைவதைக் கண்டு ஆச்சரியப்படுகிறார் என்ற குறிப்பும்

புலனாகிறது. முதல் கருத்தனில் எதிர்கால வினைமுற்றை (செய்வார்) கையாண்டது எல்லாக் காலத்துக்கும் உரியது என்பதைப் புலப்படுத்தும். எதிர்கால விகுதி மூன்று காலத்துக்கும் (படிப்பேன் என்பது தினமும் படிப்பேன் என்று பொருள்படும்). உரியது என்று ஆகும். அதற்குக் காரணம் அந்த மூன்று பொருளும் இயற்கைப் பொருள் என்பதும் வலியுறும். அதுபோலவே யாரும் ஒரு காலத்திலும் இயற்கைப் பொருள் கள் அந்தப் பண்புகளைப் பெற்றதற்கு (பரிதி ஒளி பெற்றது) மகிழ மாட்டார்கள், ஆனால் இரண்டாவது கருத்தனில் நிகழகால வினையைப் (படைக்கின்றீர்) கையாண்டிருப்பதன் காரணம் அறியத் தகுந்தது. சாமிநாதய்யர் பழைய இலக்கிய நூல்களைப் பதிப்பிப்பதன் மூலம் புகழ் பெற்றது உழைப்பால் பெற்றது. அது வாழ்க்கையின் வளர்ச்சி நிலையைக் குறிப்பது. எனவே அதை எல்லாக் காலத்துக்கும் உரிய எதிர்கால வினை யால் குறிப்பிடமுடியாது. அதிகபட்சமாக, சாமிநாதய்யருடையபுகழ் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் உரியது. நிகழ்கால வினை எதிர் காலத்துக்கும் வரும். நாளை நான் வருகிறேன் என்று சொல்லலாம். எனவேதான் அங்கு நிகழ்கால வினை கையாளப்பட்டுள்ளது. இங்கு முன்னிலை வினை விகுதி (படைக்கின்றீர்) பயன்படுத்தியிருப்பதால் இந்தக் கேள்விக்கு உரியவர் - அதாவது இந்த வாக்கியத்தின் எழுவாய் நீங்கள் என்பது தெளிவு. அது வாசகரையோ அல்லது பொதுமக்களை யோ குறிக்கும் என்றாலும் அது ஒரு இலக்கிய உத்தி. பொதுமக்களைப் பொறுத்தவரையில் அவருடைய சீர்த்திக்குப் பேருவகை அடைவது பொருத்தமாக இருக்கலாம். ஷா நினைத்தது போலச் சாமிநாதய்யரும் தன்னுடைய உண்மையான தகுதிக்குக் கிடைத்த புகழ் பெருமை எல்வாம் ஓரளவு குறைந்தது என்று கருதுகிறார் என்று குறிப்பால் உணர வைப்ப தற்குப் பாரதி முன்னிலைப்பன்மை விகுதி கையாண்டுள்ளார் எனலாம். எனவே முன்னிலை வாக்கியமாக அமைத்ததன் மூலம் இரண்டு உண்மை களைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். 1. பொது மக்கள் இயல்பு ஒருவர் புகழ் பெற்றதற்கு மகிழ்வது, 2. அறிஞர்களின் இயல்பு அவரு டைய தகுதிக்கு ஒத்ததா ? தாழ்ந்ததா ? உயர்ந்ததா என்று ஆராய்ந்து அறிந்தே மகிழ்வது. சாமிநாதய்யரைப் பொறுத்தவரையில் மக்கள்

அவருடைய புகழுக்குப் பேருவகை அடைந்ததைச் சுட்டிக் காட்டிய அதே வேளையில் அதற்குத் தன்னுடைய வியப்பைத் தெரிவித்ததற்கு அவருடைய தகுதிக்கு அவருக்குக் கிடைத்த புகழ் குறைவானது என்ற எண்ணமே காரணம். மேலே இதற்கு என்ற சொல்லைக் கையாண்ட திலும் இந்தக் குறிப்புப் பொருள் உணர்த்தப்பட்டது இங்குச் சுட்டிக் காட்டத்தகுந்தது.

துணை நூல்கள்

குருசாமி, ம. ரா. போ., 1987, **பாரதி பாடல்கள்**, ஆய்வுப் பதிப்பு தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சண்முகம், செ. வை., 1999, '*பாரதியின் கண்ணம்மா என் காதலி அமைப்பியல் நோக்கு*', புலமை, 25. 1 : 3 - 41.

பாரதிதாசன் படைப்புகளில் மொழி

அ. தனலெட்சுமி

மொழி என்பது கருத்தை வெளிப்படுத்தும் கருவியாக அமைவதுடன் ஓர் இனத்தின் அடையாளமாகவும் அமைகிறது. சாதி, மத, இட வேறுபாடின்றி மக்களை ஒன்றிணைப்பது மொழியின் சிறப்பு. ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் தலையாய பற்று மொழிப் பற்றேயாகும். மொழிப்பற்று இல்லாதவரிடத்து தேசப்பற்று இராது என்பது நிச்சயம். ஆதலால் தமிழர்க்குத் தாய்மொழிப்பற்று பெருக வேண்டும் என்பது என் பிராத்தனை எனத் தாய்மொழிப் பற்றை வலியுறுத்துவார் பெரியார் (பெரியாரின் புரட்சி மொழிகள், பக். 36 - 37) அவரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்ட பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகளில் இடம்பெறும் தாய்மொழிச் சிந்தனை பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது

மொழி இனம் மனம்

மனிதனுக்குப் பகுத்தறிவை மலரச்செய்வது மொழி. மொழியானது இனத்தை உருவாக்குகிறது தனிமனிதனால் ஆகாததை இனம் ஆக்கிவிடும் தன்மையது. எனவே இனம் என்பது தனிமனிதனுக்கு உறு துணையாவது. மொழி மனிதனுக்குப் புகழையும் செல்வத்தையும் சேர்ப்பதுடன் அவனுடைய வரலாற்றையும் நிலைநிறுத்தும் தன்மையது. மனித மனத்தையும் மொழியையும் பிரிக்கவியலாது என்பதைப் பாரதிதாசன்,

இனத்தைச் செய்தது மொழிதான், இனத்தின்
மனத்தைச் செய்தது மொழிதான், மனத்தை

மொழிப் பற்றினின்று பிரிப்பது முயற்கொம்பு
(பாரதிதாசன் கவிதைகள், நான்காம் தொகுதி, ப 129)

எனப் பாடுகிறார். நம் நாடு எது ? நமது மொழி எது ? நமது இனம் எது ? என்பதையே மறந்துவிடுவதென்றால் பிறகு தமிழன் எதற்காக உயிர் வாழவேண்டும். தெலுங்கர், கன்னடியர், மலையாளிகளுக்குள்ள மொழிப் பற்றில் உணர்ச்சியில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு நூற்றில் ஒரு பங்குகூட இல்லை என்னும் பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளின் தாக்கத்தால் நூறில் ஒரு பங்கு என்பதன்றி நூற்றியொரு பங்கு என்னும்படி பாரதிதாசன் தம் படைப்புகளில் தமிழை உயிராய்க்கொண்டு பரவலாகப் போற்றியுள்ளார்.

தமிழ் என்றன் உயிருக்கு நேர்
தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்
தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்
தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்

என்கிறார் பாவேந்தர். எங்கும் நிறைவான பரம்பொருள் அவர்க்குத் தமிழ்தான்.

தமிழ்த் தேசியம்

தமிழனுடைய தேசியம் என்றால் இந்தி, அனைத்துலக மொழி யென்றால் ஆங்கிலம், இசையென்றால் தெலுங்கு, வழிபாடு என்றால் வட மொழி என்ற வகையில்தான் பாரதிதாசன் காலத்திய மொழி பற்றிய சிந்தனை இருந்தது. பாரதிதாசன் நோக்கில் தேசியம் என்றால் தமிழினம், நாடு என்றால் தமிழ்நாடு, மொழி என்றால் தமிழ்மொழி. இங்ஙனம் மொழி, இனம், நாடு மூன்றையும் இணைத்துத் தமிழ்த் தேசியமாகக் கருதி தமிழ்மொழி மூலமே அடையாளப்படுத்துகிறார் அவரது படைப்பு களில்,

உயர்தமிழை உயிர் என்று போற்றுமின்கள்
தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ்வர்
தமிழ் மீண்டால்தான் தமிழ்நாடு மீளும்
தமிழுக்குத் தொண்டு செய்து சாவு
தமிழழியுமானால் தமிழர் அழிவர்

சிறப்பதென்றால் தமிழராற் சிறக்க வேண்டும் -
தீர்வதென்றால் தமிழ் மறந்து தீர்தல் வேண்டும்

எனத் தமிழ்மொழியும், தமிழரும், தமிழ்நாடும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளன. இதனையே கா. செல்லப்பன் அவர்கள் பாரதியிலே மொழி வழியாகத் தேசியம் காணப்படுகிறது. பாரதிதாசனிலே மொழியியமே தேசியமாகிவிடுகிறது எனக்கருத்து உரைப்பர் (உலகக் கவியரங்கில் பாவேந்தர் பாரதிதாசன், ப. 152).

தமிழியக்கம்

பாரதிதாசனின் தமிழியக்கத்துக்கு உட்பட்டவையே மற்ற இயக்கங்கள். அவரின் உயிரியக்கமே தமிழ்தான். அவரது படைப்புகள் அனைத்திலும் தமிழியக்கமே பேரிடம் பெறுகிறது. தமிழின் பெருமை, பண்பு, தாழ்நிலை, தமிழ்ப்புலவர், தமிழ் எதிரிகள் என்றெல்லாம் பிரிவு படுத்திப் பாடியவர். தமிழ் வளர்த்தல், தமிழிசை வளர்த்தல், தமிழ் மூலம் பல்துறை வளர்ச்சிக்கு முயலுதல், தமிழ்நாட்டில் தமிழே ஆட்சிமொழி, பாடமொழி என்றெல்லாம் விரும்பியவர். சாதி, சமய அடிப்படையிலன்றி மொழி வழியான சமுதாயத்தைப் படைக்க விரும்பினார் அவர்.

தமிழில் பேசு தமிழிலே பாடு - நீ
தமிழினிற் பாடியே ஆடு
தமிழ்ப் பாட்டையே காதிலே போடு
ஆக்க அறிவியல் ஏடு
சட்ட நுணுக்கங்கள் தேடு பொறி
சமைக்கும் இயல்களில் கூடு
உயிரியல் பயிரியல் பாரு நம்
உடலியல் மருந்தியல் ஏடு

எனப் பல்துறைப் பயன்பாட்டில் தமிழையே பயன்படுத்த முயல வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

உணர்ந்திடுக தமிழ்த் தாய்க்கு வருந்தீமை
உனக்கு வரும் தீமையன்றோ
எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும்

திணையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
அதற்காகச் செத்தொழியும் நாள்
எனக்குத் திருநாளாகும்.

எனப் பாண்டியன் பரிசிலும்,

சலுகை போனால் போகட்டும் என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒரு கோடி கண்ட என்
தமிழ் விடுதலை ஆகட்டும்

என அழகின்சிரிப்பிலும் முறையே உயிரையும் பணியையும் துறந்தேனும் தமிழை அழிவினின்று காத்தல் தமிழரது கடமை எனத் தம்மையே முன்னிறுத்தி வலியுறுத்தியுள்ளார்.

தமிழியக்கம் என்ற ஒரு பகுதியையே தனித்துப் படைத்துள்ளார் பாவேந்தர்.

தமிழாய்ந்த தமிழன் தான்
தமிழ்நாட்டில் முதலமைச்சராய்
வருதல் வேண்டும்.
தமிழ்ப்புலவர் ஒன்றுபடும்
நன்னாளே தமிழர்க்குப்
பொன்னாளாகும். (தமிழியக்கம், பக். 18, 20)

அப்போதுதான் தமிழ்மொழி, இனம், பண்பாடு, நாடு ஆகியன பாதுகாக் கப்படும் எனக் கருதுகிறார். கத்திகூட தமிழச்சியின் கத்தியாகும் போது கூர்மை பெறுகிறது எதிர்பாராத முத்தத்தில் தமிழியக்கம் தலை சிறந்துள் ளது புரட்சிக்கவியைத் தமிழ் இயக்குகிறது.

அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் என்னாவி
அழிவதற்குக் காரணமாய் இருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ ஐயகோ என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ

எனப் புரட்சிக்கவியில் தமிழால் தனக்கு அழிவு வந்ததாகச் சமுதாயம் நினைத்து விடுமானால் தமிழுக்குப் பழி வந்துவிடுமோ என்று பதறு வதைக் காணமுடிகிறது.

தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்
இமயமலை போலுயர்ந்த ஒரு நாடும்
தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்

எனத் தமிழியமே தமிழகம் என வலியுறுத்துகிறார்.

விழுந்த தமிழ்நாடு தலைதூக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்

எனக் குடும்பவிளக்கில் தமிழுக்காக உயிர்த் தியாகத்துக்கும் தயாராக உள்ளமையினை எடுத்துரைக்கின்றார்.

செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே
நைந்தாயெனில் நைந்துபோகு மென்வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே

என இசையமுதில் தமிழ் வாழ்வே தம் வாழ்வு, தமிழ் வீழ்வு தம் வீழ்வே எனத் தமிழன்றித் தாமில்லை என்பதைப் பறைசாற்றுவார்.

மாணவர் என்ற தலைப்பில்,

ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல்மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்

என மாணவர்க்குத் தாய்மொழிப் பற்றை வலியுறுத்துகிறார். தமிழர்க் குரிய காதல் மணத்தையே பெரிதும் படைத்துக் காட்டும் பாரதிதாசன்,

திருமணத்தில் மணமக்கள் இல்லறத்தை
மாத்தமிழால் தொடங்கிடுக
மல்கும் இன்பம்

எனத் தமிழ் மணவிழாவைப் போற்றிக் கூறியுள்ளார்.

வாணிகர் என்ற தலைப்பில் வணிகர்கள் அறிவிப்புப் பலகையில், முகவரியில், விளம்பரத்தில் தமிழை எழுதித் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும் என விரும்பும் கவிஞர் அவர்கள் அங்ஙனம் செய்யாமையை,

> தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
> தமிழ்தானில்லை

எனத் தமிழியக்கத்தில் துயரத்துடன் சுட்டிக்காட்டுகிறார்.

தமிழ்த் திரைப்படத்தில் மொழிக்கலப்பைக் கண்டு கவலை கொண்டு வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு, மாத் தமிழர் நடுவினிலே தெலுங்குக் கீர்த்தனங்கள், வடமொழியில் ஸ்லோ கங்கள், ஆங்கிலப் பிரசங்கம், வாய்க்குவரா இந்துஸ்தான், ஆபாச நடனம் இவையனைத்தையும் பிரித்துப் பார்த்தால் அத்திம்பேர் அம்மாயி என்னும் தமிழ்தான் மீதம் எனப் பிறமொழிக் கலப்பை வேதனையுடன் வெளிப்படுத்துகிறார்.

தமிழிசை

தமிழ்நாட்டில் தமிழிசைதான் பாடப்பட வேண்டும் என்பதை,

> தெலுங்கு இசைத்தால் மறுப்பீர்கள்
> தமிழே பாடச் செய்யுங்கள் அதற்காகத் திரண்டெழுங்கள்
> அழகு தமிழ்மொழியில் பாடல் இல்லை
> என உரைத்தால் அறையுங்கள்

என வேகத்துடன் வெளிப்படுத்துகிறார். பாடகர்க்குத் தமிழ் மொழி அறிவு வேண்டும் என்பதை,

> துளியறிவும் தமிழ் மொழியில் உள்ளதுவோ பாடகர்க்குச்
> சொல்வீர் மெய்யே

எனக் கேட்கிறார்

> மொழிப்பொருள் மிக நன்றாய்க் காட்டுதல் கவியா
> விழிபல் உதடுகாண அதட்டுதல் கவியா

எனக் கருத்து புரியாத கர்நாடக இசை குறித்து வெறுப்புடன் வினவு

கிறார். 'சங்கீத விற்பன்னனாம் ஒரு சண்டாளன் ஆரம்பித்தான் இந்துஸ்தான் ஒன்றை, அப்பாட்டில் சுவை அத்தனையும் கண்டுவிட்டது போல இங்குள்ளார் வாய் திறந்தே நன்று நன்றென ஆர்ப்பரித்தார்' எனக் கவிஞர் ஆத்திரப்படுகிறார். தமிழ்நாட்டில் எவ்விடத்தும் தமிழிசையே ஒலிக்க வேண்டும் என வலியுறுத்துவார்.

இருமொழிக் கொள்கை

தமிழர்கள் தாய்மொழியிலேயே கற்க வேண்டும் என வலியுறுத்தும் பாவேந்தர் உலகமொழியாகிய ஆங்கிலத்தைத் தேவைக்கேற்பக் கற்றுக்கொள்ளலாம் என்கிறார்.

தமிழ்மொழிபோல் தாய்மொழிபோல்
தருவதுண்டோ விழிகள்
பாங்கிருக்கும் பயனிருக்கும்
உலகமொழி ஒன்று
ஆங்கிலத்தை உலகொருமை
அறிவுக்கேற்பாய் நன்று
ஈங்கிரண்டு மொழிகள் போதும்
எண்ணமெல்லாம் ஓங்கும்

என ' ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது' என்ற பகுதியில் இரு மொழியே போதும் என்கிறார்.

இந்தி எதிர்ப்பு

வடவரின் இந்தித் திணிப்பை உணர்ந்து 1926இல் பெரியார் எழுதிய ' இந்தியின் இரகசியம்' என்னும் குடியரசுத் தலையங்கமே இந்தியாவின் முதல் இந்தி எதிர்ப்புக் கருத்தாகும் அவரைத் தொடர்ந்து பாரதிதாசன் 1931 இல் புதுவை முரசில் இந்தியை எதிர்த்து எழுதியதுடன் கவிதைகளில் ஆங்காங்கே இந்தி எதிர்ப்பைக் கையாண்டுள்ளார்

செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும் இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ

என இந்தியை எதிர்க்க எல்லோரும் வாருங்கள் என அழைப்பு விடுக்கிறார். தேசிய மொழி, தேசிய ஒருமைப்பாடு என்ற போர்வையுள் தமிழர் மீது இந்தி மொழியைத் திணித்துச் செவ்வியல் மொழியாம் தமிழைப் புறக்கணிப்பதைக் கவிஞரால் ஏற்க இயலவில்லை.

செந்தமிழ் தன்னில் இல்லாத பல
சீமைக் கருத்துக்கள் இந்தியில் உண்டோ
உய்யும் தொழிற்கல்வி உள்ளதுவோ இந்தியிலே
என்ன முழுகிப்போகும் இந்தி தன்னை
எடுத்து விட்டால்

என்பன போன்ற பல சான்றுகளின் வழி இந்தித் திணிப்பால் தமிழ்ப் பண்பு அழியும் என்பதை எடுத்துரைக்கிறார்.

தமிழ்நாட்டில் இந்தியினைக் கட்டாயத்தால்
சாரவிட்டால் தமிழ் சாகும்

எனத் தமிழரசு இதழில் எழுதியுள்ளார் (15 - 2 - 1939). இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்துக்காக நல்லமுத்து கதை என்ற ஓரங்க நாடகத்தை எழுதியுள்ளார் புரட்சிக்கவிஞர். அன்றைய அரசு திணித்த இந்தியை எதிர்த்து நல்லமுத்துவும் அவன் மனைவியும் போராடுவதோடு உயிர்விடவும் துணிகின்றனர்.

நானும் என் துணைவியும் நாளும் முயல்வதில்
சிறைப்படல் காதல் தேனருந்துவதாம்
இறப்புறல் எங்கள் இன்பத்தி னெல்லையாம்

என்று கூறும் தமிழுணர்வு பெற்ற நல்லமுத்து இந்தி ஒழிக என வீர முழக்கமிடுகிறான். அவன் தாய் மண்ணாங்கட்டியும் இந்தி வீழ்க என முழக்கமிட்டுத் தன் உடைமை, உற்றார், கணவன், உயிர் அனைத்தையும் தமிழுக்காகத் துறக்கத் தயாராகின்றாள்.

வடமொழி எதிர்ப்பு

தமிழர் மேல் திணிக்கப்பட்ட அந்நிய மொழி, மேற்கத்திய கலாச்சாரம், ஆரியர் சமய வழிபாடு, மூடநம்பிக்கை என்ற அனைத்தையும் ஏற்றுத் தமிழர் தம் அடையாளத்தையே இழந்துவிடுவார்களோ என

அச்சம் கொள்கிறார் கவிஞர். ஆரிய எதிர்ப்பையும் தமிழின் உயர்வையும் எடுத்துரைக்கும் குறுங்காவியம் எதிர்பாரா முத்தம். ஊழ், கர்மம், தலை விதி, முற்பிறவி, பாவம், புண்ணியம் என்று மக்கள் தங்கள் நிலைக்குத் தாங்களே சமாதனம் செய்து கொள்வதான புனைவுகளைத் திணிக்கும் ஆரிய வருணத்தின் சூழ்ச்சியை 'அகத்தியன் விட்ட புதுக்கரடி' எனச் சாடுகிறார். தமிழர் வாழ்வில் குறுக்கிட்ட வடவர் ஆதிக்கம், பண்பாட்டு மாற்றம், புரோகிதம், சாதகம், சடங்குகள் போன்றவை தமிழர் திருமண முறைகளில் புகுத்தப்பட்டமையை 'நல்லமுத்து கதை' நாடக முற்பகுதி யில் அவனின் திருமண ஏற்பாட்டில் விவரித்துள்ளார். பின்னர் அவன் தமிழர்க்குரிய காதல் மணத்தை மேற்கொள்கின்றான்.

சொந்த மொழியும் சொந்த நாடும் அற்றவர் வடவர். வடமொழிக் குப் பெயர் கிடையாது. சமஸ்கிருதம் என்ற சொல்லுக்குச் சுத்தப்படுத்தப் பட்டது அல்லது பலவற்றைச் சேர்த்து உருவகப்படுத்தப்பட்டது என்ப தன் பொருள் சமஸ்கிருதம் பல பிரிவு மக்கள் பல காலங்களில் பேசி வந்த மொழிகளின் சேர்ப்புமொழியே தவிர, ஒரு குறிப்பிட்ட கால, குறிப்பான மொழியன்று. பார்ப்பனர் அதைப் பற்றி உயர்வாகப் பேசுவதும், பிரச் சாரம் செய்வதும் தங்கள் சமய மதக் கோட்பாடுகளை உயர்த்திக் கொள்ளவும் நமது மொழிகளை இழிவுபடுத்தவுமே ஆகும் என்று பெரியார் கூறும் கருத்துகள் (பெரியார், புரட்டு இமாலயப்புரட்டு, பக். 14, 18) பாவேந்தரிடம் கவிதை வடிவம் பெறுகின்றன.

வடமொழிக் கொருபெயர் வடமொழி நூல்களில்
இல்லவே இல்லை என்ன வியப்பா ?
சமஸ்கிருதம் எனச் சாற்றுவதெல்லாம்
செம்மையும் ஒழுங்கும் பெற்றதைச் செப்பும்

(தமிழுக்கு அமுதென்று பேர், ப. 126)

என்கிறார் பாவேந்தர். சாதி என்னும் வடசொல் தமிழில் புகுந்த பிறகே தமிழர்களிடையே சாதி பேதக் கொடுமைகள் ஏற்பட்டன.

நம்மையெல்லாம் வடமொழி தூக்கிடும் தாம்பு
நம் உரிமைதனைக் கடித்ததப் பாம்பு

(தமிழியக்கம், ப. 39)

தாய்ப்பாலில் நஞ்செனவே
தமிழில் வடமொழி சேர்த்தார்
தவிர்த்தல் வேண்டும் (குயில் பாடல்கள், ப. 20)

வடமொழி புகழ்ந்திடும் தமிழ்வாய் எதிர்
வரக்காணில் காறிநீ உமிழ்வாய்
(பன்மணித்திரள், ப. 76)

என்று தமிழுக்கு எதிரான வடமொழியின் கொடுமையை எடுத்துரைக்கின்றார். பாவேந்தர் கடவுள் மறுப்பினராயினும் தமிழர் நலம் கருதிக் கோயில் வழிபாட்டிலும் வாழ்த்திலும் வடமொழியை விலக்கி உயிர் போன்ற தமிழைப் போற்ற வேண்டும் என்கிறார்.

தெற்கோதும் தேவாரம் திருவாய் நன்மொழியான தேனிருக்கச்
செக்காடும் இரைச்சலென வேதபாராயணமேன்
திருக்கோயில் பால் ?

எனத் தமிழியக்கத்தில் வினாவுகிறார் (ப. 28). வடமொழியில் மந்திரம் கூறுவதை,

படிகட்டித் தமிழரெனக் கோயில் படிக்கட்டின்
கீழ்நின்று தமிழ் மானத்தை
வடிகட்டி அவன் வடசொல் மண்ணாங்கட்டிக் குவப்பீர்
மந்திரம் என்றே

எனச் சாடுகிறார்.

பாரதிதாசன் படைப்புகளில் உயிரோட்டமாகத் திகழ்வது தாய்மொழி தமிழ்மொழி ஆகும். தமிழ்மொழியின்றி முன்னேற்றம் இல்லை. தமிழும் தமிழரும் பிரிக்க இயலா வகையில் ஒற்றுமையுடன் திகழ வேண்டும். சாதியை ஒழித்தலும் தமிழை வளர்த்தலும் தமிழரின் தலையாய கடமைகள். தாய்மொழிவழிக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும். தொடக்கக்கல்வி தாய்மொழியில் தான் அமைதல் வேண்டும். இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்களும் அண்மையில் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தியுள்ளமை கருதத்தக்கது. தமிழ்நலம் காக்கத் தமிழன் தான் தமிழ்நாட்டை ஆளவேண்டும். துறைதோறும் தமிழ்மொழியில் புதுப்

புது நூல்களைப் படைத்தல் வேண்டும். தெலுங்கு, வடமொழி, இந்தி ஆகிய மொழிகளைப் புறக்கணித்தல் வேண்டும். தேவைக்கேற்ப உலக மொழியாக ஆங்கிலத்தைக் கற்கலாம். ஆரியச் சூழ்ச்சியிலும் இந்தி ஆதிக்கத்திலும் தெலுங்கிசையிலும் மயங்கி அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் துன்பத்திலும் உழன்று நலிவுற்றுக் கிடக்கும் தமிழ் மக்கள் பகுத்தறிவுடன் விழிப்புணர்வு பெற்று மேம்பட வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனை வேகத்தின் வெளிப்பாடே பாவேந்தரின் படைப்புகள் எனலாம்.

துணை நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள், அகத்தியன் விட்ட புதுக்கரடி, அழகின் சிரிப்பு, இசையமுது, இந்தி எதிர்ப்பு, எதிர்பாரா முத்தம், குயில் பாடல் கள், தமிழச்சியின் கத்தி, தமிழுக்கு அமுதென்று பெயர், தமிழியக்கம், நல்லமுத்து கதை, பன்மணித்திரள், பாண்டியன் பரிசு, புரட்சிக்கவி.

பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கக் கட்டுரைகள், 2003, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கோவிந்தசாமி, மு., 1979, **பாரதிதாசன் கவித்திறன்**, பாரி நிலையம், சென்னை.

செல்லப்பன், கா., **உலக கவியரங்கில் பாவேந்தர் பாரதிதாசன்.**

தங்கப்பிரகாசம், சா., 2001, **பாரதிதாசன் பாடல்களில் பெரியாரின் சிந்தனைகள்**, பகுத்தறிவுப் பதிப்பகம், பெரம்பலூர்.

பெரியார் புரட்டு இமாலயப்புரட்டு !

பெரியாரின் புரட்சி மொழிகள்.

இனவியல் ஆய்வில் *பொறுப்பு* நாவலின் இடம்

கி. இரா. சங்கரன்

ஒரு குறிப்பிட்ட இனத்தின் / சாதியின் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய செய்திகள் வெவ்வேறு வகையில் ஆவணப்படுத்தப்படும். எழுதப் பட்ட ஆவணமாகவும் இருக்கலாம். வாய்மொழி வடிவிலும் இருக் கலாம். எழுதப்பட்ட ஆவணங்களாக அவ்வினம் வெளியிட்ட திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்து மடல்கள், பூப்பு நீராட்டு விழா அழைப் பிதழ்கள், மொய்விருந்து அழைப்பிதழ்கள்[1] போன்றவற்றைத் தற்கால ஆவணங்களாகக் கணக்கில் எடுக்கலாம். இவ்வகை ஆவணங்களில் பண் பாட்டு அடையாளங்களைக் காணலாம். காட்டாக, திருமண அழைப் பிதழ்களின் தலைப்பில் குலதெய்வங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட் டிருக்கும். எ.கா. காட்டேரியம்மன் துணை. அரசு நிறுவனக் கடவுளர் களை (ஈஸ்வரன் துணை, விஷ்ணு துணை) போன்று குறிப்பதில்லை. அரசு நிறுவனக் கடவுளர்களை மிகவும் உயர்த்திப் பிடிக்கும் பிராமணர் கள் கூடத் தத்தம் திருமண அழைப்பிதழ்களில் கருப்பர் துணை, அய்யனார் துணை என்று குறிப்பிடுவதை அறிகிறோம். பொதுவாகத் திருமண அழைப்பிதழ்களில் மணமகன், மணமகள் குறிக்கப்படுகிற போது இன்னாரின் பெயர்த்தி, பெயரன், மகன் / மகள் என்கிற குறிப்பும் தரப்படுகிறது. அத்துடன் அவர்களின் தந்தை, தாத்தாமார்களின் பட்டப் பெயர்கள் அல்லது குலப்பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கும். மண மக்களின் உறவினர்களான தாய்மாமன்கள், சிற்றப்பன்கள், பெரியப்பா

மார்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கும். இவற்றுடன் அந்தந்த நபர்களின் பட்டப்பெயர்கள் தவறாமல் இடப்பட்டிருக்கும்.[2] இது போன்றே ஊர்ப்புறமுள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள / படுகிற கோயில் களில் (குறிப்பாகப் பிள்ளையார் கோயில்) குடமுழுக்கு விழாக் கமிட்டி யாரின் பெயர் கல்வெட்டுகளிலும் பட்டப் பெயர்களைக் காணலாம். அண்மையில் திருவையாறு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு கி. அய்யாறு வாண்டையார், தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை அமைச் சராக நியமிக்கப்பட்டதையொட்டி அவரை வாழ்த்தி வரவேற்ற தஞ்சை வட்டாரத்தின் சில முக்கிய பிரமுகர்கள் தத்தம் சுவரொட்டிகளில் பழாண்டார், வாண்டையார் போன்ற பட்டப் பெயர்களையும் சேர்த்து அச்சிட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகை ஆவணங் களிலெல்லாம் அவ்வினத்தின் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டு - உளவியல் கூறுகளையும் காணலாம். ஓர் இனத்தைப் பற்றி அவ்வினத்தினரே ஆய்வு மேற்கொண்டால் அது சமூகவியல். பிற இனத்தினர் மேற்கொண்டால் அது மானிடவியல். அந்த வகையில் தமிழகத்தில் கள்ளர் இனம் பற்றிக் காத்திரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட இனத் தினை ஆய்வுப்பொருளாகத் தெரிவு செய்யச் சமூக அரசியல் தேவை உள்ளது. கள்ளர் இனம் பற்றி ஆங்கில அலுவலர்கள் சேகரித்த செய்திகள் போக, பின்னாட்களில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட் டன.[3] 1923இல் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (ந. மு. வே.) தம் இனம் பற்றிப் பெரும் பண்பாட்டுக் கவலைகொண்டு கள்ளர் சரித்திரம்[4] எனும் நூலை எழுதியுள்ளார். முன்னிலையில் நின்று தம் இனத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து தந்திருந்தாலும் அந்நூலிலுள்ள செய்திகளைக் கண்டு அவ்வினம் கல்வி - பொருளாதார - பண்பாட்டு நிலைகளில் மேன்மை அடைய வேண்டும் என்பது அவருடைய கடப் பாடான வேண்டுகோளாகும். 'கள்ளர் சரித்திரம்' எழுதப்பட்ட தற்கான நோக்கத்தை " ஒரு சாதி அல்லது வகுப்பினைக் குறித்து எழுதப்படும் சரித்திரம் அவ்வகுப்பினருக்குள் உணர்ச்சி உண்டாக்கும் அளவாவது பயனளித்தல் கூடும்" என்று ந. மு. வே. வலியுறுத்தியுள்ளார். 5, 33, 972 பேர் மக்கள் தொகை கொண்ட கள்ளர் சமூகத்தில் அன்றைய

காலகட்டத்தில் 43, 665 பேர்தான் படிப்பறிவு கொண்டவர் என்றும், அதிலும் 1011 நபரே ஆங்கில அறிவு பெற்றிருக்கிறார்கள் என்றும் மிக வருந்தியே தம் நூலை எழுதியுள்ளார். எனவே தம் இனத்தைப் பல வகையிலும் முன்னெடுத்துச் செல்லவே அந்நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

“தமிழகத்தில் தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய நாடுகளில் இருந்து வரும் ஓர் பெருங்குழுவினரைக் கள்ளர் எனும் சொல் குறித்து நிற்கிறது” எனக் கூறும் ந.மு.வே. அங்கெல்லாம் இருந்து வரும் கள்ளர்களைத் தம் நூலில் ஒன்றிணைத்துக் கட்டும் என்று நினைத்திருப்பார். அந்நூல் எழுதப்பட்ட காலத்தில் பண்பாட்டு ரீதியாகக் கள்ளர்கள் வெவ்வேறு வட்டாரங்களில் சிதறிக்கிடந்தனர் என்பதே உண்மை.[5] தி.மு.க. சரியாக வளர்ந்திராத காலத்தில் கள்ளர் இனக்குழுக்களிடையே போதுமான ஒற்றுமை கட்டமைக்கப்படவில்லை என்பதற்கு ‘ வீரபாண்டிய கட்டப்பொம்மன்’ (1959) திரைப்படத்தில் இறுதிக்காட்சியில் சிவாஜிகணேசன் புதுக் கோட்டை அரசர் விஜய ரகுநாத தொண்டைமானை (1755 - 1807) தூ. . . என துப்புதல் போன்ற காட்சியில் நடித்ததற்காக, புதுக்கோட்டை வந்திருந்தபோது அவர் வருகைக்கு அந்நாளைய தி. மு. க. வின் முக்கியப் பிரமுகரான எஸ். தியாகராஜ காடுவெட்டியார் எதிர்ப்பு தெரிவித்ததாக xU fi j c© L[6]. கள்ளர் இனக்குழுக்களிடையே ஒற்றுமை இல்லாமல் போனதற்குச் சமூக அந்தஸ்து ரீதியாக தஞ்சைக் கள்ளர்கள் பின்தங்கி யோர் என்றும் புறமலைக் கள்ளர்கள் மிகவும் பின்தங்கியோர் என்றும், வகுக்கப்பட்டது ஒரு காரணமாயிருக்கலாம். ஆனால் பொருளியல் காரணங்களே மெய்யாய் இருந்திருக்கும். எப்படியெனில் தஞ்சைக் கள்ளர்கள் நெடுங்காலத்திற்கு முன்பே வேளாண்மையைத் தொழிலாகத் தெரிவு செய்தவர்கள். பிராமணப் பண்பாட்டோடு சோதிடம், பூஜை, புனஸ்கரணம் போன்றவற்றில் நெருங்கிப் போனவர்கள். புறமலைக் கள்ளர்களோ நாயக்கர், ஆங்கிலேயர் காலத்தில் மெல்ல மெல்ல வேளாண்மைக்குத் திரும்பினர். கந்தர்வக்கோட்டையோ இன்றும் வறண்ட பகுதி. மாடு களவு போவதற்கு பிரசித்தி பெற்ற கோமாவரம்

எனும் ஊர் கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில்தான் உள்ளது. கள்ளர் இனத்திலேயே தொண்டைமான் கள்ளர் குழுவினர் உச்சியில் இருப்பவர்கள்.

மேற்சொன்ன கருத்துக்களின் பின்னணியில்தான் சி. எம். முத்துவின் பொறுப்பு நாவலைப் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது. ஒரே வரியில் சொல்வதானால் நாவலாசிரியர் மிகவும் பொறுப்புடன் கள்ளர் ஒற்றுமையை வலியுறுத்திக் கவலைப்பட்டு இந்நாவலை எழுதியுள்ளார். ந.மு.வே.க்கு இருந்த பெருத்த கவலை இவருக்கும் உள்ளது. முன்னவர் தமிழக அளவில் கள்ளர் ஒற்றுமையை வலியுறுத்தினார். பின்னவர் தஞ்சை அளவில் வலியுறுத்துகிறார். சாதியடிப்படையில் நாவல்களையும் நாவலாசிரியர்களையும் விமர்சிக்கும் முறையும் சாதிச்சங்கங்களும் தலையெடுத்துள்ள இக்காலகட்டத்தில் சி. எம். முத்துவும் தம் சாதியின் பழம் பெருமைகளை மனம் பொங்கப் பொங்க இந்நாவலில் வடித்துள்ளார். மேற்சொன்ன விமரிசனப் போக்கும், சாதி வளர்ப்பும் உள்ள இன்றைய சூழலில் நாவலாசிரியர் பழமையையும் பெண்ணடிமையையும் ஆண் முறுக்கினையும் வெளிப்படுத்தும் நிலவுடைமைச் சமூகத்தினைத் தூக்கிப்பிடிக்கின்ற ஒரு நாவலை எழுதியுள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

" சொந்தத்தில் திருமணம் செய்வதைக் காட்டிலும் அந்நியத்தில் திருமணம் செய்வது சிறந்தது என்ற சிந்தனை இந்நாவலில் மெல்லிய இழையாக ஒலிக்கிறது" என்று இந்நாவலின் பின்னட்டையில் ஒரு குறிப்பு உள்ளது. 'அந்நியத்தில் திருமணம் செய்வது என்ற சிந்தனை' சொந்த சாதிக்குள் உள்ள குழுக்களிடையே நிகழும் மணமுறையைக் குறிப்பதன்று. வெவ்வேறு சாதிகளிடையே நிகழும் திருமணத்தைக் குறிக்கும் சிந்தனை. அதாவது கலப்புத் திருமணம். சாதிமறுப்புத் திருமணம். நாவலாசிரியர் வலியுறுத்தும் சாதிக்குள்ளேயே திருமணம் என்பது மேற்சொன்னபடி சாதித்திருமணம். கள்ளர்கள் அண்மைக் காலம் வரை பிளவுண்டு கிடந்தது (1970 - களில் முக்குலத்தோர் சங்கத்தின் தலைவராக எஸ். தியாகராஜ காடுவெட்டியார் தமிழகம்

தழுவிய அள வில் தலைமை ஏற்கிற வரைக்கும். அதனாலேயே அவர் திமுகவிலிருந்து நீக்கப்பட்டார்) பொருளியல் காரணங்களினால்தான். இப்பொருளியல் தான் சாதிக்குள்ளேயே வர்க்கத்தை உருவாக்குகிறது. கள்ளர் இனத்தில் வர்க்கப்படிநிலை பொருளியல் அடிப்படையில் கீழ்த்தந்தவாறு உள்ளது.

தொண்டைமான் கள்ளர்

(பண்பாடு, அதிகாரம் காரணமான அந்தஸ்து)

தஞ்சைக் கள்ளர்

(காவிரியின் வளமை காரணமான அந்தஸ்து)

புறமலைக்கள்ளர்

(தாய்வழிச் சமூக எச்சங்கள் காரணமான புறக்கணிப்பு)

கந்தர்வக்கோட்டைக் கள்ளர்

(வறட்சி காரணமான புறக்கணிப்பு)

கள்ளர் இனத்தின் வெவ்வேறு கிளைவழி நின்று பார்க்கிற போது அங்குள்ள மண உறவு புறமண உறவு முறையே (Exogamous). இதையே பிற சாதிகள் வழி பார்த்தால் அகமண முறையே (Endogamous). எனவே இங்கு நாவலாசிரியர் வலியுறுத்துவது அகமணமுறையைத்தானே தவிர 'அந்நியத் திருமண முறை' யை அன்று. கள்ளர் இனத்தில் ஒரு கிளையின் (lineage) தந்தை வழிக் குருதியுறவு வெவ்வேறு கிராமங்களிலுள்ள குடும்பங்களை வலையாகப் பின்னியிருக்கும். ஒரு குறிப்பிட்ட கிளை வேறொரு தந்தை வழிக் கிளையுடன் மண உறவு வைத்துக்கொள்ளும். இது கிளைகளைப் பொறுத்து அந்நிய மணமுறை, சாதியைப் பொறுத்து அகமணமுறை. பெரும் நிலப்பரப்பில் கள்ளரினத்தினரிடையேயான இப் படிநிலை (Hierarchy) ஒரு குறிப்பிட்ட உள்ளூர் நிலப்பரப்பில் ('Local environment / Ecology) உள்ள வெவ்வேறு கிளைகளில் பொருளியல் நிலையைப் பொறுத்து ஒரு மாதிரிப் படிநிலை உருவாகும். அது போன்று கீழைத் தஞ்சைப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட உள்ளூர் நிலப் பரப்பில் உள்ள வெவ்வேறு கள்ளர் கிராமங்களிடையே நிகழும் மண

உறவுச் சண்டை சச்சரவுகளை மையமாக வைத்து இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்தினை நடுப்புள்ளியாக இட்டுக் கள்ளர் இனம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் தனித்தனியே சுருங்கிவிடாமல் மணஉறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் அவ்வினம் / சாதி புழங்கும் பரப்பினை விரித்துச் செல்ல வேண்டும் என்பதே நாவலாசிரியரின் இப்போதைய பெருத்த கவலையாகும்.

சி. எம். முத்து

நிலவுடைமைச் சமூக ஆணாதிக்கப் பார்வை விரவிக் கிடக்கின்ற இந்நாவலில் தம் வயதொத்த ஆண் பாத்திரங்களை சி. எம். முத்து 'அவர்' என்றும் அவரவர் பட்டப்பெயர் கொண்டும் (எ.கா. தென்னம்பிரியர்) குறிப்பிடுகிற அதே வேளையில் பெண் பாத்திரங்களை 'அவள்' என்றே விளிக்கிறார்.[8] பெண் பாத்திரம் அழுகையுடனேயே அறிமுகப்படுத்தப் படுகிறது.

கள்ளரினத்தின் சமூக - பண்பாட்டு மீட்டுருவாக்கத்திற்கும் சோதிடத்தை நிலைநிறுத்துவதற்கும் இந்நாவல் பெரும்பாடாய் உழைக்கின்றது. இதற்காகவே நீர்வளம், மண்வளம் நிறைந்த பகுதியில் உள்ள 'கள்ளர் தளத்தை'க் களமாக நாவலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். வறண்ட பகுதிகளிலுள்ள கள்ளர்களைப் பற்றி இவருக்குக் கவலையில்லை. ந.மு.வே. நாட்டாரின் நோக்கம் தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கள்ளரையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதாகும். சி. எம். முத்துவின் திட்டமோ ஒரு குறிப்பிட்ட திட்டில் உள்ள கள்ளரை மட்டும் இணைக்க வேண்டும் என்பதாகும். " 1945 - 1950 - களில் பட்டிக்காட்டு ஆசாமிகள் ஆடு, மாடுகளைக் களவாடிக்கொண்டு போய் ஜீவனம் பண்ணுவது படு சாதாரணமாக நடந்து கொண்டிருந்த காலகட்டமது " என்ற நாவலாசிரியரின் கூற்று உண்மையென்றாலும் அந்தக் களவு இன்றளவும் நடந்து கொண்டுள்ளது என்பது அதை விடவும் உண்மை. 'மாடு களவாடும் தொழில்' தஞ்சைக்குத் தெற்கேயும், கந்தர்வக்கோட்டைக்கு வடக்கேயுமான இடைப்பட்ட கிராமங்களில்தான் இன்றைக்கும் நிகழ்கிறது. இப்பகுதியில் கள்ளரினத்தினரே கணிசமாக வசிக்கிறார்கள். மேனிலைச்

சாதியும் கூட துணைநிலையில் இருப்பவர்கள் கோனார்கள் / இடையர்கள். இம் மாடு களவாடும் தொழிலை நாம் வேறு மாதிரியாகவும் புரிந்துகொள்ளலாம். நெடுங்காலத்திற்கு முன்பே தஞ்சைக் கள்ளர்கள் வேளாண் பொருளியலுக்கு வந்துவிட்டார்கள் என்று முன்னரே பார்த்தோம். காலந்தோறும் வேளாண் பரப்பின் எல்லைகள் விரிந்து கொண்டு தான் வந்துள்ளன. உழுவதற்குத் தேவையான ' மாடு வளம்' தஞ்சைப் பகுதியில் தட்டுப்பாடாய் வரலாற்றுக்காலங்களில் இருந்திருக்கலாம். தஞ்சாவூர் 'மோழை மாடுகள்' உழுவதற்குப் பயனற்றவை, வீரியமற்றவை என்று சொல்லப்படுவதுண்டு. தஞ்சை மாவட்டத்தில்தான் (பழைய தஞ்சை மாவட்டம்) மாடுகளின் கொம்புகளைக் கன்றுப் பருவத்திலேயே தீய்த்து விடுவார்கள். மிருகவதை நிலவுடைமைச் சமூகத்தின் ஒரு கூறு. நாவலில் தஞ்சைப் பகுதி மாடுகள் களவு போவதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் கந்தர்வக்கோட்டையை நடுவாகக் கொண்டு நிகழும் இக்களவு புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் வரைக்கும் பரந்துள்ளது என்பதே உண்மை. தொடக்க காலங்களில் பிற வட்டாரங்களில் இருந்த மாடுகள் திருடப்பட்டுத் தஞ்சை நிலக்கிழார்களுக்கு விற்கப்பட்டு வந்ததாகக் கதைகள் உண்டு. இங்கு மாடு களவுத் தொழிலில் ஈடுபட்ட மக்கள் வறண்ட வளம் குன்றிய பகுதியில் வசித்தார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.[9] இரு வெவ்வெறு வளமைத்தன்மை கொண்ட பிரதேசங்களில் உள்ள வறண்ட பகுதிகளில் வாழும் மக்கள் களவுத் தொழிலில் ஈடுபடுவார்கள் என்பது வரலாற்று நியதி. தென்னிந்தியாவில் உள்ள பெரும்பாலான நடுகற்கள் மாடுபிடி சண்டையில் இறந்தவர்களுக்கான நடுகற்களே. தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடைப்பட்ட வறண்ட பகுதியான வடாற்காடு - தர்மபுரி வட்டாரத்திலுள்ள பெரும்பாலான நடுகற்கள் மாடுபிடி சண்டையின் சான்றுகளே இவ்வரலாற்றுப் போக்கு சங்க காலந்தொட்டுத் தொடர்கிறது என்றாலும் கள்ளர் பிரதேசத்தை பொறுத்து இன்றும் தொடரும் ஒன்று.

பெண்

மாடு கடத்தியவரின் பெண்ணைக் கடத்தி வந்ததைக் குருக்கொண் டார் எனும் பாத்திரம் வாயிலாக நாவலாசிரியர் குறிப்பிடுகிறார். இரு இனக் குழுக்களிடையே நிகழும் மோதல்களில் வரலாற்றுக்காலத்தில் பெண்கள் கடத்தப்படுவது புதிதன்று. ஆனால் அவ்வழக்கம் நிலவுடை மைச் சமூகம் அரும்பத் தொடங்கிய காலத்திலும் நிலவுடைமைச் சமூகத்திலுமே நிகழும். இங்கு நிலவுடைமைக் கள்ளரான குருக்கொண் டார் வளமை குன்றிய நிலப்பகுதியினின்று ஒரு பெண்ணைக் கிளப்பிக் கொண்டு வந்தார் என்பது பெருமையன்று, சிறுமை. மற்றொரு முறை குருக்கொண்டார் தம் முறைப்பெண் கோதைநாயகியைக் கடத்திக் கொண்டு வந்தார். அக்கடத்தலுக்குக் கோதைநாயகியும் உடன்பட்டார் என்பதில் வியப்பேதுமில்லை. அது நிலவுடைமைச் சமூகத்தில் குடும் பங்களிடையே நிகழும் தற்காலிகப்பூசல். இப்பூசலில் கடத்தியவருக்கும் லாபம்; கடத்தப்பட்டவருக்கும் லாபம். ஆனால் மாடு திருடியவரின் மனைவியை பிணையாக நிலவுடைமைச் சமூகம் கடத்தி வருதலில் உள்ள உண்மையாதெனில் 'மாடும் மனைவியும்' அதாவது, 'விலங்கும் பெண்ணும்' ஒன்றாய்ப் பார்க்கப்பட்டுள்ளனர் என்பதே. இக்கடத்தல் வேலைகள் சாதிக்குள் வர்க்கம் உள்ளது என்பதையே காட்டுகிறது.

ஆணாதிக்கம், பெண்ணொடுக்கல், பெண்கல்வி மறுப்பு போன்றவை பொதுவாக நிலவுடைமைச் சமூகத்தின் பண்புக் கூறுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன (நாவலில் பெண் பாத்திரம் அழுகையு டனேயே அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதை முன்னரே பார்த்தோம்). இவ்வகைச் சமூகத்தில் பெண்களுக்குக் கல்வி தரப்படவில்லை என்பதை யும், அவர்கள் ஆண்களைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்பதையும் தம் கூற்றாகவே நாவலாசிரியர் பதிவு செய்கிறார். இப்பண்புகளையே வர்க்கச் சிக்கலையும், சாதி முரண்களையும் மறந்துவிட்டு ஒட்டு மொத்த தமிழர் களின் பண்பாடாகவும் கருதுகிறார்.[10] இப்பெண்களை 'ஆம்பிளைகள் யாரும் கட்டுப்படுத்தினதில்லை' என்றும், ' அது பெண்களின் இயற்கை சுபாவம்' என்றும் வாதிட்டு அவற்றுக்கு ஆண்கள் பொறுப்பில்லை என்பது போல் பேசும் நாவலாசிரியரின் அடுத்த கூற்றைப் பாருங்கள்.

"மங்கொண்டார் தெருவில் நின்றபடி பெண்களை அதட்டி வண்டிகளில் ஏறிக்கொள்ளும்படி பணித்துக் கொண்டிருந்த சமயத்தில்" (59), " பெண்கள் வண்டிக்குள் உட்கார்ந்தால் அவர்கள் பயணம் செய்வது தெரியாதபடிக்கு வண்டியின் முன்பக்கத்திலும் படுதாக்கள் தொங்க விடப்பட்டிருந்தன " (37) எனும் நாவலாசிரியரின் கூற்று பெண்களின் பெட்டிப்பாம்பு நிலையினைக் காட்டுகிறது.

சோதிடம்

பல்கலைக்கழக மானியக்குழு சோதிடத்தைக் குறிப்பாக வான் சோதிடத்தைக் கல்வி நிலையங்களில் அறிமுகப்படுத்தியுள்ள இவ்வேளை யில் சோதிடத்திற்கு முக்கியத்துவம் தந்து இந்நாவல் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நாவலின் கதை நகர்வில் சோதிடமே ஓர் இயக்க சக்தியாகும். அதிலும் 'செவ்வாய் தோஷம்' எனும் சோதிடக்கூறு மிகப் பிரதானமானது. இதுவும் கூடப் பெண்களுக்கு எதிராகவே இயக்கம் காட்டுகிறது. "செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணைச் செவ்வாய் தோஷம் இல்லாத பிள்ளைக்குக் கட்டி வைத்து அதனால் பொண்ணுக்கோ பிள் ளைக்கோ விளையக்கூடாத விளைவு ஏற்பட்டுவிடும் பட்சத்தில் இழப் பை யாரால் ஈடுகட்ட முடியும்" (15) என்ற கூற்றில் பெண் சோதிடத்தின் தீவினைக்குக் காரணம் என்று காட்டப்படுவது நம் மனத்தை உறுத்து கின்றது. நாவலின் இரு முதன்மைப் பாத்திரங்களான (பெண் கொடுத்து பெண் எடுத்த மச்சினன் உறவுமுறை கொண்டவர்கள்) மங்கொண்டார், குருக் கொண்டார் குடும்பங்களிடையேயான திருமணச் சிக்கல்தான் கதையின் கரு. இதில் குருக்கொண்டாரின் மகள் வசந்தாவிற்குச் செவ்வாய் தோஷம் இருப்பதால்தான் தன் அத்தை / மாமன் மகனான கிருஷ்ணமூர்த்திக்கு மணம் முடிக்கப்படாமல் போகிறாள். இதுதான் கதையின் முதல் நகர்வும் கூட. "பிரமன் அவரு பொண்ணு தலையில இப்படி எழுதுவார்னு ஆர் நெனைச்சா சொல்லுங்க. . . ? செவ்வா தோஷத்துல பொண்ணைப் பெத் தவனோட கதி இப்படி சீரழிஞ்சு நிக் கிறதுதான் இதப்பேசி ஆவப் போற சோளியெச் சொல்லுங்க பாப்பம்' எனும் கூறு சோதிடம் பெண்ணை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது என்பதற்குச் சான்று.

பட்டப்பெயர்கள்

நிலவுடைமைச் சமூகம் தலையெடுக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே ஆட்சியமைப்பில் உள்ள நிலவுடைமையாளர்கள் ஆளப்படுகிறவர்களைத் தம்மிடமிருந்து பிரித்துக்காட்ட பெருமைமிகு (Honorific) பட்டப்பெயர்களைத் தத்தம் இயற்பெயர்களோடு சேர்த்து இட்டுக் கொள்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. தமிழக வரலாற்றில் சங்க காலத்திலேயே அரும்பாக முளைவிடத் தொடங்கிய நிலவுடைமையாளர்கள் 'கிழவர்' (இதுதான் பின்னாட்களில் கிழார், நிலக்கிழார் என்றாகி வருகின்றது) எனப்பட்டுள்ளனர். தொடர்ந்து வரும் காலங்களில் நாயக்கர்கள் காலத்திற்கு முன்பு வரை நிலவுடைமையாளர்கள் இருவகைப் பட்டப்பெயர்களைக் கொண்டுள்ளனர். 1. உடையான், ஊருடையான், நாட்டுடையான் (இவை வேளாண் சமூகத்திற்கான பட்டப்பெயர்கள்), 2. முனையதரையர், பாண்டியதரையர், மழவராயர், ஈழங் கொண்டார், கடாரங்கொண்டார் (இவை போர்க்குலத்தவர்க்கானவை). கள்ளர்கள் போர்க்குலத்தவர் என்பது தெளிவான ஒன்றே. அவ்வினத்தவரே இன்று வரை இரண்டாவதாகச் சொல்லப்பட்டவை போன்ற பட்டப் பெயர்களை இட்டுக் கொள்கின்றனர். நாவலாசிரியர் தம் பாத்திரங்களில் பயன்படுத்திய பட்டப்பெயர்களில் இராஜாளியார், வாண்டையார், மழவராயர், மங்கொண்டார், தென்னம்பிரியர் போன்றவை குறிப்பிடத் தக்கவை. தம் கள்ளர் சரித்திரம் நூலில் ந. மு. வே. 348 பட்டப் பெயர்களைத் தொகுத்துத் தந்துள்ளார். ஆனால் அண்மையில் வெளிவந்த 'கள்ளர் வரலாறு' எனும் நூலில் 1370 பட்டப்பெயர்கள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. முதல் நூலில் விட்டுப்போன 1022 பட்டப்பெயர்கள் இரண் டாம் நூலிற்கு எப்படிக் கிடைத்தன ? அவை புதிதாக உருவாக்கப்பட்ட வையா ? முன்னர் விடுபட்டுப் போனவையா ? இல்லை. இவ்விரு நூல் களும் வெளியிடப்படுவதற்கான இடைப்பட்ட காலத்தில் விளிம்பு நிலை யில் இருந்த கள்ளர்களும், கள்ளர் வட்டத்திற்குள் இழுக்கப்பட்டனரா ? இக் கேள்விகளுக்குக் கள ஆய்விலும், மானிடவியல் ஆய்விலுமே விடை காண முடியும். தஞ்சைக் கள்ளர்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள மேற்சொன்ன நூல்கள்

ஓரளவே உதவும். அவர்களின் பண்பாட்டுக் கூறு களைப் பற்றி யாரேனும் மேலதிக ஆய்விற்கு முனைந்தாலும் பிற இனங் களின் மத்தியில் கள்ளர் இனத்தின் நிலைப்பாடு என்ன என்பதை இனவி யல் பூர்வமாக (Ethnology) அறிய முற்பட்டாலும் சி. எம். முத்து எழுதிய 'பொறுப்பு' நாவல் ஓரளவிற்கேனும் உதவி செய்யும்; தூண்டு கோலாகவும் இருக்கும். அதற்கான வழிகாட்டும் கூறுகள் இந்நாவலில் உள்ளன

அடிக்குறிப்புகள்

1. மொய்விருந்து எனும் வழக்கம் தமிழகத்தின் கீழைக் கடற்கரை ஊர்களில்தான் பெரும்பாலும் நடைமுறையில் உள்ளது. (மல்லிப்பட்டினம் தொடங்கித் தெற்கே காயல்பட்டினம் வரைக்கும் கிழக்குக் கடற்கரை தொடங்கி மேற்கே புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி வட்டம் வரைக்கும்).

2. பெண்களுக்குக் குலப்பெயர்கள், பட்டப்பெயர்கள் இல்லை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் குலப்பெயர்கள் தந்தை வழிச்சமூகத்தின் கூறுகள். பிராமண கோத்திரத்தில் பெண் பெயர்கள் இல்லை. கௌசிக கோத்திரம், கௌண்டல்ய கோத்திரம் என்றே பழகி வரும்.

3. 1940 களில் புறமலைக்கள்ளர் பற்றிய தம் ஆய்வில் Louis Dumont அவ்வினத்தின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்ந்தார். பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட அவ்வாய்வேடு ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது. பல்லாண்டுகளுக்குப் பிறகு Nicholas B. Dirks எனும் அமெரிக்க அறிஞர் புதுக்கோட்டை தொண்டைமான் கள்ளர் பற்றி ஆய்ந்தார்.

4. ந. மு. வேங்கடசாமி நாட்டார், கள்ளர் சரித்திரம், மூன்றாம் பதிப்பு, 1984, பக். 92. "கள்ளர் வகுப்பினர் சிற்சில இடங்களில் செல்வம், கல்வி முதலியவற்றிலும், பழக்க வழக்கங்களிலும் மிகவும் கீழ் நிலையடைந்தவர்களாய்க் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனர் என்பது உண்மை" எனச் சொன்ன நாட்டார் எத்துறைகளில் கீழ்நிலை என விளக்கவில்லை (ந. மு. வே. கள்ளர் சரித்திரம் முகவுரை).

5. "மதுரைப் பக்கத்திலுள்ள கள்ளர்களுக்கும் (ந. மு. வே. புறமலைக் கள்ளர்களைத்தான் அப்படிக் குறிக்கிறார்). தஞ்சைப் பக்கத்திலுள்ளோர்க்கும் பழக்க வழக்கங்களில் இருக்கின்ற வேற்றுமை" என்று ந. மு. வே குறிப்பிடுவது இக்கூற்றை உறுதிப்படுத்தும்.

6. சிவாஜிகணேசன் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் 'என் மகன்' என்ற திரைப்படத்தில் " நான் தேவன்டா" என்று வசனம் பேசியிருப்பார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

7. புறமலைக்கள்ளர்கள் நெடுங்காலம் பிற கள்ளர் இனக் குழுக்களால் புறக்கணிக்கப்பட்டதற்கான காரணம் அவர்களிடையே சொச்சமாகத் தேங்கியிருந்த தாய்வழிச் சமூக அடையாளமாகவும் இருக்கலாம்.

8. காட்டேறி தாத்தாவின் மனைவியை . . . அவர் மனைவி செங்கமலம் பால்கூடை, தயிர்க்கூடை சுமந்து அக்ரஹாரங்களில் விற்றுக் காசாக்கிக் கொண்டு வருவாள் (19) என்கிறார். ராசுவின் சம்சாரம். . . சரப் புளிகளுமாகத்தான் ஊருக்கு வெளிச்சம் காட்டிக் கொண்டிருந்தாள் (21). மாங்கொண்டார் கதவருகில் நின்றபடி பெண்களை அதட்டி (59) மாங்கொண்டாரின் மனைவி சரசு வருகிறாள் (60) தென்னப்பிரியரின் மனைவி மங்களாம்பாளைப் பார்த்துச் சொல்கிறாள் சரசு (69) வெத்திலை பாக்கு இடித்தபடி குந்தியிருந்தாள் அவரது மனைவி (163) மகிழ்ந்துப் போனாள் சரசு. ஆசை பொங்கக் கேட்டாள் சரசு. சரசு நினைத்தாள் (167). மகிழ்ச்சியை நெஞ்சுக்குள்ளேயே வைத்திருந்தாள் (ரஞ்சிதம்) (171). கூடத்தில் போய்ப் பாயைப் போட்டுப் படுத்துக் கொண்டாள் (ரஞ்சிதம்) (176). கோதைநாயகி (குச்சிராயரின்

மனைவி) கதவு ஓரமாய் வந்து நின்றபடி சொன்னாள் (180). மருமகனுக்காக நாணிக் கோணி உள்ளே போய்விட்டாள் (கோதை நாயகி) (181) என்ற கூற்றில் பெண், தந்தை, சகோதரர், கணவன் உள்பட மருமகனுக்கும் அச்சமடைய வேண்டியுள்ளது என்பதைக் காட்டுகிறது.

9. இக்கருத்தினை நாவலாசிரியரும் ஒப்புக்கொள்கிறார் (146 - 147).

10. தெருப்பக்கத்தில் தப்பித்தவறி ஆம்பிளைகளைக் கண்டால் எழுந்து நின்று கொள்கிற பண்பினையும் கடைப்பிடிக்கிறார்கள். தமிழர் களது பண்புகளும் கலாச்சாரங்களும் எப்படிப்பட்டவை என்பதற்கு இந்த மாதிரி படிப்பு வாசனையறியாத பெண்களே (முன்னுதாரணமாய் இருக்கிறார்கள் (16). இவர்களை ஆம்பிளைகள் யாரும் கட்டுப்படுத்தின தில்லை (16).

11. ஒருவர் பிறக்கின்ற நேரத்தில் உள்ள வான்கோள்களின் நிலை அவரின் தன்மையையும் வாழ்க்கையினையும் நிர்ணயிக்க வல்லது என்று சொல்வதே சோதிடம் (astrology) . ஆனால் ஒருவரின் தன்மையை நிர்ண யிப்பது வான்கோள்களல்ல மரபணுதான் என்பதை நாம் அறிவோம். வான்சோதிடம் ஒரு கற்பனை அறிவியல் (fiction science) என்று சுட்டப் பட்டுள்ளது. இச்சோதிட வல்லுநர்கள் அண்டத்தின் மையம் 'புவி' என்றே இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் அண்டத்தின் மையமோ 'சூரியன்' என்று கோபர்நிகஸ் (1473 - 1543) வெளிப்படுத்திச் சில நூற்றாண்டுகள் ஓடிவிட்டன. 1975இல் பல இயற்பியல் அறிஞர்கள் கூட்டாக The humanist என்ற இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்கள். அதன் சாரம் யாதெனில் வான் சோதிடம் ஒரு மூடநம்பிக்கையே. அது பகுத்தறிவற்ற தன்மைக்கே இட்டுச் செல்லும். U. G. C. இன் முன்னாள் தலைவர் பேரா. Yashpal தன்மானமுள்ள பல்கலைக்கழகம் வான்சோதி டத்தை ஏற்காது என்கிறார். (10 - 4 - 2001 to 14 - 8 - 2000) - The Hindu.

துணை நூல்கள்

முத்து, சி எம்., 2000, **பொறுப்பு,** *முதல் பதிப்பு, அருந்ததி நிலையம், சென்னை.*

வேங்கடசாமி நாட்டார். ந. மு., 1984, **கள்ளர் சரித்திரம்** *(மூன்றாம் பதிப்பு), நூற்றாண்டு வெளியீடு.*

புலமை வேங்கடாசலம் வன்னியர்., 2001, **கள்ளர் வரலாறு,** *இரண்டாம் பதிப்பு*

Louis Dumont, 1957, *Une Sous - Caste de L 'Inde du Sud'* Organization Social of Religion des Pramallai Kallar, Paris : Mouton.

Nicholas B. Dirks, 1987, **The Hallow Crown : Ethnohistory of an Indian Kingdom**, Cambridge University Press in Association with the Orient Longman, New Delhi.

இலக்கியமும் இலக்கியக் கோட்பாடும்

இரா. சம்பத்

மொழியும் இலக்கியமும்

சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளுக்கு மொழி மட்டும் அடிப்படைக்கூறு அன்று. ஆனால், இலக்கியம் மொழியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இயங்குகின்றது. அதனால்தான், இலக்கியத்தை ஒரு மொழிக்கலை என்று வரையறை செய்வர். மொழி மனிதனின் பல தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குப் பயன்படுகிறது. அவற்றுள் ஒன்றுதான் இலக்கியம் படைத்தல். மனிதர்களுக்கிடையே நிகழும் கலந்துரையாடல், தொலைக்காட்சித் தமிழ், வானொலித்தமிழ், திரைப்படத் தமிழ், வகுப்பறைத்தமிழ், பத்திரிக்கைத் தமிழ், செய்தி விளம்பரம், மேடைப்பேச்சு, பட்டிமன்றம், ஆய்வுக்கட்டுரை, நாவல், சிறுகதை, புதுக்கவிதை, மரபுக்கவிதை, நகைச் சுவைத்துணுக்கு என இவ்வாறு பல வகைகளில் மொழியைத் தன் தேவைக்கு ஏற்ப மனிதன் பயன்படுத்துகிறான். மேற்கூறிய அனைத்து வகைகளும் மொழியை ஊடகமாகக் கொண்டுதான் அமைகின்றன. எனினும், இவற்றுள் சில வகைகளை மட்டும் இலக்கியம் என்று வரையறுக்கின்றோம். பலவற்றை இலக்கிய வரையறைக்குள் அடக்குவதில்லை.

மேற்கூறிய அனைத்து மொழி வெளிப்பாடுகளும் மொழியை ஊடகமாகக் கொண்டு அமைந்தாலும் நாவல், சிறுகதை, மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றை மட்டும் நாம் இலக்கியம் என்று ஏற்றுக்

கொள்கிறோம். சமுதாயத்தில் பயின்று வழங்கும் மொழியை ஊடகமாகக் கொண்டு படைப்பாளி தன் படைப்பைப் படைக்கின்றான். இப்படைப் பிற்கு ஊடகமாகப் பயன்படும் மொழி பிற மொழிப் பிரதியிலிருந்து மாறு படுகிறது.

ஓர் இலக்கியப் படைப்பாளி பொது மொழியையே தன் படைப் புக்குப் பயன்படுத்துகிறான். எனினும், அந்த மொழி அமைப்பின் சாத்தியப்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தி அந்த மொழியின் மூலம் பிறிதொரு மொழியை உருவாக்குகிறான். அவ்வகையில் ஓர் இலக்கியப் படைப்பினை மொழியினால் ஆன மொழி எனலாம் (நுஃமான், 2001 : 39). ஓர் ஒழுங்கமைப்புக்கு உட்பட்டுச் செயல்படக்கூடியது மொழி. ஒழுங்கமைப்புக்கு உட்பட்ட மொழியால் அமையக்கூடிய இலக்கியத்திற் குள்ளும் ஓர் ஒழுங்கமைப்பினை நாம் காண முடியும். மொழியினால் இலக்கியம் அமைந்தாலும், இலக்கியத்திற்கென்று ஒரு மொழி அமைவ தைக் காணலாம். அதுபோல ஒழுங்கமைப்புடைய மொழியினால் இலக்கியம் அமைந்தாலும் இலக்கியத்திற்கென்று ஓர் ஒழுங்கமைப்பினை நாம் இனங்காண வாய்ப்புண்டு. இந்த ஒழுங்கமைப்பே இலக்கியத்தின் கோட்பாடு அல்லது இலக்கியக் கோட்பாடு என்று கருதப்படும்.

இலக்கியமும் இலக்கியக் கோட்பாடும்

இலக்கியக் கோட்பாடும் இலக்கியமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவையாகும். இலக்கியக் கோட்பாடு என்பது படைக்கப்பட்ட இலக்கியத்திலிருந்து கண்டறியப்படும் ஒன்றாகும். இலக்கியம் வடிவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டின் வெளிப்பாடாகும். எனவே, இலக்கியக் கோட்பாடானது வடிவம், உள்ளடக்கம் இரண்டை யும் தழுவியதாகும். பழந்தமிழில் கவிதை, இலக்கிய வடிவமாக இருந்தது. இக்காலத் தமிழில் உரைநடை, கவிதை இரண்டும் இலக்கிய வடிவங் களாக உள்ளன. கவிதையின் வடிவத்தை யாப்பிலக்கணிகள் ஆராய்ந்தது போல உரைநடையின் வடிவம் ஆராயப்படவில்லை. தொல்காப்பியர் தன் காலத்தில் நிலவிய இலக்கியங்களைத் தரவுகளாகக் கொண்டு இலக் கியத்தின் வடிவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டினை ஆராய்ந்து

இலக்கியக் கோட்பாட்டை வகுத்தளித்தார். இந்த இலக்கியக் கோட்பாட்டுப் பின்னணியிலேயே சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்ளவும் விளங்கிக்கொள்ளவும் முடிகிறது. எனவே, இலக்கியமும் இலக்கியக் கோட்பாடும் பிரிக்க முடியாதவாறு ஒன்றையொன்று தழுவியவை யாகும்.

தொல்காப்பியமும் இலக்கியக் கோட்பாடும்

இலக்கிய அமைப்பினைப் பற்றிய ஆய்வினை அறிவியல் முறை யோடு தொடங்கி இலக்கியவியல் என்ற துறைக்கு வழிவகுத்துத் தந்தவர் தொல்காப்பியர் ஆவார். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், உவமையியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல், மரபியல் ஆகிய ஒன்பது இயல்களைக் கொண்ட பொருளதிகாரப் பகுதி யில் தமிழிலக்கியத்தின் அமைப்பியல்புகளைப் பற்றித் தொல்காப்பியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். இலக்கிய அமைப்பு பற்றித் தொல்காப்பியர் செய்த ஆய்வானது வண்ணனை இயல்பிலான இலக்கியக் கோட்பாட் டினை வகுக்கும் முயற்சியாகக் கருதத்தக்கதாகும். தொல்காப்பியரின் ஆய்வு முறையானது தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. உரை யாசிரியர்களின் எடுத்துக்காட்டுகள் இதனை நன்கு புலப்படுத்துகின்றன. தன் காலத்தில் தோன்றிய இலக்கிய வகைகளைத் தரவுகளின் வெளிச் சத்தில் நுட்பமாகக் கண்டறிந்து விளக்க முற்பட்ட தொல்காப்பியரின் திறம் அவர் காலத்திய இலக்கிய மரபுகளைப் புரிந்துகொள்ள வகை செய்கிறது. இலக்கிய மரபுகளை விதி இலக்கணமாக வகுக்காமல், விளக்க இலக்கணமாக வகுக்கும் தொல்காப்பியரின் அணுகுமுறையானது அறிவி யல் தன்மையிலான ஒன்றாகும். இந்த அணுகுமுறையானது இலக்கிய மரபுகள் காலந்தோறும் எப்படி மாறிவந்துள்ளன என்பதை ஆராயவும் புரிந்துகொள்ளவும் வகை செய்கிறது. இலக்கியத்தின் அமைப்பியல்புகள் பற்றிய ஆய்வானது விளக்க இலக்கணத்தில் போய் முடியாமல், விதி இலக் கணத்தில் போய் முடியுமானால் இலக்கியம் அத்தகைய இலக்கணத்தைப் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் இலக்கிய மரபுகள் பரிசோதனை முயற்சிகளின் விளைவுகளாகும். அவை மாற்றத்துக்குரியவை. தொல்

காப்பியர் விளக்கிச் சென்ற இலக்கிய மரபுகளுக்கும் இன்றைய இலக்கிய மரபுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாகும். தொல்காப்பியர் கண்ட இலக்கிய மரபுகள் சங்க இலக்கிய மரபுகளாகும்.

இன்றைய இலக்கிய மரபுகள் சங்க இலக்கிய மரபுகளிலிருந்து வேறுபட்டு அமைந்துள்ளன. இலக்கிய வரலாற்றை நோக்கும்போது இலக்கிய மரபுகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் மிகுதியாகும். தமிழில் காணப்படும் இன்றைய இலக்கிய மரபுகளைச் சங்கப்பாடல்களின் பின்னணியில் தொல்காப்பியர் சுட்டிய இலக்கிய கோட்பாட்டைக் கொண்டு ஆராயவோ மதிப்பீடு செய்யவோ முடியாது. ஏனெனில் மொழி மரபில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைவிட இலக்கிய மரபில் நிகழ்ந் துள்ள மாற்றங்கள் மிகுதியானவை.

சங்க இலக்கியமும் இலக்கியக் கோட்பாடும்

சங்க இலக்கியப் பாடல்கள் தொல்காப்பியர் வகுத்த அகத்திணை புறத்திணைக் கோட்பாட்டுக்குப் பின்புலமாக அமைந்தவையாகும். சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள பாடல்களைத் தொல் காப்பியர் காலத்துக்குச் சற்று முந்தியவை, தொல்காப்பியர் காலத்தன, தொல்காப்பியர் காலத்துக்குப் பிந்தியவை என மூன்று காலப் பிரிவு களுக்கு உரியனவாகக் கருதலாம். தொல்காப்பிய இலக்கியக் கோட்பாட் டுக்கு எதிராக அமைந்த சங்கப்பாடல்கள் அவர் காலத்துக்குப் பிந்திய னவாகக் கருதத்தக்கனவாகும். இந்த மாறுபட்ட போக்கு இலக்கியக் கோட்பாட்டின் வளர்ச்சியின் ஒரு படிநிலையாகக் கொள்ளத்தக்கதாகும்.

ஒரு தெளிவான இலக்கியக் கோட்பாட்டினைக் கருத்தில் கொண்டு சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்டதால்தான் சங்கப் பாடல்கள் இன்றளவும் நிலைபேறுடையனவாகி, சங்ககாலத் தமிழர் வாழ்வியலையும் அழகியலையும் இலக்கியப் போக்கினையும் நமக்கு விளக்குகின்றன.

யாருமில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே (குறுந்தொகை, 25)

தலைவன், தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் கடத்துகிறான். இதனை அறிந்த தலைவி தன் தோழிக்குச் சொல்லிய கூற்றாக இப்பாடல் அமைகிறது. இப்பாடலை நாம் தொல்காப்பியர் வகுத்துக் கொடுத்த இலக்கியக் கோட்பாட்டுப் பின்னணியில் மாணவர் களுக்குக் கற்பிக்கின்றோம். இவ்வாறு இலக்கியக் கோட்பாட்டுப் பின்ன ணியில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் பொழுது மாணவர்களின் படைப்பாற்றல் திறனும், இலக்கியத்தைப் புரிந்துகொள்ளும் திறனும் வளர்கின்றன. ஆனால் இன்று இருபதாம் நூற்றாண்டுப் புதிய இலக்கிய வகைகளான நாவல், புதுக்கவிதை, சிறுகதை, நாடகம், உரைநடை ஆகிய வற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொழுது சங்க இலக்கியம் போன்று கோட்பாட்டுப் பின்னணியில் கற்பிப்பதில்லை. ஏனெனில் இந்த இலக்கிய வகைகளில் புதையுண்டு கிடக்கும் இலக்கிய மரபுகளைக் கோட் பாடாக வகுத்தளிக்கும் முயற்சி முறையாக இன்னும் மேற்கொள்ளப் படவில்லை.

பாட்டியலும் இலக்கியக் கோட்பாடும்

தொல்காப்பிய காலத்துக்குப் பிறகு இலக்கியங்களைக் கோட் பாட்டுப் பின்னணியில் அணுகும் போக்கு புறப்பொருள் வெண்பா மாலை, நம்பியகப்பொருள் ஆகியவற்றின் மூலம் தொடர்ந்தாலும் முனைப்பான இலக்கிய மரபுகள் தொடர்பான ஆய்வும் உடனடியாக இலக்கியக் கோட்பாட்டை வகுக்கும் முயற்சியும் ஆய்வாளர்களால் கை விடப்பட்டதாகவே தெரிகிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு பாட்டியல் நூல்கள் கோட்பாட்டுப் பின்னணியில் இலக்கியங்களைப் பார்க்க வேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டன. பாட்டியல் நூல் கள் பல்வேறு வகையான பாக்களும் பாவினங்களும் பயின்றுவரும் இலக் கிய வகைகளையும் வடிவங்களையும் ஆராய்ந்து வகைப்படுத்தி அவற்றிற் குரிய அமைப்பினைப் பற்றிய இலக்கணத்தை வரையறை செய்தன. இன்ன இலக்கிய வகைக்கு இன்ன பா, பாவினம் உரியது என்று பாட்

டியல் நூல்கள் வண்ணனைத் தன்மையிலான விதிகளை வகுக்கின்றன. அங்கமாலை, அந்தாதி, இல்லற வெள்ளை, இன்னிசை, எண் செய்யுள், ஐந்திணைச் செய்யுள், ஒரு பா ஓர் பஃது, கணக்கு, கைக்கிளை, கையறு நிலை, சதகம் போன்ற பல்வேறு வகையான இலக்கிய வகைகளைக் கண் டெடுத்து, இவை பாடுதற்குரிய பா வகையினைப் பாட்டியல் நூல்கள் வரையறை செய்தன. போர்க்களத்தில் வெற்றி பெற்ற வேந்தன் விண்ண கம் அடைந்த பின்னர் அல்லது இயல்பாக மறைந்த பிறகு அவன் மறை வினை ஆற்றாது கையற்றுப் புலவர் பாடுவது கையறுநிலைப் பிரபந்தம் ஆகும். இதற்குரிய பாடல் வகைகளுள் வெண்பாவும் ஒன்றாகும். சங்க இலக்கியத்தில் புறப்பொருள் துறைகளில் ஒன்றாக இருந்த கையறுநிலை பிற்காலத்தில் ஒரு பிரபந்தமாக வளர்ச்சி பெற்றது எனலாம். சங்க காலத்தில் ஆசிரிய யாப்பில் பாடப்பெற்ற இப்பொருள் பிற்காலத்தில் வெண்பா யாப்பினால் பாடப்பெறுதலைப் பாட்டியல்கள் பகர்கின்றன (சோ. ந. கந்தசாமி, 1989 : 523). பெரும்பாலும் படைக்கப்பட்ட இலக்கி யங்களைத் தரவாகக் கொண்டு இலக்கிய வகைகளையே நிரல்படுத்தி அவற்றைப் படைப்பதற்குரிய நெறிமுறைகளை வகுத்தும் தொகுத்தும் தந்த பாட்டியல் நூல்களின் கோட்பாட்டு நிலையிலான இலக்கிய ஆய்வு கள் பெரிதும் பாரட்டப்பட வேண்டியவையாகும்.

சிற்றிலக்கியமும் யாப்பு மரபும்

தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளைத் தரவாகக் கொண்டு பாட்டியல் நூல்கள் இடைக்கால இலக்கியத்துக்கான கோட்பாட்டை வகுக்க முயன்றுள்ளன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய பாவகைகள் இடம்பெறும் சிற்றிலக்கிய வகைகளைப் பாட்டியல்கள் தொகுத்துள்ளன. அங்கமாலை, அந்தாதி, இல்லற வெள்ளை, இன்னிசை, எண் செய்யுள், ஐந்திணைச் செய்யுள், கணக்கு, கைக்கிளை, கையறு நிலை, சதகம், சின்னப்பூவும் தசாங்கப்பத்தும், செருக் களவஞ்சி, தாண்டக மாலை, நவமணிமாலை, நாழிகை வெண்பா, நானாற்பது, நூற்றந்தாதி, நேரிசைபதிகம், பதிற்றந்தாதி, பெருங்காப் பியம், மங்கலவெள்ளை, வெள்ளை என இதுவரை கூறப்பட்ட சிற்றிலக்

கிய வகைகள் அனைத்தும் வெண்பாக்களினால் மட்டும் இயற்றப்படும். இணை மணிமாலை, இரட்டை மணிக்கோவை, இரட்டை மணிமாலை, இருபா இருபஃது, நான்மணிக்கோவை, நான்மணி மாலை, மணிமாலை, மும்மணிமாலை, மும்மணிக் கோவை ஆகிய சிற்றிலக்கிய வகைகள் வெண்பாவும் பிற பாவகையும் விரவி வரக் கூடியவை. அனுராகமாலை, உலா, உலாமடல், குழமகன், தூது, பாதாதிகேசமும் கேசாதிபாதமும், வளமடல் இவையாவும் கலிவெண்பாவினால் இயற்றப்படும் சிற்றிலக்கிய வகையாகும்.

உருவும் திருவும் பொலிந்த இளையோன் தேர்மிசை பவனி வருவதைப் பார்த்துப் பேதை, பெதும்பை முதலிய ஏழு பருவ மங்கையர் மையலுற்றுப் போற்றுவதாக இயற்றப்படுவது உலா எனப்படும். பாட்டுடைத் தலைவனாக அரசனோ இறைவனோ அமையலாம். இதனைப் பாடுதற்கு உரிய யாப்பு நேரிசைக் கலிவெண்பா ஆகும் (சோ. ந. கந்தசாமி, 1989 : 531).

ஆற்றுப்படை, எழுகூற்றிருக்கை, ஐந்திணைச் செய்யுள், ஒரு பா ஒரு பஃது, காப்பியம், கையறுநிலை, தானைமாலை, தொகைச் செய்யுள், பாட்டு, வருக்கமாலை இவை யாவும் ஆசிரியப்பாவினால் அமையும் சிற்றிலக்கிய வகைகளாகும். கலம்பகம், பன்மணிமாலை, இருபா இருபஃது, மும்மணிக்கோவை, மும்மணி மாலை, நான்மணி மாலை, அலங்காரப்பஞ்சகம், இணைமணிமாலை ஆகியன யாவும் ஆசிரியப்பாவுடன் மற்ற பாக்கள் விரவி வரக்கூடியவை.

ஒருபோகு, ஐந்திணைச் செய்யுள், கைக்கிளை மாலை ஆகியன கலிப்பாவினால் மட்டும் அமைந்த பனுவல் ஆகும். ஐந்திணைச் செய்யுள், நாமமாலையும் புகழ்ச்சி மாலையும், மறக்களவஞ்சி, யானைத்தொழில் ஆகியன யாவும் வஞ்சிப்பாவினால் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய வகைகளாகும்.

மலையில் திரிவன, வனத்தில் வாழ்வன, நீரில் திரிவன என்னும் மூன்று வேறுபட்ட யானைகளின் வகைமைகள், உறுப்புகளின் கன பரிமாணம், வயது, தோற்றம், மதம், செயல்கள் ஆகியவற்றினை வஞ்சிப்

பாவினால் பாடுதல் உவாத்தொழில் அல்லது யானைத்தொழில் என்னும் சிற்றிலக்கிய வகையாகும் (சோ. ந. கந்தசாமி, 1989 : 541). தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவினங்களால் மட்டும் அமைந்த சிற்றிலக்கிய வகைகளையும் பாட்டியல் நூல்கள் தொகுத்து வகுத்துள்ளன. பாட்டியல் நூல்களுக்குப் பிறகு தமிழில் தோன்றிய இலக்கிய வகைகளின் அமைப்பி யல்புகளைக் கோட்பாட்டுப் பின்னணியில் அணுகும் முறையை யாரும் பின்பற்றியதாகத் தெரியவில்லை.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியமும் இலக்கியக் கோட்பாடும்

இருபதாம் நூற்றாண்டானது தமிழ் இலக்கியத்திற்குப் புதிய இலக்கிய வகைகள் பலவற்றைக் கொடுத்துள்ளது. இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழில் எண்ணற்ற கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் ஆகிய இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. இந்த இலக்கியங் களில் காணப்படும் இலக்கிய மரபுகளைப் பழந்தமிழ்ப் பாடல்களின் பின்னணியில் தொல்காப்பியர் வகுத்தளித்த இலக்கியக் கோட்பாட்டைக் கொண்டு ஆராயவோ மதிப்பீடு செய்யவோ முடியாது. ஏனெனில் இரு பதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் மிகுதியான மாற்றங்கள் ஏற்பட் டிருக்கின்றன. எனவே இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்துக்கான கோட்பாட்டை உருவாக்க வேண்டிய தேவையை நாம் உணர வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் (1875 - 1900) மாயூரம் வேதநாயகம்பிள்ளை நாவல் என்ற புதிய இலக்கிய வகையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1900 - 1925) சுப்பிரமணிய பாரதி வசன கவிதை என்னும் புதிய இலக்கிய வகையைக் கவிதைத்துறையில் தொடங்கி வைத்தார். அதே காலகட்டத் தில் வ.வே.சு.அய்யர், ஆ மாதவையா ஆகிய இருவரும் சிறுகதை என்னும் புதிய இலக்கிய வகையை அறிமுகப்படுத்தினர். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் (1925 - 1950) தோற்றம் பெற்ற தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தில் பி எஸ் இராமையா தலைமையில் சிறுகதை

என்னும் புதிய இலக்கிய வகை இயக்கமாக வளர்ச்சி பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1950 -75) திறனாய்வுத்துறை தொடங்கி வைக்கப்பட்டது. க. நா. சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா ஆகியோர் எழுத்து என்னும் இதழ் மூலம் திறானய்வுத்துறையை இயக்கமாக வளர்த்தார்கள். இதுதான் இருபதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற உரைநடை இலக்கிய வகைகளின் சுருக்கமான வரலாறு. ஆயினும், இந்த நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட இலக்கியத் திறனாய்வுகள் தொல் காப்பியர் வகுத்தளித்தது போன்ற இலக்கியக் கோட்பாட்டினை வகுக்கும் முயற்சியாக அமையவில்லை. இதனால் தொல்காப்பியர் தொடங்கி வைத்த இலக்கியவியல் என்ற துறைசார்ந்த ஆய்வுப்போக்கும் முயற்சியும் சென்று தேய்ந்து இற்றுவிட்டதாகவே தோன்றுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியான (1975 - 2000) கால கட்டத்தில் உரைநடை இலக்கிய வகைகளான புதுக்கவிதை, நாவல், சிறு கதை, நாடகம், உரைநடை ஆகிய ஐந்து வகைகளும் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. 1875-ஆம் ஆண்டு தொடங்கி 2002 ஆம் ஆண்டு முடிய 127 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கால இடை வெளியில் உரைநடை சார்ந்த இலக்கிய வகைகளின் வளர்ச்சி தமிழ் மொழியில் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. இந்தப் புதிய இலக்கிய வகைகள் தொய்வின்றிப் படைக்கப்பட்டும், படிக்கப்பட்டும் வருகின்றன கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கு இப்புதிய இலக்கிய வகைகள் கற்பிக்கப்படுகின்றன. ஆய்வுக்கும் உட்படுத்தப்படுகின்றன எனினும், இவற்றின் வடிவம் உள்ளடக்கம் பற்றிய கோட்பாடுகள் இன்னும் வகுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் இலக்கியத் துறைகளில் இலக்கிய வியலில் ஆய்வுகளை மேற்கொள்ளும் கட்டமைப்பு இல்லை. இலக்கிய வியல் துறைகள் அமைக்கப்படும் வரை இத்தகைய ஆய்வுகளை மேற் கொள்ள வாய்ப்பில்லை.

இலக்கியக்கோட்பாடும் புதுக்கவிதையும்

படைப்பாளிகளினால் படைக்கப்படும் அனைத்துப் படைப்புகளும் ஓர் அமைப்பைத் தன்னுள் கொண்டே முழுமை பெறுகின்றன. இந்த அமைப்புதான் அந்தப் படைப்பின் இலக்கணம் அல்லது கோட்பாடாகும் (இரா. கோதண்டராமன், 1988 : 8). புதுக்கவிதை என்பது உரைநடையால் அமைந்த புதிய இலக்கிய வகைகளுள் ஒன்று. இந்தப் புதுக்கவிதைக்குள்ளும் ஓர் அமைப்பு நிலவுகிறது. இந்த ஒழுங்கமைப்பையே புதுக்கவிதையின் கோட்பாடாகக் கொள்ளலாம். மேத்தா, சிற்பி, அப்துல்ரகுமான் முதலிய கவிஞர்களும், திறனாய்வாளர்களும் இலக்கணம் மீறிய கவிதையாகக் குறிப்பிடுகின்றனர். கவிஞர் மேத்தா,

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லாக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவை எதுவுமில்லாத
கருத்துகள் தம்மைத் தாமே
ஆளக் கற்றுக்கொண்ட
புதிய மக்களாட்சி முறையே
புதுக்கவிதை (மு. மேத்தா, 1980 : 24)

என்கிறார். புதுக்கவிதையை மரபுவழி யாப்புச் சிறையிலிருந்து விடுபட்ட ஒன்றாக அவர் கருதுகிறார். மரபுவழி யாப்புப் பிடியிலிருந்து கவிதை விடுதலை பெற வேண்டும் என்பதில் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தது போல் யாப்பிலக்கணத்தை மனதில் நினைத்துக்கொண்டு, புதுக்கவிதைக்கு இலக்கணம் இல்லை என்ற கருத்தை முன்வைக்கின்றனர். படைப்பு என்றால் அதற்கு ஓர் அமைப்பு உண்டு அதைக் கண்டறிய வேண்டியது ஆய்வாளரின் கடமை

யாகும். புதுக்கவிதை உரை என்ற ஊடகத்தைக் கொண்டு அமைந்த ஒன்றாகும். மரபுக்கவிதை வடிவக் கட்டுப்பாடுகளைக் கொண்ட யாப்பு என்ற ஊடகத்தைக் கொண்டு அமைந்ததாகும். மரபுக்கவிதை, புதுக் கவிதை ஆகிய இரண்டிற்கும் அமைந்த வடிவம் சார்ந்த ஊடகம் வெவ் வேறானவை என்பதால் அவற்றிற்கான ஊடக ஒழுங்கமைப்புகளும் வேறு பட்டவை யாப்பு ஊடகத்தைக் கொண்டு உரை ஊடகத்தால் அமைந்த புதுக்கவிதையை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமன்று. புதுக் கவிதை யில் மரபுக்கவிதைக்கான யாப்பிலக்கண ஒழுங்கமைப்பைக் காண முடியாது. ஆனால் புதுக்கவிதைக்கான ஓர் ஒழுங்கமைப்பை இனங்காண முடியும். இப்பொழுது கிடைக்கும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டுதான் புதுக்கவிதைக்கான ஒழுங்கமைப்பை உருவாக்க வேண்டும். இந்த ஒழுங்கமைப்புதான் புதுக்கவிதையின் கோட்பாடாகும்.

இலக்கியத்திற்கான புதிய துறை

இலக்கிய அமைப்பியல்புகள் பற்றி இலக்கியவியல் ஆய்வினைத் தொல்காப்பியர் அறிவியல் முறைப்படித் தொடங்கி வைத்தாலும், இலக்கியத்தின் அமைப்பியல்பு பற்றிய ஆய்வினை மொழியின் அமைப் பியல்பு பற்றிய ஆய்வினின்றும் தனிமைப்படுத்தும் போக்கினைத் தொல் காப்பியர் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. தொல்காப்பியரின் சொல் லதிகாரமும் எழுத்ததிகாரமும் அவரது பொருளதிகாரத்துக்கு தோற்று வாய் என்று கருதலாம். இக்கால இலக்கிய ஆய்வானது மொழி ஆய்வைப் போல் இன்னும் முறைப்படுத்தப்படவில்லை. இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழ் மொழியில் இலக்கிய ஆய்வுகள் மிகுதியாக நிகழ்ந்துள்ளன. எனினும், தொல்காப்பியர் வகுத்த இலக்கியக் கோட்பாட்டைப் போல் இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வகைகளுக்கான இலக்கியக் கோட் பாட்டை ஆய்வாளர்கள் வகுக்க முற்படவில்லை. இதற்குக் காரணம் மொழி ஆய்வுக்கு அமைந்த மொழியியல் உத்திகளைப் போல் இலக்கிய ஆய்வுக்கான உத்திகள், மாறிவரும் சூழல்களுக்கு ஏற்பக் கண்டறியப்பட வில்லை. எனவே, நாம் இலக்கியத்தின் அமைப்பியல்புகளை ஆராய்வதற் கான கோட்பாட்டுத் தன்மையிலான உத்திகளைக் கண்டறியும் முயற்சி

யினைத் தொடங்கவேண்டும். மொழி பற்றிய அறிவாராய்ச்சித் துறையாக மொழியியல் உருவாகியுள்ளது போல இலக்கியம் பற்றிய அறிவா ராய்ச்சித் துறையாக இலக்கியவியல் உருவாக முயற்சி செய்ய வேண்டும்.

துணை நூல்கள்

கந்தசாமி சோ. ந., 1989, **தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்** (முதற் பாகம், முதற்பகுதி), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

குறுந்தொகைப் பாடல் எண் : 25,

மேத்தா. மு , 1980, **ஊர்வலம்**, விஜயா பதிப்பகம், கோவை.

காலச்சுவடு, 2001, டிசம்பர் - 38.

புலமை, 1988, டிசம்பர், தொகுதி - 14, பகுதி - 2.

நாடகப் பேச்சுமொழியில் உட்தகவுக்கட்டமைப்பு

சே. இராமானுஜம்

“நாடகம்னு எதையோ போடுவாங்க. இதுதான் நாடகம்னு நாங்க பாட்டுக்குப் பார்த்துக்கிட்டே இருப்போம் உங்க நாடகம் மூலம் எங்க பார்வைய கெடுத்திட்டீங்க” என்ற குற்றச்சாட்டுத் தொனியில் நவீன தமிழ்நாடகங்களைக் குறிப்பிட்டுப் பாராட்டுவது கி. அரங்கன் அவர்களது வழக்கம் பதிவான இந்தப் பாராட்டையொட்டி இரத்தினச் சுருக்கமாக அவர் கூறும் மதிப்பீடுகள் பல “ இது பற்றிச் சிந்திக்க வேண்டும்” என்று மனக்குதிருக்குள் சேர்த்து வைத்தவைகளாகும். உடனடியாக நினைவு மண்டலத்துக்குள் வருவது ‘ ஏன்? ’ என்ற கேள்வித்தொனியில் அவர் கணித்துத் தந்த நவீன நாடகப் பேச்சுமொழியின் உரையாடலில் நடைகள், சொற்கள் ஆகியவற்றின் உட்தவுகட்டமைப்பு (Consistancy) என்பதாகும்.

“ ஒரு கதாபாத்திரத்தின் பேச்சு நடை, சொல்லாடல் ஆகியவற்றுக்குள் சில இடங்கள் எழுத்துப் பாணியிலும் சில பேச்சுப் பாணியிலும் தொனிக்கிறதே ஏன்? ” என்பது அவர் கேட்ட கேள்வியாகும். பொதுவாகவே நாடகம் முதலில் எழுத்து வடிவம் பெற்று, பின்னர் மேடை வடிவம் பெறும்போது நாடக இலக்கியம் எழுத்து நடையிலும், நடிப்புப்பனுவல் பேச்சுவழக்கிலும் மாற்றம் பெறுவது அவசியமாகிவிடுகிறது.

சில நாடகங்கள் அதன் பனுவல்களை மனோதரும வகையில் பேச்சு மொழிப்பாங்கில் உருவாக்கிப் பின்னர் எழுத்தாக்கம் செய்யப் படும்போது எழுத்துநடை பேச்சுநடைப்பாங்கிலேயே அமைவது உண்டு. ஆனால் இது நியதி இல்லை. எழுத்தாக்கத்தில் எழுத்துநடை இயல்பா கவே வருவதாகும். ஒருவேளை மலையாளம் போன்ற மொழிகளில் பேச்சு மொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள இடைவெளிக் குறைவு தமிழில் இல்லாமை ஒரு காரணமாகலாம். பேச்சுமொழி வழக்கிலேயே எழுத்து வடிவம் பெற்ற தமிழ் நாடகங்கள் பலவற்றை எடுத்துக்காட்டவும் இயலும். அது போன்றே எழுத்துமொழியை அப்படியே சரளமாகப் புலப்படுத்தியுள்ள நடிப்புப் புலப்பாடுகளையும் காட்ட முடியும். இவற்றுள் எங்கோ ஒரு வகை தகவுப் பொருத்தம் நெருடலாக இருந் தாலும் பொதுவாக அவை முளைத்து நிற்பதில்லை.

ஆனால் கி. அரங்கனின் கணிப்பு என்பது, பொருத்த நிலைப் பான்மை என்ற ஒரு வகையான மேலோட்டப் பார்வைக்கப்பால் சுவை உணர்வின் ஓசை நயங்களுக்குள் சங்கமமாகும் தகவு ஒருமையாகும். வெறும் ஒரு விகிதத் தகவுப்பொருத்த அமைப்புபற்றியதல்ல. நாடகம் என்பது காட்சிக்கூறுகள், கேள்விக் கூறுகள் ஆகிய இரண்டும் சமவிகித அளவில் பாதிப்பாதியாக அமைந்திருப்பது என்ற கணிப்பில் அடங்கி யதல்ல. காட்சிக்கட்டுக்கோப்பு என்பது வேடமணிந்த நாடக மாந்தர்கள் மேடையில் உணர்ச்சி பாவங்களோடு உரையாடி நிற்பது என்ற தவறான சமவிகிதக் கோட்பாட்டுக்கு இங்கு முதலிடம் இல்லை. இத்தகைய கோட் பாடு 'மைக்' (ஒலிபெருக்கி) கலாச்சாரத்திற்கு இரையானபோது அதில் நாடகம் உறுதி பெற்றது தமிழ்த்திரைப்படம், தொலைக்காட்சி போன்ற வைகளும் நாடகத்தின் தொடர்ச்சியாக வேடமணிந்து உணர்ச்சி களையும் கிளர்ச்சிகளையும் கொண்ட உரையாடல்களாகவே நிலவிக் கொண்டிருக்கின்றன

நாடகம் ஒரு காட்சிக்காப்பியம் என்ற நிலையில் பேச்சு மொழி காட்சிப் புலப்பாட்டின் நீட்சியாகவோ அல்லது உந்துதலாகவோ அமைதல் வேண்டும். ஆட்ட முறைமை என்னும் நிகழ்த்துப் புலப்பாடு

பேச்சு மொழியைத் தன்வயமாக்கிக் கொள்வதற்கு முன்னரே மனிதன் அமைத்துக்கொண்டதாகும். உடலின் சந்தலய அசைவுகளைத் தன்னு டன் கூடி ஆடும் ஏனைய உடல்களின் லயத்தில் இணைத்தும் தனித்தும், தொகுத்தும் சுய உள மகிழ்ச்சியையும், சுய வீர்ய உணர்வுகளையும் குழு நடன முறையில் அமைத்துக் கொண்டவர்கள் ஆதி மனிதர்கள். வெறும் லய ஆடல்களுக்கப்பால் வாழ்க்கைப் பிரச்சினையையும், வாழ்க்கைச் சிக் கல்களையும் கற்பனையில் பாவித்து உய்த்துணர முயன்றபோது அவ னுக்குப் பனுவல் தேவைப்பட்டது. பனுவல் அடிப்படையில் சந்த லயத் தோடு உடலியக்க ஆட்டங்கள் தோன்றியதும் வெறும் ஆட்டமுறை நாடக நிகழ்த்து முறையாக மாறியது. லயமும் பாவமும் உடலும் முகமும் புலப்படுத்தும் பிரச்சினைகளைப் புலப்படுத்த அவன் சைகை, சலனம், நகர்வுப்பொருள்கள் ஆகியவைகளை மொழிகளாக்கிப் பேச்சுக்கள் தோன்றாத காலத்திலேயே நாடகக் காட்சிமொழியைப் புனைந்து கொண்டான். பொருட்களைக் கையாளும் இலாவகம், முகபாவங்கள், உணர்ச்சிப் பீறிடல்கள் ஆகியவைகளோடு அவற்றிற்கு உறுதுணை செய்யும் வகையில் தன்னைச் சுற்றிய சூழலில் இயைந்த பொருள்களா லான ஆடை அணிகலன்களின் பயன்பாடு ஆதி மனிதர்களின் நாடக மொழியாயின.

ஓசை என்பது தாள லய அசைவுகளுக்கேற்ற விளிகளாகி இசை யாக மருவியது. வெறும் ஓசை இழைவுகளாகவும் சந்த லய ஒலிலயங் களாகவும் மட்டுமே ஆதிஇசை மிளிர்ந்தன. இத்தகைய இசைக்கு அப் பால் ஓசையை ஒலியாக்கி, ஒலியின் சேர்க்கைகளால் சொற்கள் உரு வாயின. சொற்களின் பரிணாமமும் பரிமாணமும் மனித சமுதாய நாகரிக வளர்ச்சிக்கேற்ப வளர்ந்து வளமும் வலிமையும் பெற்றுக் கருத்துச் சேகரிப்பு, கருத்துப் பரிமாற்றம் ஆகியவைகளுக்கான ஊடகமானது. நாடகக் கட்டமைப்பிலும் மனித குலத்தின் வளர்ச்சிக்கேற்பப் பிரச்சினை களும் சமுதாயச் சிக்கல்களும் வளரவே நாடகம் அதன் கூர்மையைப் பெற மொழியை முதன்மையாக்கிக் கொண்டது. உடலசைவுகள், ஒப்பனை, பாவ வெளியீடு ஆகிய காட்சிமொழிக்கப்பால் சொற்களும்

அவற்றின் பிரபஞ்சமும் விரியலாயின. பண்பட்ட ஒரு மொழியின் கவித்துவப் பாங்கு நாடகப்புலப்பாட்டில் முற்றுப்பெறுகிறது எனக் கொள்ளும் அளவுக்கு மொழியின் வளர்ச்சி நாடகத்தால் கணிக்கப்படலாயிற்று.

ஆங்கிகம், ஆகார்யம், சாத்விகம் என மெய்ப்பாடுகள் உள்ளப் புலப்பாடுகளாகவும், மெய்யுள் சுற்றியும் அணிந்தும் எழுதியும் பூசியும் உணர்த்தும் புலப்பாடுகளாகவும் ஆகி அபிநயங்களானபோது நாடகக் கலையில் 'பேசுதல்' (வாசிகம்) என்பது தனிப்பட்ட அபிநயக் கூறாகவும் ஏனைய கூறுகளுக்கு ஆதார நிலையுமாயிற்று. வாசிகாஅபிநயம் எனத் தனித்த இடத்தைப்பெற்று நாடகக் காப்பிய ஆக்கத்திற்கும் நடிப்புக் கலை வெளிப்பாட்டிற்கும் வரையறைகள் தந்து எழுத்தாக்கம் முதல் நிகழ்த்துதல் பாங்கு ஈறாகச் சொற்கள் விரிந்து நிலைபெறலாயின. பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்துள் பதினைந்தாவது இயலில்[1] வாசிகா அபிநயம் பற்றிக் கூறும் செய்திகளை ஒரு பருந்துப் பார்வை என்ற அளவி லேனும் உற்று நோக்குதல் இங்குப் பொருத்தமாகும்.

'பேச்சு என்பது குரல் வழிப் புலப்படுத்தப்படும் கூட்டுச் சொற்களாகும் நாடக வளர்ச்சியின் கட்டுமானத்திற்கான அடித்தளம் இது. வார்த்தைகள் நாடக ஆக்கத்தில் கவனமாக கையாளப்பட வேண்டிய பகுதியாகும். உடலசைவுகள், ஆடையணிகள், முகபாவங்கள் ஆகியவை நாடகத்தின் சொல்லாடல்களின் உட்பொருளை விளக்கி நிற்பவைகளே - ஞானம் அதாவது அறிவு வார்த்தைகளுக்குள் அடங்கி வார்த்தைகளால் ஆளப்படுபவை. வார்த்தைகள் உள்வாங்குதல், புலப்படுத்துதல் ஆகிய இரு வழிகளில் ஞானத்தைப் பெறச் செய்கின்றன. சொல்லை விட உயர்ந்தது வேறு எதுவுமில்லை. அதுவே செயல் களின் ஆதாரமாகிறது.'[2]

மேற்கூறிய வரையறைகள் விளக்கங்களுடன் வாசிகா அபிநயம் என்ற இயலைத் தொடங்குகிறார் பரத முனிவர் நாடகப் பேச்சு மொழி தொடர்பாக நாட்டிய சாஸ்திரத்தில் பெறப்படும் இதர சில செய்திகள் வருமாறு

பிரதேச வேறுபாடுகள், இலக்கணக் காப்பியப் பாங்கு, காவ்ய லட்சணங்கள், அலங்கார உத்திகள், காப்பிய நிறை, குறைகள், விளிப் புலப்பாடுகள், பாத்திரப்பெயர்கள், தொனி இழைவு, அர்த்த பேதங்கள், நிசப்தம் ஆகியவை காப்பிய ஆக்கம் மட்டுமன்று நாடகப் பாங்கானவைகளும் இழைந்தனவாம். நாடகப் பேச்சுமொழியும் அதன் பிரதேச வேறுபாடுகளும் தலையான நாடக ஆக்கக் கூறுகளாகும்.

சமஸ்கிருத நாடகங்கள் நிகழ்த்துக்கலை வடிவத்திற்கான சொற்கோவைகளாதலால், அவை வாழ்வின் நடைமுறைக்கேற்ப சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய இரு மொழிகளாலானவை. பல்வகைப்பட்ட மனநிலைகளைக் கொண்டவர்களுக்கான வார்த்தைகளுக்கு இயல்பான ஓட்டம் ஒன்று கொண்டுவரப் பிராகிருதம் பயன்படுத்தப்பட வேண்டியது நியதியாகிறது என்பது பிராகிருதப் பயன்பாடு பற்றிய பரதமுனிவரின் காரண விளக்கம். பிராகிருதம் இயல்பான வழக்கு மொழி. சமஸ்கிருதம் சீரமைக்கப் பட்ட பாண்டித்திய மொழி. பிரகிருதி என்பது இயற்கையை - அதாவது இயல்பான தன்மையைக் குறிப்பதாகும். பிரகிருதியோடு, அதாவது இயல்போடு இணைந்து நிற்பது பிராகிருதம். சொல்லோசைகளுக்கும் அச்சொல்லோசைகளைப் புணரச்செய்யும் எழுத்தோசைகளுக்குமான தனித்துவத்தை உணர்ந்து அவற்றைச் செம்மையாக்கித் திகழ்வது சமஸ்கிருதம்.

நாடக மொழிச் சொல்லாக்கம் என்பது செம்மை, இயல்பு ஆகிய இரு தன்மைகளையும் பொருத்தமான நியதிகளோடு இணைத்தும் பிணைத்தும் நிற்பதாகும். நாடகம் காப்பியம் என்ற இலக்கியமாக மட்டும் ஒடுங்காமல் அபிநயமாகவும் மிளிர வேண்டியுள்ளது. அபிநயத்தளத்தில் பிராகிருதம் மூன்று வகைப்படும். அவையாவன :

சமமான ஓசையுடையன
ஒத்த ஓசையுடையன
நாட்டு வழக்க ஓசைகளுடன் திகழ்வன

என்பனவாகும்.

கமலம், ரேணு, அமலம், லோலம் போன்ற பலவகையான சொற் கட்டுகள் செம்மை மொழியிலும், பழகுமொழியிலும் ஒரே ஓசைகளுடன் கையாளப்படுகின்றன

ஐ, ஔ போன்ற உயிர் எழுத்துக்கள் ச, ஸ, ந, ன, ண போன்ற மெய்யெழுத்து ஓசைகள் பயன்படுத்தும் போது ஏற்படும் மாறுதல்கள்

க, ட, வ, யா போன்றவற்றின் மெல்லோசை மற்றும் வல்லோ சைகள் எதிரெதிராக மாறுபடல்.

க, த, பா போன்றவற்றின் வல்லோசைகள் ஹ என்று உச்சரிக் கப்பட்டாலும் பொருள் மாறாதிருத்தல் போன்று இன்னும் பல எழுத்து, உச்சரிப்பு ஆகியவற்றின் ஓசைகளும், திரிபுகளும் சமஸ்கிருதத்தை அடி யொற்றி வேறுபட்ட, ஒத்த ஓசைச் சொற்களாகக் காட்டப்படுகின்றன.

பின்னர் நாடகத்தில் பயன்படுத்தப்படும் தேசபாஷையென பழகு மொழிகளில், வெவ்வேறு மண்டல மொழிகளின் தன்மைகளுக்கேற்பத் தாம் வகுத்துத் தந்த பத்து வகை நாடக வடிவங்களிலும் கையாளப் படுவதைச் சுட்டிக்காட்டுகிறார் பரதர்.

நாடகம், பிரகரணம், உத்திட்டாங்கம், வியாயோகம், பாணம், சமாவகாரம், வீதி, பிரகசனம், டிமம், இஹாமிருகம் எனப்படும் தசரூப' வகைகளில் சமஸ்கிருதம் அல்லது பிராகிருதம் அல்லது இரண்டும் கலந்தது என்ற நிலையில் நாடகமொழி அமையலாம். காப்பிய ஆக்கம், மேடை அபிநயப் பாங்கு ஆகிய இரண்டு நிலைகளிலும் நாடகக்கலை யின் சொல்லாடலை நான்கு வகைப்பட்டதாக நாட்டிய சாஸ்திரம் வகுத்து நிற்கிறது.

ஆதிபாஷை தேவமாந்தருக்கும், ஆரிய பாஷை மன்னர் போன்ற உயர்ந்தோர் மாட்டும், ஜாதி பாஷை பழகுமொழி பேசுபவர் மற்றும் மிலேச்சர்கள் என்னும் பிற நாட்டு மக்களுக்கும், யோனி யந்திரி பாஷை பறவைகள், மிருகங்கள் போன்ற கதாபாத்திரங்களுக்கும் உரியதாகக் கையாளப்படுதல் வேண்டும். ஜாதி பாஷைக்குள் வருணாசிரம அடிப் படையில் எல்லா வர்ணத்தாருக்கும் பொருந்துகின்ற அளவில் சமஸ்

கிருத பாஷையும், பிராகிருத பாஷையும் அமையலாம். இவற்றுள் நாயகக் கதாப்பாத்திரங்கள், சன்னியாசிகள், முனிவர்கள், புத்தர்கள், அந்தணர்கள், உத்தம கதாபாத்திரங்கள் சமஸ்கிருதத்தில் பேசவேண்டும். நாயகக் கதாபாத்திரங்கள் தேவை கருதி பிராகிருதம் பேசலாம். பொது வாகப் பெண்கள் சமஸ்கிருதம் பேசுபவர்களல்ல எனினும் உடன்படிக் கைகள், மணபந்தங்கள், நாள், நட்சத்திரம், கிரகம், பறவை ஓசை ஆகியவற்றின் பலாபலன்கள் போன்றவைகளை அறிய அரசமாதேவிக் கும், கலைகளைக் கையாளும் கணிகையர், மாதர்சிற்பிகள் ஆகியோருக் கும், அப்சரசு போன்ற தேவமாதர்களுக்கும் சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தலாம். மற்றவர்கள் பிராகிருதத்தையும், வேடர்கள், ஆந்திரர், திராவிடர் போன்றவர்கள் அவரவர்களது மொழிகளையும் நாடக வசனச் சொற்களாகக் கொள்ளவேண்டும்.

பிராகிருதத்தில் சமஸ்கிருதத்தையொத்த மொழிகள் எனப்படு பவை ஏழு வகைப் பிராந்திய மொழிகளாகும் அவை, மாகதி, அவந்திஜ, பிராச்சியம், சௌரசேணி, அர்த்தமாகதி, பாஹ்லீகம், தாட்சிணாத்யம் ஆகியவையாகும். அந்தப்புர மாதர்கள் மாகதியையும், அரசகுமாரர்கள் சேவகர்கள், வணிகர்கள் அர்த்தமாகதியையும், விதூஷகன் பிராச்யத் தையும், முரடர்கள் அவந்தியையும், நாயகி மற்றும் தோழி பாத்திரங்கள் சௌரசேணியையும், சூதாடுபவர்கள் பாஹ்லீகத்தையும்,போர் வீரர்கள் தாட்சிணாத்யத்தையும் கையாளுதல் வேண்டும்.

இவற்றைத்தவிர சொல்லாடல்களின் சாயல்கள் கங்கை நதிக்கும் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் 'ஏ' கார ஓசை மிகுந்தும்,, விந்தியம் கடல் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட நிலத்தில் 'ந' கார ஓசை மிகுந்தும், சௌராஷ்டிரம், அவந்தி முதலிய நாடுகளில் 'ச' கார ஓசை மிகுந்தும், இமாசலம், சிந்து ஆகிய நிலப்பரப்பில் 'உ' கார ஓசை மிகுந்தும், சரமா வதி நதிதீரம் மற்றும் அற்புத மலைப்பிரதேசம் ஆகிய இடங்களில் 'ஓ' கார ஓசை மிகுந்தும் திகழும் என்று அறியப்படுகிறது. இவற்றுக்கும் அப் பால் பிரக்ஞை பிறழாது பொதுவாகப் பயன்படுத்தப்படும் மொழிகளி லிருந்தும் நாடகத்தின் சொல்லாக்கங்கள் அமைக்கப்படலாம் என்றும் காணப்படுகிறது.

குரல், மொழி மற்றும் நாடகப்பேச்சுமொழி ஆகியவை பற்றி இன்னும் ஆழ்ந்தும் விரிந்தும் நாட்டிய சாஸ்திரத்தை அணுக வேண்டியுள்ளது. நாடகத்தில் பேச்சுச்சொற்கள் கையாளப்படுவதைப் பற்றிய ஒரு தொகுப்பு வரையறையாகக் கோடிட்டுக் காட்டினாலும் இக்கூறு நடைமுறைக்கேற்பப் பரந்தும், விரிந்தும், வளர்ந்தும் நிற்பதாகும் என்பதையும் பரதமுனிவர் குறிப்பிடத் தவறவில்லை. எனினும் நாட்டிய சாஸ்திரம் நாடக மொழியாக்கத்தில் பேச்சு மொழிப்பயன்பாட்டின் உட்தகவுப் பொருத்த முறைக்குக் கொள்ளவேண்டிய கவனத்தையும் கனத்தையும் காட்டி நிற்பதாகும்.

நவீன நாடகத்தில் நாடகக்கூறுகள் எல்லாவற்றையும் அர்த்தமுள்ள வகையில் இணைத்து, முழுமை நாடக ஆக்கத்தையும், அனுபவத்தையும் கொண்டும் கொடுத்தும் நிகழ்த்தும் முயற்சிகளாகக் கையாளப்படுகின்றன. இந்நிலையில் பார்வையாளர்களைப் பாவனை, சிந்தனை ஆகிய இரு நிலைகளிலும் பங்காளிகளாக்கும் முயற்சி சற்று சிரமமாகவே உள்ளது. அத்தகைய சிரமங்களில் நாடகத்தின் மொழிப் பயன்பாடு இன்னும் அதற்கான வலிமையையும் வகையினையும் பெறவில்லை என்பது எங்களுக்குள் விவாதத்திற்குரியதாகும். அவற்றுள் கி. அரங்கன் கூறும் நெருடலையும் நாங்கள் உணர்கிறோம். ஒரு கதாபாத்திரத்தின் வசன ஆக்கத்திலேயே இயல்பும் செயற்கையும் விரவி நெருடும் தன்மை புலப்படுகிறதை உணர்கிறோம்.

இந்த நெருடல் நவீன நாடகம் என்னும் முத்திரைக்கு அப்பாற்பட்ட வழக்கமான நாடக வடிவில் அத்துணை அளவுக்கு முனைந்து நிற்காதது மட்டுமல்ல, அவர்களுக்கென மொழி நடைப்பாங்கை ஒரு பாட்டைக்குள் அமைத்துக்கொள்ள அவர்களால் இயன்றுள்ளது. காரணம் ஒருவகையான பிரகடனப் பாங்கினுள் உள்தொனியாக ஆரவாரம் இழையோட அந்த இழைகள் மனதின் பலஹீனமான உணர்ச்சிக் கிளரல்களை ஒரு ஜனரஞ்சகத்தன்மையுடன் ஊட்டிக் கொண்டே இருக்கும். அந்த ஜனரஞ்சகத் தன்மைக்குள் நெருடல்கள் கரைந்து மொழிகளின் ஒரு ஜாலவித்தை நடந்து கொண்டேயிருக்கும். மேடைகளின் காட்சி மொழி அவற்றின் உடலுக்கும் மேடைத் தளத்திற்கு முள்ள ஆட்டப்

பாங்கான தொடர்பைக் குறுக்கிப் பாடல்கள், வசனங்கள் ஆகியவற்றின் திறங்களில் ஒடுங்கி நிற்கும்போது மொழி நெருடல்கள் முளைத்து நிற்க வழியில்லை.

நவீன நாடகமோ நாடகத்தின் மறந்துவிடப்பட்ட இழைகளான உடல் அசைவுகளோடு ஓசையைப் பிணைத்தல், மேடைச் செயல்பாடு களோடு சொற்கள் ஒன்றுதல். ஓசைகளின் இயல்பான சந்தலயத்தைத் தேடுதல். படைப்பாக்கத்தின் ஒயிலாக்கத்திற்கு ஏற்ப உரையாடலின் ஒலியாக்கம் துழாவுதல், போன்ற சவால்களை ஏற்க வேண்டியுள்ளது. இங்கே சொல்லாடலின் வரையறை எளிதானதன்று. உடலின் விளம்ப கால அசைவுகளுக்கேற்பக் குரல்களையும் நீட்டோசைகளாக மாற்றிப் பார்க்கின்றனர். இம் முயற்சியில் சொற்களை தன்னிச்சைக்கு ஏற்பத் தன் வயப்படுத்த முடியுமே தவிர ஓசைகளின் அர்த்த வயப்படுத்துதல் என்பது கடினமானதே. மனோதர்ம நாடகப்பயிற்சிகளை நாடகப் பயில்முறை யின் பாகமாக்கிக்கொண்ட காலமிது. எனவே மனோதர்ம நாடக ஆக்கத் தில் தேவைக்கு அதிகமான சொற்களின் பனுவலாக்கமும், நாடகப் பிரதி களிலிருந்து படைப்பாக்கம் செய்யும் நாடகங்களில் தேவைக்கு அதிக மான படிமமாக்கலும் உத்திகளின் வளையங்களாகுமே தவிர நாடகத்தின் மொழியாகக் காட்சி, கேள்வி ஆகிய தளங்கள் உருப்பெற உதவாது. இது நாடக ஆக்கத்தினராகிய நாங்கள் உணர்ந்ததே. நவீன நாடகம் வாய்ப்புக் கிடைக்கும்போது அவரவர்கள் துவைத்துத் துப்பும் ஒரு ஆற்று வண்ணான் பாறையாக உள்ளதே தவிர நிரந்தரமான ஒரு படித்துறையாக வில்லை. எனவே எங்கள் சுய விமர்சனங்களைச் சுயசமாதானங்களுக்குள் கரைத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

நவீன நாடகப்பிரதியாக்கம்

நவீன நாடகப்பிரதியாக்கம் என்பது பல்வேறு கோணங்களின் ஒரு நாற்சந்தி நடனமாகும்.

உலகம் தழுவிய பிற மொழி நாடகங்களின் தமிழாக்க அடிப்படை யிலான மேடைச்சொல்லாடல்கள்,

அறிவார்த்தம், கவித்துவஅழுத்தம் ஆகியவற்றை நிலைநாட்டத் தேவையான மொழி ஆக்கத்திற்கேற்ற புதுப்புதுச் சொல்லாக்கத் தேவைகள்,

தனித்துவமான எழுத்துநடை ஆக்கத்தை நாடக வசனங்களாக்கும் ஆவல் நிர்பந்தங்கள்,

உலகம் தழுவிய அழகியல், அறிவியல், மொழிஇயல் கோட்பாடு களின் தாக்கம் பெற்று அவற்றுக்கு ஈடாகத் தமிழ் நாடகப்புலப்பாட்டிற் கான வார்த்தைக் கோவை வடித்தல்,

பார்வையாளர்களின் தரத்திற்கும் ரசனைக்கும் சமரசம் செய்து கொள்வதைத் தவிர்த்துத் தம் சுய வெளிப்பாடுகளான படிமத் தொடர் களுக்கு அவர்களை அழைத்துச் செல்ல விரும்பும் அபிலாஷைகள்,

மேல்நாட்டுக் கோட்பாடுகளை உள் வாங்குதலிலும், அவற்றைத் தன் வயமாக்கி, நம் சூழலுக்குரியவைகளாக மாற்றுவதிலும் உள்ள சொல் லாக்கச் சிரமங்கள்,

சுயமேதாவிலாசத்தின் தனித்துவங்களை நிலைநாட்ட முயலும் சுயாபிமானப் புலப்பாடுகள்,

உடல்,,சமூகம். சமுதாயம் ஆகிய களங்கள், அரசியல் விழிப் புணர்வு, சமூக சித்தாந்தப் பிணைப்பு ஆகிய பல கோணங்களின் ஊடக மாக நாடகம் செயல்பட அவற்றிற்கான அறிவார்ந்த தளச்சொற்கள் தேர்வு,

தமிழ்ச்சொற்களின் உச்சரிப்புகளைப் பற்றி அக்கறையில்லாத அடுக்கு மொழிப்பாங்கான பேச்சு நடைப்பரிச்சியம்,

ஆங்கில மொழி வழிக் கல்வி மூலம் தமிழ் மொழித் தொடர்பிழந்த தலைமுறையினரின் உச்சரிப்புகள்,

நவீன கருத்துப் புலப்பாட்டுச் சாதனங்களின் குறைகள் நிறைந்த பேச்சு, பிரசங்கம், உரையாடல், பன்மொழித் தொடர்களின் தமிழாக்க ஓசைகள் ஆகியவற்றின் தாக்கம்,

இவைகளுக்கிடையில் பராம்பரியம் சிதறாத ஒரு மண்ணில் தமிழ் நாடகத்தை வேர் பிடிக்கச் செய்ய வேண்டிய ஆதங்கங்கள்,

ஆகியவைகள் நாடகத்தின் பேச்சு மொழியைப் பாதிக்கும் பல் வகைத்தளங்களாகும். இத்தளங்களை ஈடு செய்யும் வகையில் அல்லது அதை விட அவற்றைச் சீரமைக்கும் ஒரு மொழியாண்மை நாடக வழக்கில் மிகவும் தேவைப்படுகிறது. நாடகத்தின் எழுத்து, பேச்சு ஆகிய மொழிநடைகள் சொற்கள் ஆகியவற்றின் உட்தகவுப் பொருத்தத்திற்கு ஒரு நாடக மொழி யாண்மை தேவைப்படுகிறது. இதற்கு இன்னும் ஆய்வு, ஆயத்தம், பயிற்சி, பரிச்சயம் தேவை.

அடிக்குறிப்புகள்

1. நாட்டிய சாஸ்திரத்தின் சமஸ்கிருதம் மற்றும் பல்வேறு மொழி பெயர்ப்புகளில் இயல்களின் எண்ணிக்கைகளில் வித்தியாசம் காணப்படு கின்றன. பதினைந்தாவது இயல் என்று இங்குக் குறிப்பிடப்படுவது K. P. நாராயண விஷாரபி நூலின் அடிப்படையிலாகும்.

2. Apparao, P. S. R., 1967, A Monograph in Bhasha's Natyasastram, Natayala.

துணை நூல்கள்

நாராயண விஷாரபி. K. P., 1987, **பரதமுனிவ நாட்டிய சாஸ்திரம்** (மலையாளம்) , கேரள சாகித்திய அகாதமி, திருச்சூர்.

ஸ்ரீராமதேசிகன், S. N., 2001, **பரத நாட்டிய சாஸ்திரம்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

Apparao, P. S. R., 1967, **A Monograph in Bhasha's Natyasastram**, Natayala.

Paulose, K. G., 1993, **Natankusa**, Govt. Sanskrit college, Tripanithura.

A Board of Authors, 2000, **The NatyaSastra of Bharathamuni**, Indian Book centre, Delhi

நாடக நெறியாளர் என்கிற இன்னொரு கலை ஆளுமை

மு. இராமசுவாமி

உலக நாடக நிறுவனம் (ITI) என்கிற அமைப்பு 1961 ஜூனில் வியன்னாவில் கூடிய தனது 9வது உலகப் பேராயத்தில் குறிப்பிட்ட ஒரு நாளைத் தேர்வு செய்து, அன்று உலகம் முழுக்க உள்ள நாடகியர்கள் அனைவரும் நாடகம் பற்றிய சிந்தனைத் தளத்தில் - செயல்பாட்டில் - ஈடுபட வேண்டும் என்ற அவாவில், அவ்வமைப்பு நாடக ஆய்வரங்கு நடத்தத் திட்டமிட்டிருந்த மார்ச் 27 என்கிற நாளை உலக நாடக நாளாக அறிவித்தது அதன்படி உலக நாடக நாளாக அறிவித்திருந்த 27 மார்ச் 1962 அன்று உலக நாடக நிறுவனம் ' நாடுகளின் நாடகக்கலை' (Theatre of Nations) எனும் ஆய்வரங்கைப் பாரீசில் நடத்தியது. அதைத் தொடர்ந்து அந்த நாளை மையமிட்டு உலகின் பல பகுதிகளிலும் நாடகியர்கள், நாடக ஆர்வலர்கள் ஒருங்குகூடி, நாடகம் தொடர்பான நிகழ்வுகள், சிந்தனைகளில் தங்களைக் கரைத்துக் கொள்கின்றனர். அந்த வகையில் உலக நாடகத்தினத்திற்கு இன்று வயது 40. குறித்து வைக் கப்பெறாத தொன்மையுடைய நாடகத்தை உலக நாடக தினமாக அடக் கிப் பார்த்து 40 ஆண்டுகளே ஆகின்றன. ஒவ்வொரு ஆண்டும் உலக நாடக நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உலகத்தரத்தில் நிகரற்று விளங்கும் நாடக ஆளுமை கொண்ட மிகச்சிறந்த நாடகியர் ஒருவரிட மிருந்து பெறப்பட்ட செய்தியை உலக நாடக நாளின் உலகச் செய்தியாக

(International Message) இந்நிறுவனம் அறிவிக்கிறது. 2002 ஆண்டிற்கான உலக நாடகச் செய்தியை வழங்கியவர் தலைசிறந்த இந்திய நவீன நாடகாசிரியர்களுள் ஒருவரான திரு கிரிஷ்கர்னாட் அவர்களாவார். தற்பொழுது லண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்தின் உயர் குழுமத்தின் கலாச்சாரப் பிரிவான நேரு மய்யத்தின் இயக்குநராக உள்ள இவர், கன்னட நாடக ஆசிரியர். யயாதி, ஹயவதனா, துக்ளக், நாகமண்டலா, நெருப்பும் மழையும் (The fire and the rain) ஆகியவை இவரின் குறிப்பிடத்தக்க சில நாடகங்கள். இந்தியத் திரையுலகின் இமயங்களான சத்யஜித்ரே, மிருனாள்சென், ஷ்யாம்பெனகல் ஆகியோருடன் இணைந்து திரையுலக முயற்சிகளில் செயல்பட்ட தோடன்றி, தனித்தும் சிறந்த திரைப் படங்களை உருவாக்கியவர். 1988 - 93 ஆகிய ஐந்தாண்டுகள் தேசிய நிறுவனமான சங்கீத நாடக அகாடமியின் தலைவராக விளங்கியவர். 1999ஆம் ஆண்டு பாரதிய ஞானபீட விருது பெற்றவர். பத்மபூஷன் விருதும் பெற்றவர். உலக நாடக நிறுவனத்தின் நாடகதின உலகச் செய்தியை வழங்கும் முதல் இந்திய நாடகாசிரியர் இவர் என்ற முறையில் நாம் கூடுதலாகப் பெருமைப்பட்டுக்கொள்ளலாம். தமிழ்த்திரை ரசிகர் களுக்குப் புரியும்படியான இன்னொரு எளிய அடையாளப்படுத்து தலையும் சொல்லாவிட்டால் அவர் பற்றிய குறிப்புகள் முழுமை பெறாதவையாகிவிடும் நான் அடிமை இல்லை (ஸ்ரீதேவி அப்பா), குணா (மருத்துவர்), உல்லாசம் (மஹேஸ்வரி அப்பா) ஆகிய படங்களில் நடித்திருப்பவர் இந்த அளவே போதுமானது. சென்ற ஆண்டிற்கான அவருடைய உலகச் செய்தி இதுதான்.

உலகின் தொன்மையான நாடகம் பற்றிய நூல்களில் ஒன்று நாட்டிய சாஸ்திரம். மிகவும் குறைத்துக் கருதினாலும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைத் தொடுகிறது இதன் காலம் ! இதன் முதல் இயல், நாடகம் பிறந்த கதையைக் கூறுகிறது. ஒழுக்கச் சீர்குலைவில் உலகம் முழுகிக் கொண்டிருந்த காலம் அது. மக்கள் மிருகத்தனமான உணர்வுகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர். மனித சமூகத்தை மேம்படுத்த (கண்களுக் கும் காதுகளுக்கும் இனிமை பயந்து மனோபலத்தைத் தரத்தக்க) ஒரு புதிய வழி தேவைப்பட்டது. ஆகவே படைத்தல் தொழிலின் கர்த்தாவான

பிரம்மா நான்கு வேதங்களின் கூறுகளையும் இணைத்து ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதத்தை உருவாக்கினார். ஆனால் கடவுளர்கள் நாடகப்பயிற்சி பெற்ற விற்பனர்களாக இல்லாத காரணத்தால் புதிய வேதத்தை உருவாக்கும் பொறுப்பு மனிதராகிய பரதரின் தலைமேல் சுமத்தப்பட்டது. பரதர் தன்னுடைய நூறு புதல்வர்களின் உதவியைக் கொண்டும் பிரம்மனால் அனுப்பப்பட்ட சில தேவலோக நடன மாதர் களைக் கொண்டும் முதல் நாடகத்தை அரங்கேற்றினார். புதிய கலையின் வெளிப்பாட்டுக் கூறுகளின் சாத்தியப்பாடுகளை விரிவுப்படுத்துவதற்குக் கடவுளர்கள் அனைவரும் ஆர்வம் கொண்டிருந்தனர். பரதர் வழங்கிய நாடகம் கடவுளர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் வரலாற்றைச் சொல்வதாகவும், மோதலில் வெற்றி பெற்ற கடவுளர்களின் புகழைப் போற்றுவதாகவும் இருந்தது. நாடகம் கடவுளர்களையும் மனிதர்களையும் மகிழ்ச்சிப்படுத்தியது. ஆனால் பார்வையாளராய் இருந்த அசுரர்கள் இதனால் ஆழமான மனவேதனைக்கு ஆளானார்கள். அதனால் அசுரர்கள் தங்களின் அதீதசக்தியைப் பயன்படுத்தி நடிகர் களைப் பேச முடியாமலும் நகர முடியாமலும் நினைவை மறக்கச் செய்தும் நாடக நிகழ்வைத் தடுத்து நிறுத்தினர். அதற்கான பதிலடியாகக் கடவுளர்கள் அசுரர்களைத் தாக்கி, அவர்களில் பலரைக்கொன்று அழித்தனர். உறுப்புகளைத் துண்டாடியது தொடர்ந்தது ! ஆகவே, உலகைப் படைத்த பிரம்மா அசுரர்களைச் சந்தித்துப் பேசினார். நாடகம் என்பது மூன்று உலகங்களின் நிலையையும் பிரதிநிதித்துவப்படுத்துவது என்று விளக்கினார். அதாவது 'நாடகமானது வாழ்வின் ஒழுக்கக் குறிக் கோள்களை - ஆன்மீகம், சார்பின்மை மற்றும் புலனுணர்வு ஆகியவற்றின் இன்பதுன்பங்களை - தன்னுடன் இணைத்துக்கொண்டிருக்கிறது' என்றும் அதில் கிடைக்காத ஞானம் எதுவுமில்லை, அதில் காணப்படாத கலை எதுவுமில்லை, அதில் இல்லாத உணர்ச்சி எதுவுமில்லை என்றும் விளக்கினார். பிரம்மா பரதரை அணுகி நாடகத்தைத் தொடர்ந்து நிகழ்த் தச் சொன்னார் நிறுத்தப்பட்ட நாடகத்தின் இரண்டாவது நிகழ்ச்சியின் வெற்றியைப் பற்றி நமக்கு எதுவும் சொல்லப்படவில்லை. இந்த இயலைப் பற்றி விமர்சிக்கும் அறிஞர்கள் இத்தொன்மமானது அசுரர்களை இழிவு

படுத்துவதாக உள்ளதாகத் தாமாகவே கூறிச் செல்கின்றனர். நாடகத்தின் உண்மை இயல்பை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க வில்லை என்பதையே இது காட்டுகின்றது. பிரம்மாவின் நாடகம் பற்றிய கருத்தாடலே இத்தொன்மத்தின் சாரம் ஆகும். அத்தொன்மத்தை முழு மையும் தவறாகப்புரிந்து கொண்டதால் இக்கருத்து வந்துள்ளது என்று எனக்குப்படுகிறது. உண்மையில் அசுரர்கள் (கடவுளர்கள் போலன்றி) உடல் ரீதியான வன்முறையில் இறங்கியிருக்கவில்லை. ஆயின் நடிகர் களின் பேச்சு, நகர்வு, நினைவு ஆகியவற்றை மட்டுமே தாக்கி நாடகத்தை நிறுத்தி இருப்பது, நாடகத்தின் நுண்ணிய கூறுகளை நினைவில் கொள் ளத்தகும் விதத்தில் அசுரர்கள் உள்வாங்கிக் கொண்டிருப்பதை அது நமக்குக் காட்டுகிறது. இக்கருத்திற்குத் துணை சேர்க்கும் விதமாக நாடகத் தயாரிப்பின் கலை உத்திகளை நமக்கு அறிவுறுத்துவதற்காக எழுதப்பட்ட இந்த புனித நூல் மனித வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட முதல் நாடகம் பற்றிப் பேசுகிறது. உலகைப் படைத்த பிரம்மா மற்றைய கடவுளர்களு டனும், தேவமாதர்களுடனும் பயிற்சி பெற்ற நடிகர்களுடனும் தானும் கலந்து இத்தயாரிப்பில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். அந்த நிலையில் இதன் விளைவு மாபெரும் வெற்றியாக இருந்திருக்க வேண்டும். மறு தலையாக மாபெரும் அழிவு நிகழ்ந்ததாக நமக்குச் சொல்லப்பட்டி ருக்கிறது. அறிஞர்கள் பார்க்கத் தவறியிருக்கிற வெளிப்படையான கருத்து ஒன்று உள்ளது. அதனால் அவர்கள் மனப் புழுக்கம் கொள்ளச் சாத்தியம் உண்டு. நிச்சயமாக இந்த உள்ளார்த்தங்கள் நாடகத்தின் முக்கிய நோக்கம் பார்வையாளரை வெளி உலகத்தினின்றும் பிரித்து மகிழ்வு மனநிலையைப் பங்கிட்டுக்கொள்கிற வசதி கொண்டிருக்கிறது எனும் பிற்காலத்திய இந்திய அழகியலை வெளிப்படையாக மறுக் கின்றன. இத்தொன்மம், பிரம்மாவின் சாந்தப்படுத்தும் கருத்துகள் சொல்லியிராததான “ ஒவ்வொரு நாடக நிகழ்ச்சியும் மிகக் கவனத்தோடு வடிவமைக்கப்பட்டபோதும் சிதிலமடைந்து போகிற தோல்வியையும் அதன் காரணமாக எழுகின்ற வன்முறையையும் தனக்குள் சுமந்து கொண்டிருக்கிறது” எனும் நாடகத்தின் அடிப்படைக் குணாம்சத்தைக் குறிப்பதாகவே எனக்குப்படுகிறது.

நாடகநிகழ்விற்குத் தேவைப்படுகிற மிகக்குறைந்த மனிதர்களில் ஒருவர் நிகழ்த்துனர் (தன்னை இன்னொருவருக்குள் மறைத்துக் கொண் டிருப்பவர்) இன்னொருவர் அதை பார்ப்பவர். இந்தச் சூழல் ஏற்கனவே நிலை மாற்றத்துடன் தோய்ந்திருக்கிறது.

இப்போதிருப்பது போல் இத்தனை வகையான நாடகம் உலகத் தில் வேறெப்போதும் இருந்ததில்லை. வானொலி, திரைப்படங்கள், தொலைக்காட்சி, வீடியோ ஆகியவை நாடகத்தோடு நம்மை எதிர் கொள் கின்றன. ஆயின் இந்த வடிவங்கள் அனைத்திலும் (பார்வையாளரின் பொழுதைத் தனவயப்படுத்த முடிந்தாலும் அல்லது பார்வையாளரைக் கோபமூட்ட முடிந்தாலும்) பார்ப்பவரின் எதிர்வினையானது அக் கலைப்படைப்பு நிகழ்வின் போது எவ்வித மாற்றத்தையும் செய்ய முடியாது.

முதல் நாடக நிகழ்வு எனும் தொன்மமானது நாடகத்தில் நாடகா சிரியர், நிகழ்த்துனர்கள், பார்வையாளர் ஆகியோர் இடையீடற்ற தொடர் முழுமையை உருவாக்குகின்றனர் என்பதைக் குறிக்கிறது. ஆயின் இத்தொடர் முழுமை எப்பொழுதும் நிலையற்றிருக்கும். அதன் காரண மாகவே அது வெடித்துக் கிளம்பும் வீரியம் கொண்டிருக்கும். அதனா லேயே நாடகத்தை மிகவும் பாதுகாப்பாகச் சிரமமின்றி விட்டேத்தியாக நிகழ்த்த முயல்கையில், அதனுடைய சொந்த சாப்பறையை விரலதிர அதுவே அடித்துக்கொண்டிருக்கிறது என்பதாகிறது. இதற்கு மறுதலை யாக அதன் எதிர்காலம் எப்பொழுதும் பிரகாசமாயில்லாவிடினும் அதன் காரணமாகவே வாழ்வதற்காகவும் கோபமூட்டுவதற்காகவும் நாடகம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும்.

உலக நாடக நாளிற்கான திரு கிரிஷ்கர்னாட் அவர்களின் உலகச் செய்தி இதுதான் ! நாடகப்பிறப்பு பற்றிய தொன்மம் இங்கு புதிய பார்வையில் உலகச்செய்தியாகத் தரப்பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. நிலை மாற்றம் மற்றும் கோபமூட்டுதல் நாடகத்தின் குணவிசேஷமாகக் குறிக்கப்பட்டு நாடகத் தொன்மம் தொடங்கி இன்று வரையிலும் அதன் வீச்சுகள் இருந்துக்கொண்டேதான் இருக்கின்றன என்பதை நினைவு

படுத்துகிறது இச்செய்தி ! திரு கிரிஷ்கர்னாட் தன் உலகச்செய்தியில் குறித்திராத ஆயின் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் இது தொடர்பான சம்பவங்கள் இன்னும் ருசிகரமானவை ! தேவர் அசுரர் தகராறு நடந்த வுடன் பரதர் பிரம்மனை அணுகி "ஓ புனிதமானவரே! கடவுளர்களில் சிறந்தோனே ! துஷ்ட தேவதைகள் இந்த நாடக நிகழ்ச்சியைச் சீர்குலைப் பதற்குத் தீர்மானித்திருக்கின்றன. ஆகவே அவற்றிடமிருந்து காப்பாற்றும் வழிவகைகளைப் பற்றி எனக்குத் தெளிவுபடுத்துக!" என்க, அப்பொழுது பிரம்மன் விஸ்வகர்மனைப் பார்த்து 'மிகச்சிறந்த வகையிலான நாடக அரங்கொன்றைக் கவனமுடன் கட்டுக' என்றார்.

அதன்பின் பிரம்மன், இந்திரன் மற்றும் மற்றைய தெய்வங்களுடன் நாடக அரங்கைக் காணப்போனார். நாடக அரங்கைக்கண்ட பிரம்மன், மற்றைய கடவுளர்களை நோக்கி இந்த நாடக அரங்கின் பல்வேறு பகுதி களையும் பாதுகாப்பதற்கு நீங்கள் கட்டாயம் ஒத்துழைக்க வேண்டும் என்றார். சந்திரனுக்கு மய்யக் கட்டிடத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. வருணன் நாடக அரங்கின் உள்வெளியைப் பாதுகாக்க வேண்டும். அக்கினி அதன் சுற்றுப்பரப்பைப் பாதுகாக்க வேண்டும். மேகங்கள் இசைக்கருவிகளைப் பாதுகாக்கவேண்டும். நான்கு வருணத் திற்குமான தெய்வங்கள் தூண்களைப் பாதுகாக்க வேண்டும். பூத கணங்கள் அமரும் இருக்கைகளைப் பாதுகாக்கவேண்டும். எமன் கதவு களைப் பாதுகாக்கவேண்டும் என்பதாகப் பணி வரையறை செய்யப்பட் டுள்ளது. பிரம்மன் தானே மேடையின் மையப்பகுதியை எடுத்துக் கொண்டார். இதன் காரணமாகவே இன்னும் நாடக நிகழ்ச்சி தொடங்கு கையில் மேடையின் மையப்பகுதியில் விளக்கேற்றி மலர்கள் அங்கு தூவப் படுவது நடக்கிறது. இந்த அரங்கு என்பதே, அசுரர்கள் உள்ளே நுழைந்து தகராறு செய்யாமல், வரையறுக்கப்பட்ட பார்வையாளருடன் பாதுகாப் புடன் நாடகம் நிகழ உருவாக்கப்பட்டதாக நாட்டிய சாஸ்திரம் குறிக்கிறது.

தேவர் அசுரர்களுக்கிடையிலான முரணே நாடக முரணாக வெளிப்பட, அதுவே நாடகம் நின்றுபோகக் காரணமாகவும் அது கார

ணம் கொண்டே நாடக அரங்கு கட்டப்படுவதற்கான தேவை வந்துள் ளதையும் அதைப் பல கடவுளர்கள் காவல் காத்துவருவதற்கான ஐதீகத் தையும் கொண்டுள்ளதாக நாடகத் தொன்மைப் பதிவான நாட்டியசாஸ் திரம் சுட்டிக்காட்டுகிறது. இந்த முரண் உருவாக்கும் கோபம் உயிரோட்ட மானதாக இருப்பதாலும் மற்றைய எந்தக் கலைவடிவங்களிலும் இது இத்தனை அளவு நேரிடைச் சாத்தியமில்லாததாகையாலும் நாடகத்தில் படைப்பின் நிகழ்கணத்தில் நாடகாசிரியர், நிகழ்த்துநர், பார்வையாளர் ஆகியோர் இடையீடற்ற தொடர் முழுமையை உருவாக்குகின்றனர் என்பதாலும் அத்தொடர் முழுமை எப்பொழுதும் நிலையற்றிருப்ப தாகையாலும் எந்தச் சூழலிலும் உயிர் வாழ்வதற்கான தேவை நாடகத் திற்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை உலகச்செய்தி தரும் சார மாகக் கொள்ளலாம். இதுதான் நாடகத்தின் உண்மையுங்கூட!

இடையீடற்ற தொடர் முழுமையை உருவாக்குகின்ற நாடகா சிரியர் (Author), நிகழ்த்துநர் (Actor), பார்வையாளர் (Audience) ஆகி யோரில் நாடகாசிரியர் நிகழ்வின் ஊடே தற்பொழுது மறைந்து கொண்டிருப்பதன்றித் தன்னைப் பருண்மையாக வெளிக்காட்டிக் கொள் வதில்லை. ஆயின் அவரின் பிரதி நிகழ்த்துநர்களால் பருண்மையாக்கப் பட்டுப் பார்வையாளர் சிந்தனையில் படிமங்களை நாடகாசிரியர் உருவாக்குகிறார் எனுங் கருத்து, நெறியாளுநரின் (Director) இடம் நாடக உருவாக்கத்தில் இனம் காணப்படுவதற்கு முன்பிருந்த நிலையாகும்.

நாடகாசிரியருக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. கிரேக்கர்கள் அவரைக் கவி என்றழைத்தனர். பிற்காலத்தில் நாடகாசிரியர் (Dramatist) அல்லது நாடக எழுத்தாளர் (Play Wright) என்று அவரை அழைத்தனர். ஆங்கிலத்தில் Wright எனும் பின்னொட்டு கப்பல் கட்டுபவர் (Ship Wright) சக்கரம் செய்பவர் (Wheel Wright) எனும் சொற்களில் வருவது போல் உருவாக்குபவர் எனும் அர்த்தம் தருகிறது. ஆக Play Wright என்பவர் நாடகம் எழுதுபவர் மட்டுமல்ல நாடகத்தை உருவாக்குபவர். ஒரு கை வினைஞனைப்போல் பல்வேறுபட்ட கூறுகளை, வடிவமைப்பு களை, உருவங்களை இணைத்துக் கோர்த்து உருவாக்கும் கதை நிகழ்வே

நாடகமாகும். கவிஞனும் நாவலாசிரியனும் வார்த்தைகளைத் தங்கள் உள் வெளியில் நெசவு செய்து தருகின்றனர். இசைஞன் இசைக்குறிப்பு களையும் சப்த லயங்களையும் தன் உணர்விற்கேற்பக் கோர்த்துத் தரு கிறான். ஓவியன் தன் வண்ணங்களில் தன்மனதைக் குழைத்துத் தரு கிறான். கவிஞன், நாவலாசிரியன் போல நாடகாசிரியன் வார்த்தை களோடும், இசைஞனைப் போல் ஒலிகளோடும், ஓவியனைப் போல் ஆழமான நிறங்களோடும் கலந்து நடிகர்களின் அங்கங்களை, அவர் களின் நகர்வுகளை, அரங்கின் இயந்திர நுணுக்கங்களை அழகியல் படைப்பாக்கித் தருகிறான். உலகம் முழுக்கவும் இதுதான் கதையாக இருந்திருக்கிறது. நெறியாளுநர் எனும் தனிச்சாதி உருவாகியிராத தொடக்க நிலையில் நாடகாசிரியரே நாடகத்தை நெறிப்படுத்தி உருவாக்கியிருக்கிறார். கிரேக்க நாடகாசிரியர்கள் ஈஸ் கைலஸ் (Aeschylus), சோபக்ளிஸ் (Sopocles), யூரிபிடிஸ் (Euripides), அரிஸ்டோபேன்ஸ் (Aristophanes) ஆகியோர் தங்கள் நாடகங்களைத் தாங்களே ஏதென்ஸில் அரங்கேற்றியிருக்கின்றனர். நெறியாளுநர் என்ற தனித்த ஆகிருதியின் தேவை அப்போது இருந்திருக்கவில்லை. சோபக்ளிஸ் கி.மு. 468இல் நடந்த நாடகப் போட்டியில் ஈஸ்கிலஸை வென்று முதல் பரிசு பெற்றவர். 24 நாடகப்போட்டிகளில் முதல் பரிசும் மற்ற நாடகப் போட்டிகளில் இரண்டாம் பரிசும் பெற்றவர். மூன்றாம் பரிசு பெறும் நிலையும், பரிசே பெறாத நிலையும் சோபக்ளிசுக்கு ஏற் பட்டதேயில்லை. நாடகப்போட்டியில் பரிசு பெற்ற இவர் நாடகங்களின் எண்ணிக்கை 72 என்று சோபக்ளிஸின் 'பிலக்டிடிஸ்' நாடகத் தமிழாக்கத்தில் குறிக்கப்பட்டிருப்பது நாடகாசிரியரே நாடகத்தை நெறிப்படுத்தி நிகழ்த்தியதைக் காட்டுகிறது. சோபக்ளிஸ் தன் 90 வது வயதிலும் நாடகம் எழுதி அதைத் தானே அரங்கேற்றிருக்கிறார் என்பதும் முக்கியமானகுறிப்புகளாகும் சேக்ஸ்பியரும் அவர் நாடகங்களை அவர் பங்குதாரராயிருந்த குளோப் நாடக அரங்கில் அவர் நெறியாளுகையில் தான் நிகழ்த்தியிருக்கிறார். தமிழிலும் கூத்து ஆசிரியர் -கூத்து வாத்தியார்தான் கூத்தின் ஆகிருதியாயிருந்திருக்கிறார். வாத்தியார் என்பவர் கூத்தின் அனைத்து நுணுக்கமும் அறிந்தவராயும் அனைவரை

யும் அணைத்துக் கலைகளையும் ஒருங்கிணைக்கக்கூடியவராயுமிருக் கிறார். குழுவை உருவாக்கிக் குழு உருவாக்கும் கூத்தை உருவாக்கியவராய் இந்த வாத்தியார் தான் இருந்திருக்கிறார். சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், பரிதிமாற் கலைஞர் போன்ற நாடகாசிரியர்கள் தங்கள் நாடகங்களைத் தாங்களே நெறிப்படுத்தி நிகழ்த்தியிருக்கின்றனர். நாடக நடிகர்கள் போல் நாடக ஆசிரியர்களையும் வெவ்வேறு நாடகக் குழு வினர் தங்கள் கையகப்படுத்தி அழைத்துச் செல்வதும் நாடக ஆசிரியர் களும் பழமரம் தேடிப் பறந்து செல்வதும் தொடர்கதையாகவே இருந் திருக்கின்றன. ஒவ்வொரு நாடகக் குழுவும் வாத்தியார்களுக்குத்தான் அடிபோட்டு அலைந்திருக்கிறது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் நாடகத்தை வடிவமைத்து நாடகத்தயாரிப்பின் அனைத்துக் கூறு களையும் இணைத்து அதற்கொரு முழுமையை ஏற்படுத்தி ஒவ்வொரு கலைஞனிடமிருந்தும் நாடகத்திற்கு அதிகப்படியான பங்களிப்பை சுவிகரிக்கும் ஆற்றல் கொண்ட ஒரு தனிநபரின் தேவையை உணர ஆரம்பித்திருந்தனர். கார்டன்கிரைக் (Gordon Craig), அடால்ஃப் அப்பியா (Adolphe Appia) போன்றோரின் நாடகக் கோட்பாடுகள், ட்யூக் ஆஃப் சாக்ஸ் மெய்னிங் கென் (Duke of Saxemeiningen), மாக்ஸ் ரெய்ன்ஹார்ட் (Max Reinhart), கான்ஸ்டான்டின் ஸ்தானிஸ்லாவஸ்கி (Konstantin Stanislavsky), ஆந்த்ரே அந்துவா (Andre Antoine) போன்றோர் தங்களின் செயல்பாடு கள் மூலம் தங்களைப் புகழ்பெற்ற நாடக நெறியாளுநர்களாகவும் தயாரிப்பாளர்களாகவும் அடையாளப் படுத்தி ஒருங்கிணைக்கும் கலைநேர்த்தியின் இன்றியமையாமையை உணர்த்தியிருந்தனர். இலக்கியவாதிகளைப் பொறுத்தவரை நாடகம் என்பது மேடையேற்றப்படுவதற்கும் வாசிப்பதற்குமாக ஆசிரியரால் எழுதப்பெற்ற பிரதியையே குறிக்கிறது. எழுதப்பெற்ற பிரதி மேடைப் பயன்பாட்டிற்குரியதொன்றாக மாற்றமடைவதென்பது நாடகத்தின் புதை அமைப்பைக் கண்டுபிடிப்பதிலேயே அடங்கியிருக்கிறது. ஒற்றைப் பரிமாணமுள்ள பிரதி பன்முகப் பரிமாணமுள்ள அரங்கப் பொருளாக மாற்றமடைகையில் ஊடகமே மாற்றமடைகிறது. நாடகாசிரியன் கலை யானது நாடக நெறியாளுகைக் கலை நடிப்புக் கலையாகச் சேர்மானம்

பெறுகிறது. அதன் பயனாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நெறி யாளுகை எனும் தனித்த கலை ஆளுமை உருவானது. எப்பொழுது நாடக சிரியரின் நாடகம் அச்சுரு ஏறியதோ அப்பொழுதே நாடகம் பல களங் களைத் தானே தேடிப்போகத் தொடங்கிவிடுகின்றது. பிரதி நாலுகால் பாய்ச்சலில் நாடகாசிரியனை விட்டுத் திசையெங்கும் பயணப்படுகையில் திசைக்கொருவராகப் பிரதியை மடக்கி அதன்மேல் பயணம் செய்வது என்பது தவிர்க்க முடியாமல் நிகழ்ந்துவிடக் கூடியதாயிருக்கிறது. நாடகாசிரியனின் கையை விட்டு வெகுதூரம் பயணப்படும் பிரதி வாய்ப்புள்ளவர்களின் வசப்பட்டுப் போவதும் நிகழ்ந்துவிடுகிறது. பிரதியைக் காட்சிப்படுத்தும் நெறியாளுநன் எனும் இன்னொரு கலைஞனின் தேவை இந்த இடத்தில் இயல்பாகவே வந்து சேருகிறது.

மேடையில் நிகழும் நாடகம், நாடகாசிரியர், நெறியாளுநர், நிகழ்த்துநர் ஆகியோரின் வேதியல் சேர்க்கையில் உருவாக்கப்பட்டிருந் தாலும் அது முழுக்கவும் அவையோரினுடைய அவையோருக்கான படைப்பு என்பதிலேயே முழுமை பெறுகிறது. ஆயின் நிகழ்ந்துநர் அவையோர் இடங்களுக்கு எவ்விதப் பங்காளிப் பிரச்சினைகளும் வந்திருக்காத நிலையில், நாடகாசிரியரின் நாற்காலி மட்டுமே பங்கு போடப்பட்டுள்ளதானது, மகன் மேலான உரிமையைப் பங்குபோட்டுக் கொள்ள வரும் மருமகள் மீது எரிச்சல்படும் மாமியார் போல் நெறியா ளுநர் மீதான ஒரு பொறாமைக் கவிப்பை நாடகாசிரியருக்குள் உருவாக்கி யிருக்கிறது என்று கருதினால் அது குற்றமன்று. 3 AS என்றழைக்கப்பட்ட Author - Actor - Audience எனும் நாடகியச் சூத்திரத்தில் மெல்லியதும் அதிரடியதுமான மாற்றம் குவியத் தொடங்குகிறது. நாடகாசிரியர் நிகழ்த்துநர் - அவையோர் எனும் இந்நேர்ப்போக்கில் நாடகாசிரியர் நெறியாளுநர் - நிகழ்த்துநர் - அவையோர் என்று நாடகாசிரியருக்கும் நிகழ்த்துநருக்குமிடையே நெறியாளுநரின் பீடம் வகுக்கப்பட்டிருக் கிறது. இதனாலேயே நாடகாசிரியர் - நெறியாளுநர் உறவு முகம் இறுகிப் போன நிலையிலேயே அமைந்திருப்பதை உணரமுடியும். நாடகாசிரிய ரின் கருத்தைத் தன் உள் வழி உலவவிடும் நெறியாளுநர் புதிய வேதியல் மாற்றங்களுடன் தன் படைப்பை நிகழ்த்துநர் வழி வெளிப்படுத்தி

அவையோர் முகத்துக்கு நேராக அவ்வழகியலை அர்த்தப்படுத்துகிறார். ânahl®rS»Dila (Theodore Shank) The Art of Dramatic Art (1969) நூலின் முன்னுரையில் மார்டின் எஸ்லின் ஒரு இடத்தில் குறிப்பிடு வதைப் போல் சால்வினியின் ஒத்தெல்லோவும், ஒலிவியரின் ஒத்தெல் லோவும் ஒரே படைப்பின் இரண்டு வெவ்வேறு வியாக்யானங்களாக இல்லாமல் அவை இரண்டும் இரண்டு வேறுபட்ட கலைப்படைப்பு களாக மிளிர்கின்றன என்பதில் நிகழ்த்துநரின் பங்கு மட்டுமின்றி நெறி யாளுநரின் பங்கும் அந்நாடகப்படைப்பில் குறிப்பிடத்தக்க விதத்தில் இருப்பதையே தெளிவுபடுத்துகின்றன.

"அது போல் முழுக்கவும் தேசியக் குணங்களால் உருவான குறி யீட்டு அடையாளங்கொண்ட இப்செனைப் புரிந்து கொள்வது ரஷ்யர் களாகிய நமக்குச் சிரமம். எலிஜாவின் குழப்பமான நாளில் எலிஜாவி னுடைய ரதம் வானத்தைக் கிழித்துப் பயணப்படுவதைப் பற்றி அந்த இதி காசத்தில் வரும் ரோஸ்மெர்ஸ்ஹோல்மினுடைய வெள்ளைக் குதிரைகள் (Rosmersholms White Horses) நிச்சயமாக ரஷ்யர்களாகிய எங்களுக்கு எப்பொழுதும் பரிச்சயமில்லாதது எப்பொழுதும்போல எதிர்பார விதமாகச் சிரித்துக்கொண்டு திடீரென்று ஒருநாள் எழுத்தாளர் செகாவ் (Chekov) சொன்னது மிகச் சரியானது அவர் சொன்னது : ஆர்ட்யோம் (Artyom) ஒரு நாளும் இப்செனை நிகழ்த்திக் காட்ட முடியாது என்பதே. உண்மை. நார்வேக்காரரான இப்செனுடன் அப்படியே முற்று முழுக்க ரஷ்யக்காரரான ஆர்ட்யோம் இணைந்து செல்லச் சாத்தியமே இல்லை. ஆர்ட்யோம் செகாவால் மிகவும் விரும்பப்பட்ட நடிகராவார். இவருக்காக The Three Sisters - நாடகத்திலும், The Cherry Orchard நாடகத்திலும் இரண்டு கதாபாத்திரங்களை செகாவ் வடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது (Ibid, 274). தேசம் விட்டுத் தேசம் நாடகம் பயணிக்கையில் அதை அவ்வத் தேசிய குணங்களுக்கான மாற்றங்களுடன் நிகழ்த்தல் என்பது சாத்தியமே என்பதையே இக்கருத்து நிரூபிக்கிறது. இதற்கான தேவையை ஈடு செய்பவரே நெறியாளுநராகிறார். நாடகாசிரியர், நெறியாளுநர் இருவரும் ஒரு படைப்பு நிகழ்வில் ஒருவர் மேல் ஒருவர் முழு நம்பிக்கைக் கொண்டு, தொழில் ரீதியான அப்

படைப்பு நிலை உறவில் உன்னத மரியாதை விரிவு பெற்றிருக்கையில் அப்படைப்பு உறவில் விரிசல்கள் தோன்றாமலிருப்பதையும் விதிவிலக் கான மாமியார் மருமகள் போல் இணக்கமாயிருப்பதையும் அதேநேரம் இருவருக்குமிடையிலான நம்பிக்கையின்மை, மரியாதைக் குறுக்கம் ஆகியவை படைப்பின் உன்னத இழப்பிற்கு உறுதுணையாயிருக்கின்றன என்பதையும் மன இறுக்கங்களுக்கே இட்டுச் செல்கின்றன என்பதையும் வரலாற்றிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

உலகப்புகழ் பெற்ற ரஷ்ய யதார்த்த எழுத்தாளர் அந்தோன் பல்லோவிச் செகாவின் (Anton Pavovich Chekov) நாடகங்களை, ரஷ்ய யதார்த்த நாடக முன்னோடியும் நடிப்பு முறையியலை (Acting System) வகுத்துத் தந்தவருமான உலகப்புகழ் பெற்ற கான்ஸ்டான்டின் ஸ்தானிஸ் லாவஸ்கி (Konstantine Stannslavsky), 1890 களின் பிற்பகுதியில் போடத் தொடங்கியிருந்த நேரம் அது. ஸ்தானிஸ்லாவ்ஸ்கி செகாவ் மீது அபரி மிதமான மரியாதை வைத்திருந்தார் என்பதையும், செகாவின் எழுத்துக ளின் உள்ளாழம் ஸ்தானிஸ்லாவ்ஸ்கியின் நாடக முயற்சிகளுக்கு உந்து சக்தியாக விளங்கியது என்பதையும் ஸ்தானிஸ்லாவஸ்கியின் எழுத்து களிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. உள் உணர்வு (Intution) மற்றும் உணர்ச்சி (Feeling) இழைகளை எனக்குப் போதித்தவர் செகாவ். அவரு டைய நாடக உட்பொருளை அறிவதற்கு அவரின் ஆன்மாவின் ஆழத் திற்குள் முழ்க வேண்டியதாயிருக்கிறது என்று கூறும் ஸ்தானிஸ்லாவஸ்கி செகாவின் சில கதாபாத்திரங்களை நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் நான் நடித்திருக்கிறேன். ஆயின், எனக்குள் புதிய உணர்ச்சித் தூண்டல்களை ஏற்படுத்தாத - புதிய நுணுக்கங்களையும் கண்டுபிடிக்கும் உந்துதல் தராத - எந்தவொரு நிகழ்ச்சியையும் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை என்று கூறுவதிலிருந்து செகாவ் மீது ஸ்தானிஸ் லாவஸ்கி கொண்டிருந்த படைப்பு நிலை மரியாதையின் அனுபவப்பூர்வ பதிவாக இதைக்கொள்ளலாம். இவ்வளவிற்கும் ஸ்தானிஸ்லாவஸ்கி தொடக்கத்தில் செகாவின் இலக்கிய மேன்மையை அதிகம் உணர்ந்த வரில்லை. ஸ்தானிஸ்லாவஸ்கியின் இலக்கிய பரிச்சயம் தொடக்கத்தில் பழமை சார்ந்ததாகவே இருந்தது. மாஸ்கோ பில்ஹார் மோனிக்

பள்ளியில் (Moscow Philharmonic School) பல ஆண்டுகள் இயக்கு நராகவும், நாடக ஆசிரியராகவும் இருந்த நாடக நெறியாளுநர் நெமிரோ விச்டென் சென்கோவின் (Nemirovich Denckenko) பழக்கத்திற்குப்பின் அவருடன் இணைந்து நாடகம் செய்கையில் அநேக மாலைப் பொழுது களை ஸ்தானிஸ்லாவஸ்கியுடன் செலவிட்டு செகாவின் இலக்கிய மேன்மையை அவரின் தலைக்குள் திணித்திருக்கிறார். நெமிரோவிச் டென்சென்கோ. செகாவின் நாடகங்களில் நடிகர்கள் நடிக்க முயற்சிக்க வேண்டியதில்லை கதாபாத்திரமாக வாழ முயற்சிக்கவேண்டும் என்று கருத்துக் கொண்டிருந்தார் ஸ்தானிஸ்லாவஸ்கி. செகாவின் நாடகங் களை ஸ்தானிஸ்லாவஸ்கி நிகழ்த்தும்போது நாடகாசிரியர் செகாவின் எதிர்வினைகளும் அதன் மேலான ஸ்தானிஸ்லாவஸ்கி யின் நினைவுப் பகிர்வுகளும் இந்த நிலையில் மிக முக்கியமானவையாகும்.

முதன் முறையாக செகாவின் The Sea Gull நிகழ்த்தும்போது அதைப் பார்க்கவர செகாவின் உடல் நலம் ஒத்துழைக்கவில்லை. ஆகவே பிற்பாடு உடல் நலமானபின் தானே மாஸ்கோவிற்குத் தேடிவந்து அந்த நாடகத்தை நிகழ்த்திக் காட்டச் சொன்னாராம். மிகுந்த சிரமத்திற்கிடை யில் செகாவ் மற்றும் வந்திருந்த பத்திற்கும் மேற்பட்ட பார்வையாளருக் காக ஒரு சிறப்புக் காட்சிக்கு ஸ்தானிஸ்லாவஸ்கி ஏற்பாடு செய்திருந்தார். நாடகம் அன்றைக்குச் சுமாராகத்தான் வந்திருந்ததாம். செகாவ் அதில் நடித்திருந்த ஒரு நடிகையைக் குறிப்பிட்டுத் தன் நாடகத்தில் நடிக்கும் திறமை அந்நடிகையிடம் இல்லை என்றும் அப்பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்ய அவரால் முடியாது என்றும், இன்னொரு பாத்திரத்தை நன்றாகச் செய்து கொண்டிருக்கும் இன்னொரு நடிகையை அந்தப்பாத்திரத்திற்கு போட்டிருக்க வேண்டும் என்றும் கூறினாராம். அதையே திரும்பத் திரும்ப முணுமுணுத்துக் கொண்டிருந்திருக்கிறார் செகாவ். ஈவு இரக்க மின்றிக் கடுமையான கேள்விகளை எழுப்பி எவ்வித சமரசத்தையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிற செகாவ் ஒப்பனையறையிலிருந்த ஸ்தானிஸ்லா வஸ்கியைக்கூடப் பார்க்க வர தவிர்த்திருக்கிறார். அன்றைக்கு நாடகம் சுமார்தான் என்பதையுணர்ந்த ஸ்தானிஸ்லாவஸ்கி தானே செகாவிடம் வந்து " திட்டு களை வாங்கிக்கொள்ளத் தயார்" என்று தயங்கிச் சொல்ல,

செகாவ் 'உண்மையில் நாடகம் நன்றாயிருந்தது ஆனால் உனக்குத் தேவை கிழிந்த ஷூவும் கட்டம் போட்ட கால்சராயும் தான்' என்று கூறி சென்றிருக்கிறார். அவருடைய மனக்கருத்தை முழுவதுமாகத் திறந்து பேசவில்லை. அதன் பொருளும் அப்போது ஸ்தானிஸ்லாவஸ்கியால் சரியாகப் புரிந்துக் கொள்ளப்படவில்லை. நக்கலாக அல்லது ஸ்தானிஸ்லாவஸ்கியைத் தவிர்ப்பதற்காகக் கூறிய கருத்தாகத்தான் அப்போது அவர் கருதினார். அதாவது ஸ்தானிஸ்லாவஸ்கி நடித்திருந்த 'ட்ரிகோரின்' பாத்திரம் தான் வார்த்திருந்த மாதிரியில்லை என்பதை அவருக்கேயுரிய கிண்டலுடன் சொல்லிச் சென்றிருந்திருக்கிறார். இதன் பின்பு ஓராண்டு அல்லது அதற்கும் கூடுதலாகக் கழிந்த பிறகு திரும்பவும் ட்ரிகோரின் பாத்திரத்தை ஸ்தானிஸ்லாவஸ்கி பண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு நிகழ்ச்சியில் திடீரென்று செகாவ் சொன்னது நினைவிற்கு வந்ததாம். அதாவது செகாவ் கருத்தில் பெண்களுக்கு மிகவும் பிடித்த இளம் எழுத்தாளர் ட்ரிகோரின் திடீரென்று கிழிந்த ஷூவும் கட்டம் போட்ட கால்சராயும் அணிந்து அழகாகத் தோன்றக்கூடாதாம். ஆனால் ஸ்தானிஸ்லாவஸ்கி வெள்ளுடை, வெண்தொப்பி, புதிய ஷூ என்று மிக அழகான உடையணிந்து அழகிய ஒப்பனையில் மிளிர்ந்திருந்தார். அது வரையும் நிச்சயம் ஷூக்கள் கிழிந்திருக்க வேண்டும், கால்சராய்களில் கட்டமிட்டிருக்க வேண்டும், ட்ரிகோரின் பார்க்க அழகாயிருக்கக் கூடாது. கதாபாத்திரத்தின் உயிர்ப்பே இதில் தான் இருக்கிறது. அனுபவம் அற்ற இளம் பெண்களை பொறுத்தவரை அவன் எழுத்தாளரையும் அசட்டுணர்வைத் தூண்டும் நாவல்களைப் பதிப்பிப்பவனாகவும் இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். அத்தனையொன்றும் நுணுக்கமான திறமை கொண்டவன் இல்லையவன். கிழிந்த ஷூக்களும் கட்டம் போட்ட கால்சராயும் அணிந்து அழகாய் இருக்க மாட்டான் அவன் என்பதையெல்லாம் கவனியாமல், ஒருவர் மாற்றி ஒருவர் அவன் மேல் பித்துப்பிடித்து அலைவார்கள். அது போன்றதொரு கடல் தேவதையொடு காதல் கைகூடிய பின்பே, இல்லாத வொன்றை இருப்பதாக அவர்களாகவே உருவாக்கிக் கொள்கிற பெண் பருவக்கோளாறு இது என்பதைப் புரியத் தொடங்குவார்கள்" எனும் இம் மனநிலையை

உருவாக்குகிற விதத்தில் ட்ரிகோரின் பாத்திரம் அமைய வேண்டுமென்பதுதான் செகாவின் விருப்பம். ஆழமானதும் மதிப்புள்ளதுமான செகாவின் கருத்து அப்போதுதான் ஸ்தானிஸ்லாவஸ்கிக்கு உறைத்ததாம். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாடகத்துறையின் இரண்டு பிரிவுகளான நாடகம் படைத்தல், நெறியாளுகை ஆகியவற்றில் இமயங்களாக விளங்கிய இருவரின் படைப்பு உறவிற்கு இது உதாரணமாக விளங்கலாம்.

அதுபோல் இன்னொரு அனுபவப்பதிவையும் நினைவுக் கொள்வது நல்லது. செகாவின் The Sea Gull வெற்றிக்குப்பிறகு அவருடைய Uncle Vanya வைத் தயாரிக்கப் பலரும் அவரைத் தேடிவர ஆரம்பித்திருந்த சமயம் Uncle Vanya வைத் தயாரிக்க விரும்பிய ஒரு அரங்க நிர்வாகி, அவரின் பயில்களக்குழு (Repertoire Committee) அந் நாடகம் பற்றித் தயாரித்திருந்த அறிக்கையை செகாவிடம் கொடுத்திருந் தார். அவ்வறிக்கை செகாவின் நாடகத்தினைப் பலபடப் புகழ்ந்து அதைத் தயாரிக்க ஒப்புகை தந்திருந்தது. குறிப்பாக ஒரு நிபந்தனையையும் விதித் திருந்தது. அதாவது பேராசிரியர் செரிப்ரையகோவ் (Sereoryakov) -ஐ அங்கிள்வானியா சுடுவதாக உள்ள மூன்றாம் அங்கத்தின் இறுதிப் பகுதியை நாடகாசிரியர் என்ற முறையில் மாற்றித்தர வேண்டுமென்றி ருந்தது. அந்த அறிக்கையின் முட்டாள்தனத்தைப் பற்றிப் பேசுகையில் முகம் சிவந்து கோபப்பட்ட செகாவ் சாதுர்யமாக உடன்படிக்கை விதியாக அதைக் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு வெடித்துச் சிரித்தார். அதன்பின் Uncle Vanya எங்கள் கைக்கு வந்தது. அதில் செகாவிற்கும் மகிழ்ச்சியே ! நாங்கள் நாடக வேலையைத் தொடங்கினோம். நாடகா சிரியர் என்ற முறையில் அவர் விருப்பம் என்ன என்பதை அவர் நேரிடை யாக விளக்குவது நல்லது என்று கருதி அவரைக் கேட்டோம். தேவை யான எல்லாவற்றையும் நான் எழுதியிருக்கிறேன் எல்லாம் நாடகத்தி லேயே இருக்கிறது. ஒழுங்காகப் படியுங்கள் என்று திரும்பத் திரும்பக் கூறினார். நடிகர்களுக்குப் பாத்திரங்களைப் பிரிக்கையில் குழுவில் உள்ள நடிகர்களின் எண்ணிக்கை நாடகத்திலுள்ள கதாபாத்திரங்களின் எண்ணிக்கைகளைக் கவனத்தில் எடுக்காமல் எல்லாக் கதாபாத்திரங் களையும் அவருக்குப் பிடித்த நடிகர்கள் மட்டுமே நடிக்க வேண்டும்

என்றார். அது முடியாது என்று மறுத்தபோது 'சரி அப்படியானால் மூன்றாம் அங்கத்தின் இறுதிப்பகுதியைத் திருத்தி எழுதிப் பயில்களக் குழுவிற்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை' என்று மிரட்டினா ராம். இந்த விதமாக நாடக ஆசிரியரின் தலையீட்டைச் சில விஷயங் களில் ஏற்றும் சில விஷயங்களில் நிராகரித்தும் மனங்கோணாமல் இணைகோடாக்கிச் சென்றதற்கு இருவரின் மேதைமையை இருவரும் சரிவர உணர்ந்துகொண்டது தான் காரணம் என்றால் ஐயமில்லை.

நாடகாசிரியர் செகாவ் மேல் மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த ஸ்தானிஸ்லாவஸ்கியால் கூட செகாவ் என்ற நாடகா சிரியரின் அரங்க நுணுக்கம், பாத்திர வார்ப்பு சரியாக உள்வாங்கப் படாமல் போனதும் நாடகாசிரியரின் விமர்சனத்திற்குப் பின் ஓராண்டுக் கும் மேலான பின்பே புரிந்து கொள்ளப்பட்டு எவ்விதத் தன்முனைப்பு மின்றி அப்பாத்திரம் மாற்றம் அடைந்திருக்கிறது என்பதும் முக்கியமான பதிவாகும்.

நாடகாசிரியரின் படைப்புப் புதிர்கள் நெறியாளுநர்க்குள்ளும், நெறியாளுநரின் காட்சிப்புதிர்கள் நாடகாசிரியர்களுக்குள்ளும் நிகழ்த் துநர் மற்றும் அவையோரால் அவிழ்க்கப்பட்டுக் கட்டப்படும் புதிய புதிர் களின் மந்திரங்கள், அவர்கள் இருவருக்குள்ளும் தொடர் நிகழ்வில் ஒன்றுக்கொன்று இயங்கியல் கிரியை புரிந்துகொண்டிருக்கிறது என்பது தான் நாடகம் என்கிற கலை வடிவின் உன்னதம் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அல்லாதவிடத்து படைப்பு விலகிப்போய் நாடகாசிரியர், நெறியாளுநர் பணிப்போர் மட்டுமே தங்கிப்போகும்.

1984இல் மைய சங்கீத அகாடமி செயல்படுத்திய இளம் நாடக நெறியாளுநர்களை ஊக்குவிக்கும் திட்டம் (Scheme to Promote Young Directors) போலவே 10 ஆண்டுகளுக்குப்பின் மைய சங்கீத நாடக அகாட மியே இளம் நாடகாசிரியர்களை ஊக்குவிக்கும் புதிய திட்டத்தை 1993இல் தொடங்கியது. அதை நெறியாளுகைப்படுத்தி நிகழ்த்தும் பொறுப்பு அங்கங்குள்ள அடையாளங் கண்டுகொள்ளப்பட்ட நாடக நெறியாளுநரிடம் வழங்கப்பட்டது. அதன் தொடக்கம் தமிழ்நாட்டி

விருந்துதான் தொடங்கியது. 1993 இல் தமிழில் மலைசாமியின் 'முனி' யும் தேவிபாரதியின் 'மூன்றாவது விலா எலும்பும் விழுதுகளற்ற ஆல மரமும்' நாடகப்பிரதிகளாகத் தேர்வாயின. 'முனி' யின் நெறியாளுகைப் பொறுப்பு என்னிடமும், 'மூன்றாவது விலா எலும்பும் விழுதுகளற்ற ஆலமரமும்' நெறியாளுகைப்பொறுப்பு முனைவர் இராசுவிடமும் வழங்கப்பட்டது. ஆயின் இரண்டு நிகழ்வுகளிலும் நாடகாசிரியர், நெறியாளுநர் உறவு விரிசலோடே முடிந்திருந்தன. இதன் மூலம் காலமான நாடகாசிரியர் நாடகத்தை நெறியாளுகைப்படுத்துகையில் கிடைக்கும் சுதந்திரத்தை உயிருள்ள நாடகாசிரியரின் நாடகத்தை நிகழ்த்த முனைகையில் நெறியாளுநன் இழந்துவிடுகிறான். இது தான் இங்கு தமிழ் நாடகச்சூழலில் பெரும்பாலும் நடந்திருக்கிறது. அதனா லேயே மொழி மாற்ற மொழியாக்க நாடகங்களைத் தேடிப் போவதும், தானே எழுதி நெறியாளுகைக்குட்படுத்துவதுமாகவே பெரும்பான்மை முயற்சிகள் இருந்துள்ளன. தமிழ்நாட்டில் மட்டுமல்ல அதைத் தொடர்ந்து நிகழ்ந்த மைய சங்கீத நாடக அகாடமியின் சில அடிவைப்பு களும் ஆரோக்கியமானதாக வெளித் தெரியவில்லை.

நாடகாசிரியர் பொருமுவதற்கு அவருக்கென்று சில காரணங்கள் உண்டு. நாடகாசிரியரின் நாடகப்பிரதியை எவ்வித ஈவு இரக்கமின்றி, தன் பார்வை ரூபப்படைப்பு நிகழ்வுக்கேற்ப நாடகாசிரியரின் அனுமதியின்றி அல்லது மனம் ஒப்பா அனுமதியுடன் நெறியாளுநர் சிதைக்கிறார் என்பது ! நாடக நிகழ்வு என்கிற மொத்தப் படைப்பு நிகழ்வின் பரிமா ணத்தைக் கவனத்தில் கொள்ளாமல் நாடகாசிரியர் தன் பங்கு ஒன்றை மட்டுமே கருதுவதும் அதன் மேல் புனிதப் பார்வையையே நிறுவுவதும் தான் காரணம். அதற்காக நிகழ்த்தப்பட்ட நாடகத்தின் மேலான விமர் சனங்களே நாடகாசிரியருக்கு இருக்கக்கூடாது என்பதல்ல! நாடக நிகழ்வை விமர்சிக்கும் தகுதியைத் தகுதியுடைய பார்வையாளரைப் போலவே எழுதிய நாடகாசிரியரும் பெறுகிறார். அவருடைய துடிப்பில் உருவான எழுத்து என்பதால் நாடக நிகழ்வின் மேல் கூடுதல் அக்கறை வேண்டுமானால் நாடகாசிரியருக்கு இருக்கலாம். அதற்காகத் தன் முனைப்பின் காரணமாகத் தன் படைப்பின் நிகழ்வையே நிராகரிப்பதும்

நெறியாளுநருடன் விரிசல் கொள்வதும் நாடகத்தின் முழுமைப் பங்கை முழுவதும் புரிந்ததாகாது.

விரும்பி மேற்கொள்ளும் நாடக நிகழ்வில் தன் நெறியாளுகைப் பங்கை நியாயப்படுத்தப் பிரதியைப் பலவீனமானதென்று நெறியாளுநர் எப்பொழுதும் தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் போக்கில் கூறி விட முடியாது. ஆனால் பிரதியின் கனம் நெறியாளுகையில் வெளிப்பட வில்லையென்று நாடகாசிரியர் இலகுவில் அதை நிராகரித்து விடுவது எளிதில் நிகழ்ந்துவிடுகிறது. இது எல்லாம் ஒருவகையில் தன்னைத் தப்ப வைத்துக்கொள்ளல் மட்டுமே.

நாடகம் என்பது கூட்டுவினை. நாடக முழுமையின் முதற்பகுதி பிரதி. பிரதியின் பொறுப்பாளரான நாடகாசிரியர் மிகுந்த மரியாதைக்கு உரியவர் ஆகிறார். ஆனால் ஒரு நாடக நிகழ்வின் வெற்றியில் அவர் மட்டுமே இல்லை. பலவகைப் படைப்பு நிலைக்கலைஞர்களின் பங்கும் உள்ளது. இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துத் தன் படைப்பு நிலைத் தேவைக்கேற்ப அதைக் காட்சி வடிவாக்குகிற பங்கு நாடக நெறியாளுநரிடம் உள்ளது. நாடகாசிரியர் எனும் ஒரு படைப்பு மன நிலை பல்வேறு வகைப் படைப்பு மனநிலைகளினூடாக நெறியாளுநர் எனும் இன்னொரு படைப்பு மனநிலையுடன் வேதியல் சேர்க்கை கொண்டு ஏற்படுத்திக் கொள்ளும் புதிய ஊடாடலின் வழியே அது புதிய படைப்பு மனநிலையாகப் பரிணமிக்கிறது.

மலையாள நாடகாசிரியர் பேராசிரியர் ஜி. சங்கரப்பிள்ளை பற்றி அவரின் பல நாடகங்களின் நெறியாளுநர் பேராசிரியர் சே. இராமா னுஜம் கூறியுள்ள கருத்துகள் இங்கு உதவக்கூடும். நாடகப் படைப்புக் கான வகையில் இயக்குநர் என்பவரின் புனர்சிருஷ்டி என்னும் மீட்டு ருவாக்கத்திற்கேற்பத் தமது நாடகங்கள் சிலவற்றில் சில புதிய பகுதி களைச் சேர்த்துத் தந்ததுண்டு. மேலும் உலகின் தலைசிறந்த நாடகங்கள் எந்தக் காலத்திலும் ஒரு குறிப்பிட்ட முறையில் தான் மேடையேற்றப்பட வேண்டும் என்பதற்கில்லை. இயக்குநரின் மேடைத்தன்மைக்கேற்ப அவை நீக்குப்போக்குகளை ஏற்கும் வலிமை பெற்றவை என்பதில் பிள்ளைக்கு

(ஜி. சங்கரப் பிள்ளை) அசையாத ஒப்புதல் உண்டு. நாடகப் படைப்பில் கதாபாத்திரங்களை நீக்குதல் போன்ற இயக்குநரின் செயல்களைப் பற்றி வினா எழுந்த போது இது முற்றிலும் படைப்பாக்கப் போக்கையும் நாடகத்தின் தன்மையையும் பொறுத்தது என்று பதிலளித்துள்ளார். சிறந்த நாடகங்களில் பாத்திரங்களை நீக்குதல் என்பது அத்தனை எளிதான செயலன்று. நாடக ஆக்கத்தின் உள்ளோட்டத்தைச் சிதைக் காத எந்தவொரு மாறுதலையும் செய்துகொள்ள உரிமை பெற்றவர் இயக்குநர் என்று விடையளித்துள்ளார், என்பதைக் கருத்தில் கொண்டால் நாடகப் பிரதியில் உள்ளோட்டத்தைச் சிதைக்காமல் ஒட்டுதல், வெட்டுதல் செய்யும் சுதந்திரம் நெறியாளுநருக்கு இருக்கிறது என்பது புரிகிறது. மொழியின் மௌனத்தில் தான் நாடகம் இருக்கிறது. உரையாடலில் உள்ளார்ந்து போயிருக்கும் மௌனங்களில் தான் நாடக நிகழ்விற்கான தளவிரிவு உண்டு. மௌனத்தின் மொழியை ஸ்தூலமாக அடையாளப்படுத்துவதே இன்றைய நெறியாளுநரின் பணி. இதைப் புரிந்து கொள்கையில் பிரச்சினை மட்டுப்பட்டுப் போகும்.

இரண்டு பங்கு ஹைட்ரஜன் என்கிற வாயுவும் (H_2) ஒரு பங்கு ஆக்ஸிஜன் என்கிற வாயுவும் (O) இணைந்து நீர் (H_2O) என்கிற புதிய திரவப் பொருண்மை உருவாகிற வேதியல் விந்தையைப் போல், பல் வகைப் படைப்புக்கலை மனநிலையின் கூட்டுணர்வில் உருவாகும் நாடகம் என்கிற புதிய பொருண்மை பார்வையாளருக்குப் புதிய அனுப வங்களைத் தரத்தக்கதாயிருக்கிறது.

எஞ்சி நிலைத்தது மெட்டி

பக்தவத்சல பாரதி

தமிழ்ச் சமூகத்தின் திருமண முறை நீண்ட படிமலர்ச்சியைக் (Evolution) கொண்டதாகும். பழங்குடி நிலை (Tribal System) தொடங்கி இன்றைய தொழிற்புரட்சிக்குப் பிந்தைய - நவீனத்தைக் கடந்த நிலை வரை இதன் படிமலர்ச்சி தொடர்ச்சியான மாற்றத்தைக் கொண்டதாகும். தமிழ்த் திருமணத்தின் இந்த நீண்ட நெடிய படிமலர்ச்சியின் கருத்திய லானது இணைநிலையாகப் பண்பாட்டின் பிற தளங்களிலும் பிரதி பலிக்கக்கூடியதாகவுள்ளது. பண்பாடென்பது பல தளங்களின் பரஸ்பர ஒருங்கிணைவு என்பதால் ஒன்றை மற்றொன்று பிரதிபலிப்பதும், பல் வேறு தளங்களுக்கிடையிலான ஊடாட்டமும் அதன் இயக்கவியல் போக்கில் காணப்படுகிறது. இக்கட்டுரையானது கொலுசு, மெட்டி ஆகிய அணிகலன்கள் சார்ந்து வெளிப்படும் திருமணம், பொருளியல் படிமலர்ச்சிப் போக்குகளை ஆராய்கிறது.

இத் துணைக்கண்டத்தில் தமிழ்ச் சமூகங்களின் பண்பாட்டை உள்ளடக்கிய திராவிடப் பண்பாட்டு மரபின் படிமலர்ச்சியை மைய மிட்ட ஆய்வென்பது மிகுந்த எச்சரிக்கையுடன் அணுகவேண்டிய ஆய் வுக்களமாகும். நீண்ட நெடிய அறுபடாத பண்பாட்டுத் தொடர்ச்சியும், பிற பண்பாட்டு மரபுகளோடு தொடர்பும், அயற்பண்பாடுகளுக்குக் கொடை யளித்தும் உருவெடுத்துள்ள இம்மரபின் படிமலர்ச்சியென்பது இன மொழி, இலக்கியம், சமயம், தத்துவம், தொல்லியல் போன்ற பல் துறை இணைவோடு அணுகப்பட வேண்டிய ஒன்றாகும். இக்கட்டுரை

யானது பழங்குடிப் பண்பாட்டில் எஞ்சி நிலைத்த ஓர் இனவரைவியல் (Ethnographic) தரவை மட்டும் மீட்டுருவாக்கம் செய்து அதன்வழி திருமணம், பொருளியல் படிமலர்ச்சிப் போக்குகளை ஆராய்கிறது.

பண்பாடுகள் அனைத்தும் ஒரு நேர்க்கோட்டு வரிசையில் பரிண மித்து வந்துள்ளன என்ற ஒருவழிப் படிமலர்ச்சிக் கோட்பாடு (Unilinear evolutionism) இன்று நிராகரிக்கப்பட்டாலும் அக்கோட்பாட்டாளர்கள் முன்மொழிந்த 'எஞ்சி நிலைத்தவை' (Survivals) கோட்பாட்டு மீட்டுருவாக்க ஆய்வுகளுக்கு இன்றும் பயன்படுவதாகவே உள்ளது.

எஞ்சி நிலைத்தவை

எஞ்சி நிலைத்தவை என்பது, பண்பாட்டின் ஒரு கட்டத்தில் முதன்மைக் கூறுகளாக நிலைத்திருப்பவை அடுத்தடுத்த கட்டங்களில் அவற்றின் முதன்மை நிலையை இழந்து ஒரு கட்டத்தில் எச்சங்களாக மாறிப் பின்னர் மேலும் வலுவிழந்து பண்பாட்டிலிருந்து பெருமளவோ முற்றிலுமாகவோ அற்றுப்போகுவதாகும். பல கூறுகள் அற்றுப்போகா மல் எஞ்சி நிலைத்தவையாகப் பல காலம் தொடரும். இவ்வாறு எஞ்சி நிலைத்தவையாகத் தொடரும்போது அவற்றின் வடிவம், செயல், பொருண்மை ஆகியவற்றில் பல மாறுதல்கள் ஏற்படும். அதாவது விலங் கினப் படிமலர்ச்சியில் குரங்கினத்தின் வால்பகுதி மனித இனத்தில் குறுகி எச்சமாகத் திகழ்வது போன்றது. இன்று, தமிழர் பண்பாட்டின் எஞ்சி நிலைத்தவையாகத் திகழும் பல கூறுகளை மீட்டுருவாக்குவதன் மூலம் இப்பண்பாட்டின் படிமலர்ச்சிப் போக்குகளை அறிய இயலும். இன்றைய எளிய, பழங்குடிச் சமூகங்களின் கூறுகள் ஆதிச் சமூகத்தின் எச்சங்கள் என ஒப்பிடுதல் எஞ்சி நிலைத்தவை கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகும்.

சிலம்பு, மெட்டி மீட்டுருவாக்கம்

இன்றைய தமிழ்ப் பண்பாட்டுத் தளத்தில் ஒழுங்கமைந்திருக்கும் ஆயிரமாயிரம் கூறுகளின் படிமலர்ச்சியை அறிய, மேலே குறிப்பிட்டது போல, பழங்குடிகளின் தரவுகளும், பிற தரவுகளும் பெரிதும் உதவு

கின்றன. இன்றைய தமிழ்ப்பெண்கள் கணுக்காலிலும் கால்விரலிலும் முறையே கொலுசு, மெட்டி ஆகிய இரண்டு அணிகலன்களைப் பெரிதும் விரும்பி அணிகின்றனர். இவ்வணிகலன்களின் படிமலர்ச்சியில் பொருண்மையானது திருமணம், உற்பத்தி உறவுகளின் மாற்றம் ஆகிய கருத்தியலோடு ஒருங்கிணைந்துள்ளது.

இன்று ஆந்திரா - ஒரிசா எல்லையில் வாழும் திராவிடப் பழங்குடியான கொண்டர்களின் (Khonds) திருமண முறையை முன்வைத்து ஆராய்வது விரிவான புரிதலுக்கு வழிவகுக்கும். அவர்களிடம் கிடைத்த ஒரு தரவானது ஓர் அரிய இனவரைவியல் தரவாக உள்ளது. கொண்டர்கள் ஆதியில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் (Hunting and Gathering) பொருளாதார முறையைக் கொண்டிருந்தனர். இவ்வகைப் பொருளாதாரம் பிழைப்பாதாரப் பொருளாதாரம் (Subsistence Economy) எனப்படும். இதில் உபரி உற்பத்தி இருக்காது. உடைமை என்பதும் இருக்காது. வாழிடம், காடு அனைத்தும் பொதுவானதே. இருபாலரும் தவிர்க்க முடியாத வேலைப் பகிர்வினைக் கொண்டு பரஸ்பரம் சார்ந்து உணவுக்கான ஆதாரத்தை அன்றாடம் ஈட்டுவர் சமூகத்தில் பரிமாற்றமும், பங்கீடும், குழு உணர்வும் மிகுந்திருக்கும். இதனை ஒட்டுமொத்தமாகச் சுருக்கிச் சொல்வோமேயானால் தொன்மைப் பொதுவுடைமை (Primitive Communism) என்றே கூறலாம்

பிழைப்பாதாரப் பொருளாதாரத்தைக் கொண்ட கொண்டர்களின் ஆதி திருமணமுறை பழந்தமிழர் வாழ்வில் காணப்பட்ட களவு மணமே. இவர்கள் களவு வெளிப்படும் முன்னரோ, வெளிப்பட்ட பின்னரோ மணந்து கொண்டனர். கொண்டர்கள் உள்ளிட்ட பிழைப்பாதாரப் பொருளாதாரத்தைக் கொண்ட சமூகங்களில் மணப்பெண் வீட்டாருக்குப் பொருளோ பணமோ பரிசமாகக் கொடுத்துப் பெண்ணைப் பெறுவர். மனித உழைப்பை மூலதனமாகக் கொள்ளும் உற்பத்தி உறவில் பெண்ணின் உழைப்பை இழப்போருக்கு ஈடு செய்யும் அடையாளமாகப் பரிசம் அமைந்தது

கொண்டர்களின் பரிசம் கொடுத்து மணக்கும் முறையிலும் களவு மணத்திலும் கால ஓட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. வேட்டையாடி உணவு சேகரிக்கும் நிலையிலிருந்து மாறி மலைச்சரிவில் பயிரிடும் முறை இவர்களிடம் தோன்றியது. பின்னாளில் மஞ்சள் பயிரிட்டு உபரிப்பொரு ளாதாரத்தை வளப்படுத்திக் கொண்டனர். இதன் வழி நுகர்வுக்காக அன்றாடம் உணவு சேகரித்தலை மையமிட்ட பிழைப்பாதாரப் பொருளாதாரம் உற்பத்தி சார்ந்த 'உபரிப்' பொருளாதாரமாகவே மாறத் தொடங்கியது உபரி நோக்கிய இந்த உற்பத்தி முறையால் திருமண முறை யில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

கொண்டர்களிடம் ஏற்பட்ட உபரிசார்ந்த பொருளாதார மாற்றத் தால் மலைச்சரிவு நிலங்களை உடைமையாகப் பெறுவதில் பல குடும் பங்கள் முனைப்பு காட்டின. இதனால் அதிகம் விளைவிப்போர் முதல் பழைய வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறைவரை கொண்டர் குடும்பங்கள் தகுதி அடிப்படையில் பாகுபாடு உடைய குடும்பங்களா கவே மாறின. இந்நிலையில் வேளாண் குடும்பத்தினர் தங்கள் பெண் களைச் சமதகுதி உடைய குடும்பங்களுக்குக் கொடுக்க விரும்பினர். இதனால் பூப்படைந்த பெண் தகுதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த பையனுடன் ஓடிபோகமலிருக்கப் பூப்படையும் நாள் முதல் சிலகாலம் வரை காலில் பெரும் இரும்பு வளையம் போட்டு இரவுக்காலங்களில் பெண்ணைச் சுற்றி வட்டமாகக் (காக்கும் முறை) கும்மியடித்துக் (கொண்டானடித்தல்) காப்பாற்றித் தன் தகுதிக்கு ஒத்த குடும்பத்தி னருடன் மணம் முடிக்க விரும்பினர். சென்னை எழும்பூரிலுள்ள அரசு அருங்காட்சியகத்தில் இனஒப்பாய்வியல் (Ethnology) காட்சியரங்கில் இன்றும் கூட கொண்டர் பெண் காலில் இரும்பு வளையம் அணிந்திருக் கும் மாதிரியைக் காணலாம். இப்பெரும் வளையத்தைத் தூக்கிக் கொண்டு ஓடுதல் மிகக் கடினமாகும் (பக்தவத்சல பாரதி, 2002 : 71)

கொண்டர்களிடம் காணப்பட்ட இத்தொல் கூறு சங்க காலத்தில் ஒரு மாறுபட்ட நிலையில் இருந்தமை சங்கத் தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் பின்வருமாறு பதிவாகியுள்ளது.

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலன சிலம்பே.... (குறுந்தொகை 12)

குறுந்தொகை காட்டும் இப்பாடல் வழி சிலம்புகழி நோன்புக்கு முந்தைய காலத்தில், அதாவது திருமணத்திற்கு முந்தைய காலகட்டத்தில் பெண்கள் சிலம்பை அணிந்திருந்தமை தெரிகிறது.

கொண்டர் பெண்கள் ஒரு கட்டத்தில் அணிந்த பெரும் வளையம் சுட்டும் பொருண்மையும், குறுந்தொகைப் பாடல் சுட்டும் பொருண்மையும் புற நிலையில் மாறுபட்டவை என்றாலும் புதைநிலையில் ஒரே பொருண்மைத் தொடர்ச்சியைக் கொண்டுள்ளன. மணமாகாத கொண்டர் பெண் ஓடாமலிருக்க அணிவித்த கனமான வளையம் பெண்ணைக் காக்க வேண்டும் என்ற நோக்கில் எழுந்ததாகும். குறுந்தொகைப் பாடல் சுட்டும் சூழலில் 'வில்லேந்திய ஆண்மகன் கழலணிந்தும், கையில் வளையல் அணிந்த பெண் காலில் சிலம்பணிந்தும் இந்த வழியில் சென்றார்களா ? என்று வினவும் பெண்ணின் பெற்றோரின் தேடுதல் புலனாகிறது. பெண்ணின் நடமாட்டத்தைக் கணிக்கும் வகையில் காலில் சிலம்பு அணிவிக்கப்பட்டமையை வேறு சில சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. இக்கட்டத்தில் உடன்போக்கு தடுக்கப்பட்டுப் பெற்றோர் நிச்சயிக்கும் பெண்ணை மணக்கும் முறை ஏற்படத் தொடங்கியது. இற்செறித்தல், மகட் கொடை மறுத்தல், உடன்போக்கில் போர் போன்ற நிகழ்வுகள் உடன் போக்கை விரும்பாத பிந்தைய காலகட்டத்தையே சுட்டிக்காட்டுகின்றன.

பெண்ணின் நடமாட்டத்தை உணர்த்தும் பொருண்மையைச் சுட்டும் காலகட்டம் ஒன்று ஏற்பட்டமை இதன்வழி வெளிப்படுகிறது அதன் பின்னர் நீண்ட படிமலர்ச்சியின் ஊடாகச் சிலம்பானது, கொலுசாக நீட்சி பெற்றது. இன்று குழந்தைகளுக்கும் கொலுசு அணிவித்து அழகு பார்ப்பது கொலுசின் பண்பாட்டுப் பொருண்மையை நீட்சிப் படுத்துவதாகும். இது ஒரு பண்பாட்டுக் கூறின் செயல்நிலையை அல்லது பொருண்மை நிலையை அடுத்தடுத்த கட்டங்களில் விரிந்த தளத்திற்கு நீட்சிப்படுத்துவதாகும். மெட்டியும் இவ்வாறே நீட்சி பெற்ற ஒரு

பொருண்மையைக் கொண்டிருக்கிறது. பெண்களின் வாழ்க்கை ஓட்டத்தில் ஏற்படும் உடல் ரீதியான, சமூக - பண்பாட்டு ரீதியான மாற்றத்தைச் சடங்கியல் முறையில் தகுதி மாற்றம் ஏற்படுத்திக்கொள்ளும் முகமாக மணமான பெண்கள் தங்களின் சமூகவியல் நிலைமாற்றத்தைச் சுட்டிக் காட்டுவதாகவே மெட்டியின் பொருண்மை அமைகிறது. மெட்டியணிந்த பெண் திருமண மானவள்; குடும்ப வரையறைக்குள் கொண்டு வரப்பட்டவள் என்பதை உணர்த்தி நிற்கிறது. அந்நாளில் காலில் பெரும் வளையம் அணிவிக்கப் பட்டவள் பெற்றோரின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதன் பொருண்மையை உணர்த்த, அதன் படிமலர்ச்சியில் நீட்சியாக அமையும் மெட்டி மணமான பெண் கணவனின் கட்டுப்பாட்டிற்குள் வந்தவள் என்னும் பொருண்மை நீட்சியைச் சுட்டுகிறது.

உலகம் தழுவி எண்ணற்ற பண்பாடுகளில் காலில் அணிகலன் அணியும் முறை ஓர் உலகளாவிய பண்பாட்டுப் பொதுமையாக (Cultural Universal) காணப்பட்டாலும் ஒவ்வொரு பண்பாடும் தன் பொருள் சார் பண்பாட்டின் வழி (Material Culture) தன் பண்பாட்டுக்கேயுரிய பொருண்மைகளை அதனுள் ஏற்றித் தன் தனிப்பட்ட உருவாக்கத்தை, வடிவத்தை, பொருண்மையை அடையாளப்படுத்துகிறது. அதனால் தான் பொருட்களைப் பற்றி மேரிடக்ளஸ் (1979) கூறும்போது "பொருள்கள் சாப்பிடுவதற்கு, உடுப்பதற்கு, தங்குவதற்கு நல்லவை யென்பதை மறந்து விடுங்கள்; அவற்றின் அன்றாட பயன்பாட்டை மறந்துவிட்டு, பொருள்கள் மனித சிந்தனையைத் தாங்கி நிற்கிறது; வெளிப்படுத்துகிறது என்ற கோணத்தில் அணுகுங்கள். அவை யாவும் பேச்சற்ற ஊடகங்கள்" என்று எண்ணுங்கள் என்பார். இக்கருத்தினைச் சுருக்கிக் கூறும்போது "பொருள்களெல்லாம் உயிர் வாழ்க்கைக்கு அடிப் படையான தேவைகள் என்று எடுத்துக்கொள்ளாமல் பண்பாட்டு வகை களை வெளிப்படுத்தவும், அவற்றை நிரந்தரப்படுத்தவும் நிலை பெற்றுள்ளன" எனச் சிந்திக்க வேண்டும் என்பார் டக்ளஸ்.

இக்கருத்துக்களை அடியொற்றிப் பார்க்கும் போது திராவிட / தமிழ்ப் பண்பாட்டின் நீண்ட படிமலர்ச்சியின் ஒரு கட்டத்தில் பெரும் வளையமாக இருந்த ஒரு கூறு இன்று திரிபு வடிவமாக, எஞ்சி நிலைத்த கொலுசு, மெட்டியாக வடிவம் பெற்றிருப்பது என்பது பிழைப்பாதாரப் பொருளாதாரச் சமூகம் உபரி உற்பத்தி முறைக்கு மாறிய சூழலில் ஏற்பட்ட பொருளியல், திருமண மாற்றங்களை அடியொற்றியபடி மலர்ச்சிக் கருத்தியலையே முன் வைக்கிறது. பழங்குடி வாழ்வு முறையில் காணப்பட்ட இக்கூறுக்கும் இன்றைய திரிபு வடிவம் அல்லது எஞ்சி நிலைத்ததாக இருக்கும் இன்றைய நிலைக்கும் இடையே விரிந்து நிற்கும் நீண்ட இடைவெளியில் இக்கூறுகள் பெற்ற வெவ்வேறு மாற்றங்கள் அடுத்தகட்ட ஆய்வுக்குரியது.

துணை நூல்கள்

பாரதி, பக்தவத்சல., 2002, **தமிழர் மானிடவியல்**, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

Douglas. M., and Isherwood. B., 1979, **The World of Goods: Towards Anthropology of Consumption**, Alan Lane, London.

சீகன்பால்குவின் தமிழ்த்தொண்டு

சு. நரேந்திரன்

மேலை நாட்டிலிருந்து தமிழகத்திற்கு மறை போதகர்களாக வந்து தமிழுக்குத் தொண்டு புரிந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர், 1706 ஆம் ஆண்டு தரங்கைக்கு வந்த டேனிஷ் மறைபோதகர் சீகன் பால்கு ஆவார்.

இவர் தம் மதக்கருத்துக்களைத் தமிழகத்தில் பரப்ப வேண்டுமென்ற நிலையில் ஜெர்மன், போர்த்துகீசு மொழிகளை அறிந்த ஆலப்பன் என்பவரிடம் தமிழைக் கற்றுக்கொண்டு இதில் சிறந்து விளங்க எண்ணித் தரங்கைக்கு வந்ததிலிருந்து தமிழைப் பேசவும், நன்றாகப் படிக்கவும் இரண்டு ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு சுமார் ஒன்பது மணி நேரம் செலவிட்டார். அதன் விளைவாக ஏற்பட்டது என்ன என்பதை, சீகன் பால்கு " தமிழ் எனது சொந்த மொழியைப் போல் வந்துவிட்டது, நான் வந்த இரண்டு வருடங்களில் பல தமிழ்ப் புத்தகங்களை எழுதி முடித்தேன்" என்று கூறுகிறார்

தமிழில் விவிலிய மொழிபெயர்ப்பு

தமிழ் கற்கத்தொடங்கிய எட்டே மாதங்களில் தமிழைப் படிக்கவும் பிறருடன் பேசவும் கற்றுக்கொண்ட சீகன் பால்கு, உணவு உண்ணும் போதும், தமக்குமுன் தமிழ் மொழியை வாசிக்கச் செய்து தமிழ் உச்சரிப்பை நுட்பமாய்க் கற்றுக்கொண்டதுடன், தாய்மொழியாகிய ஜெர்மன் மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றலையும் வெகு விரைவாகக் கற்றுத் தேர்ந்தார். தமிழைக் கற்ற இரண்டு ஆண்டு

களில் 20, 000 வார்த்தைகள் அடங்கிய ஓர் தமிழ் அகராதியையும், தமிழ் இலக்கணத்தையும் எழுதினார். பின்னர் 4 ஆண்டுகளுக்குள் இவர் மேலும் பல தமிழ்ச்சொற்களைச் சேகரித்து 20,000 சொற்கள் இருந்த அகராதியை 40, 000 சொற்களுடன் கூடிய அகராதியாக மாற்றினார். இத்தோடு செய்யுள் அகராதி ஒன்றையும் உருவாக்கி அதில் 17, 000 சொற்களைத் தொகுத்தார்.

இம்மறை போதகர் தரங்கையில் அரசாண்டவர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகத் தரங்கைக் கோட்டையில் 128 நாட்கள் சிறைவாசம் இருந்தபோது இவரால் விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இது பாமரமக்களின் பேச்சுத் தமிழிலே இருந்ததால் சீகன்பால்குவுக்குச் செந்தமிழ் அறிவே கிடையாது என்றும், கொச்சை நடையில் எழுதிய மொழிபெயர்ப்பில் பல எழுத்துப் பிழைகளும் உள்ளன என்றும் கேலி பேசப்பட்டுச் "சூத்திரர்களின் வேதம்" என அம் மொழிபெயர்ப்பு புத்தகம் அழைக்கப்பட்டது. மக்களைச் சந்தித்து எழுதிய இவர் நூல்கள் அக்காலத்தில் நிலவிய பழகு தமிழை ஆய்வு செய்யத் தமிழ் இலக்கிய உலகுக்கு இன்று பயன்படுகிறது (Now it is useful to do research on the contextual Tamil Terminology of that Century).

கிருத்துவத் தமிழும் கலைச்சொல்லாக்கமும்

விவிலிய மொழிபெயர்ப்பில் சீகன்பால்கு பல புதிய கலைச் சொற்களை உருவாக்கினார். God என்ற சொல்லுக்குத் தமிழில் கடவுள், கர்த்தர், தம்பிரான், இறைவன், தெய்வம், சாமி, சுவாமி, ஈசன், தேவன், பராபரன், ஆண்டவர், சர்வேஸ்வரன் என்ற பல சொற்கள் இருந்தன. இதில் சர்வேஸ்வரனே இவரால் எடுத்தாளப்பட்டது.

உணவை உண்ணாது பட்டினியாயிருந்து கடவுளை நினைத்தலை இந்துக்கள் 'விரதம்' என்றும், இஸ்லாமியர் 'நோன்பு' என்றும் கூறுவர். அவற்றைவிட வித்தியாசமானது என்பதைக் காட்டவும், தனிப்படுத்த வும் ' உபவாசம் ' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இப்படி நிறைய புதிய சொற்களைச் சீகன்பால்கு கண்டுபிடித்துத் தம் முதல் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியதால் 'கிருத்துவத் தமிழ்' என்கிற புதிய சொல்லாட்சி

உருவாயிற்று. அதேபோல் நிறைய ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழில் ஒரு இணையும் (President, Chairman, Leader - தலைவர்) நிறைய தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு இணையும் (அருள், கருணை, காருண்யம், இரக்கம், அன்பு, கிருபை - Grace) காணப்பட்டன.

தரங்கையில் அச்சு, காகிதம்

கிருத்துவ சமயத்தை வேகமாகப் பரப்ப எண்ணிய சீகன்பால்கு தமிழகத்தில் அச்சு இயந்திரம் இல்லாத குறையை நீக்க "இங்கிலாந்து கிருஸ்த்து மார்க்க அறிவுவிருத்தி சங்கத்தின்" மூலமாக 1714 - இல் அச்சு இயந்திரத்தைப்பெற்று 'தரங்கம்பாடி மிசியோன் அச்சகம்' தொடங்கினார். இதற்கு வேண்டிய காகிதத்தைத் தயாரிக்க ஒரு காகிதப் பட்டறை ஆரம்பித்தார் அந்த ஊர் இன்றும் தரங்கை அருகாமையில் 'கடுதாசிப்பட்டறை' என்றே அழைக்கப்படுகிறது.

இவர் சேகரித்த ஓலைச்சுவடிகள் இன்றும் காட்சிக்குள்ளன. விவிலியம் அச்சிடப்பட்ட சில ஆண்டுகளிலேயே லுத்தர் எழுதிய சிறிய ஞானோபதேசத்திற்கு ஸ்பினர் கொடுத்த விளக்கவுரையைத் தமிழில் சீகன்பால்கு (1707) செய்து முடித்தார். 1708 -இல் இவர் தாம் சேகரித்த ஓலைச்சுவடிகளைத் தமது நூலகத்தில் தொகுத்து வைத்தார். அச் சுவடிகள் தற்போது இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. அவற்றில் "உலக நீதி" என்ற ஓலைச்சுவடியும் ஒன்று. இதனை ஜெர்மனியில் மொழிபெயர்த்தார். இந்த ஜெர்மானிய மொழி பெயர்ப்புச்சுவடி டென்மார்க் கோபேன்காம் அரசு பொருட்காட்சிச் சாலையில் உள்ளது

ஆலயத்தில் கிருத்துவத் தமிழ்ப்பாட்டு

ஐரோப்பியர் எழுதிய ஞானப் பாடல்களையும் சீகன்பால்கு தமிழில் மொழிபெயர்த்தார். இது ராக அமைப்பிலும், தாள அமைப்பிலும் தமிழ் இசையைவிட மாறுபட்டது. "நெஞ்சுருக்கி நூல்" என அழைக்கப்படும் இந்நூல் லுத்திரன் சபையினரால் இன்று வரை பாரம் பரிய இசைச் சொத்தாக விளங்கி பாடப்பட்டு வருகிறது. இது தவிர

தமிழ் இசை அமையும் படியும் பாடல்கள் புனைந்து ஒரு புத்தகம் வெளியிட்டார்.

ஆலயத்தில் தமிழ் வழிபாடு

சீகன்பால்கு 1707இல் தமிழ்ப் பள்ளிகளை நிறுவி அதில் இலவச உணவு, உடை, உறைவிடம் தந்து தாய்மொழியில் கல்வி கற்க உதவினார். இதே ஆண்டு தரங்கையில் " எருசேலம் ஆலயம் " என்னும் ஒரு வழி பாட்டுத் தலத்தைக் கட்டிமுடித்து டென்மார்க் நாட்டுத் திருச்சபையின் வழிபாட்டு முறையில், தமிழ் மொழியில் வழிபாடு நடத்தினார்.

இந்திய மொழிகளில் முதன்முதலில் தமிழில் விவிலியம்

1714ஆம் ஆண்டு முதல் புதிய ஏற்பாடு தமிழில் அச்சிடப்பட்டு வெளியானது. இந்திய மொழிகளில் முதன்முதலில் தமிழ் மொழியில் தான் திருமறை அச்சிடப்பட்டு வெளிவந்தது. இதேபோல் 1917ஆம் ஆண்டு முதன்முதல் இந்தியாவில் நாள்காட்டி தரங்கை அச்சகத்தி லிருந்து அச்சிடப்பட்டு வெளியானது.

தரங்கையில் அச்சுவார்ப்பு

ஆரம்ப காலத்தில் அச்சுக்கூடத்தில் சீகன்பால்கு அச்சுக்கு உபயோகித்த எழுத்துக்கள் அச்சு இயந்திரத்துடன் வந்த ஜெர்மனியில் செய்யப்பட்ட பெரிய தமிழ் எழுத்துகள். இவை பிறகு சிறிய அளவில் தரங்கையில் வார்க்கப்பட்டன இதன் மூலம் பல புத்தகங்கள் விரைவில் வெளிவந்தன

சீகன்பால்கு எழுதிய நூல்கள்

14 - 9 - 1708 இல் இவர் தமது நண்பனுக்கு எழுதிய கடிதமொன்றில், தமிழ் மொழியில் பதினான்கு நூல்களை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். அவை :

(1) ஒரு கிருஸ்தவனுக்கும் தமிழனுக்கும் இடையே நடந்த உரையாடல், (2) லுத்தரின் சிறிய வினா - விடைத் திருமறைப் பயிற்சி நூல், (3) திருமுழுக்குப் பெறுவோர்க்குத் திருமுழுக்கு விவரங்கள் பற்றிய

பரீட்சை, (4) திருவிருந்து அனுசரிப்பு, (5) திருச்சபையில் பாடப்பட வேண்டிய பாடல்கள், (6) சில பாவமன்னிப்பு விருத்தங்கள், (7) முழு கிருஸ்தவ சத்தியங்கள் அடங்கிய 36 பிரசங்கங்கள், (8) கிருஸ்துவின் வரலாறு அடங்கிய 14 ஞாயிறு பிரசங்கங்கள், (9) சிறிய பள்ளி நூல் ஒன்று, (10) தமிழ், போர்த்துகீசிய மொழிகளில் சில சுற்றுக் கடிதங்கள், (11) அறநெறி இறையியல், (12) குருவிற்கும் சீடருக்குமிடையே கிருஸ்துவக் கொள்கைகளைக் குறித்த கேள்வி - பதில் அமைப்பிலுள்ள 16 உரையாடல்கள், (13) தமிழ் அகராதி - 20, 000 சொற்களுடன், (14) தமிழ்ச் செய்யுள் அகராதி - தமிழ்ச் செய்யுள் நூல்களிலிருந்து 17, 000 சொற்களடங்கியது. இது தவிர ஜெர்மனி நாட்டிலுள்ள ஹல்லே நூல் நிலையத்தில் சீகன்பால்குவினால் எழுதப்பட்ட பல நூல்கள் காக்கப்பட்டு வருகின்றன. அவற்றில்,

1. நீதி வெண்பா, கொன்றைவேந்தன் முதலியவற்றிலிருந்து எடுத்த சில தொகுப்புகள்.
2. Bibliotheca Malabarica
3. Geneology of the Malabari Gods
4. Malabarian religion
5. Tamil - German Dictionary
6. Translation into Tamil of the New Testament
7. Malabar words and Phrases

ஆகியன குறிப்பிடத்தக்கன.

முடிவுரை

சீகன் பால்குவின் தமிழ்த் தொண்டைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது பல போற்றுதலுக்குரிய செயல்கள் காணக்கிடக்கின்றன. அவற்றில் முக்கியமானவை,

(1) தமிழகத்தில் முதல் அச்சு இயந்திரம், முதல் அச்சு வார்ப்பு, மை மற்றும் காகிதத் தொழிற்சாலைகளை அமைத்துத் தமிழிலும் ஜெர்மனிலும் அகராதியிலிருந்து - பள்ளி நூல் வரை பல நூல்களை எழுதியது, இதன் மூலம் மேலைநாட்டு அறிவியல் தமிழர்களுக்கு கிடைக்க வழி பிறந்தது.

(2) தமிழில் கிருத்துவப் பாடல்களுடன் திருமறையையும் மொழிபெயர்த்து ஆலயத்தில் தமிழில் வழிபாடு செய்தது.

(3) சாதி, இன, மத வேறுபாடின்றித் தமிழ்வழிக் கல்வியைத் தரங்கையில் பெற ஆவன செய்தது.

துணை நூல்கள்

ஜேக்கப் சுந்தர்சிங். ஜெ. ஜி., தரங்கைத் தாரகை, தமிழ் சுவிசேசலுத்தரம் திருச்சபை வெளியீடு, சென்னை.

லாரன்ஸ். எஸ்., அருள்தாஸ். டி., **இந்தியாவின் விடிவெள்ளி**, கிருத்துவ இலக்கியச் சங்கம், சென்னை.

பாவேந்தன். இரா., **தமிழில் அறிவியல் இதழ்கள்**, பிவ்கிரீன் பதிப்பகம், கோவை.

Ziegen Balg & Erich Beyeather., **Bartholomaus**, Christian Literature Society, Chennai

வெண்பாக்களில் சீர், தளை பயின்று வரும் முறை - ஒரு புள்ளியல் ஆய்வு

ப. பாண்டியராஜா

முன்னுரை

பா வகைகளிலேயே வெண்பா அமைப்புமுறை மிகவும் இறுகிய கட்டுக்கோப்புடையது. மா, விளம், காய் ஆகிய சீர்களையும் இயற்சீர், வெண்சீர் ஆகிய தளைகளையும் கொண்டு வருவது இது. வெண்பாக் களில் பலவகைகள் இருப்பினும் குறள் வெண்பா, நேரிசை வெண்பா ஆகியவையே பெரும்பாலும் புலவர்களால் கையாளப்படுவன. புலவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றபடி சொற்களை அமைக்காமல் இந்த இறுகிய இலக்கண வரம்பிற்குள் தங்கள் படைப்புகளை ஆக்க வேண்டியுள்ளது. மேலும், பாடுகின்ற பொருள்களைப் பொருத்தும் புலவர்களின் சொல் தேர்வு மாறுபடுகிறது. இருப்பினும், இவ்வாறு பாடப்படும் வெண்பாக்களில் சீர், தளை அமைப்பு முறைகளில் ஏதேனும் ஒற்றுமை காணப்படுகிறதா ஆசிரியரின் விருப்பத்தேர்வுகள் இவ்வமைப் புகளில் காணப்படுகின்றனவா என்றறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தரவுகள்

இக்கட்டுரைக்கு ஆய்வுத்தளமாகப் பின்வரும் நூல்கள் தெரிவு செய்யப்பட்டன

1 திருக்குறள் (திருக்.)

2. நாலடியார் (நாலடி.)

3. திரிகடுகம் (திரி.)

4. பழமொழி நானூறு (பழ.)

5. முத்தொள்ளாயிரம் (முத்.)

6. நளவெண்பா (நள.)

7. பட்டினத்தார் பாடல்கள் (பட்.)

8. கிறிஸ்து மொழிக்குறள் (கி. மொ.)

9. அருட்குறள் (அருட்.)

இவற்றில் 1, 8, 9 ஆகியவை குறள் வெண்பா வகையைச் சேர்ந்தவை. ஏனையவை நாலடி கொண்ட வெண்பா வகைகளாம். 'கிறிஸ்து மொழிக் குறள்' என்ற பகுதி திரு. வி. கல்யாணசுந்தரம். அவர்களால் இயற்றப் பட்டது. 'அருட் குறள்' என்ற நூல் வீ. ப. கா. சுந்தரனார் இயற்றியுள்ள 1220 குறள்களைக் கொண்டது. மற்றவை சங்கம் மருவிய இடைக்கால இலக்கியங்களாம்.

ஆய்வுமுறை

தெரிவு செய்யப்பட்ட நூற்களிலுள்ள பாக்கள் அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்பட்டன. அவை இக்கட்டுரை ஆசிரியரால் எழுதப்பட்ட கணினி நிகழ்நிரல்களால் (Computer Programmes) ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. ஒரு குறிப்பிட்ட சிறு பகுதியைக் கொண்ட மாதிரிகள் மூலமாகப் பெறப்பட்ட முடிவுகள் சரி பார்க்கப் பட்ட பின்னரே நூற்பகுதிகளுக்கான முடிவுகள் பெறப்பட்டன

ஆய்வு முடிவுகள்

மேற்குறிப்பிடப்பட்ட நூற்பகுதிகளிலுள்ள பாக்களினின்றும் பெறப்பட்ட ஆய்வு முடிவுகள் கீழ்க்காணும் வகையில் பிரிக்கப்பட்டன.

1. இறுதிச் சீர்கள் அமைப்பு முறை

2 ஈரசைச் சீர்கள் அமைப்பு முறை

3. மூவசைச் சீர்கள் அமைப்பு முறை

4. செய்யுள் முதற்சீர்கள் அமைப்பு முறை

5. தளை வகைகள் அமைப்பு முறை

இறுதிச் சீர்கள்

குறட்பா, நேரிசை வெண்பா ஆகியவற்றின் இறுதிச்சீர்கள் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய ஏதேனும் ஒன்றின் வாய்பாட்டின்படி அமைய வேண்டும். மேலும், இவை ஈற்றயல் சீரின் அமைப்பிற்கேற்ற தளையுடன் அமைந்திருக்க வேண்டும். எடுத்துக்கொண்ட தரவுகளில் இச்சீர்கள் பயின்று வரும் முறை அட்டவணை 1இல் கொடுக்கப்பட்டுள்ளது. எண்கள் மொத்தப்பாக்களின் விழுக்காட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1

	திருக்.	நாலடி.	திரிகடு.	பழ.	முத்.	நள.	பட்.	இ.மொ.	அருட்.
நாள்	13.08	23.25	30.00	26.75	15.25	14.99	42.00	17.93	10. 00
மலர்	50.00	38.50	47.00	40.75	38.98	22.25	28.00	18.49	19. 42
காசு	15.04	18.00	11.00	21.25	25.42	27.40	18.00	44.26	44. 25
பிறப்பு	21.88	20.25	12.00	11.25	20.34	35.36	12.00	19.33	26. 33
மொத்தம்	100	100	100	100	100	100	100	100	100

நளவெண்பா தவிர்த்த பண்டைய இலக்கியங்களில் 'மலர்' என்ற வாய்பாடே மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண லாம். ஏறக்குறைய 40 % அல்லது அதற்கும் அதிகமான விழுக்காட் டில் இவ்வாய்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குறளில் இது 50% காணப்படுகிறது. எனவே, இவ்வாய்பாடு திருவள்ளுவரின் தனிமுத்திரை எனலாம். இருப்பினும், நளவெண்பா, திருவிக அருட்குறள் ஆகிய நூல் களில் இது மூன்றாம் இடத்தையே பெறுகிறது. பட்டினத்தார் மிகப்பெரு வாரியாக 'நாள்' வாய்பாட்டில் தம் பாடல்களை அமைத்துள்ளார். காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகள் நளவெண்பா, திருவிக அருட்குறள் ஆகிய

நூல்களில் மிகுந்து காணப்பட, இவ்வாய்பாடுகள் பட்டினத்தாரால் மிகவும் அருகியே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இந்நால் வகை வாய்பாடுகளின் பயன்பாடு பெரிதும் ஆசிரியரைச் சார்ந்தே அமைந்துள் ளதைக் காண்கிறோம். எனினும், பதினெண் கணக்கு நூல்களில் இவற்றின் பயன்பாட்டில் ஒரு சீர்மை (Uniformity) உள்ளதையும் காணமுடிகிறது.

ஈரசைச் சீர்கள்

தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் ஆகிய நால்வகைச்சீர்களின் பயன்பாடு அட்டவணை - 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது. செய்யுளின் இறுதிச்சீர் தவிர ஏனைய இடங்களில் இவை பயன்படுத்தப்பட்டிருக்கும் விழுக்காடுகள் இதில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2

	திருக்.	நாலடி.	திரிகடு.	பழ.	முத்.	நள.	பட்.	கி.மொ	அருட்.
தேமா	29.65	22.14	25.43	27.71	26.67	26.92	21.93	23.16	21.46
புளிமா	13.27	13.09	10.07	14.54	10.30	8.65	9.64	10.50	10. 31
கூவிளம்	11.98	11.89	12.79	10.77	11.15	4.75	4.07	10.50	14. 72
கருவிளம்	8.58	9.12	8.07	8.73	7.52	2.04	1.43	5.09	6. 99
மொத்தம்	63.48	61. 24	56.36	61. 75	55.64	42.36	37.07	49.25	53. 48

செய்யுளின் இறுதிச் சீர்களின் பயன்பாட்டில் காணப்படாத ஒரு சீர்மை, இந்த ஈரசைச் சீர்களின் பயன்பாட்டில் காணப்படுவதைக் காண கிறோம். ‘தேமா’ வாய்ப்பாட்டில் அமைந்த சீர்களே அனைத்து நூல் களிலும் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். திருக்குறளில் ஏறக்குறைய 30 % அளவில் ‘ தேமா ’ பயன்படுத்தப்பட்டுள் ளது. பட்டினத்தார் தவிர்த்த பண்டைய இலக்கியங்களில் 25% க்கும் குறையாமல் இச்சீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து ‘புளிமா’ அல்லது ‘கூவிளம்’ ஆகிய சீர்கள் பெரும்பான்மையாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. அனைத்து நூல்களிலும் ‘கருவிளம்’ மிகக் குறை வாகவே பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எனினும் நள

வெண்பா, பட்டினத்தார் பாடல்கள் ஆகிய நூல்களில் 'தேமா' தவிர ஏனைய ஈரசைச்சீர்கள் மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. இந்த இரு நூல்களில் மட்டுமே, மொத்தத்தில் பாதிக்கும் குறைந்த அளவு ஈரசைச்சீர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூல்களில் மூவசைச்சீர்கள் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய அனைத்துப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் ஈரசைச் சீர்கள் 60 %க்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் காண்கிறோம். இடைக்கால, பிற்கால வெண்பா இலக்கியங்களில் முச்சீர்களின் ஆதிக்கம் பெருகிவருவது இலக்கிய ஆய்வாளர்களின் கவனத்திற்குரியது.

மூவசைச் சீர்கள்

ஈரசைச்சீர்களின் இறுதியில் 'காய்' அசை அமைந்த மூவசைச் சீர்களே வெண்பாக்களில் பயன்படுத்தப் பெறும். இறுதிச்சீர்களைத் தவிர்த்த ஏனைய இடங்களில் இவற்றின் பயன்பாட்டின் மொத்த விழுக் காடு அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3

	திருக்.	நாலடி.	திரிகடு.	பழ.	முத்.	நள.	பட்.	கி.மொ.	அருட்.
தேமாங் காய்	14.86	15.55	20.00	13.70	13.82	14.81	15.00	15.78	15.47
புளிமாங் காய்	12.63	11.11	8.64	12.05	10.42	10.74	6.86	7.70	7. 50
கூவிளங் காய்	3.65	6.27	7 86	6.20	12.12	21.01	27.86	18.30	18. 75
கருவிளங் காய்	5.38	5.82	7.14	6.30	8.00	11.01	13.21	8.96	4. 81
மொத்தம்	36 52	38. 75	43.64	38.25	44.36	57.65	62.93	50.75	46. 53

நளவெண்பா, பட்டினத்தார் பாடல்கள் ஆகிய நூல்களில் தவிர மூவசைச்சீர்கள் ஈரசைச்சீர்களைக் காட்டிலும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று ஏற்கனவே கண்டோம். இவற்றில் தேமாங்காய், புளிமாங்காய் ஆகிய சீர்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இடைக்கால பிற்கால இலக்கியங்களில் கூவிளங்காய் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருவள்ளுவரால் மிகவும் அருகியே பயன்படுத்தப்பட்டிருக்கும் கூவிளங்காய் (3.65 %) பட்டினத்தாரால் மிகவும் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் (27.86%) காண்கிறோம். இடைக்கால, பிற்கால இலக்கியங்களில் தேமாங்காய், கூவிளங்காய் ஆகிய இரு சீர்களுமே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூவசைச்சீர்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படும்போது 'காய்முன் நேர்' என்ற தளை விதியின்படி இவ்விரு சீர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய இலக்கணக் கட்டாயம் இதற்கு ஒரு காரணமாகலாம். எனினும் பட்டினத்தாரின் கூவிளங்காய் பெருவிருப்பம் மேலும் ஆய்வுக்குரியது.

செய்யுள் முதற்சீர்கள்

மட்டைப்பந்து (Tennis), பூப்பந்து ஆகிய ஆட்டங்களில் ஓர் ஆட்டக்காரர் எவ்வாறு தன் முதற்பந்தைப் போடுகிறார் என்பதைப் பொறுத்து ஆட்டத்தின் போக்கு மாறுபடும் அதைப்போலவே, தனித் தனிச் செய்யுளாக அமைத்து ஒரு நூலையாக்கும் ஆசிரியர் ஒவ்வொரு செய்யுளையும் எவ்வாறு தொடங்குகிறார் என்பதைப் பொறுத்து அச்செய்யுளின் மற்றைய சீர்கள் அமையும் செய்யுளின் தொடக்கச்சீர் அமைப்பதில் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. எனவே, செய்யுள் தொடக்கச் சீர்களின் அமைப்பு அவ்வாசிரியரின் தனித்தன்மையை ஓரளவு எடுத்துக்காட்டும் என எதிர்பார்க்கலாம். மேற்கண்ட நூல்களில் ஒவ்வொரு செய்யுளின் முதற்சீரும் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அட்டவணை 4 தெரிவிக்கிறது.

அட்டவணை 4

	திருக்	நாலடி	திரிகடு	பழ.	முத்.	நள.	பட்	கி.மொ	அருட்
தேமா	16.92	23.00	23.67	23.25	19.21	32.79	19.00	23.25	18.50
புளிமா	12.26	12.83	5.67	15.83	11.86	5.62	9.33	10.64	10. 01
கூவிளம்	11.13	13.25	18.00	12.17	11.30	6.40	7.33	13.73	15. 67
கருவிளம்	13.01	11.92	7.67	11.50	9.60	2.42	1.33	5.88	8. 50
ஈரசை	53. 32	61. 00	55. 01	62. 75	51. 97	47. 23	36. 99	53. 50	52. 67
தேமாங் காய்	14.81	17.25	18.67	15.25	17.51	14.60	12.67	17.93	17.58
புளிமாங் காய்	19.85	12.25	11.33	10.58	14.69	7.49	4.33	5.60	9. 33
கூவிளங் காய்	3.08	4.00	10.67	5.67	10.17	24.12	26.67	15.69	15. 50
கருவிளங் காய்	8.95	5.50	4.33	5.75	5.65	6.56	19.33	7.28	4. 92
மூவசை	46. 69	39 00	45. 00	37 25	48. 02	52. 77	63. 00	46. 50	47. 33

நளவெண்பா, பட்டினத்தார் பாடல்கள் ஆகிய நூல்களைத் தவிர ஏனையவற்றில் செய்யுள் தொடக்கத்திலும் ஈரசைச்சீர்களே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இந்நூலாசிரியர்கள் செய்யுள் தொடக்கத்திலும் கூவிளங்காய் சீரை மிகுதியாகப் பயன்படுத்தியிருப்பதைக் காணும்போது மேற்குறிப் பிடப்பட்ட இலக்கணக் கட்டாயத்தைவிட அவர்கள் அச்சீரைப் பயன் படுத்துவதில் பெருவிருப்புடையவர் என்பதையே காட்டுகிறது. திருக் குறள் தவிர பண்டைய இலக்கியங்களில் 'தேமா' வே செய்யுள் தொடக் கமாகப் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புளிமாங்காய்

தொடக்கம் திருக்குறளில் மட்டுமே அதிகமாக (19.85 %) காணப்படுவது திருவள்ளுவரின் குறிப்பிட்ட தெரிவுப்போக்கைக் காண்பிக்கிறது. அனைத்து நூல்களிலுமே தேமா முதல் அல்லது இரண்டாம் இடத்தை வகிப்பதால் வெண்பா வகைகளின் தொடக்கச் சீராக 'தேமா' பெரும் பாலும் பயன்படுத்தப்படுகிறது எனலாம்.

நளவெண்பாவைத் தவிர மற்றைய நூல்களில் 'தேமா'வுக்கு அடுத்தபடியாகத் தொடக்கச் சீராக 'தேமாங்காய்' காணப்படுகிறது. இவை இரண்டுமே செய்யுளின் தொடக்கச்சீராக ஏறக்குறைய 35% பெற்றுள்ளன. எனவே வெண்பா வகைகளில் தொடக்கச்சீராக மூன்றில் ஒரு பங்கு தேமா வகையைச் சார்ந்தவை என்று கூறலாம். ஆசிரியர், நூற்பொருள், நூலின் காலம் ஆகியவற்றையும் கடந்து இந்தச் சீர்மை வெண்பா இலக்கியங்களில் காணப்படுவது வியப்புக்குரியது. இந்த இரு சீர்களையும் தவிர ஏனைய சீர்களைத் தொடக்கச்சீராகப் பயன்படுத்து வதில் ஆசிரியர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர்.

சில ஆசிரியர்களின் பெருவிருப்பைப் போலவே, சில ஆசிரியர் களின் சிறு விருப்பையும் இந்த அட்டவணை காட்டுகிறது. நளவெண்பா, பட்டினத்தார் பாடல்கள் ஆகிய நூல்களில் காணப்படும் பெருவாரியான கூவிளங்காய்த் தொடக்கத்தோடு ஒப்பிடும்போது திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களில் இதே சீர் மிகவும் சிறுபான்மையே (5% க்கும் குறை வாக) பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போலவே கருவிளம் தொடக்கம் ஏறக்குறைய மற்றைய நூல்களில் சராசரியாக (10 % அளவில்) காணப்பட, நளவெண்பா, பட்டினத்தார் பாடல்கள் ஆகிய நூல்களில் மிகவும் சிறுபான்மையே (2 % அளவில்) பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். எனவே, வெண்பா அமைப்பில் இவ்விரு ஆசிரியர்களும் ஒரு தனித்த தன்மையுடையவர்களாய் விளங்குவதைக் காண்கிறோம்.

தளை வகை

மாமுன் நிரையும் விளமுன் நேரும் இயற்சீர் வெண்டளையாக இவையிரண்டுமே ஈரசைச் சீர்களானதால், இயற்சீர் வெண்டளையின் எண்ணிக்கை ஈரசைச்சீர்களின் எண்ணிக்கையை ஒத்திருக்கும். 'காய்முன்

நேர்' வெண்சீர் வெண்டளையானதால் மூவசைச்சீர்களின் எண்ணிக்கை இத்தளையின் எண்ணிக்கையை ஒத்திருக்கும். இவற்றின் விழுக்காடு அட்டவணை 5 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5

	திருக்	நாலடி.	திரிகடு	பழ.	முத்	நள.	பட்.	கி.மொ.	அருட்
இ சீ வெண்டளை	63.45	61.25	56.36	61.75	55.61	42.36	37.07	49.25	53.47
வெ சீ வெண்டளை	36.55	38 75	43.64	38.25	44.39	57.64	62.93	50.75	46. 53
மொத்	100	100	100	100	100	100	100	100	100

ஈரசை, மூவசைச் சீர்களின் கீழமைந்த விளக்கங்கள் பலத் தளை வகைக்கும் பொருந்தும். இயற்சீர் வெண்டளையே பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் மிகவும் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருப் பதைக் காணலாம் வெண்பாக்களின் தொடக்க நிலையில் ' மாமுன் நிரை - விளமுன் நேர் ' என்று மாறி ஒலிக்கும் ஓசை முறையே பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற குறளின் ஒலிப்பு முறை இதற்குச் சான்றாகும். ஆனால் இவ்வாறு அமைவது மிகவும் கடினமான செயல் என்பதால் ஒரோ வழி காய்ச்சீர் அமையலாம் என்று வெண்சீர் வெண்டளை ஏற்றுக்கொள்ளப்பட்டது எனலாம்

அகர முதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற குறளை இதற்குக் காட்டாகக் காட்டலாம். இருப்பினும் திருவள் ளுவரும் பெருவாரியாக முச்சீர் கொண்டு பாக்கள் அமைத்திருக்கிறார்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறட்பா இதற்குச் சான்றாகும். எனினும் சீர், தளை அமைப்பை விட எழுத்து எண்ணிக்கையைக் கொண்டு அடிகளின் அளவைக் கணிக்கும் தொல்காப்பியர் இலக்கண முறை மூலம் ஒரு வரலாற்று ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

முடிவுரை

புள்ளியியல் மூலம் இலக்கியங்களை ஆயும் போது பாடலாசிரியர், பாடல் காலம், பாடுபொருள் ஆகியவற்றையும் மீறி, சில பொதுமைப் பண்புகள் அவற்றில் அமைந்திருப்பதைக் காண முடிகிறது இதைப் போலவே சில ஆசிரியர்கள் கொண்டிருக்கும் தனிப்போக்கையும் தெரிந்துகொள்ளப் புள்ளியியல் பயன்படுகிறது. ஒரே ஆசிரியர் பல்வேறு செய்யுட்களைப் பாடியிருப்பின் அவற்றில் சில அவரால்தான் பாடப் பட்டிருக்கக் கூடுமோ என்ற ஐயம் எழும்போது புள்ளியியல் ஆய்வு முறைகள் இவ்வையத்தைத் தீர்க்க ஓரளவு பயன்படும் என்பதும் இவ்வாய்வு மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இறுதியாக, புள்ளியியல் முடிவுகளை வேறு பல ஆய்வாளர்களும் தங்களின் ஆய்வுக்குத் தேவையானால் அவற்றைப் பயன்படுத்த முடியும் என்ற அளவில் பொதுவான முடிவுகளாய் அமைகின்றன

துணை நூல்கள்

தொல்காப்பியம் – பொருளதிகாரம்., 1953, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

திருக்குறள் – மூலமும் பரிமேலழகர் உரையும்., 1972, *மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.*

நாலடியார் – மூலமும் உரையும்., 1932, *ஆனந்த போதினி, சென்னை.*

திரிகடுகம் – கடுகங்கடிகை மாமூலம்., 1936, *தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.*

பழமொழி நானூறு., 1936, *தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி.*

முத்தொள்ளாயிரம்., 1981, *தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி.*

நளவெண்பா., 1983, *பாரி நிலையம், 7ஆம் பதிப்பு, சென்னை.*

பட்டினத்தார், **சித்தர் பாடல்கள்.**, 2002, *மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*

கிறிஸ்து மொழிக்குறள் – கிறிஸ்து பாமாலை., 2001, *மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*

அருட்குறள், 1967, *தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை.*

தமிழியல் ஆய்வு - ஒரு வரலாற்றுப்பார்வை

இராம. சுந்தரம்

முன்னுரை

தமிழியல் ஆராய்ச்சி பன்முகம் கொண்டது. மொழி, இலக்கியம், வரலாறு, தொல்பொருள், சமுதாயம், பொருளாதாரம், அறிவியல் - தொழில்நுட்பம் எனப் பல துறை சார்ந்ததாக அது அமைகிறது. இந்தப் பல்துறை நோக்கும் பல பிரிவுகளாக விரிகிறது. இதன் அடிப்படையில் கடந்த இருநூற்றாண்டுகளாக அகன்ற நிலையில் நடைபெற்ற ஆய்வு விடுதலைக்குப்பின் ஆழ்ந்து செல்லக் காணலாம். தமிழகத்தில் மட்டு மல்லாது இந்தியாவின் பிற பகுதிகளிலும் இலங்கை, மலேசியா, பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ரஷ்யா, போலந்து, செக்கோஸ்லே வாக்கியா, நெதர்லாந்து, மொரீசியஸ், செனகல் முதலான நாடுகளிலும் தமிழியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுப் பல உண்மைகள், கருத்துகள், முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் பயனாகப் புதிய பாடத்திட்டங்களும், புதிய துறைகளில் ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டன. வெளிவராத சில நூல்கள் வெளிவரலாயின. ஆய்வு முறைகளில் கூர்மையான அறிவியல் பார்வை வெளிப்படலாயிற்று. ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் வெளிவரவும் இது உதவுகிறது.

தமிழியலாய்வின் தொடக்கம் தமிழின் பெயராய்வு, தமிழின் தொன்மை முதலியன குறித்த விவாதத்தில் கால்கொண்டது எனலாம். இந்திய மொழிகளுள் பழமையான மொழிகளாகத் தமிழும் வட

மொழியும் கருதப்பட்டன. இவற்றுள் எது முந்தியது, தமிழுக்கு அப் பெயர் வரக்காரணம் என்ன என்ற கேள்விகள் தமிழியலாய்வைத் தொடங்கி வைத்தன.

தமிழ் - பெயர், தொன்மை

தமிழ் என்பது 'த்ரமிள' என்ற சமஸ்கிருதச் சொல்லின் மரூஉ எனச் சிலர் கருதினர். இரா. இராகவய்யங்கார் இதை மறுத்து, தமிழ் என்பது தமிழ்ச் சொல்லே என உறுதிப்படுத்தினார். உயர்ந்த பண்பாட்டை உடைய ஓரினம் தன் மொழிக்குப் பெயரில்லாதிருந்து பிற மொழியிலிருந்து கடன் வாங்கியது என்பது ஏற்புடையதன்று எனவும் கூறினார். பின் வந்த சில அறிஞர்களும் இதை ஏற்றனர். கால்டுவெல் போன்றவர்கள் கூட Dravida > Tamil எனக் கருதினர். S.K. சட்டர்ஜி, கமில் சுவலபில், தேவநேயப்பாவாணர் முதலியோர் தமிழ் > திரமிள் > திராவிட என ஆயிற்று என்றனர். தமிழ் என்ற சொல்லின் பிறப்பு பற்றி உணர்ச்சி பூர்வமாகவும் அறிவியல் பூர்வமாகவும் சில கருத்துகள் வெளிவந்தன. கமில்சுவலபில் ' தகு - இழ் ' எனச் சொற்பிறப்பு காட்டினார். இதன் பொருள் ' நமது ஒலி '. ஆனால், இதை ஏற்றுக்கொள்ளாத சவுத்வொர்த் (Southworth) ஒரு சிறப்பான கருத்தைக் கூறினார். ' தம் - மிழ் ' ' நமது சொந்தப் பேச்சு ', மிழ் > மிழற்று ; மிழ் - முழ் > முழக்கு ; முழ் > மொழ் > மொழி என அது மாறுதல் காணும். இந்தக் கருத்தை Southworth (1998), கூறுவதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பே நாராயணசாமி நாயுடு (1923) 'த + மிழ்' எனப் பிரித்து, ' தமக்குரிய / தம் உறவினர்க்குரிய மொழி' எனப்படும் என்று கூறினார் மிழ் > மிழற்று ; மழ > மழலை என அவர் விவரித்தார் இந்த ஆய்வின் பயனாக, தமிழ்தான் திராவிடமாயிற்று என்பது உறுதியாயிற்று. தமிழ் சொற்பிறப்பு பற்றியும் ஒரு தெளிவு கிடைத்தது சிங்கள மொழியிலுள்ள மகாவம்சம் தமிழை Damilo என வழங்குவதும் சில சிங்களக் கல்வெட்டுக்கள் (கி.மு. காலத்தவை) Dameda, damela என்கிற சொற்கள் வழித் தமிழக வணிகர்களைக் குறிப்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் தமிழையே ' திராவிடம் ' எனக் குறிக்கும் ஒரு பதிவு நாமதீப நிகண்டில் (150 ஆண்டுகளுக்கு முற்பட்டது)

காணப்படுகிறது :- தமிழ், தென்சொல், திராவிடம் - மூன்றும் ஒரு பொருட் கிளவியாகும்.

திவாகரம் பதினெண்பாடைகளுள் ஒன்றாகத் திராவிடத்தைக் குறிக்கும். மேலும், திராவிட என்கிற வழக்கு மொழியைக் குறித்தது குமரிலபட்டர் காலத்திலிருந்து (கி.பி. 7 நூ.) எனலாம். அவர் தமது உரையில் ' திராவிடாதி பாஷா' என்கிறார். சில பௌத்த சமண நூல்கள் (கி.பி. 400 - 700) damiYá என்கிற சொல் மூலம் தென்னிந்தியர்களை, குறிப்பாக, தமிழர்களைக் குறிக்கக் காண்கிறோம். damiYa என்பது dravida என்பதற்கு முந்தைய வடிவம் ஆகலாம் (Krishnamurthy, 2003). ஆசிய மைனரில் வாழ்ந்த லிசியான் (Lycian) பழங்குடியினர் தங்களை Trmmili என அழைத்துக் கொண்டனர். இவர்களைக் கிரேக்கர்கள் Temilai என அழைத்தனர். Temilai என்பது Dramiza எனத் திரிந்தது. இச்சொல் தென்னிந்தியாவில் dramiza - damiza - Tamiz (Tamil) எனவும் வட இந்தியாவில் dramiza - dramila - dravida எனவும் வழங்கலாயிற்று என்கிற கருத்தும் உண்டு (Manorama Year Book, 2003, P. 523). தொல். எழுத்து 'தமிழ் என் கிளவி' என்னும். சங்கப்பாடல்களில் தமிழ் என்பது மொழி, நாடு, இனம் என்கிற பொருளில் பயன்படக் காணலாம். எனவே, தமிழ் திராவிடம் ஆயிற்று என்பதே ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். ஒப்பி லக்கண அறிஞர்கள் தமிழுக்கும் வேறு சில மொழிகளுக்கும் உள்ள உறவையும் எடுத்துக்காட்ட முற்பட்டனர். தமிழ் சித்திய மொழிக் குடும்பத்தோடு தொடர்புடையது என்பதை 150 ஆண்டுகளுக்கு முன்பே கால்டுவெல் கூறியதை இங்கு நினைவுகூரலாம். தமிழ் - பாஸ்க் (Basque) உறவு, தமிழ் - சுமேரியன் / எலாமைட் உறவு, தமிழ் - மங்கோலியன் உறவு, தமிழ் - ஜப்பானிய உறவு என இது விரிந்தது.

சமஸ்கிருதம் தெய்வமொழி ! இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய் என்ற கருத்துக்கு இணையாகத் தமிழும் தெய்வ மொழிதான்! உலக மொழிகளுக்கே அது தாய் என்கிற கருத்தும் முளைத்தது. சமஸ் கிருதத்தை இந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாகக் கருதுவது மொழி யியல் அடிப்படையில் எவ்வளவு பிழைபட்டதோ அவ்வளவு பிழை

பட்டது தமிழை உலக மொழிகளின் தாயாகக் கருதுவதும். தெய்வமொழி என்ற கருத்துக்கு இணையாக, தமிழ்ச் சங்கங்களில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேலும் உறுப்பினர் அட்டை பெற்றதாக வரலாறு எழுதினர். சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்கத் தமிழ்ப் புலவர்கள் பாமாலை கட்டியதாகச் சொன்னார்கள். ஆண்டவன் முன் ஆரியனும் தமிழனும் ஒன்றுதான், ஆண்டவன் கட்டளையால் அகத்தியன் தமிழை வளர்த்தான் என்ற கதைகள் கிளம்பின. இவையெல்லாம் ஆய்ந்தெடுத்த கருத்துகள் இல்லையென்றாலும், ஆய்வுக்குரிய கருதுகோள்களாக அமைந்தன எனலாம். அதனடிப்படையில்தான் சங்கங்கள் பற்றிய ஆய்வு எழுந்து காலப்போக்கில் தெளிவுபடலாயிற்று.

உணர்வுபூர்வமாகத் தமிழை அணுகியதால், மொழி என்பது தகவல் ஊடகம் என்ற நிலை மாறி, உயிராக, வாழ்க்கையாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டு, தீக்குளிக்கும் நிலைக்கும் சிலரைத் தள்ளியது. இது அரசியல்வாதிகளால் ராஜ தந்திரத்துடன் கையாளப்பட்டு ஆட்சிபீடம் ஏற வழிவகுத்தது. இந்த உணர்ச்சிபூர்வமான போக்கு அறிவியல் வழியான ஆக்கபூர்வ நிலைப்பட்ட வளர்ச்சிக்கு ஒரு சிறுதடையாகவும் அமைந்தது. உணர்வுபூர்வமாக மொழியைப் பார்த்ததன் விளைவுகளைப் பற்றி சுமதி ராமசாமி தமது The Passions of Tongue என்ற நூலில் விரிவாகக் கூறுகிறார். ஆனாலும், அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, அரசியல் ஆதரவு குறைந்த போதிலும், சில ஆக்க பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் இலங்கைத் தமிழர்களின் பங்கு அளப்பரியது என்பது சுட்டத்தக்க செய்தியாகும்.

தமிழின் தொன்மை என வந்ததும் அது சிந்துவெளிக்கு நம்மை இட்டு சென்றது. சிந்து வெளி நாகரிகம் ஆரியருக்குரியதன்று, திராவிடர்க்குரியது என்கிற கருத்து தோன்றி இன்று வலுப்பெற்று வருகிறது. அந்த மக்கள் பேசிய மொழி எது என்பதிலும் கருத்து மோதல்கள் ஏற்பட்டு அது திராவிடமொழியாகலாம் என்கிற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர். இது இன்னும் உறுதி செய்யப்பட வேண்டும். ஹீராஸ் பாதிரியார், ஆஸ்கா பர்ப்போலா, கிரிகெரி போஷல்,

பர்ரோ, கமில் சுவலபில், ஃபெயர் சர்வீஸ், ஐராவதம் மகாதேவன், இர்பான் ஹபீப் எனச் சில ஆய்வாளர்கள் இதில் ஆழ்ந்த கவனம் செலுத்தியுள்ளனர்.

பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தானில் பேசப்படும் திராவிட மொழியான பிராகுவி, வட இந்தியாவிலுள்ள பல பகுதிகளில் பேசப்படும் குருக், மால்டோ, பெங்கோ, கோலமி, நாய்க்கி, பர்ஜி ஆகியவை திராவிடர்கள் இந்தியாவெங்கும் பரவியிருந்ததையும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்ததையும் குறிப்பதாக ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டுவது திராவிட மொழிகளின் பழமைக்கும் பரப்புக்கும் சான்றாகிறது. சிந்துவெளி நாகரிகத்தின் கடைசிக்கட்டத்தில் வேதம் மொழியப்படுகிறது. அந்த வேதமொழியில் திராவிடச் சொற்கள் இடம் பெற்றிருப்பதை டாக்டர் பர்ரோ எடுத்துக்காட்டுவார். நூற்றுக்கு மேற்பட்ட திராவிடமொழிச் சொற்கள் சமஸ்கிருதத்தில் உள்ளதாக அவர் மொழியியல் நெறிப்படி தெளிவுறுத்துகிறார். இந்தக் கொள்வினை - கொடுப்பினை பல நூற்றாண்டுகளாகத் தொடர்கிறது. ஒரு கட்டத்தில் சமஸ்கிருதம் தமிழகத்தில் அரசு மதிப்புடன் செயல் படவும் தொடங்குகிறது. இந்தக் கொள்வினை - கொடுப்பினை, தமிழ் - பிராகிருதம், தமிழ் - பாலி என்ற ஒப்பாய்வுக்கும் வழிவகுத்தது. அதன் பலனாக, கதாசப்தசதி என்ற பிராகிருத நூலில் தமிழின் செல்வாக்கு (இலக்கிய ரீதியாகவும் மொழி ரீதியாகவும்) இருப்பது அறியப்பட்டது. அகப்புறப் பாடல்களுக்கான இலக்கண வரையறை தமிழின் தனித்தன்மையாக எடுத்துரைக்கப் பட்டது.

சிந்துவெளி மொழி பற்றிய உறுதியான முடிவு இன்னும் எட்டப் படவில்லை என்றாலும் தமிழ் கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் எழுத்து வடிவம் பெற்றதற்கான சான்றுகளை வரலாற்றறிஞர்கள் எடுத்துக்காட்டி, தமிழின் பழமைக்கு எடுத்துக்காட்டுகள் தந்தனர். ஐ. மகாதேவனின் The Early Tamil Epigraphy என்ற நூல் சிறப்பாகச் சுட்டத்தக்கதாகும். அசோகன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் சேர, சோழ, பாண்டிய, சத்ய புத்ர குறிப்புகளைக் கொண்டு தமிழக அரசுகள் பற்றிய செய்திகள் வெளி

வரலாயின. தமிழ், தமிழர், தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இந்தச் சான்றுகள் மேலும் வலுவூட்டின.

கால ஆராய்ச்சி

தமிழர், தமிழ்மொழியின் தொன்மை பற்றி அறியும் வேட்கை தமிழின் முதல் இலக்கணமான தொல்காப்பியம், இலக்கியத் தொகுப்பான சங்க இலக்கியம், நீதி நூலான திருக்குறள், முதல் காவியமான சிலப்பதிகாரம் ஆகியவற்றின் காலங்களை அறியவும் உந்து சக்தியாயிற்று. ஆய்வு விரிவு பெற்றது. பல்வேறு தரவுகள் திரட்டப்பட்டன. விளக்க முறை, ஒப்பு முறை, வரலாற்றுமுறை, புள்ளி விவர முறை எனப் பலவகை ஆய்வுமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக, குறிப்பிடத் தக்க நல்ல முடிவுகள் வெளிப்பட்டன. பழைய இலக்கிய இலக்கண நூல்கள் அச்சேறின. அவையாவன : திருக்குறள் (1812), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (1846) இறையனார் களவியல் (1863) - சி. வை. தாமோதரம் பிள்ளை, தொல் சொல். சேனாவரையம் (1868), கலித்தொகை (1887), பத்துப்பாட்டு (1898), ஐங்குறுநூறு (1903), பரிபாடல் (1918) - உ.வே. சா ; நற்றிணை (1914) - பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ; குறுந் தொகை (1915) - தி.சௌ. அரங்கனார் ; அகநானூறு (1920) - ரா இராகவய்யங்கார் . கே. என். சிவராசபிள்ளை (The Chronology of Early Tamils), கனகசபைப்பிள்ளை (1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்), சுந்தரம் பிள்ளை (Some Milestones in the History of Tamil Literature), கே.எஸ். சீனிவாசபிள்ளை (தமிழ் வரலாறு), பி.டீ. சீனிவாசய்யங்கார் (History of Tamils), கே.எ. நீலகண்ட சாஸ்திரி (தென்னிந்திய வரலாறு), வேங்கடராசுலு ரெட்டியார் (கபிலர், பரணர்), தெ. பொ. மீ. (சங்க காலம்), வையாபுரிப்பிள்ளை (History of Tamil Language and Literature), கமில் சுவலபில் (History of Tamil Literature), கைலாசபதி (Tamil Heroic Poetry), கா. சிவத்தம்பி (The Literary History of Tamil, Drama in Ancient Tamil Society), ஏ.கே. இராமநுசன் (Interior Landscape), ஜார்ஜ் ஹார்ட் (The Ancient Tamil Poems) முதலியோரின் நூல்கள் சங்ககாலம் பற்றிய வரையறையுடன்

தொல்காப்பியம், சங்க இலக்கியத்தின் பிறப்பு, தொன்மை பற்றியும் விளக்கின.

திருக்குறளின் காலம் பற்றியும் பல கருத்து மோதல்கள் எழுந்தன. கி.மு. 30இலிருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரை அதன் காலத்தை நகர்த்திக் கொண்டே வந்து, ஒரு வழியாக கி.பி. 5 / 6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்றனர். சிலப்பதிகாரத்தின் காலமும் கி.பி. 200 தொடங்கி 900 வரை வந்து 6 / 7 ஆம் நூற்றாண்டில் நிறுத்தப்பட்டது. சங்க இலக்கியத்திலும் முற்சங்க நூல்கள், பிற்சங்க நூல்கள் எனப் பிரிவினை எழுந்து, பிற்சங்க நூல்களாகக் கலித்தொகை, பரிபாடல், திரு முருகாற்றுப்படை ஆகியன கருதப்பட்டு இவற்றின் காலம் கி.பி. 6 / 7 ஆம் நூற்றாண்டு என வரையறுக்கப்பட்டது. இவ்வகை ஆய்வில் வையாபுரிப் பிள்ளை ஆழ்ந்த கவனம் செலுத்தினார். அவரது முடிவுகள் சில ஏற்கப் பட்டன.

கி.மு. 150 - கி.பி. 400 வரையிலான காலகட்டத்தை முற்சங்க காலம், பிற்சங்க காலம் எனப்பிரிப்பர். இதற்குச் சங்கப்பாடல்களின் மொழி யமைப்பும் உள்ளடக்கமும் காரணமாகும். தொல்காப்பியம் - மூலவடிவம் (Ur - text), திருந்திய வடிவம் என இரண்டாகக் கருதப்பட்டு மூலவடிவம் கி.மு. 100 என்றும், திருந்திய வடிவம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்றும் முடிவு எடுத்தனர். வையாபுரிப்பிள்ளையின் காலவரையறையோடு இது ஓரளவு ஒத்துள்ளது. தொல்காப்பியம் ஒருவர் படைப்பல்ல ; ஒரு குழுவின் படைப்பாகும் என்கிற கருத்தும் (தெ. பொ. மீ, சுவலபில்) எடுத்துரைக் கப்பட்டது. கி.மு. 100 - கி.பி. 700 வரை உள்ள காலப்பகுதியில் தொல் காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியன இடம் பெற்றன. இதை உறுதி செய்யும் விதத்தில் சுந்தரம்பிள்ளையின் திருஞான சம்பந்தர் பற்றிய கால ஆராய்ச்சி பெரிதும் உதவிற்று. கி.பி. 6 / 7 ஆம் நூற்றாண்டு சம்பந்தர் காலம் ஆகும் என்ற அவரது தெளிவான முடிவு பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு வரலாறு, தத்துவம், மொழி யமைப்பு, பண்பாட்டுக் கலப்பு எனப் பலதுறைச் சான்றுகளும் பயன் பட்டன.

கி.பி. 700 - 900 பக்திக்காலம் என உறுதியானதும், சோழர்காலம் தொடங்கி, காப்பியங்கள் முகிழ்க்கின்றன. கி.பி. 900 - 1200 வரை காப்பிய விரிவு. வையாபுரிப்பிள்ளையின் 'காவியகாலம்' இந்தத் தளத்தில் ஒரு முன்னோடியாக உள்ளது. காவியங்கள் பற்றிய ஆய்வு விரிவடைந்தது. தா. ஏ. ஞானமூர்த்தி, வ.சுப. மாணிக்கம், மரா.போ. குருசாமி, காசிராசன், சோ. ந. கந்தசாமி, துரை. சீனிசாமி, அ.ச. ஞானசம்பந்தன் ஆகியோரது கட்டுரைகளும் நூல்களும் இது குறித்து வெளிவந்தன. தெ. பொ. மீ யின் 'கானல் வரி' இந்தத்தளத்தில் குறிப்பிடத்தக்க ஒரு நூலாக அமைகிறது. பல புதிய செய்திகளை உள்ளடக்கிய நூல் இது. நாட்டுப்புற இலக்கியத் தின் தாக்கம் சிலம்பில் எப்படிச் செயல்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டும் அவர் 30 தனிப்பாடல்களின் தொகுப்பு சிலப்பதிகாரம் என்கிற கருத்தையும் முன்வைக்கிறார். பெரியபுராணம் தேசியக்காப்பியமாக அ.ச. ஞானசம்பந்தனால் முன்மொழியப்படுகிறது. சேக்கிழாரின் தாக்கம் கருநாடகத்தில் வீர சைவ இயக்கத்தில் எதிரொலிப்பதை அடுத்து வந்த ஆய்வுகள் வெளிப்படுத்தின. கம்பனின் காலம் பற்றிய சிக்கல் ஒருவாறு தீர்ந்து, கம்பராமாயணத்தின் சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டது. கம்பனின் ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டது. பௌலா ரிச்மென் தொகுத்த Many Ramayanans என்ற நூல் இராமாயணம் பற்றிய பல சிறப்பான ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது அனைவரும் படிக்க வேண்டிய நூலும் கூட பெரியாரின் இராமாயண எதிர்ப்புத்தான் இந்நூல் தோன்றக் காரணம். நீதி, தர்மம், காதல், அரசியல், பண்பாடு, பெண்ணியம் எனப் பல பொருண்மைகளில் இராமாயணம் எவ்வாறு காவியம், கதை, தொன்மம், நாட்டுப்புற வடிவம், நாடகம், கதா பிரசங்கம் என்ற தளங்களில் பயன்படுகிறது என்பதை விரிவாகவும் நுட்பமாகவும் எடுத்துக்காட்டும் நூல். ஏ.கே. இராமாநுசம், சுல்மன், ஸ்டூவர்ட்பிளாக், பௌலா ரிச்மென் எனப் பல அறிஞர்களின் கட்டுரைகள் இதில் உள்ளன. இந்த நூலில் சீமாயணம், இராவண காவியம் (புலவர் குழந்தை) பற்றிய குறிப்பு இல்லை பௌலா ரிச்மென் மணிமேகலையில் ஆய்வு செய்தவர் (Women, Branch Stories and Religious Rhetoric in a Tamil Buddhist text, 1988). தற்போது இவர் Practical uses of Ramayana in Madras (1878 -

1973) என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறார். பெருங்கதை பற்றிய மொழியியல், இலக்கியவியல் ஆய்வும் அதன் சிறப்பறிய உதவின. சோழ அரசின் வீழ்ச்சியுடன் காவியப்படைப்பில் தளர்வு ஏற்பட்டதை வையா புரியார் சுட்டிக்காட்டினார். சமூக - அரசியல் - பொருளாதாரப் பின் புலத்தில் இலக்கியம் உருவானதை அவர் தமது நூலில் தெளிவுறுத் துவார். உரை நூல்கள், சிற்றிலக்கியங்கள், பாட்டியல் நூல்கள் இதை அடுத்து தோன்றுகின்றன. பிறகு, ஐரோப்பியர் வருகையும் புதிய இலக் கியத்தோற்றமும் நிகழ்கின்றன. ஆய்வுக்களமும் ஆய்வு முறையும் விரி வடைகின்றன. ஆய்வறிஞர்கள் பட்டியலும் நீள்கிறது. ஏராளமான கட்டுரைகளும் நூல்களும் உலக மொழிகள் சிலவற்றில் வெளிவரலாயின.

இலக்கிய உள்ளடக்கம்

கால ஆராய்ச்சியை ஒட்டியும் தொடர்ந்தும் இலக்கியங்களின் உள்ளடக்கம் பற்றிய ஆய்வுகளும் நடைபெற்றன. அகப்பாடல்கள், புறப் பாடல்கள் தனித்தனி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. தொல்காப்பியம், பொருளதிகார விதிகளை ஏற்றலும் மீறலும் சுட்டிக்காட்டப்பட்டன. சங்கப்பாடல்கள், பாணர் பாடல்கள் என்று தெளிவுறுத்தப்பட்டன. பாணர்கள் தாம் மேற்கொண்ட திணை இயல்பு ஒட்டிப் பாடல் யாத்த திறன் வெளிப்பட்டது. சங்க இலக்கியம் பாடப்பட்ட காலமும் தொகுக் கப்பட்ட காலமும் வேறுவேறு என்ற சிந்தனையும் எழுந்தது. சங்கப் பாடல் தொகுப்பினை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் மறு தொகுப்பு தேவை என்றும் கூறப்பட்டது. இனக்குழு மக்கள் வாழ் விலிருந்து அரசுடைமை வாழ்வுக்கு - உணவு தேடும் வாழ்விலிருந்து உணவு உற்பத்தி வாழ்வுக்கு - மாறிய காலகட்டத்தைச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன என மார்க்சிய ஆய்வாளர்கள் முன் வைத்த கருத்து வரவேற் கப்பட்டது. சங்ககாலச் சமூகத்தின் வர்க்கப் பின்னணி முன்னணிக்கு t ª j J .தமிழ் இலக்கியம் காட்டும் வர்க்க சமுதாயம் என்னும் கே. முத்தையாவின் நூல் இங்குக் குறிப்பிடத்தக்கது. சங்ககாலம் பொற்காலம் என்ற கருத்து மறு ஆய்வு செய்யப்பட்டது. பிற்காலத் தமிழ் இலக்கியங் களில் சங்கப்பாடல்களின் தாக்கம் குறித்த ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டன. சங்கப்பாடல்களின் திணை, துறை, வகுப்பு பற்றிய ஆய்வும்

தொடர்ந்தது. அதாவது, சங்கப்பாடல்கள் கடந்த சில ஆண்டுகளில் அவற்றின் தொகுப்பு, திணை, துறை பகுப்பு முதலிய கூறுகளில் மீள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

சங்க இலக்கியத்தைக் கிரேக்க இலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் காணும் முயற்சியைத் தனிநாயக அடிகள், கைலாசபதி, சண்பகம் ஆகியோர் மேற்கொண்டனர். சங்கப்பாடல்கள் வீரயுகப்பாடல்கள் என்பது வையாபுரிப்பிள்ளையால் முன்மொழியப்பட்டு, கைலாசபதி யால் உறுதி செய்யப்பட்டது. வீரயுகப் பாடல்களின் அனைத்துக் கூறுகளும் சங்கப்பாடல்களில் இல்லையென்றாலும், பொதுமைப் பண்புகள் உண்டு என்பார் வையாபுரியார். அதை விரிவாக்கிக் கைலாச பதி எழுதுவார். தெ.பொ.மீ இதில் ஓரளவு முரண்படுவார். தெ. பொ. மீ. பாணர் பாடல்கள், வாய்மொழி மரபு, வீரயுகத்தின் சில கூறுகள் இவற்றில் உள்ளன என்றாலும் இவற்றை வீரயுகப்பாடல்களாக ஏற்க இயலாது என்பார். காரணம், அவற்றிலுள்ள அறநெறிக்கருத்துக்கள். எனினும், சங்ககாலம் என்பது 300, 400 ஆண்டு காலப் பரப்புடைய காரணத்தால் காலப்போக்கில் அறநெறிக்கருத்துக்கள் இடம் பெற்றிருக் கலாம் என்பது ஒரு சாரார் கருத்து.

சங்க இலக்கிய ஆய்வுகள் மேலை நாடுகளில் முக்கிய இடம் பெற்றன. ஜே.ஆர். மார் (The Eight Anthologies), ஏ.கே. இராமானுஜன் (The Interior Landscape), துபியான்ஸ்கி (முல்லைப்பாடல்) ஆகியோரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. தெ.பொ. மீயின் Mullaippattu பற்றிய ஆய்வு சிறப்பானதாகும். அசோகனின் அருள்கோட்பாட்டின் தாக்கத்தை முல்லைப்பாட்டில் காணும் புதிய முயற்சி இது. தகனொபா தகஹசி என்பவரின் Poetry and Poetics (Literary Conventions of Tamil Love Poetry, 1988) என்ற ஆய்வு நூல் சங்க அகப்பாடல்களின் உருவம், உள்ளடக்கம், உத்தி பற்றித் தொல். பொருள். நம்பியகப்பொருள், இறை யனார் களவியல் அடிப்படையில் ஆய்வு செய்கிறது. இதில் ஆய்வின் அணுகுமுறை ஒழுங்கையும் காணலாம்.

Danuta Penckiewitcz என்பாரின் திருமுருகாற்றுப்படை பற்றிய ஆய்வேடு (1979) போலிஷில் எழுதப்பட்ட சங்க இலக்கியம் பற்றிய முதல் ஆய்வேடு ஆகும். இந்த ஆய்வேடு முருக வழிபாடு அதன் பின்புலம் பற்றிக் குறிப்பிடுகிறது. மெய்யியல் சிந்தனைகள் சங்க காலம் தொட்டு எவ்வாறு வளர்ச்சி பெற்று, பக்தி இலக்கியத்திற்கு அடிகோலியது என்பதை மிக ஆழமாகவும் நுட்பமாகவும் கணபதி சுப்பையா (1991) தமது நூலில் வெளிப்படுத்துவார்.

பக்தி இலக்கியங்கள் பற்றிய ஆய்வு வேதப் பண்பாடும் - தமிழ்ப் பண்பாடும் சந்திக்கும் தன்மையை எடுத்துக்காட்டிற்று. பழைய தமிழ் இலக்கிய மரபை ஒட்டியும் விலகியும் பாடல்கள் புனையப்பட்டது வெளிப்படுத்தப்பட்டது. நாயகன் - நாயகி உறவு பற்றிய தத்துவங்கள் தெரிய வந்தன. இந்தப் பாடல்களின் தாக்கம் இந்தியாவெங்கும் இருந்ததும் பக்தி இயக்கம் விரிவடைந்ததும் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்பட்டன. இலக்கிய வடிவத்திலும் மொழி நடையிலும் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆய்வுகள் வெளிப்படுத்தின. திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் மொழிநடையோடு தொடக்ககாலப் பக்திப் பாடல்களின் மொழிநடை ஒப்பிடப்பட்டது. 'ஆரியன் கண்டாய்', 'தமிழன் கண்டாய்' என்றதன் மூலம் இருவகைப் பண்பாடும் இணைவது சுட்டப்பட்டது. சமண, பௌத்தத்திற்கு எதிராக வைதீக மதம் மேற்கொண்ட போராட்டமும் அதன் விளைவுகளும் ' நாடும் நாயன்மாரும்' (கைலாசபதி) என்ற கட்டுரை வழி வெளிப்படுத்தப்படவே தொடர்ந்து அது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பக்தி இலக்கியங்களின் மூலம் வெளியாகும் தமிழ்ச் சமுதாயப் பண்பாடு, சிந்தனை பற்றிய ஆய்வுகள் ஜான் கார்மன், பௌலா ரிச்மென், ஃபிளேஹார்டி, தெயுஷ் ஹெர்மன், ஏ.கே. இராமானுஜம், ப. அருணாசலம், தெ. பொ. மீ., மயிலை. சீனி. வேங்கடசாமி ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டன. பல நல்ல கட்டுரைகளும், நூல்களும் வெளிவந்தன. திருவிளையாடற் புராணத்தை மையமாக வைத்து மீனாட்சி - சுந்தரர் கல்யாணம், அதன் தொன்மம், வரலாறு, சமூகப் பின்னணி பற்றி வில்லியம் ஹார்மன் எழுதிய Sacred Marriage of A Hindu Goddess (1989) என்ற நூல் சுட்டத்தக்க ஒன்று. பக்தி

இலக்கியத்தின் பன்முக ஆய்வு மேலைநாடுகளில் தற்போது சிறப்பிடம் வகிக்கிறது எனலாம். ஜான் கார்மன், வசுதா நாராயணன் ஆகியோரின் Tamil Veda என்ற நூல் திருவாய்மொழிக்குத் திருக்குருகையூர் பிரான் பிள்ளான் எழுதிய உரையின் அடிப்படையில் எழுதிய ஆய்வு நூலாகும். இதன்வழி வைணவத்தின் வளர்ச்சி தளர்ச்சி பற்றியும் இந்த நூல் ஆராய்கிறது. திருவாய்மொழியின் பல பகுதிகளை மொழிபெயர்த்துள் ளனர். வைணவ மதம் பற்றிய ஆய்வில் இருவரும் ஈடுபட்டு, பல கட்டுரை களையும் எழுதியுள்ளனர்.

ஃபிரெட் கிளோத்தி எழுதிய Many faces of Murugan என்ற நூல் (1978) முருகன் பற்றிய ஆய்வில் முக்கிய நூலாகும். முருக வழிபாட்டின் எதிர்வினையாக, காலப்போக்கில் ஐயப்ப வழிபாடு ஓங்கும் என்று 'விரிச்சி' (ஆருடம்) உரைத்தார். நாலாயிரத்திவ்ய பிரபந்த ஏடுகளின் தமிழாக்கம் வைணவ இலக்கிய ஆய்வுக்கு ஒரு உந்துசக்தியாக அமைந்தது. தெ. ஞானசுந்தரம், நா. சுப்புரெட்டியார், தொ. பரமசிவன் முதலியோர் இதில் கவனம் செலுத்தினர். நல்ல நூல்களும் கட்டுரைகளும் வெளி வரலாயின டேவிட் ஸ்மித் The Dance of Siva என்ற ஆய்வு நூலில் உமா பதி சிவாச்சாரியின் 'குஞ்சிதாங்கிரிஸ்தவ' என்ற சமஸ்கிருத நூலை முதன்மைத் தரவாகவும் ஏனைய தமிழ் சைவ இலக்கியங்கள், சிற்பங்கள், தொன்மங்கள் ஆகியவற்றைத் துணைமைத் தரவுகளாகவும் கொண்டு நடராசரின் நடனம் குறித்த கலை, தத்துவக் கருத்துக்களை வெளிப் படுத்துகிறார். பக்தி நூல் உருவாக்கம், பக்தி இலக்கிய மொழிநடை பற்றியும் ஆய்வுகள் நடந்துள்ளன. துரையரங்கனாரின் The Religion & Philosophy of Tevaram என்ற நூல் பக்தி இலக்கிய ஆய்வில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க நூலாகும். சங்ககாலப் பொருள்முதல் ஆன்மீக வாதம் (Material - Spritualism) தொடங்கிப் பக்திக் கால ஆன்மீக காலம் வரை யுள்ள தென்னிந்திய சமூகம், ஆன்மீகம், பெண்ணியம் பற்றிய விரிவான ஆய்வை விஜயா ராமசாமியின் (1997) என்ற நூல் மையப்படுத்துகிறது. பெண்ணடிமைக்கு எதிராக ஆன்மீக உணர்வும் சாமியாடுதலும் எவ்வாறு ஒருவகை விடுதலை உணர்வைப் பெண்களுக்கு அளிக்கிறது என்பதையும் வெளிப்படுத்துகிறது இலக்கியம் சமுதாயம் சார்ந்தது

என்பதை இந்த ஆய்வுகள் ஆணித்தரமாக எடுத்துரைத்தன. கலை வாழ்க்கைக்காகவே என்பது நிலை நிறுத்தப்பட்டது. அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே என்பது சான்றுகளால் மெய்ப்பிக்கப் பட்டது.

இலக்கிய ஆய்வுகளைத் தொடர்ந்து இலக்கண ஆய்வுகள். தொல்காப்பிய உரையாசிரியர்களின் திறம், காப்பிய உரையாசிரியர் களின் திறம் ஆராயப்பட்டன. வீரசோழியம் தமிழ் இலக்கண உலகில் வகிக்கும் பங்கு பற்றிய ஆய்வு (சு. இராசராம்) வெளிவந்தது. அற வேந்தனின் தமிழ் - சிங்கள இலக்கண உறவு என்ற நூல் (1999) வீர சோழியத்திற்கும் சித்தத்சங்கரவா என்ற சிங்கள நூலுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்தும். தொல்காப்பியம் - நன்னூல் ஒப்பாய்வு (வெள்ளை வாரணன், விசய வேணுகோபால்), எழுத்திலக்கண சொல்லிலக்கணக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு (செ. வை. சண்முகம், அகத்தியலிங்கம்) மேற்கொள்ளப்பட்டன. தமிழ் இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய நூல் (Indira Manuel, 1997) தொல்காப்பியம் காட்டும் இலக்கியக் கோட் பாடுகளைச் சங்க இலக்கிய அமைப்போடு ஒப்பிட்டுக் காணும் அரிய முயற்சியாகும். மொழியியல் அறிஞர்கள் தொல்காப்பியத்தின் சிறப் பினை எடுத்துக்கூறினர். பாணினிக்கும் தொல்காப்பியத்துக்கு முள்ள வேறுபாடு காட்சிப்படுத்தப்பட்டது. கே. மீனாட்சியின் Literary Criticism in Tamil and Sanskrit, Tolkappiyam and Astadhyayi, (International Institute of Tamil Studies, Chennai, 1999) ஆகிய இரு நூல்களும் இவ்வகையில் முக்கியமானவை. பழைய இலக்கண இலக்கியங்களைப் புரிந்துகொள்ள உரைகள் உதவும் தன்மை எடுத்துக் காட்டப்பட்டது.

சிற்றிலக்கியங்கள் பற்றிய ஆய்வுத் தளமும் விரிவடைந்தது. உலா, தூது, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பரணி, பள்ளு இலக்கிய வகைகள் ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இ. அண்ணாமலை, நா.வ. ஜெயராமன், கேசவன், தி. இராசா முதலியோர் இதில் முனைப்பு காட்டினர். பள்ளு இலக்கியத்தின் பின்புலம் பற்றிக் கேசவன் தெளிவு படுத்தினார். அன்னாகுஷியோ என்னும் போலந்து மாணவி குறவஞ்சி

இலக்கியவகை பற்றி ஆய்வு செய்கிறார். நிர்மலா மோகன் குறவஞ்சி இலக்கியம் பற்றி ஆய்வு செய்த மற்றொருவர். இவர்கள் ஆய்வுக்கேற்ற வண்ணம் இவ்வகை இலக்கியங்கள் பல புதிதாகப் பதிப்பிக்கப்பட்டு வெளிவரலாயின. பிள்ளைத்தமிழ் வகையில் இந்துக் கடவுளர்களைப் பற்றி 200க்கு மேற்பட்ட நூல்களும் இஸ்லாம், கிறிஸ்துவம் தொடர்பாகச் சில நூல்களும் இருப்பதைக் குறிப்பிட்டு இவற்றுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளையும் பௌலா ரிச்மென் தமது நூலில் (The Extraordinary Child, 1997) தெளிவுபடுத்துகிறார். விளக்கமுறை, வரலாற்றுமுறை, ஒப்பு முறை என இந்த இலக்கியவகை ஆய்வுகள் விரிவடைகின்றன.

இன்றைய இலக்கிய வகைகளான புதினம், சிறுகதை, புதுக்கவிதை பற்றிய ஆய்வுகளும், திறனாய்வுகளும் பெருகியுள்ளன. மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் பல திறனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திறனாய்வாளர்களுக்கு உதவும் வகையில் அமைப்பியல் வாதம், நவீனத்துவம், பின் நவீனத்துவம், இருண்மைவாதம் எனப் பல இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய நூல்கள் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும் டெர்ரிடா, ஃபியுகோ, டெர்ரி ஈகிள்டன் முதலிய அறிஞர்களின் கோட்பாடுகள் இன்று பல இளம் ஆய்வாளர்களைப் பிடித்தாட்டுவதையும் காணலாம் தொல்காப்பியர் கூறும் முன்னம், நோக்கு முதலிய இலக்கிய உத்திகள் பற்றியும் விரிவான ஆய்வுகளைத் தமிழண்ணல் மேற்கொண்டார்: எல்லாவற்றிற்கும் மேலாக. மார்க்சிய அணுகுமுறை தமிழியல் ஆய்வில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை இங்குப் பதிவு செய்தாக வேண்டும் நா. வானமாமலை, தொ.மு.சி ரகுநாதன் தொடங்கி பலர் இத்துறையில் கவனம் செலுத்தியிருக்கின்றனர் சு. துரையின் தமிழ் இலக்கிய நோக்கில் மார்க்சிய நோக்கு (காவ்யா, 2000) இது குறித்த சில செய்திகளைத் தொகுத்துத்தரும் தற்கால இலக்கிய ஆய்வில் பாரதி முதலிடம் வகிக்கிறார் பாரதியைத் தாகூர், வள்ளத்தோள், குமரன் ஆசான், ஷெல்லி. விட்மன் எனப் பல கவிஞர்களோடு ஒப்பிட்டுக் காணும் ஆய்வும் தற்காலத் தமிழ் இலக்கியப் பரப்பில் பாரதியின் பங்களிப்பு பற்றிய ஆய்வும் விரிவாக உள்ளன

நாட்டுப்புறஇயல் ஆய்வு

எழுத்திலக்கியம் தோன்றுமுன் பேச்சு இலக்கியம் (நாட்டுப்புற இலக்கியம்) எல்லா மொழிகளிலும் உள்ளது உண்மை. இதை அறிந்த நிலையில் தமிழ் நாட்டுப்புற இலக்கியம் பற்றிய ஆய்வு அண்மைக் காலத்தில் முன்னணிக்கு வரலாயிற்று. பழமொழிகள், விடுகதைகள், கதைகள், பாடல்கள் பற்றிய பல ஆய்வுகளில் ஆலன்டண்டி, ஸ்மித் தாம்ஸன் முதலிய அறிஞர்களின் கோட்பாடுகள் சோதனை செய்யப் பட்டன. பிற இந்திய மொழிகளிலுள்ள நாட்டுப்புற இலக்கியங்களோடு ஒப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது. பா. ரா. சுப்பிரமணியன், ஆ. சிவசுப்பிரமணியன், தே. லூர்து, ஆறு. இராமநாதன், சரசுவதி வேணு கோபால் ஆகியோர் இத்துறையில் ஆர்வம் காட்டுகின்றனர். சமூக எதிர்ப்பு நாட்டுப்புற இலக்கியங்களில் இழையோடுவது எடுத்துக் காட்டப்பட்டது. நா. வானமாமலையின் Inter pretation of Tamil Folk Creation (1981) சுட்டிக் கூறவேண்டிய நல்ல நூல். ஒரு கதையின் பல வடிவங்களைத் தொகுத்து மூல வடிவம் காணும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வுக்கு உதவும் வகையில் நாட்டுப்புற இலக்கியத் தொகுப்புகள் தொடர்ந்து வெளிவரலாயின. இதிலும் நா வா.வின் பணி குறிப்பிடத்தக்கது. அவரது பதிப்பு முன்னுரைகள், செய்திக்களஞ்சி யங்கள் மேலை நாட்டறிஞர்களும் இத்துறையில் கவனம் செலுத்தினர்.

மொழியாராய்ச்சி

தமிழ் மொழியில் நூற்றாண்டுதோறும் நிகழ்ந்துள்ள மாற்றங் களையும் வளர்ச்சியையும் ஆராயும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது கால்டுவெல், யூல்பிளாக், எமினோ, பர்ரோ, ஆன்ட்ரனோவ், கமில் சுவல பில், கூய்ப்பர், எல்.வி இராமசாமி ஐயர், வையாபுரிப்பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, தெ. பொ மீ., மு. வ., வ. ஐ. சுப்பிரமணியன், அகத்திய லிங்கம், செ. வை. சண்முகம், இராம. சுந்தரம், கி. அரங்கன் ஆகியோரும் அவர் தம் மாணவர்களும் தமிழ் மொழி ஆய்வில் ஈடுபட்டனர். **Indian Linguistics, International Journal of Dravidian Linguistics,** மொழியியல் முதலிய இதழ்கள் இதில் கவனம் செலுத்தின. கிளை மொழி ஆய்வுகளும்

மேற்கொள்ளப்பட்டன. தமிழ் இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் இடையேயான ஒற்றுமை - வேற்றுமை ஆய்வை ரா.பி. சேதுப்பிள்ளை தொடங்கி வைத்தார். தமிழகத்தில் வழங்கும் திராவிட மொழிகளான தோடர், கோதர், படகர், இருளர், மொழிகளும் வேறு சில பழங்குடி மக்களின் மொழிகளும் ஆராயப்பட்டன. கிளைமொழி அகராதிகள் உரு வாயின கடந்த 30 ஆண்டுகளில் தரமான மொழியியல் ஆய்வு தமிழகத் தில் நடைபெற்று வருகிறது என்பது அழுத்திச் சொல்லத்தக்க ஒன்றாக உள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் அறிவியல் தமிழ் வளர்ச்சி குறித்து ஆழமாக ஆராயப்பட்டு வருகிறது. இதன் முக்கிய கூறான கலைச்சொல் லாக்க ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சாமுவேல் ஃபிஷ்கிறீன் 150 ஆண்டுகளுக்கு முன் இதற்கு அடி எடுத்துக்கொடுத்தார். வ.செ. குழந்தைசாமி, மணவை முஸ்தபா, இராதா செல்லப்பன், கொடுமுடி சண்முகம், இராம. சுந்தரம், சு.லதா, இரா. பாவேந்தன் எனப் பலரும் இத்துறையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கலைச்சொல்லகராதிகள் கடந்த 10 ஆண்டுகளில் கணிசமான அளவு வெளிவந்துள்ளன. அகராதி யியல் (சண்முக சுந்தரனார், பெ. மாதையன், பா. ரா. சுப்பிரமணியன், ஜெயதேவன்), பதிப்பியல் (மு.சண்முகம் பிள்ளை, சா. கிருட்டினமூர்த்தி, இரா மாதவன், இ சுந்தரமூர்த்தி, தி. நடராசன்), அறிவியல் தமிழ்க் கருத் தாடல் (இராம. சுந்தரம், உதயகுமார், சி. சண்முகம், தெய்வசுந்தரம்), கல்வெட்டியல், தொல் பொருளியல் (சதாசிவப் பண்டாரத்தார், நாக சாமி, ஓய் சுப்பராயலு, ஐராவதம் மகாதேவன், கலைக்கோவன், கா ராஜன், புலவர் இராசு) துறைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல தரமான நூல்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பல துறை சார்ந்த கலைச்சொல்லகராதிகள், சங்க இலக்கிய அகராதி எனப் பல அகராதிகளின் வரவும் தமிழ் ஆய்வுக் களத்துக்குத் துணையாக உள்ளன.

இதழ்களின் பங்கு

தமிழியல் ஆய்வில் செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், ஆராய்ச்சி, Tamil Culture, Journal of the Institute of Asian

Studies, Journal of American Oriental Studies, Acta orientalia, Numen ஆகிய இதழ்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

கடந்த ஒரு நூற்றாண்டு காலத் தமிழாராய்ச்சியின் விளைவாகச் சில புதிய செய்திகள், முடிவுகள் வெளிப்பட்டுள்ளன. அவற்றுள் சில :-

1. சங்ககாலம் என்பது பொற்காலம் அன்று. அங்கும் ஏற்றத் தாழ்வுகள் நிலவின. நிலப்பிரபுத்துவ அமைப்பின் தொடக்கமாக அது அமைகிறது. இறுதிக்கட்டத்தில் நகரங்கள் உருவாகின்றன - வணிக வர்க்கம் தலை எடுக்கிறது.

2. பல்லவர் காலம் (பக்தி இலக்கியம்) நிலக்கிழார் - வணிகர் முரண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. வைதிகம் வேர் கொள்கிறது. பண்பாட்டுக் கலப்பு நிகழ்கிறது.

3. சோழர் காலத்தில் (காப்பியம், உரை) பேரரசுடன் பெருந்தத்துவமும் உருவாகிறது. சமய நிறுவனங்களும் புரோகிதர்களும் ஆளும் வர்க்கத்துக்குத் துணை செய்கின்றனர். புதிய புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றுகின்றன. இலக்கிய இலக்கண உரைகள் எழுகின்றன

4. பாரதி ஆய்வு மேலோங்கவே தமிழ்த் தேசியம், இந்திய தேசியம், சர்வதேசியம் பற்றிய சிந்தனைகள் விரிவடைகின்றன. பாரதி தமிழ் இலக்கியப் போக்கில் பாதிப்பை உண்டுபண்ணுதல் விரிவாகப் பேசப்படுகிறது.

5. புதுக்கவிதை பற்றிய ஆய்வுடன், பல திறனாய்வுக் கோட்பாடுகளும் பல ஆய்வு அணுகுமுறைகளும் மேற் கொள்ளப்படுதல் - தமிழ் புதுக்கவிதை இந்திய அளவில் வரவேற்பு பெறும் நிலை.

6. ஒப்பிலக்கிய அணுகுமுறை கால்கொள்ளுதல். பல கால கட்டங்களில் தோன்றிய தமிழிலக்கியங்கள் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிடப்படுதல்.

7. நாட்டுப்புற இயல் ஆய்வு வளர்ச்சி : தமிழ்ச் சமுதாய, இலக்கிய வரலாற்றுக்கு நாட்டுப்புற இலக்கியத்தின் துணை உணரப் படுதல். செவ்வியல் இலக்கியங்களை விட நாட்டுப்புற இலக்கியங்கள் வர்க்க முரண்பாட்டைக் கூர்மைப்படுத்துதல் எடுத்துக்காட்டப்படுதல்.

8. சிறுகதை, புதினம் வழித் தற்காலத் தமிழ்ச் சமுதாயப் போக்கைப்புரிதல், பலவகை ஆய்வு முறைகள் பலவகைத் திறனாய்வுக் கோட்பாடுகள் பரவுதல் அவை தொடர்பான நூல்கள் வெளிவருதல்.

9. மார்க்சிய ஆய்வின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தமிழ் இலக்கியம் பற்றிய பல கற்பனைகள் அகற்றப்பட்டு, உண்மைச் செய்திகள் முன்வைக்கப்பட்டன. மார்க்சிய ஆய்வின் வளர்ச்சிக் கட்டமாக இது அமைகிறது.

10 கல்வி நிறுவனங்களில் முற்போக்கு அணுகுமுறைகள் வரவேற்கப்பட்டன பலதுறை இணைப்பு ஆய்வு ஊக்கப்படுத்தப்பட்டது

தமிழியல் ஆய்விலும், திறனாய்விலும் மேலை நாட்டார் பங்கு அழுத்தமாகச் சுட்டத்தக்கதாகும். கால்டுவெல் தொடங்கி ஜான் கார்மன் வரை பல அறிஞர்கள் பல நாடுகளில் தமிழின் பல துறைகளில் சிறப்பான ஆய்வுகளை மேற்கொண்டு புதிய புதிய செய்திகளை, உண்மைகளை வெளிப்படுத்துவதோடு ஆழமான ஆய்வு அணுகுமுறைகளையும் முன் வைத்துள்ளனர் சங்க இலக்கியங்களில் முந்திய தலைமுறை கூடுதல் கவனம் செலுத்தியது. இன்றைய இளந்தலைமுறை பக்தி இலக்கியத்திலும், நாட்டுப்புற இலக்கியத்திலும், ஒப்பிலக்கியத்திலும் மிகுந்த அக்கறை செலுத்துகிறது இவர்களது ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வேடுகளும் ஆய்வு நூல்களும் தமிழகத்தில் தேவையான அளவு கிடைப்பதில்லை. கிடைக்காதது மட்டுமல்ல என்னென்ன ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதற்கான விவரம் கூட இல்லை எனவே உலக அரங்கில் தமிழியல் ஆய்வு பற்றிய ஒரு நூலடைவு தயார் செய்தல் தமிழியல் ஆய்வின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றும் கணேசன் இப்பணி

யில் கவனம் செலுத்தி வருகிறார். தமிழாராய்ச்சியின் வளர்ச்சி (1959) என்ற ஏ.வி. சுப்ரமணிய அய்யரின் நூலுக்குப்பின் இப்பொருள் பற்றி விரிவான நூல் வரவில்லை. அவ்வகை நூலும் விரைவில் வர வேண்டும். அவ்வகை நூல்கள் காலவாரியாக (சங்ககாலம், பல்லவர் காலம்) நூல் வாரியாக (சங்க இலக்கியம், அற இலக்கியம், இலக்கண வகைகள்) கோட்பாடு வாரியாக (காந்தியத்தாக்கம், மார்க்சிய தாக்கம், தமிழ்மரபு வளர்ச்சி..) என அமையலாம். ஆய்வுக்குத் துணை செய்யும் வகையில் குறிப்பிட்ட ஆசிரியர்கள் பற்றிய கட்டுரைகள் (பாரதி, இளங்கோ, கம்பர்..) படைப்புகள் தொகுப்புகளாக வெளிவரவேண்டும்.

தமிழியல் தொடர்பான சில ஆய்வு நூல்கள் / கட்டுரைகள்

Andronov, M.S., 1961, New evidence of Possible Linguistic ties between the Deccan and Urali, R.P.S., Silver Jubilee Commemoration Vol. Madras.

Ate, Lymn M., 1978, Periyalvar's Tiruvaymoli : A Bala Krishna Text from the Devotional Period in Tamil Literature, Ph.D. dis., University of Wisconsin

Brown, W., Norman, 1947, The Name of the Goddess Meenakshi 'Fish - Eye ', The Journal of the American Oriental Society, 67.

Burrow, T., 1945, Some Dravidian Words in Sanskrit, Transactions of Philological Society, 79 - 10.

--- --, 1983, Notes on some Dravidian words in Sanskrit, International Journal of Dravidian Linguistics 12.

Carman, John.,1974, The Theology of Ramanuja : An essay in Interreligious understanding, London.

Carman. J And Vasudha Narayanan, 1989, The Tamil Veda, Pillan's Interpretation of the Tiruvaymoli, University of Chicago, Chicago.

Champakalakshmi. R., Vaisnava iconography in the Tamil country, Orient Longman, NewDelhi.

Clothey, Fred., 1978, The Many Faces of Murukan, The History and Meaning of a South Indian God, Mouton, The Hague.

Courtrigat, Paul B., 1985, Ganesa : Lord of Obstacle, Lord of Beginning, Oxford University Press, London.

Cutler, Norman., 1974, Consider our Vow : An English translation of Tiruppavai and Tiruvempavai, Muttu Patippakam, Madurai.

------- -------------., 1980, The Poetry of Tamil saints, Ph.D., dis., University of Chicago.

Damodaran, 1978, The Literary value of the Tiruvaymoli, Srivenkateswara University, Tirupathi.

Despande M.M. and Peter Edivin Hook, 1979, Aryan and Non - Aryan in India, University Press, Michigan.

Diffloth. G., 1968, The Irula Language : A Close relative of Tamil, Ph.D., dis., University of California.

Dummont, Louis, 1959, A Structural definition of a Folk deity of TamilNadu : Aiyanar, the Lord, Contribution to Indian Sociology, 3.

Edholm, Erile. Af and Carl Suneson, 1972, The Seven Bulls and Krsna's Marriage to Nila / Nappinnai in Skt. and Tamil literature, Temenos, 8.

Emeneau, M.G., 1974, The Indian Linguistic area revisited, Inter national Journal of Dravidian Linguistics, 3

Erdosy, G., (ed.) 1995, The Indo - Aryans of Ancient South Asia : Language, Material culture/ and Ethnicity, Walter de Gruyter, Newyork.

Fairservis, W. A. Jr. 1992, The Harappan civilization and its writing, E.J. Brill, Newyork.

Filliozat. J., 1972, Le Tiruppavai d' Antal, French Institute of Indian Studies, Pondicherry.

Fuller C.J., 1984, Servants of the Goddess : The Priests of a South Indian Temple, Cambridge University Press, Cambridge .

Gros, Francois, 1968, Le Paripatal avee introduction, traduction er notes, French Institute of Indian Studies, Pondicherry.

Harman. W.P., 1992, Sacred Marriage of a Hindu Goddess, Mothilal Banarsidas, New Delhi.

Hardy, Friedhelm, 1983, Viraha - Bhakti, The Early History of Krsna devotion in South India, Oxford University Press, London.

Hudson, Dennis., 1982, Pinnai, Krishna's coherd wife (In the Divine consort : Radha and the Goddesses of India/ (ed.) John S. Hawley and Donna wulff), Religious Study Series, Berkely.

Kayler, R.D. and Venkatachari. K.K.A.,1981, God far, God Near : An interpretation of the thought of Nammalavar, Anandachariya Indological Research Institute, Bombay,

Krishnamurthi, Bh.2003, The Dravidian Languages, Cambridge University Press, Cambridge.

Mahadevan, Iravada, M., 2003, The Early Tamil Epigrephy : from the earliest times to the 6th Cen.A.D. Cre-A, Chennai.

Manuel Indra., 1997, Literary Theories in Tamil, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry.

Marr. J. R. 1985, The Eight Tamil Anthologies with special reference to Purananuru and Patirrupattu, Institute of Asian Studies, Madras.

Mc Alpin, D.W. 1974, Towards proto - Elamo - Dravidian, Language, 50.

Ohno Susmo, 1983, A Study of the relationship between Tamil and Japanese, International Journal of Dravidian Linguistics 12.

Petersan, Indra Viswanathan, 1989, Poems to Siva, Princeton University Press, Princeton .

Ramaswamy Vijaya., 1997, Walking Nacked, Indian Institute of Asian Studies, Shimla.

Richman paul., 1991, Many Ramayanas, Oxford University Press, London.

Singer Miltan (ed.), 1965, Krishna :Myths, Rites and Attitudes, The East - West Centre Press, Honolulu.

Shulman David, 1980, Tamil Temple Myths, Princeton University Press, Princeton .

Southworth., 1998, On the Origin of the word Tamil, International Journal of Dravidian Linguistics 27.

Steever, S.B., (ed.) 1998, The Dravidian Languages, Routledge, London.

Subbaiah, Ganapathy, 1991, Roots of Tamil Religious thought, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry.

Subbu Reddiar. N., 1977, Philosophy of the Nalayiram with special reference to Nammalvar, SriVenkateswara University, Tirupati.

Vachek. J.,1987, The Dravido - Altaic relationship (Some Views and Future Prospects) Archiv Orientalni, 55.

Vasudevan, Ananda, C.P., 1973, Dravidian - Greek Connections, International Journal of Dravidian Linguistics 2.

Yocum, Glenn, 1982, Hymns to the Dancing Siva : A study of Manickavasagar's Tiruvacakam, Heritage Publishers, New Delhi.

Young, Katherine, 1978, Beloved places (ukantarulina - nilankal) The co -relation of topography and theology in the Srivai shnava tradition of South India, Ph.D. dis., Megill University, Montreal.

Zvelebil, Kamil, 1972, The descent of the Dravidian, IJDL.1.

Zvelebil, Kamil, 1973, The smile of Murugan, E. J. Brill Leiden.

MODALS AS MAIN VERBS IN TAMIL

K. Rangan

1.1. Introduction.

The purpose of this paper is to group the so called 'modals' in Tamil under main verbs in the deep structure. The variety of Tamil that I am going to describe here is the one which is used for broadcasting, writing literary essays and for platform speech. Before attempting to show that there is no category called 'modals' in the deep structure, it would be better to see the treatment of modals in the transformational - generative grammars of Tamil. The description is based on Chomsky (1965).

1.2. Treatment of modals in transformational generative grammars of Tamil.

1.2.1. Agesthialingom (1967) treats these modals as a kind of suffixes occurring with main verbs.[1] VP_1 is expanded by rule (1. 15) as V_k which stands for defective verbs such as *veeNum, veeNTaam* etc and V_{co} -V_{suf}. V_{co} stands for verb complex and V_{suf} for suffixes. V_{suf} is further expanded as

$$(1.16) \quad Vsuf \longrightarrow \left\{ \begin{array}{c} IMP \\ V_y \\ V_{po} \\ V_{ne} \\ V_{lle} \end{array} \right\}$$

Rule (1. 161) rewrites Vpo as

$$(1.161)\quad V_{po} \rightarrow \left\{ \begin{array}{l} \text{muTiyum} \\ \text{Num} \\ \text{TTum} \\ \text{laam} \end{array} \right\}$$

He further observes (1967 : 106) that ***varamuTiyum*** can have the subject in nominative, dative and instrumental whereas ***laam*** can have only in the nominative. The following examples can be given to explain the above statement.

(1) naan vara muTiyum
1 2 3
I can come
1 3 2

(2) enakku vara muTiyum
1 2 3
It is possible for me to come
3 1 2

(3) ennaal vara muTiyum
1 2 3
It is possible for me to come
3 1 2

According to Agesthialingom ***naan***, ***enakku*** and ***ennaal*** which are in nominative, dative and instrumental are subjects of these sentances. I will try to show how his observation is partially correct and also the fact that dative and instrumental are not the real subjects of these sentances. Though his grammar doesn't have 'modals'

as a separate category, the above rules can be interpreted to mean that the grammar recognizes modals as a category in the deep structure.

1.2.2. Schiffman (1969 ; 10), though he tries to group modals and tense under the same source, recognizes modals as a separate category in the deep structure. VP according to him is rewritten as

VP —> V + Aux
Stem
Aux —> Tense, modal

The modals are recognized as a category of the deep structure under Aux. The rule which expands Aux as tense and modal is an evidence to show that Schifffman wants to have modals as a separate category in the deep structure. However, he has expressed his doubt about the modals which may be specified as (+ verb)

(4) atu muTiya laam[2]
1 2 3
It may be- possible
1 3 2

In sentence (1) the modal ***laam*** occurs after another modal ***muTi*** which is in infinitive form. The modal ***muTi*** functions as a main verb and therefore it can be either marked as (+ verb) or (- Verb) depending on the poisition in which it occurs. If we don't recognize two types of ***muTi*** one marked as (+ verb) and the other (- verb) we can suspect that there are modals which can function as main verbs. In other words, one and the same verb functions as a modal in certain positions and as a main verb in some other positions. The deep structure can be represented as

VP

Aux

Vstem Tense Modal

The examples he gives (1969 : 9) also support the idea of keeping modals as a distinct category in the deep structure. I have not come across so far any attempt to group modals under main verbs in Tamil though such a trend is seen in the studies of English transformational - generative grammars. (Shuan fan Huang (1969)).

1.3. Modals as main verbs

We have sentences like

(5) raaman varal aam
1 2 3
Raman can come
1 3 2

(6) nii viiTTu kku vara veeNTum
1 2 3 4 5
You must come to (the) house
1 5 4 3 2

(7) avan vara muTiyum
1 2 3
He can come
1 3 2

(8) avaL vara kuuTum

1 2 3

She may come

1 3 2

in Tamil. In sentences (5 - 8) modals such as ***aam***, ***veeNTum***, ***muTiyum*** and ***kuuTum*** occur after the main verb ***vara*** which is in infinitive form except in the case of (5).[3] Following Schiffman (1969), the deep structure of (5) and (7) can be shown as

(raaman) (vara) (laam)

(5) NP NP V_{st} V_{st} mod mod

VP VP

S S

(avan) (vara) (muTiyum)

(7) NP NP V_{st} V_{st} mod mod

VP VP

S S

This can be represented in trees as follows

S

NP VP

V_{st} Aux

Mod

Fig. (2) raaman vara laam

S

NP VP

V_{st} Aux

Mod

Fig. (3) avan vara muTiyum

Diagrams (2) and (3) show that modals ***laam*** and ***muTiyum*** are given categorial status in the deep structure. In other words, the modals are not surface constituents but rather deep structure constituents. We have sentences like

(9) raaman varal aakum

1 2 3

Raman can come

1 3 2

(10) nii viiTTu kuu varal veeNTum

1 2 3 4 5

You must come to (the) house

1 5 4 3 2

(11) avan varal muTiyum

1 2 3

He can come

1 3 2

(12) avaL varal kuuTum

1 2 3

She may come

1 3 2

Sentences (5 - 8) and (9 - 12) are not different in meaning i.e., as native speakers of Tamil we feel intuitively these sentences are related.[5] A grammar, which is construed as a formalization of a native speaker's competence should explain the relation existing between (5 - 8) and (9 - 12). But both Agesthialingom and Schiffman fail to show the relation existing between *(5 - 8) and (9 - 12).*

Examples (9) and (6) can be taken up here to explain the various transformational processes involved in deriving the surface sentences. The underlying structures can be shown as

S

NP VP Aux

S NP V Tns

raaman varukiṟaan atu aaku Fut

Fig. (4)

S

NP VP Aux

S NP V Tns

nii viiTTukku varukiraay atu veeNTu Fut

Fig. (5)

The deep most embedded sentences

(9A) raaman varu kir aan

1 2 3 PNG

Raman comes

1 2 3

(6A) nii viiTTukku varu kir aay

1 2 3 4 5 PNG

You come to (the) house

1 4 5 3 2

are nominalized as

raaman varal

nii viiTTukku varal

With the help of a transformational rule, the nominalized constructiions replace the position of *atu*. Thus we get structures represented in figures (6) and (7).

S

NP VP Aux

V Tns

raaman varal aaku Fut

Fig. (6)

S

NP VP Aux

V Tns

nii viiTTukku varal veeNTu Fut

Fig. (7)

By applying only nominalization and replacement transformations on the underlying structures represented in diagrams (4) and (5), we get sentences (9) and (10). That is, to derive sentences (9) and (10) we have to apply both nominalization and replacement rules. Sentences (5) and (9) are not different except the fact that the main verb of the matrix sentence is represented as ***aam*** in (5) and ***aakum*** in (9). Varadarasan (1961) has shown that ***aam*** is nothing but a variant form of ***aakum***. The negative sentence would be

(13)	raaman	varal	aak	aa	tu
	1	2	3	4	PNG
	Raman	could	not	come	
	1	3	4	2	

No transformation rule is further applied in the case of (9). But other verbs such as ***veeNTum, kuuTum, muTiyum*** etc. allow us to apply further transformational rules. For example, in the case of (10), deletion and addition rules are applied to get sentence (6). The deletion rule deletes the nominalized suffix - al and the addition transformation introduces the morpheme Inf. which is later realized as - a in the phonological component. The derivational history of (9) and (6) can be shown as

raaman varukiraan # atu aakum –

raaman varal # atu aakum –

raaman varal aakum

nii viiTTukku varukiraay # atu veeNtum –

nii viiTTukku varal # atu veeNTum –

nii viiTTukku varal veeNTum –

nii viiTTukku var veeNTum –

nii viiTTukku var Inf veeNTum

This will be represented as

nii viiTTukku vara veeNTum

in the phonological component. When we apply rules in the way given here, we are able to show the relation existing among sentences (5 - 8) and (9 - 12). The deep structure we have conceived here is somewhat different from those of Agesthialingom and Schiffman.

1.4. The Implication of this Approach

Deriving infintives from the nominalized construction of the embedded sentences can be well supported by the examples of the following kind.

(14) avan ennai paarkka vantaan
1 2 3 4
He came to see me
1 4 3 2

(15) ammaa oru peenaa vaanka poonaarkal
1 2 3 4 5
(The) mother went to purchase a pen
1 5 4 2 3

(16) naan avan pooka paartteen
1 2 3 4
I saw him going
1 4 2 3

(17) avaL ennai eRuta connaaL
1 2 3 4
She asked me to write
1 4 2 3

Infinitives such as ***paarkka*** ' to see', ***vaanka*** ' to purchase', ***pooka*** 'to go' and ***eRuta*** ' to write' can be derived from the nominalized construction of the embedded sentences. These sentences are related to

(18) avan ennai paarppatarku vantaan

(19) ammaa oru peenaa vaankuvatarku poonaarkaL

(20) naan avan poovatai paartteen

(21) avaL ennai eRutumpaTi connaaL

The nominalized constructions such as

(22) avan ennai paarppatu

(23) ammaa oru peenaa vaankuvatu

(24) avan poovatu

(25) naan eRutumpaTi

are derived from sentences like

(26) avan ennai paarkkiṟaan
1 2 3
He sees me
1 3 2


(27) ammaa oru peenaa vaankukiraaṟkal
1 2 3 4
(The) mother purchases a pen
1 4 2 3

(28) avan pookiṟaan
1 2
He goes
1 2

(29) naan eRutikiṟeen
1 2
I write
1 2

The grammar which fails to show the relation between (14 - 17) and (18 - 21) can be discarded in favour of the one which shows the relation among these sentences. This is because the native speakers of Tamil feel intuitively the relation between (14 - 17) and (18 - 21). If the infinitives are derived directly from the embedded sentences like (26 - 29), then the grammar fails to satisfy the descriptive adequacy i.e., the grammar has not shown the relation existing between (14 - 17) and (18 - 21). It implies that the grammar is not capable of formalizing the competence of native speakers of Tamil.

Therefore, the grammar instead of deriving infinitives directly from the embedded sentences should drive from the nominalized constructions such as (22 - 25). Example (18) can be taken up here for the sake of illustration. The deep structure of (18) can be shown as



(Fig. 8)

The most embedded sentences are nominalized and then the replacement transformation is applied. Deletion rules delete both the nominalized suffix and case suffix. This can be shown as

avan # avan ennai paarkkiraan # atarku vantaan --

avan # avan ennai paarppatu # atarku vantaan --

avan avan ennai paarppatarku vantaan --

avan ennai paarppatu vantaan --

avan ennai paarppatu vantaan -

avan ennai paarppatu vantaan

Which is realized as

(18) avan ennai paarkka vantaan

This analysis indicates the necessity of introducing nominalization transformation to derive the infinitives. The grammar which incorporates such a rule is alone capable of explaining the relation between sentences like (14 - 17) and (18 - 21). This partly justifies our motivation of nominalizing the embedded sentences in (6) and (9). By this particular approach we are able to account for the sentential relation found between (5 - 8) and (9 - 12).

1.5. Some Concord Problems

We have tried to show that there is no such category ' modals' in Tamil taking into consideration a different deep structure represented in diagrams (4) and (5). This can be supported by certain observations relating to the surface sentences. Verbs in Tamil usually show concord relations of number, gender and person which the subject noun phrases of the sentences. Sentences, (30 - 32) will explain this fact.

(30) kaNNan nerru vaank in aan
1 2 3 4 PNG
Kannan bought yesterday
1 34 2

(31) tampi naaLaikku inku varv v aan
1 2 3 4 5 PNG
(The) younger brother will come here
1 5 4 3

(32) naan oru katai eRutu kir̲ een
1 2 3 4 5 PNG

I am writing a story
1 5 4 2 3

PNG in the above examples stands for person, number and gender. PNG is phonetically null when the subject noun phrase is specified as (- Human) and when the tense is future.[6]

(33) atu varum
1 2 3
It will come
1 3 2

(34) inta naay unnai turattum
1 2 3 4 5
This dog will chase you
1 2 5 4 3

But PNG is present when tense is realized as present or past even though the subject noun phrase is specified as (- Human).

(35) anta peenaa nanraaka eRutu kir atu
1 2 3 4 5 PNG
That pen writes well
1 2 4 5 3

(36) inta kutirai neerru nanraaka ooT iy atu
1 2 3 4 5 6 PNG
This horse ran well yesterday
1 2 5 6 4 3

